222456

T.N.L.A. Debates

V.110 No.1

9-11-2000

D
2224/31 PCC
PCC-11C1
22245t

வெளியீடு 1-8-2001 Issued 1-8-2001

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

வியாழக்கிழமை நவம்பர் 9, 2000 – தொகுதி 110 – எண் 1

Thursday the 9th November, 2000 – Volume 110 – No. 1

...ன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009

...e Assembly Secretariat, Fort St. George,
Chennai-600 009

[Price Rs. 3.00

V211,31 P00
P00.110.1
222456

222456

9-11-2000

# உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும் | v-viii |
| Personnel of the Government of Tamil Nadu | ix-xii |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் பட்டியல் | x-xvi |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி) | xvii-xxvii |
| *1.* வினாக்கள்–விடைகள்— | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 1-44 |
| *2.* அறிவிப்புகள்— | |
| (அ) சந்தனக் கடத்தல் வீரப்பன் நடிகர் ராஜ்குமாரைக் கடத்தியது குறித்த பிரச்சினையை பிறிதொரு நாள் எடுத்துக்கொள்வது | 44 |
| (ஆ) இந்திய சுங்க வரிகள் (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000 (ஆ. இ.) | 82 |
| *3.* தகவல் கோரல்— | |
| (அ) தமிழ்வழிக் கல்வி வழங்க வகை செய்யும் தனிச் சட்டம் இயற்றுவது குறித்து உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிப்பு | 45-46,47-49 |
| (ஆ) சந்தனக் கடத்தல் வீரப்பன் நடிகர் ராஜ்குமாரைக் கடத்தியது தொடர்பாக, அவையில் இல்லாத ஓர் உறுப்பினர் பற்றி பேசியது | 46-47,49-52 |

பக்கங்கள்

3. தகவல் கோரல்—தொடர்ச்சி

(இ) ஆசிரியர் பயிற்சி பெற்றவர்கள் வேலையில்லாமல் இருப்பது குறித்து — 52-58

4. சிறப்புக் கவன ஈர்ப்பு—

சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம் அறிவித்துள்ள கட்டடங்கள் முறைப்படுத்தும் அறிவிப்பு குறித்து — 59-81

திரு. டி. சுதர்சனம் — 59-64,78-79

திரு. ம. அப்துல் லத்தீப் — 64-69

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி — 66

*மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் — 67,68

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி — 69-75,80-81

டாக்டர் அ. செல்லக்குமார் — 75-78

5. அறிக்கை அளித்தல்—

பொதுக் கணக்குக் குழு — 81

6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)— 82,83-84

(அ) தமிழ்நாடு பொது நூலகங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000 — 82

(ஆ) இந்திய சுங்க வரிகள் (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000 — 83

(இ) தமிழ்நாடு நீர்ப்பாசன (மேம்பாட்டு வரிவிதிப்புத்) திருத்தச் சட்டமுன்வடிவு, 2000 — 84





பக்கங்கள்

7. தமிழ்நாடு மின்சார வாரிய நிதிநிலை அறிக்கை, 2000-2001 மற்றும் திருத்திய மதிப்பீடுகள், 1999-2000, விவாதம்— 84-137

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி — 84-85,86, 94-95,96 98-101,103-106, 119,125-126, 130-132, 134-135

திரு. வி.கே. லட்சுமணன் — 85-90

திரு. பி.என். சுப்பிரமணி — 90-92

திரு. இரா. விசுவநாதன் — 92-94,96-99

டாக்டர் க. கிருஷ்ணசாமி — 100-106

*திரு. குத்தாலம் பி. கல்யாணம் — 106-110

திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில் — 111-114

திரு. டி. மணி — 114-117

திரு. சி. வேலாயுதன் — 117-121

திரு. ஜி. நிஜாமுதீன் — 121-127

திரு. பா. கோபால் — 127-129

திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் — 130,133-134,136,137

8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்— 138-140

## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

## ஆளுநர்—நீதிபதி செல்வி மீ. பாத்திமா பீவி

## அமைச்சரவையின் உறுப்பினர்கள்

| | | |
|---|---|---|
| 1. | முதலமைச்சர் | : **மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** *பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, மாவட்ட வருவாய் அதிகாரிகள், உள்துறை, நிதி, திட்டம், தொழில்கள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, சிறுபான்மையினர் நலன், கடவுச் சீட்டு மற்றும் வணிக வரிகள்.* |
| 2. | கல்வி அமைச்சர் | : **மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** *தொழிற்கல்வி உள்ளிட்ட கல்வி, சட்டமன்றம், தேர்தல்கள், மின்னணுவியல், அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல் மற்றும் முன்னாள் இராணுவத்தினர்.* |
| 3. | மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் | : **மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** *மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலம் மற்றும் மின்சாரம்.* |
| 4. | ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் | : **மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** *நகராட்சி நிருவாகம், சமுதாய வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் ஊரகக் கடன்கள், நகர்ப்பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்.* |
| 5. | வேளாண்மைத் துறை அமைச்சர் | : **மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** *வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக்கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்புப் பயிர் மேம்பாடு.* |

6. **பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. துரைமுருகன்:**
பொதுப் பணிகள், சிறு பாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டம், செயற்திட்டப் பணிகள், வனம் மற்றும் சின்கோனா.

7. **போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:**
போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம், தொழிலாளர் நலம், மக்கள்தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, இரும்பு எஃகு கட்டுப்பாடு மற்றும் பத்திரிகை அச்சுக் காகிதக் கட்டுப்பாடு.

8. **நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:**
நெடுஞ்சாலைகள் மற்றும் துறைமுகங்கள்.

9. **தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:**
தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை.

10. **உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. கா. நா. நேரு:**
உணவு, விலைக் கட்டுப்பாடு மற்றும் குடிமைப் பொருட்கள் வழங்கல், பொது விநியோக முறை, கூட்டுறவு மற்றும் புள்ளிவிவரங்கள்.

11. **பால்வளத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. க. சுந்தரம்:**
பால், பால் பண்ணை வளர்ச்சி, குடிசை மாற்றுத் திட்டம் மற்றும் இடவசதிக் கட்டுப்பாடு.

12. **வருவாய்த் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:**
வருவாய், வருவாய் நிருவாகம், மாவட்ட வருவாய் நிருவாகம், துணை ஆட்சியாளர்கள் மற்றும் இசுலாமிய அறக்கட்டளை (வக்ஃப்).



13. **சட்டத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. ஆலடி அருணா:**
சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள், எடைகள் மற்றும் அளவைகள் குறித்த சட்டம், கம்பெனிகள் பதிவு, கடன் வழங்கல் பற்றிய சட்டமியற்றல் உட்பட கடன் நிவாரணம் மற்றும் சீட்டு நிதி பற்றிய சட்டம் இயற்றுதல்.

14. **கைத்தறித் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. என். கே. கே. பெரியசாமி:**
கைத்தறி, துணித் தொழில்.

15. **பிற்படுத்தப் பட்டோர் நலத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. எம். ஆர். கே. பன்னீர்செல்வம்:**
பிற்படுத்தப்பட்டோர் நலன், மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலன் மற்றும் சீர் மரபினர் நலன், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டோர்.

16. **இளைஞர் மற்றும் மாசுக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:**
விளையாட்டு மற்றும் இளைஞர் பணிப்படை மற்றும் சுற்றுச் சூழல் மாசுக்கட்டுப்பாடு.

17. **வீட்டு வசதித் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி:**
வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி, நகர அமைப்புத் திட்டமிடல் மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சி.

18. **ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:**
கிராமக் குடிசைத் தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள், பதிவுத் துறை, முத்திரைத் தாள் சட்டம் மற்றும் சத்துணவு.

**19. செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்:**
*செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல் மற்றும் திரைப்படச் சட்டம், எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை மற்றும் அரசு அச்சகம்.*

**20. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:**
*கால்நடை பராமரிப்பு.*

**21. சமூக நலத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குண பாண்டியன்:**
*மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உட்பட சமூக நலன், இரவலர் காப்பு இல்லம், அனாதை இல்லங்கள், குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டம்.*

**22. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:**
*ஆதிதிராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர்.*

**23. சுற்றுலாத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன்:**
*சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.*

**24. கதர்த் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு:**
*கதர் வாரியம், பூமிதானம் மற்றும் கிராமதானம்.*

**25. மீன் வளத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்:**
*மீன் வளம் மற்றும் மீன் வளர்ச்சிக் கழகம்.*



## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

## GOVERNOR—Justice Selvi M. FATHIMA BEEVI

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

**1. Chief Minister** .. **The Hon. Kalaignar M. Karunanidhi:**
Public, General Administration, Indian Administrative Service, District Revenue Officers, Home, Finance, Planning, Industries, Prohibition and Excise, Minorities Welfare, Passports and Commercial Taxes.

**2. Minister for Education** .. **The Hon. Prof. K. Anbazhagan:**
Education including Technical Education, Legislature, Elections, Electronics, Science and Technology and Ex-Servicemen.

**3. Minister for Health and Electricity** .. **The Hon. Thiru Arcot N. Veerasamy:**
Health, Medical Education and Family Welfare and Electricity.

**4. Minister for Rural Development and Local Administration** .. **The Hon. Thiru Ko. Si. Mani:**
Municipal Administration, Community Development, Panchayats, Panchayat Unions and Rural Indebtedness and Urban and Rural Water Supply.

**5. Minister for Agriculture** .. **The Hon. Thiru Veerapandi S. Arumugam:**
Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess and Sugarcane Development.

| | | |
|---|---|---|
| 6. | **Minister for Public Works and Forest** | .. **The Hon. Thiru Duraimurugan:** Public Works, Irrigation including Minor Irrigation, Programme Works, Forest and Cinchona. |
| 7. | **Minister for Transport and Labour** | .. **The Hon. Dr. K. Ponmudi:** Transport, Nationalised Transport, Motor Vehicles Act, Chennai Metropolitan Development Authority, Labour, Census, Employment and Training, Iron and Steel Control and Newsprint Control. |
| 8. | **Minister for Highways** | .. **The Hon. Thiru Pasumpon Tha. Kiruttinan:** Highways and Ports. |
| 9. | **Minister for Tamil Official Language, Tamil Culture and Hindu Religious and Charitable Endowments** | .. **The Hon. Dr. M. Thamizhkudimagan:** Tamil Official Language, Tamil Culture and Hindu Religious and Charitable Endowments |
| 10. | **Minister for Food, Public Distribution System and Co-operation** | .. **The Hon. Thiru K.N. Nehru:** Food, Price Control and Civil Supplies, Public Distribution System, Co-operation and Statistics. |
| 11. | **Minister for Milk** | .. **The Hon. Thiru K. Sundaram:** Milk and Dairy Development, Slum Clearance and Accommodation Control. |
| 12. | **Minister for Revenue** | .. **The Hon. Thiru A. Rahman Khan:** Revenue, Board of Revenue, District Revenue Establishment, Deputy Collectors and Wakf. |



| | | |
|---|---|---|
| 13. | **Minister for Law** | .. **The Hon. Thiru Aladi Aruna:** Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money Lending and Legislation on Chits. |
| 14. | **Minister for Handlooms** | .. **The Hon. Thiru N.K.K. Periasamy:** Handlooms, Textiles. |
| 15. | **Minister for Backward Classes** | .. **The Hon. Thiru M.R.K. Panneerselvam:** Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Indians Overseas, Refugees and Evacuees. |
| 16. | **Minister for Youth and Pollution Control** | .. **The Hon. Thiru Pongalur N. Palanisamy:** Sports and Youth Service Corps and Environmental Pollution Control. |
| 17. | **Minister for Housing** | .. **The Hon. Thiru K. Pitchandi:** Housing, Rural Housing Development, Town Planning and Urban Development. |
| 18. | **Minister for Rural Industries and Registration** | .. **The Hon. Thiru I. Periasamy:** Rural Industries including Village and Cottage Industries, Registration and Stamp Act and Nutritious Meals. |
| 19. | **Minister for Information, Publicity and Printing** | .. **The Hon. Thiru V. Mullaivendan:** Information and Publicity, Film Technology and Cinematography Act, Stationery and Printing and Government Press. |
| 20. | **Minister for Animal Husbandry** | .. **The Hon. Pulavar P.M. Senguttuvan:** Animal Husbandry. |

| | | |
|---|---|---|
| **21. Minister for Social Welfare** | .. | **The Hon. Tmt. S.P. Sarkunapandian:** Social Welfare including Women's and Children's Welfare, Beggars Home, Orphanages and Correctional Administration and Integrated Child Development Services Scheme. |
| **22. Minister for Adi-Dravidar and Tribal Welfare** | .. | **The Hon. Thiru Samayanallur S. Selvarasu:** Adi-Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour. |
| **23. Minister for Tourism** | .. | **The Hon. Thiru N. Suresh Rajan:** Tourism and Tourism Development Corporation. |
| **24. Minister for Khadi** | .. | **The Hon. Thiru Andhiyur P. Selvarasu:** Khadi Board, Bhoodan and Gramdan. |
| **25. Minister for Fisheries** | .. | **The Hon. Tmt. S. Jenefer Chandran:** Fisheries and Fisheries Development Corporation. |



# *தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை*

*பேரவைத் தலைவர்*

**மாண்புமிகு திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்**

*பேரவைத் துணைத் தலைவர்*

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி**

*மாற்றுத் தலைவர்கள் பட்டியல்*

1. **திரு. அ.லெ. சுப்பிரமணியன்**
2. **திரு. சி.டி. தண்டபாணி**
3. **திரு. குத்தாலம் பி. கல்யாணம்**
4. **டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்**
5. **திரு. நா. பெரியசாமி**

*செயலாளர்*

**திரு. வெ. இராசாராமன்**

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் பட்டியல்

| | | | |
|---|---|---|---|
| 1. | திருமதி பானுமதி ஆனந்தராஜன், பி.எஸ்சி., பி.ஜி.எல். | .. | கூடுதல் செயலாளர் |
| 2. | திரு. செ.ஏ. துரைபாண்டியன், பி.ஏ., பி.எல். | .. | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 3. | திரு. கி. சாயிநாதன், பி.ஏ., பி.ஜி.எல். | .. | இணைச் செயலாளர் |
| 4. | திருமதி பவானி சுப்பையா, பி.ஏ., பி.ஜி.எல். | .. | இணைச் செயலாளர் |
| 5. | திரு. மு. ஆறுமுகப்பெருமாள், எம்.ஏ., பி.லிட். | .. | இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 6. | திரு. சா. கணேசன், பி.ஏ., பி.ஜி.எல். | .. | இணைச் செயலாளர் |
| 7. | திருமதி வீ.நா. உமா, பி.ஏ. | .. | குழு அலுவலர் |
| 8. | திரு. தி. திருமாவளவன், பி.எஸ்சி., பி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 9. | திரு. வெ. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.எல். | .. | பேரவைத் தலைவரின் சிறப்புத் தனிச் செயலர் |
| 10. | திரு. சு. ராஜகுரு | .. | குழு அலுவலர் |
| 11. | திரு. சௌரி அய்யாத்துரை | .. | பேரவைத் தலைவரின் சிறப்பு நேர்முக உதவியாளர் |
| 12. | திரு. க. சம்பத்ராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 13. | திரு. கோ. ஸ்ரீராமன், பி.காம். | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 14. | திரு. எம். ஜோபாய், பி.காம்., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 15. | திரு. இரா. முருகானந்தம், பி.எஸ்சி., பி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 16. | திரு. இல. மாரியப்பன், பி.ஏ. | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 17. | திரு. கோ. ஞானப்பிரகாசம், எம்.ஏ., பி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 18. | திரு. ஜி. அனீஸ் அகமத், எம்.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |

| | | |
|---|---|---|
| 19. | திரு. ம. பிலிப், எம்.ஏ., பி.ஜி.எல்., | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 20. | திரு. மா. செல்வராஜ், பி.எஸ்சி., பி.எல்., | .. துணைச் செயலாளர் |
| 21. | திரு. வெ.சி. சுப்பிரமணியன், எம்.ஏ., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| 22. | திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல்., | .. சார்புச் செயலாளர் |
| 23. | திருமதி என். துளசிபாய், பி.ஏ., | .. சார்புச் செயலாளர் |
| 24. | திரு. கோ ரவீந்திரன், எம்.ஏ., பி.ஜி.எல்., | .. சார்புச் செயலாளர் |
| 25. | திரு. ஊ.கு. சுப்பிரமணியன், எம்.ஏ., | .. சார்புச் செயலாளர் |
| 26. | திரு. டி. கோவிந்தராஜு, எம்.ஏ., பி.எல்., | .. சார்புச் செயலாளர் |
| 27. | திரு. ஏ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்.சி., பி.எல்., | .. சார்புச் செயலாளர் |
| 28. | திருமதி சீ. கனகவல்லி, டி.சி.பி., | .. தலைமை நிருபர் |
| 29. | திரு. வெ. வெங்கடேசன், எம்.ஏ., | .. தலைமை நிருபர் |
| 30. | திரு. ச. பாலகிருஷ்ணன், பி.எஸ்.சி., பி.எல்., | .. சார்புச் செயலாளர் |
| 31. | திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல்., | .. சார்புச் செயலாளர் |
| 32. | திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல்., | .. சார்புச் செயலாளர் |
| 33. | திரு. நா. நடராஜன், பி.ஏ., பி.ஜி.எல்., | .. தலைமை நிருபர் |
| 34. | திருமதி என். மீனாட்சி எம்.ஏ., பி.ஜி.எல்., | .. சார்புச் செயலாளர் |
| 35. | திரு. மு. பொன்னுரங்கம் எம்.ஏ., பி.எல்., | .. தலைமை நிருபர் |
| 36. | திரு. தி. உமாபதி, பி.ஏ., | .. தலைமை நிருபர் |
| 37. | திருமதி ப. சரஸ்வதி, எம்.ஏ., பி.ஜி.எல்., | .. சார்புச் செயலாளர் |
| 38. | திரு. கோ. தேவராஜன், பி.ஏ., | .. சார்புச் செயலாளர் |
| 39. | திருமதி ச. இரா. சுகுணா | .. தலைமை நிருபர் |
| 40. | திருமதி இரா கஸ்தூரி, பி.ஏ., பி.ஜி.எல்., | .. சார்புச் செயலாளர் |



## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி)

## பெயர்களும் தொகுதிகளும்

| | | |
|---|---|---|
| 1. | அசோகன், திரு. அ. | .. திருவாரூர் (செ.வ.) |
| 2. | அந்தியூர் ப. செல்வராசு, திரு. | .. அந்தியூர் (செ.வ.) |
| 3. | அபுல்ஹசன், திரு. எம்.எம்.எஸ். | .. மயிலாடுதுறை |
| 4. | அப்துல் லத்தீப், திரு. ம. | .. வாணியம்பாடி |
| 5. | அப்பாவு, திரு. மு. | .. இராதாபுரம் |
| 6. | அமரமூர்த்தி, திரு. டி. | .. அரியலூர் |
| 7. | அய்யலுசாமி, திரு. வி. | .. கோவில்பட்டி |
| 8. | அருண்குமார், திரு. பா. | .. மேட்டுப்பாளையம் |
| 9. | அழகராஜா, திரு. என்.ஆர். | .. தேனி |
| 10. | அழகிரி. திரு. ச. | .. சிதம்பரம் |
| 11. | அழகுவேலு, திரு. ச. | .. கண்டமங்கலம் (செ.வ.) |
| 12. | அன்பழகன், திரு. வ. | .. செய்யார் |
| 13. | அன்பழகன், பேராசிரியர் க. | .. துறைமுகம் |
| 14. | அன்பில் பெரியசாமி, திரு. | .. திருச்சிராப்பள்ளி-2 |
| 15. | ஆசையன், திரு. பெ. | .. ஆண்டிப்பட்டி |
| 16. | ஆண்டமுத்து, திரு. வெ.அ. | .. பவானிசாகர் |
| 17. | ஆரூண் ரஷீத், திரு. ஜே.எம். | .. வில்லிவாக்கம் |
| 18. | ஆலடி அருணா, திரு. | .. ஆலங்குளம் |
| 19. | ஆவுடையப்பன், திரு. இரா. | .. அம்பாசமுத்திரம் |
| 20. | ஆறுமுகம், திரு. தி.ப. | .. திருச்செங்கோடு |

| | | | |
|---|---|---|---|
| 21. | ஆற்காடு நா. வீராசாமி, திரு. | .. | அண்ணா நகர் |
| 22. | ஆனந்தன், திரு. பால. | .. | வந்தவாசி (செ.வ.) |
| 23. | இரகுமான்கான், திரு. அ. | .. | இராமநாதபுரம் |
| 24. | இராசமாணிக்கம், திரு. க.வெ.வீ. | .. | மேலூர் |
| 25. | இராசமாணிக்கம், திரு. பி. | .. | ஒரத்தநாடு |
| 26. | இராசன், திரு. வி.பி. | .. | இராஜபாளையம் (செ.வ.) |
| 27. | இராசேந்திரன் என்கிற தீரன், திரு. ஆ | .. | ஆண்டிமடம் |
| 28. | இராமசாமி, டாக்டர் வை. | .. | பண்ருட்டி |
| 29. | இராமசாமி, திரு. கே.ஆர். | .. | திருவாடனை |
| 30. | இராமச்சந்திரன், திரு. ஓ.ஆர். | .. | கம்பம் |
| 31. | இராமச்சந்திரன், திரு. சி.இரா. | .. | தொண்டாமுத்தூர் |
| 32. | இராமச்சந்திரன், திரு. மா. | .. | திருவோணம் |
| 33. | இராமலிங்கம், திரு. ஏ. | .. | காட்டுமன்னார்கோவில் (செ.வ.) |
| 34. | இராமலிங்கம், திரு. செ. | .. | திருவிடைமருதூர் |
| 35. | இராமன், டாக்டர் இ.எஸ்.எஸ். | .. | பள்ளிப்பட்டு |
| 36. | இராமஜெயம், திரு. ந. பூ | .. | மயிலாப்பூர் |
| 37. | இராஜரெட்டி, திரு. ச. | .. | தளி |
| 38. | இராஜேந்தர், திரு. டி. | .. | பூங்கா நகர் |
| 39. | இளங்கோ, திரு. கோ. | .. | அவினாசி (செ.வ.) |
| 40. | ஈஸ்வரன், திரு. ரா. | .. | வாசுதேவநல்லூர் (செ.வ.) |
| 41. | உதயசூரியன், திரு. தா. | .. | சங்கராபுரம் |
| 42. | உபயதுல்லா, திரு. எஸ்.என்.எம். | .. | தஞ்சாவூர் |



| | | | |
|---|---|---|---|
| 43. | கணேசன், திரு. ஐ. | .. | எடப்பாடி |
| 44. | கணேசன், திரு. கே.சி. | .. | ஜெயங்கொண்டம் |
| 45. | கருணாநிதி, கலைஞர் மு. | .. | சேப்பாக்கம் |
| 46. | கருப்பசாமி, திரு. சொ. | .. | சங்கரநயினார்கோவில் (செ.வ.) |
| 47. | கருப்பண்ண உடையார், திரு. ந. | .. | பாபநாசம் |
| 48. | கருப்புசாமி, திரு. டி. | .. | உப்பிலியாபுரம் (ஆவா.) |
| 49. | கன்னையன், திரு. க. | .. | தொட்டியம் |
| 50. | காஞ்சனா கமலநாதன், டாக்டர் | .. | கிருஷ்ணகிரி |
| 51. | காந்தி, திரு. ஆர். | .. | இராணிப்பேட்டை |
| 52. | கிருஷ்ணசாமி, டாக்டர் க. | .. | ஓட்டப்பிடாரம் (செ.வ.) |
| 53. | கிருஷ்ணன், திரு. எஸ்.வி. | .. | நாங்குநேரி |
| 54. | கிருஷ்ணன், திரு. சீ. வெ. | .. | வேடசந்தூர் |
| 55. | குண்டன், திரு. டி. | .. | உதகமண்டலம் |
| 56. | குத்தாலம் பி. கல்யாணம், திரு. | .. | குத்தாலம் |
| 57. | குமாரதாஸ், டாக்டர் தே. | .. | கிள்ளியூர் |
| 58. | கும்மிடிப்பூண்டி கி. வேணு, திரு. | .. | கும்மிடிப்பூண்டி |
| 59. | குழந்தை தமிழரசன், திரு. | .. | விருத்தாசலம் |
| 60. | கோதண்டம், திரு. ஏ. | .. | ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.) |
| 61. | கோபால், திரு. பா. | .. | மேட்டூர் |
| 62. | கோபு, திரு. சி. | .. | அணைக்கட்டு |
| 63. | கோமதி சீனிவாசன், திருமதி | .. | வலங்கைமான் (செ.வ.) |
| 64. | கோவிந்தன், திரு. ப. | .. | தாரமங்கலம் |
| 65. | கோவிந்தன், திரு. வெ. | .. | பேரணாம்பட்டு (செ.வ.) |

66. சக்ரபாணி, திரு. ஆர். .. ஒட்டன்சத்திரம்
67. சண்முகம், திரு. கோ. .. திருப்பத்தூர்
68. சண்முகம், திரு. சி. .. ஆலந்தூர்
69. சண்முகம், திரு. ம. .. கிணத்துக்கடவு
70. சண்முகம், திரு. வி.சி. .. நெல்லிக்குப்பம்
71. சந்தானம், திரு. லா. .. சோழவந்தான்
72. சந்திரசேகரன், திரு. சி. .. சேந்தமங்கலம் (ஆவா.)
73. சந்திரசேகரன், திரு. துரை. .. திருவையாறு
74. சமயநல்லூர் எஸ். செல்வராசு, திரு. .. சமயநல்லூர் (செ.வ.)
75. சம்பத், திரு. ஏ.ஜி. .. முகையூர்
76. சரஸ்வதி, திருமதி ஆர். .. தாராபுரம் (செ.வ.)
77. சற்குணபாண்டியன், திருமதி எஸ்.பி. .. டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்
78. சாமிநாதன், திரு. மு.பெ. .. வெள்ளக்கோவில்
79. சிங்காரவேலு, திரு. வி.பி. .. வால்பாறை (செ.வ.)
80. சிவபுண்ணியம், திரு. வை. .. மன்னார்குடி
81. சிவராமன், திரு. ஆர். .. திருப்பத்தூர்
82. சிவராஜ், திரு. சு. .. ரிஷிவந்தியம்
83. சிவலிங்கம், திரு. எஸ்.ஆர். .. பனமரத்துப்பட்டி
84. சிவானந்தம், திரு. ஆர். .. ஆரணி
85. சிவாஜி, திரு. இ.ஏ.பி. .. திருத்தணி
86. சின்னய்யா, திரு. வெ. .. திருமயம்
87. சீனிவாசன், திரு. ஏ.ஆர்.ஆர். .. விருதுநகர்



88. சுகவனம், திரு. இ.ஜி. .. பர்கூர்
89. சுடலைமுத்து, திரு. அ. .. போடிநாயக்கனூர்
90. சுதர்சனம், திரு. டி. .. பூந்தமல்லி
91. சுந்தரம், திரு. க. .. பொன்னேரி (செ.வ.)
92. சுந்தரம், திரு. ந. .. காரைக்குடி
93. சுந்தரம், திரு. பி.ஆர். .. இராசிபுரம்
94. சுந்தர், திரு. கே. .. உத்திரமேரூர்
95. சுப்பராயன், திரு. கே. .. திருப்பூர்
96. சுப்பிரமணி என்கிற சி.சு. மணி, திரு. சி. .. திருவள்ளூர்
97. சுப்பிரமணி, திரு. பி.என். .. ஆற்காடு
98. சுப்பிரமணியன், திரு. அ.லெ. .. திருநெல்வேலி
99. சுப்புலட்சுமி செகதீசன், திருமதி .. மொடக்குறிச்சி
100. சுரேஷ் ராசன், திரு. என். .. கன்னியாகுமரி
101. செங்குட்டுவன், புலவர் பூ.ம. .. மருங்காபுரி
102. செங்கை சிவம், திரு. .. பெரம்பூர் (செ.வ.)
103. செல்லக்குமார், டாக்டர் அ. .. தியாகராய நகர்
104. செல்வம், திரு. ரெ. .. குளித்தலை
105. செல்வராஜ் என்கிற கவிதைப்பித்தன், திரு. .. கொளத்தூர் (செ.வ.)
106. செல்வராஜ், திரு. து. .. உடுமலைப்பேட்டை
107. சேகரன், திரு. ஆர்.ஆர். .. ஓமலூர்
108. சேதுநாதன், திரு. ரா. .. திண்டிவனம்
109. சைதை கா. கிட்டு, திரு. .. சைதாப்பேட்டை

110. ஞானசேகரன், டாக்டர் ஆ - மேல்மலையனூர்
111. ஞானசேகரன், திரு. சி. - வேலூர்
112. டேவிட் செல்வின், திரு. எஸ். - ஸ்ரீவைகுண்டம்
113. தங்கமணி, திரு. கே. - மானாமதுரை (செ.வ.)
114. தங்கம் தென்னரசு, திரு. - அருப்புக்கோட்டை
115. தங்கவேலன், திரு. சுப. - கடலாடி
116. தங்கவேல், திரு. அ.ல. - சேலம்-2
117. தண்டபாணி, திரு. சி.டி. - கோயம்புத்தூர் மேற்கு
118. தமிழ்க்குடிமகன், முனைவர் மு. - இளையான்குடி
119. தமிழ்ச்செல்வன், திரு. ஆர். - அரக்கோணம் (செ.வ.)
120. தமிழ்மணி, திரு. வீ. - செங்கல்பட்டு
121. தளபதி, திரு. கோ. - சேடப்பட்டி
122. தனபாலன், திரு. கே.ஆர்.ஜி. - சேலம்-1
123. தனபால், திரு. வி.ஜி. - குடியாத்தம்
124. தாமரைக்கனி, திரு. இரா. - ஸ்ரீவில்லிபுத்தூர்
125. திசைவீரன், திரு. உ. - பரமக்குடி (செ.வ.)
126. திருஞானசம்பந்தம், திரு. எஸ்.வி. - பேராவூரணி
127. திருவேங்கடம், திரு. பெ.சு. - கலசப்பாக்கம்
128. துரைசாமி, திரு. பா. - வரகூர் (செ.வ.)
129. துரை, திரு. கே. - திருவெறும்பூர்
130. துரைமுருகன், திரு. - காட்பாடி
131. தெய்வநாயகம், திரு. எ. - மதுரை மத்தி
132. தேவராஜன், டாக்டர் மு. - பெரம்பலூர் (செ.வ.)



133. நடராசன், திரு. ஆ - பேரூர்
134. நடராஜன், திரு. த. - செஞ்சி
135. நயினா முகமது, திரு. கோ. - கடையநல்லூர்
136. நன்னன், திரு. கொ.வீ. - செங்கம் (செ.வ.)
137. நாகரத்தினம், திரு. ச. - கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
138. நாசர், திரு. ஏ.வி.ஏ. - புவனகிரி
139. நிஜாமுதீன், திரு. ஜி. - நாகப்பட்டினம்
140. நேரு, திரு. கா.நா. - லால்குடி
141. பசும்பொன் தா. கிருட்டிணன், திரு. - சிவகங்கை
142. பத்மா, டாக்டர் - நன்னிலம் (செ.வ.)
143. பரணிகுமார், திரு. பா. - திருச்சிராப்பள்ளி-1
144. பரிதி இளம்வழுதி, திரு. - எழும்பூர் (செ.வ.)
145. பழனிசாமி, திரு. ஜி. - திருத்துறைப்பூண்டி (செ.வ.)
146. பழனிவேல் ராஜன், திரு. பி.டி.ஆர். - மதுரை மேற்கு
147. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. - குறிஞ்சிப்பாடி
148. பன்னீர்செல்வம், திரு. மு. - சீர்காழி (செ.வ.)
149. பாண்டுரங்கன், திரு. ந. - பெரணமல்லூர்
150. பாலகிருஷ்ணன், திரு. சோ. - முதுகுளத்தூர்
151. பாலசுப்பிரமணியன், திரு. எஸ்.என். - பவானி
152. பாலசுப்பிரமணியன், திரு. ப. - பட்டுக்கோட்டை
153. பிச்சாண்டி, திரு. கு. - திருவண்ணாமலை
154. புகழேந்தி, திரு. இ. - கடலூர்
155. புரட்சிமணி, திரு. ச. - மங்களூர் (செ.வ.)

156. பூவேந்தன், திரு. த. - பழனி (செ.வ.)
157. பெரியசாமி, திரு. இ. .. ஆத்தூர்
158. பெரியசாமி, திரு. என். .. தூத்துக்குடி
159. பெரியசாமி, திரு. என்.கே.கே. .. ஈரோடு
160. பெரியசாமி, திரு. நா. .. பெருந்துறை
161. பெருமாள், திரு. வி. .. ஏற்காடு (ஆவா.)
162. பெர்னார்டு, திரு. இரா. .. குளச்சல்
163. பொங்கலூர் நா. பழனிசாமி, திரு. .. சிங்காநல்லூர்
164. பொன்முடி, டாக்டர் க. .. விழுப்புரம்
165. பொன்முடி, திரு. எஸ்.எஸ். .. பல்லடம்
166. பொன்னம்மாள், திருமதி ஏ.எஸ். .. நிலக்கோட்டை (செ.வ.)
167. மகேந்திரன், திரு. இரா. .. நாட்ராம்பள்ளி
168. மணிக்கண்ணன், திரு. ஆ.செ. .. திருநாவலூர்
169. மணி, டாக்டர் அ. .. உளுந்தூர்பேட்டை (செ.வ.)
170. மணி, திரு. கோ.சி. .. கும்பகோணம்
171. மணி, திரு. டி. .. விளவங்கோடு
172. மணி, திரு. ஜி.கே. .. பெண்ணாகரம்
173. மணி நாடார், திரு. எஸ்.எஸ். .. சாத்தான்குளம்
174. மணிமாறன், திரு. இரா. .. திண்டுக்கல்
175. மணிவர்மா, திரு. க. .. தண்டராம்பட்டு
176. மதிவாணன், திரு. இரா. .. இராயபுரம்
177. மதிவாணன், திரு. செ. .. அச்சரப்பாக்கம் (செ.வ.)
178. மனோகரன், திரு. கு. - தருமபுரி



179. மாயவன், திரு. தி.ப. - ஸ்ரீரங்கம்
180. மாரி அய்யா, திரு. பே. .. புதுக்கோட்டை
181. மாரிமுத்து, திரு. அ. .. வானூர் (செ.வ.)
182. முகம்மது இஸ்மாயில், திரு. எஸ்.எஸ். .. அரவக்குறிச்சி
183. முகம்மது கோதர் மைதீன், திரு. .. பாளையங்கோட்டை
184. முத்து, திரு. வி. .. சங்கரி (செ.வ.)
185. முத்துராமலிங்கம், திரு. ம. .. திருமங்கலம்
186. முபாரக், திரு. பா.மு. .. கூடலூர்
187. முருகேசன், திரு. பொ. .. காஞ்சிபுரம்
188. முல்லைவேந்தன், திரு. வ. .. மொரப்பூர்
189. முனிரத்தினம், திரு. ஆ.மு. .. சோளிங்கர்
190. மூக்கப்பன், திரு. இரா. .. சின்னசேலம்
191. மூக்கையா, திரு. எல். .. பெரியகுளம்
192. மோகனதாசன், திரு. கோ. .. பூம்புகார்
193. மோகன் கந்தசாமி, திரு. ப. .. பொங்கலூர்
194. மோசஸ், டாக்டர் எம். .. நாகர்கோவில்
195. ரங்கநாதன், திரு. எம். .. குன்னூர் (செ.வ.)
196. ரங்கநாதன், திரு. ப. .. புரசைவாக்கம்
197. ரவி அருணன், திரு. கே. .. தென்காசி
198. ரவிசங்கர், திரு. கு. .. விளாத்திகுளம்
199. ராசேந்திரன், திரு. ஏ. .. போளூர்
200. ராணி, செல்வி க. .. தலைவாசல் (செ.வ.)

| | | |
|---|---|---|
| 201. ராமசாமி, திரு. ஏ.எம். | .. | ஆத்தூர் |
| 202. ராமச்சந்திரன், திரு. செ. | .. | திருப்பரங்குன்றம் |
| 203. ராஜு, திரு. எஸ். | .. | பொள்ளாச்சி |
| 204. ராஜேந்திரன், திரு. எஸ்.கே. | .. | சத்தியமங்கலம் |
| 205. ராஜ்குமார் மன்றாடியார், திரு. என்.எஸ். | .. | காங்கேயம் |
| 206. லட்சுமணன், திரு. வி.கே. | .. | கோயம்புத்தூர் கிழக்கு |
| 207. வாசுகி முருகேசன், திருமதி | .. | கரூர் |
| 208. விசுவநாதன், திரு. இரா. | .. | நத்தம் |
| 209. விஜயகுமார், திரு. கே.எம். | .. | சாத்தூர் |
| 210. விஜயன், திரு. டி.சி. | .. | திருவொற்றியூர் |
| 211. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், திரு. | .. | வீரபாண்டி |
| 212. வீரப்பன், திரு. கே.கே. | .. | கபிலர்மலை |
| 213. வெங்கடசாமி, திரு. பி. | .. | ஓசூர் |
| 214. வெங்கடாசலம், திரு. அ. | .. | ஆலங்குடி |
| 215. வெங்கடாசலம், திரு. ஜி.எல். | .. | பாலக்கோடு |
| 216. வெங்கடேசன், திரு. ச.க. | .. | மதுராந்தகம் |
| 217. வெங்கடேசன், திரு. பி.வி.எஸ். | .. | காவேரிப்பட்டினம் |
| 218. வெங்கிடு, திரு. ஜி.பி. | .. | கோபிச்செட்டிப் பாளையம் |
| 219. வேடம்மாள், திருமதி ஏ.ஆர். | .. | அரூர் (செ.வ.) |
| 220. வேதரத்தினம், திரு. எஸ்.கே. | .. | வேதாரண்யம் |
| 221. வேலாயுதன், திரு. சி. | .. | பத்மநாபபுரம் |
| 222. வேலுசாமி, திரு. வ. | .. | மதுரை கிழக்கு |



| | | |
|---|---|---|
| 223. வேல்சாமி, திரு. க. | .. | நாமக்கல் (செ.வ.) |
| 224. வேல்துரை, திரு. பா. | .. | சேரன்மகாதேவி |
| 225. வைதியலிங்கம், திரு. மீ.அ. | .. | தாம்பரம் |
| 226. ஜெனிபர் சந்திரன், திருமதி எஸ். | .. | திருச்செந்தூர் |
| 227. ஜோதிகண்ணன், திரு. மு.ந. | .. | முசிறி |
| 228. ஸ்டாலின், திரு. மு.க. | .. | ஆயிரம் விளக்கு |
| 229. ஹேமச்சந்திரன், திரு. ஜே. | .. | திருவட்டாறு |
| 230. ஆன் டி' மான்டி, திருமதி | .. | நியமனம் |
| 231. வெற்றிடம் | .. | அறந்தாங்கி |
| 232. வெற்றிடம் | .. | சிவகாசி |
| 233. வெற்றிடம் | .. | திருப்போரூர் (செ.வ.) |
| 234. வெற்றிடம் | .. | திருவல்லிக்கேணி |
| 235. வெற்றிடம் | .. | உசிலம்பட்டி |

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

திரு. கே.வி. வெங்கடபதி .. அரசு தலைமை வழக்கறிஞர்

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## ஐப்பசி 24, விக்கிரம-திருவள்ளுவர் ஆண்டு 2031
## 2000 நவம்பர் 9, வியாழக்கிழமை

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* **திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்** *அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்*
*பொய்யா விளக்கே விளக்கு"*

புறத்தின் இருளைப் போக்கும் விளக்குகளைவிட அகத்தின் இருளைப் போக்கும் பொய்யாமை எனும் விளக்கே ஒருவனை உயர்ந்தோன் எனக் காட்டும் ஒளிமிக்க விளக்காகும்.

## 1. வினாக்கள்-விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள். வினா எண் 21, திரு. ரா. சேதுநாதன், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**21—**

**பாதாளச் சாக்கடை**

***29553—திரு. ரா. சேதுநாதன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திண்டிவனம் நகருக்கு பாதாளச் சாக்கடை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

[2000 நவம்பர் 9

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திண்டிவனம் நகராட்சிக்கு பாதாளச் சாக்கடை அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ரா. சேதுநாதன் இருக்கையில் இல்லை.

வினா எண் 22, திரு. ந. கருப்பண்ண உடையார், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**22—**

## பள்ளிகளுக்குக் கட்டடங்கள்

***33761—திரு. ந. கருப்பண்ண உடையார்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டிலுள்ள அனைத்து ஊராட்சி ஒன்றிய ஆரம்பப் பள்ளிகளுக்கும் நிலையான கட்டடங்கள் கட்டிக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) 1996-97 ஆம் ஆண்டு முதல் 1999-2000 ஆண்டு வரை ஊராட்சி ஒன்றிய ஆரம்பப் பள்ளிகளுக்கு பல்வேறு திட்டங்களில் நிலையான கட்டடங்கள் கட்டிக்கொடுக்கப்பட்டுள்ளன. அதன் விவரம்:

1996-97-ல் 1893 கட்டடங்களும், 1997-98-ல் 929-ம் 1998-99-ல் 1,569-ம், 1999-2000-ல் 824 பணிகளும் முன்னேற்றத்தில் உள்ளன. மொத்தம் 5,215 பள்ளிக் கட்டடங்கள் கலைஞர் அரசு பொறுப்பேற்றவுடன் 13-5-1996-லிருந்து இன்று வரை கட்டி முடிக்கப்பட்டும், கட்டிக் கொண்டும் வரப்படுகிறது. இஃதன்னியில் 1999-2000 ஆண்டில் கரும்பலகை திட்டத்தின்கீழ் ஒரு கட்டடம்கூட இல்லாத 960 ஆரம்பப் பள்ளிகளுக்கு



2000 நவம்பர் 9]

3,29,54,000 ரூபாய் செலவில் புதிய கட்டடங்கள் கட்டிக் கொடுப்பதற்கு ஆணை பிறப்பிக்கப்பட்டு, பணிகள் ஆரம்பிக்கப்பட்டு நடந்து வருகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ந. கருப்பண்ண உடையார் இருக்கையில் இல்லை. திரு. ஏ.வி.ஏ. நாசர்.

**திரு. ஏ.வி.ஏ. நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய கலைஞர் அரசு பொறுப்பேற்ற பிறகு கல்வித் துறையிலே மிகப் பெரிய மாற்றத்தை ஏற்படுத்துகின்ற வகையிலே பள்ளிக் கட்டடங்கள் எல்லாம் கட்டித் தரப்படுகின்றன. இந்த நிலையிலே ஆரம்பப் பள்ளிக் கூடக் கட்டடங்கள் என்பது வகுப்பறைகள் இல்லாத கட்டடங்களாக இருக்கின்றன. அதனால் பாடங்களை ஒழுங்காக நடத்த முடியவில்லை என்றுகூட ஆசிரியர்களும் குறை கூறுகிறார்கள். எனவே வகுப்பறைகள் கொண்ட கட்டடங்களாக கட்டித் தருவதற்கு இனிமேல் அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1996 முதல் 1998 வரை அதுபோல கட்டப்பட்டது. 1999-2000-ல் கட்டப்படுகின்ற கட்டடங்கள் அறைகள் வைக்கப்பட்டு கட்டப்பட்டு வருகின்றன. அப்படி அறைகள் கட்டாமல் இருப்பதற்கு ஒரு காரணம், மாணவர்களுடைய எண்ணிக்கையை அதிகரிக்க தட்டி, பலகை ஆகியவற்றை நகர்த்தி வைத்து அதைப் பழக்கத்திற்குக் கொண்டு வந்தார்கள். இப்போது அதுபோல வேண்டாம் என்று சொல்லி, அறைகள் கொண்ட கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. அதற்காக மதிப்பீட்டுத் தொகையும் சற்றுக் கூடுதலாக அனுமதிக்கப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 23, திரு. சி. ஞானசேகரன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**23—**

## வேளாண்மை அறிவியல் மையம்

***35999—திரு. சி. ஞானசேகரன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூரில் வேளாண்மை அறிவியல் மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், நடப்பு நிதியாண்டில் நடைமுறைப்படுத்தப்படுமா?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய வேலூர் மாவட்டம் விவசாயத்தை மட்டுமே நம்பியிருக்கக்கூடிய ஒரு மாவட்டமாக இருக்கிறது. வேலூர் மாவட்டத்தில் தோல் தொழிற்சாலைகளின் கழிவு நீரால் ஏற்பட்டிருக்கக்கூடிய பாதிப்பு காரணமாக அவை எல்லாம் மூடப்பட்டுவிட்ட காரணத்தால் விவசாயம் மட்டும்தான் எங்கள் மாவட்டத்தினுடைய ஒரு முக்கிய தொழிலாக இருந்து கொண்டிருக்கிறது. தற்போது பல நோய்கள் பயிர்களைத் தாக்குகின்ற காரணத்தால் எந்தப் பயிரையும் அவர்களால் சரியாகச் செய்ய முடியாமல் தத்தளித்துக்கொண்டிருக்கிறார்கள். குறிப்பாக எங்களுடைய பாலாற்றங்கரை ஓரங்களில் இருக்கக்கூடிய தென்னை மரத் தோப்புகள் அத்தனையும் சிலந்தி நோய் காரணமாக உலர்ந்து கொண்டிருக்கிறது. நெல் பயிரிட்டால் நெல் சரியாக விளைவதில்லை; அதுவும் நோய் கண்டு பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. இப்படி, பயிர்கள் நோய்களால் பாதிக்கப்படுகிற அபாயம் எங்களுடைய மாவட்டத்தில் அதிகமாக இருக்கிற காரணத்தாலே ஓர் அறிவியல் மையத்தை அந்த இடத்திலே நிறுவி, நோய்கள் எல்லாம் வராமல் தடுப்பதற்கான-வருமுன் தடுக்கக்கூடிய-ஒரு சூழ்நிலையை உருவாக்குவதற்காக மீண்டும் அரசு பரிசீலனை செய்து, அந்த நோய்த் தடுப்புக்கு ஆவன செய்யுமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-35

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள், மூலக் கேள்விக்குப் பொருத்தம் இல்லாமல் துணைக் கேள்வியை முதலிலே தொடங்கி பிறகு மூலக் கேள்விக்கு வந்தார்கள். வேலூர் மாவட்டத்தில் உள்ள விரிஞ்சிபுரத்தில் மண்டல ஆராய்ச்சி நிலையம், பயிர் மருத்துவ மையம், அந்தப் பகுதி விவசாயிகளின் தொழில்நுட்ப தேவைகளையும் அண்டை மாவட்ட விவசாயிகளின் தொழில்நுட்பத் தேவைகளையும் இப்போது பூர்த்தி செய்து வருகிறது. இன்னும் கொஞ்சம் விரிவாகவே



சொல்கிறேன். வேலூர் மாவட்டம் மேலாத்தூரில் வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் கரும்பு ஆராய்ச்சி நிலையம் ஒன்றும் இயங்கி வருகிறது. தமிழக வேளாண்மைத் துறையின்கீழ் மேலாத்தூரில் இயங்கும் மண் ஆய்வுக் கூடமும், வேலூரில் கலர் மற்றும் உவர் மண் நிலச் சீர்திருத்தத் திட்டமும், வேலூரில் மண் வகையீடு மற்றும் நிலப் பயன்பாடு நிறுவனம் ஆகியவை வேலூர் மாவட்ட விவசாயிகள் பயனடையும் வகையில் இப்பொழுது செயல்பட்டு வருகின்றன.

வேலூர் மாவட்டம் நவ்லாக்கில் வேளாண்மைத் துறையின்கீழ் உழவர் பயிற்சி நிலையம் ஒன்றும், விவசாயிகளுக்கும் பண்ணை மகளிருக்கும் பயிற்சியை அளித்து வருகிறது. வேலூர் மாவட்டம், கலவையில் 1999-2000 கல்வி ஆண்டு முதல் ஆதிபராசக்தி வேளாண்மைக் கல்லூரி ஒன்றும் தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. இக்கல்லூரியில் வேளாண்மை அறிவியல் நிலையம், கே.வி.கே. ஒன்றினை அமைப்பதற்கு புதுடில்லியில் உள்ள இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்தின் அனுமதி வேண்டி இக்கல்லூரி கோரியுள்ளது. ஆகவே, இவ்வளவு வசதிகளும் வேலூரில் இருக்கின்றன.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேலாத்தூரில் இருக்கக்கூடிய மண் ஆய்வுக்கூடம் ஆனாலும் சரி, அல்லது கலவையில் தொடங்கி இருக்கக்கூடிய நிலையமாக இருந்தாலும் சரி, அவையெல்லாம் இப்போது எங்களுடைய மாவட்டத்தினுடைய தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய வகையில் இல்லை. மிகச் சிறிய அளவிலே ஒரு சில குறிப்பிட்ட அளவுக்குத்தான் அவற்றினுடைய வெற்றி இருக்கிறதேயொழிய, மாவட்டம் முழுமைக்கும் அவற்றின் செயல்பாடுகள் இல்லாத காரணத்தால் விவசாயிகள் முழுமையாக அந்தப் பலனைப் பெற முடியவில்லை. ஆகவே விரிஞ்சிபுரத்தில் இருக்கக்கூடிய ஆய்வுக்கூடம் ஆனாலும் சரி, மேலாத்தூரில் இருக்கக்கூடிய ஆய்வுக்கூடமானாலும் சரி, அவை போதிய அளவுக்கு இல்லாத காரணத்தால், மாவட்டத்தின் தலைநகரான வேலூரில் ஒரு சிறு பல்கலைக்கழகம் அளவுக்கு எல்லா ஆய்வுகளையும் அங்கே நடத்துவதற்கான ஒரு முயற்சியை நீங்கள் எடுத்துக்கொண்டால்தான் எங்களுடைய மாவட்டத்தில் பயிர்கள் எல்லாம் காக்கப்படும். பருத்தியும் நோயால் வாடுகிறது; தென்னையும் நோயால் வாடுகிறது; கரும்பும் நோயால் வாடுகிறது. எங்களுடைய மாவட்டத்தில் எந்தப் பயிரை எடுத்துக்கொண்டாலும் நோய் கண்டு, அவை அழிந்து போகக்கூடிய நிலை இருக்கிற காரணத்தால் அதை முழுமையாகத்

[2000 நவம்பர் 9

தடுக்க வேண்டும். குறிப்பாக, தென்னை மர சிலந்திநோயைத் தடுப்பதற்கே இந்தத் துறை இன்னும் சரியான நடவடிக்கை எடுக்காத காரணத்தால் தேங்காய்கள் எல்லாம் இப்போது சுத்திரிக்காய்கள் அளவுக்கு எங்களுடைய மாவட்டத்தில் சிறுத்துப்போய்விட்டன. அதனால் 5 தேங்காய் 3 ரூபாய்க்கு விற்கப்படுகின்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது துணை வினாவா அல்லது மானியக் கோரிக்கையிலே உரையா? உட்காருங்கள். மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சொல்லி முடித்துவிடுகிறேன். மீண்டும் அரசு பரிசீலித்து ஓர் அறிவியல் ஆய்வகத்தை முழுமையாக எங்களுடைய மாவட்டம் பயன்படக்கூடிய வகையில் பெரிய அளவில் அமைக்க அரசு ஆவன செய்யுமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு பயிருக்கும் ஆராய்ச்சி மையங்கள் தனியாக இருக்கின்றன. பல்கலைக்கழகம் ஒரு பணியை மேற்கொள்கிறது. அதைப்போல வேளாண்மைத் துறை ஓர் ஆய்வை மேற்கொள்கிறது. மண் ஆய்வு செய்வதற்கு என்று தனியாக ஒரு துறை செயல்படுகிறது. எல்லா நிலையங்களையும் ஒரே இடத்திலே கொண்டுவந்து சேர்க்க முடியாது. ஒரே இடத்தில் ஆராய்ச்சி செய்ய முடியாது. பல்வேறு இடங்களில் அதுபோன்ற ஆராய்ச்சி மையங்களும் இப்போது செயல்பட்டு விவசாயிகளுக்கு உரிய ஆலோசனைகளை வழங்குகின்றன. சிலந்திநோய் பற்றிச் சொன்னார்கள். இது ஏதோ தமிழ்நாட்டில் மட்டும் இருப்பதுபோல் சொல்லக்கூடாது. உலகம் பூராவும் இருக்கிறது. இருந்தாலும் அதைக் கட்டுப்படுத்துவதற்கு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திலே ஆராய்ச்சி நடத்தி, தொழில்நுட்ப ஆலோசனைகள் வழங்கப்பட்டு அதை விவசாயிகள் இப்போது பயன்படுத்தி வருகிறார்கள். அது ஓரளவுக்கு இப்போது கட்டுப்பாட்டில் இருந்து வருகிறது.

முற்பகல் 9-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 24, திரு. வை. சிவபுண்ணியம், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.



2000 நவம்பர் 9]

**24—**

### தொழிற்சாலைகள்

***38725—திரு. வை. சிவபுண்ணியம்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒருங்கிணைந்த தஞ்சாவூர் மாவட்டத்தில் விவசாயத்தை மூலப்பொருளாகக் கொண்டு தொழிற்சாலைகள் தொடங்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், மன்னார்குடி பகுதியில் அமைந்திடும் வகையில் ஆய்வுகள் மேற்கொள்ளப்படுமா?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) வாய்ப்பு இல்லை. ஒருங்கிணைந்த தஞ்சாவூர் மாவட்டத்தில் விவசாயத்தை மூலப்பொருளாகக் கொண்டு தொழிற்சாலைகளை நிறுவிட ஆர்வமுள்ள தொழில் முனைவர்கள் திட்ட அறிக்கையுடன் தயார் நிலையில் முன்வந்தால் இதுகுறித்து நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஆ) வினா எழவில்லை.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டத்தில் எந்தவிதமான தொழில் வளர்ச்சியுமே இல்லாத நிலை இருக்கிறது. அதற்குக் காரணம் காவிரி டெல்டா பகுதி என்ற காரணத்தினாலே தொழிற்சாலைகள் தொடங்குவதற்கான தடைகள் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. இதனாலேயே பல்வேறு தொழில்களைத் தொடங்க இயலவில்லை. விவசாயத்தை மூலப் பொருளாகக் கொண்டு அங்கே எல்லாவிதமான பொருள்களும் விளைகின்றன. குறிப்பாக, தேங்காய் விளைகிறது. அதேபோல, கரும்பு, பருத்தி, கடலை போன்ற பல்வேறு பொருள்கள் அங்கே ஏராளமாக விளைகின்றன. ஆகவே, அவற்றை மூலப் பொருளாகக் கொண்டு அங்கே தொழிற்சாலைகளைத் தொடங்குவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்றுதான் இந்த வினாவை எழுப்பியிருக்கிறேன். அதிலும் குறிப்பாக, பலபேர் அதற்கான முயற்சிகளை எடுத்து மனு செய்து இருப்பதாக ஒரு தகவல் இருக்கிறது. அதுகுறித்த விவரமான அறிக்கை என்னிடத்திலே இல்லை. அப்படியிருந்தால் அதை அமைச்சரிடத்திலே

கொடுக்க நான் தயாராக இருக்கிறேன். அப்படியிருக்குமானால் அதை அனுமதிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன். குறிப்பாக எங்களது திருவாரூர் மாவட்டப் பகுதிகள் முற்றிலும் விவசாயத்தைச் சார்ந்திருக்கிற பகுதிகள் என்ற காரணத்தினாலே, ஒரு வேளாண் கல்லூரியை அமைப்பதற்கான முயற்சியை, ஏற்பாட்டை அரசு செய்யுமா? அதிலும் குறிப்பாக மன்னார்குடி பகுதியிலே தொடங்குவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன். இது என்னுடைய தொடர்ந்த கேள்வியாக இருக்கிற காரணத்தினாலே, அதற்குரிய முயற்சிகளை அரசு மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசின் வேளாண்மைத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம், தொழில் முனைவோர்களுக்கும், உற்பத்தியாளர்களுக்கும், உணவு பதப்படுத்துவோர்களுக்கும் இது சம்பந்தமான ஆராய்ச்சி நிறுவனங்களுக்கும் ஒரு பாலமாக அமைந்து, ஒருங்கிணைந்த முழுமையான வளர்ச்சிக்கு இப்போது துணைபுரிந்து வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே கேள்வி எழுப்பியதைப்போல, வேளாண் பொருள்களைக் கொண்டு ஒரு தொழிற்சாலை அமைப்பதற்கு இதுவரை யாரும் விண்ணப்பிக்கவில்லை. அப்படி இதுவரை விண்ணப்பிக்கா விட்டாலும்கூட, மாண்புமிகு உறுப்பினர் மூலமாக அப்படிப்பட்ட ஒரு கோரிக்கை வருமானால் அதை அரசு பரிசீலிக்கும். இப்போது தமிழ்நாடு அரசின் வேளாண்மைத் தொழில் வளர்ச்சிக் கழகம் அரசாங்கத்தினுடைய கொள்கைப்படி 11 சதவிகிதம், அவர்களுக்குப் பங்குத் தொகையாகக்கூட தரத் தயாராக இருக்கிறது. அப்படி யாராவது முன்வந்தால் அரசு அதற்கு எந்தவிதமான தயக்கமும் காட்டாமல் அந்த நிதியுதவியையும் வழங்கத் தயாராக இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 25, திரு. குழந்தை தமிழரசன், மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்.

**25—**

**சாலை அமைத்தல்**

***26280—திரு. குழந்தை தமிழரசன்:**

மாண்புமிகு பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) கடலூர் மாவட்டம், கம்மாபுரம் ஒன்றியம், இருப்பு ஊராட்சியிலிருந்து செடுத்தான்குப்பம் செல்லும் சாலையிலுள்ள 800 மீட்டர் நீளமுள்ள வனத் துறைக்குச் சொந்தமான இடத்தில் சாலை அமைத்துக்கொள்ள வனத் துறை அனுமதி வழங்குமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் வனத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சாலை அமைப்பதற்கான விண்ணப்பம் அரசுக்கு அனுப்பப்படுமானால் அரசு அதனுடைய சாதக-பாதகங்கள் குறித்து முடிவெடுக்கும்.

**திரு. குழந்தை தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சாதகமான சூழ்நிலையை அனுசரித்து அதற்கு ஆவன செய்வதாகத் தெரிவித்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த செடுத்தான்குப்பம் கிராமம் என்பது இருப்பு கிராமத்தினுடைய Hamlet village ஆகும். இந்தச் சாலை வழியாக N.L.C. என்கிற நிலக்கரி நிறுவனத்திற்கு தினந்தோறும் நிரந்தர ஊழியர்களும், நிரந்தரம் அல்லாத ஊழியர்களும் பலபேர் பணிக்குச் சென்று வருகிறார்கள். இதுவரை இந்த 800 மீட்டர் சாலை அமைக்க முடியாமல் இருந்த காரணத்தினால் அங்கே Mini Bus விடுவதற்கு வாய்ப்பில்லாமல் இருக்கிறது. அதேபோன்று அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்துகளையும் விடுவதற்கு வாய்ப்பு இல்லை. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எங்கள் மக்களுடைய கோரிக்கையை நிறைவேற்றித் தருவதற்கு உடனடியாக ஆவன செய்ய அன்புடன் வேண்டி, செய்து தருவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த சாலையைப் போடுவதற்கு அனுமதி கொடுத்திருக்கலாம் சர்க்கார். ஆனால் கொடுக்கவில்லை. அந்த 9 கிலோ மீட்டரிலே 8 கிலோ மீட்டரை பஞ்சாயத்துதான் maintain செய்து கொண்டிருக்கிறது. ஒரு கிலோ மீட்டரைத்தான் Forest வைத்துக்கொண்டிருக்கிறது. அது விளாங்காடு வரையில்தான். மீதியை பஞ்சாயத்துதான் போட்டுக்கொண்டிருக்கிறது. கப்பி ரோடாக இருக்கிறது. அங்கே ஒரு சாலை போட வேண்டுமென்று விண்ணப்பம் வந்தால்தானே நாம் கொடுக்க முடியும். முதலிலேயே சாலை போடுவதற்கு

அனுமதி வழங்கலாமா என்று நாங்கள் கேட்டு, அதற்குப் பின்பா நாங்கள் கொடுக்க முடியும்? எனவே மாண்புமிகு உறுப்பினருக்கு தொகுதியின்பால் இருக்கிற அந்த அக்கறையை நான் பாராட்டுகிறேன். விரைவில் ஒரு விண்ணப்பதை அனுப்புங்கள்.

முற்பகல் 9-45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 26, திரு. கே. ரவி அருணன், மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**26—**

**மருத்துவக் கூடம்**

***35743—திரு. கே. ரவி அருணன்:**

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர், கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் 500 தொழிலாளர்களுக்குமேல் பணியாற்றும் எந்தெந்தத் தொழிற்சாலைகளில் அவசரகால மருத்துவக் கூடம் அமைத்து பராமரிக்கப்படாமல் உள்ளது?

(ஆ) எவ்வளவு காலத்திற்குள் அங்கு அவசரகால மருத்துவக் கூடம் அமைக்கப்படும்?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தமிழகத்தில் 500 தொழிலாளர்களுக்குமேல் பணியாற்றும் கீழ்க்கண்ட 16 தொழிற்சாலைகளில் மட்டும் அவசரகால மருத்துவக் கூடம் அமைத்து பராமரிக்கப்படாமல் உள்ளது. அவையாவன:—

(1) எஸ்.வி. சுகர் மில்ஸ், காஞ்சிபுரம்.

(2) ஈரோடு மாவட்ட கோவாபரேடிவ் ஸ்பின்னிங் மில்ஸ் லிமிடெட், தாராபுரம்.

(3) ஸ்ரீவில்லிப்புத்தூர் கோவாபரேடிவ் ஸ்பின்னிங் மில்ஸ் லிமிடெட், 'ஏ' யூனிட், ஸ்ரீவில்லிப்புத்தூர்.





(4) தி ஜவஹர் மில்ஸ் லிமிடெட், சேலம்.

(5) ஸ்ரீராஜேந்திரா மில்ஸ் லிமிடெட், சேலம்.

(6) சேலம் மாவட்ட கோவாபரேடிவ் ஸ்பின்னிங் மில்ஸ் லிமிடெட், சேலம்.

(7) சேலம் டெக்ஸ்டைல்ஸ், ஆத்தூர்.

(8) தி தர்மபுரி மாவட்ட கோவாபரேடிவ் சுகர் மில்ஸ், பாலக்காடு.

(9) லட்சுமி ஆட்டோமாடிக் லூம் ஒர்க்ஸ், ஒசூர்.

(10) பிரீமியர் மில்ஸ், ஒசூர்.

(11) தங்கவேலு ஸ்பின்னிங் மில்ஸ், பொம்மிடி.

(12) பால் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட், ஒசூர்.

(13) ஏசியன் பேரிங்ஸ் லிமிடெட், ஒசூர்.

(14) தி தர்மபுரி மாவட்ட கோவாபரேடிவ் ஸ்பின்னிங் மில்ஸ், ஊத்தங்கரை.

(15) பலராமவர்மா டெக்ஸ்டைல்ஸ், செங்கோட்டை.

(16) கன்னியாகுமரி மாவட்ட கோவாபரேடிவ் ஸ்பின்னிங் மில்ஸ், ஆரல்வாய்மொழி.

(ஆ) நடப்பு நிதியாண்டில், மேற்படி தொழிற்சாலைகளில் அவசரகால மருத்துவக் கூடம் அமைத்திட தொழிற்சாலைகள் ஆய்வகத் துறை ஆய்வர்களால் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே. ரவி அருணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்த பெரும்பாலான தொழிற்சாலைகள், கூட்டுறவுத் துறையைச் சார்ந்தனவாகும். என்னுடைய தொகுதியில் உள்ள செங்கோட்டை, பலராமவர்மா டெக்ஸ்டைல்ஸ் நிறுவனம், மத்திய அரசினுடைய பொதுத் துறை நிறுவனமாகும். 500 தொழிலாளர்களுக்கு மேல் இருந்தால், அங்கே அவசரகால மருத்துவக் கூடம் இருக்க வேண்டுமென்ற விதிமுறை இருந்தும்கூட, அரசுத் துறை நிறுவனங்களே அந்த விதிமுறைகளைக் கடைப்பிடிப்பது இல்லை. ஆகவே,

அங்கெல்லாம் அவசரகால மருத்துவக் கூடத்தை விரைவாக அமைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே 500 தொழிலாளர்களுக்கு மேல் பணியாற்றுகிற தொழிற்சாலைகளின் எண்ணிக்கை மொத்தம் 258 ஆகும். அந்த 258 தொழிற்சாலைகளிலே, 242 தொழிற்சாலைகளில் இதுபோன்ற மருத்துவமனைகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. மீதம் இருக்கிற 16 தொழிற்சாலைகளினுடைய பெயர்களையும் நான் இங்கே சுட்டிக்காட்டியிருக்கிறேன். அவற்றில், 6 தொழிற்சாலைகள் அரசுத் தரப்பைச் சார்ந்த தொழிற்சாலைகள். ஏனைய 10 தொழிற்சாலைகளிலும் நடப்பாண்டுதான் 500-க்குமேல், அவற்றின் பணியாட்களினுடைய எண்ணிக்கை உயர்ந்திருக்கிறது. ஆகவே இந்த அரசு உடனடியாக தனிக் கவனம் செலுத்தி, அங்கேயும் அதனை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 27, டாக்டர் ஆ. ஞானசேகரன், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

**27—**

### சாலையைச் சீரமைத்தல்

***13700—டாக்டர் ஆ. ஞானசேகரன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேல்மலையனூர் தொகுதி, செஞ்சி ஒன்றியம், திருவண்ணாமலை சாலையில் புதுப்பாளையம் கிராமத்திலிருந்து சே. பேட்டை வழியாக நல்லான்பிள்ளைபெற்றாள் வரையில் செல்லுகின்ற சாலை, ஆலம்பூண்டியிலிருந்து மழுவந்தாங்கல் வரையிலுள்ள சாலை ஆகியவற்றைச் சீரமைக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள சாலையினைச் சீர்செய்ய, ரூ.78.77 இலட்சங்கள் மதிப்பீட்டிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.



**டாக்டர் ஆ. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு மிக்க நன்றி. என்னுடைய தொகுதிக்கு உள்ளடங்கிய மேல்மலையனூர் ஒன்றியத்தில் சேத்துப்பட்டிலிருந்து மேக்களூர் வரையில் உள்ள சாலைக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, அதாவது 90 இலட்சம் ரூபாய் அளவுக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, அதற்கு ஒப்பந்தப்புள்ளியும் கோரப்பட்டுள்ள நிலையில் திடீரென்று அந்தப் பணி நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து உடனடியாக சேத்துப்பட்டிலிருந்து மேக்களூர் வரையில் உள்ள சாலையைச் செப்பனிடுவதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுப்பாளையம் கிராமத்திலிருந்து சே.பேட்டை வழியாக நல்லான்பிள்ளைபெற்றாள் வரையில் செல்லுகின்ற சாலை மற்றும் ஆலம்பூண்டியிலிருந்து மழுவந்தாங்கல் வரையிலுள்ள சாலை பற்றிதான் கேள்வி கேட்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் வேறொரு சாலை பற்றிய விளக்கத்தை இப்போது கேட்டிருக்கிறார். அதுபற்றிய விவரம் என்னிடத்திலே இப்போது இல்லை. Tender விடப்பட்டிருந்தால், அது என்ன காரணத்தினால் நிறுத்தப்பட்டிருக்கிறது என்பதை அறிந்து, மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 28, திரு. என்.ஆர். அழகராஜா, மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

**28—**

### சாலையை அகலப்படுத்துதல்

***34467—திரு. என்.ஆர். அழகராஜா:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழக முதல்வரால் அனுமதிக்கப்பட்டு, வேலை நடைபெற்று வரும் துரைசாமிபுரம் பாலம் முதல் அரண்மனைப்புதூர் விலக்கு வரை உள்ள சாலையை அகலப்படுத்த அரசு ஆவன செய்யுமா?

[2000 நவம்பர் 9

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள சாலையின் ஒரு பகுதியான ஸ்ரீரெங்கபுரம் சாலை, அதாவது கி.மீ. 0/0 முதல் 5/4 வரையிலுள்ள பகுதியை மட்டும் ரூ.67.00 இலட்சம் மதிப்பீட்டில் அகலப்படுத்தும் பணி செயலாக்கத்தில் உள்ளது. இதர பகுதிகளை அகலப்படுத்தும் செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

முற்பகல் 9-50

**திரு. என்.ஆர். அழகராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீரெங்கபுரம் வரை அகலப்படுத்துகின்ற பணி இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதற்காக இந்த அரசை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இருந்தாலும்கூட, கண்டமனூர் வழியாகச் செல்கின்ற இந்தப் பாலத்திற்கு மாற்றுப் பாதையாகத்தான் துரைசாமிபுரம் பாலம் நீண்ட நெடுங்காலமாக பல்வேறு பகுதி மக்களின் தேவைக்கேற்ப அனுமதிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே அந்தப் பாலம் கட்டப்பட்டு, அது திறக்கப்படுகின்ற நேரத்தில், தேனியிலிருந்து உதாரணமாக தேனி அரண்மனைப்புதூர் விலக்கிலிருந்து—அந்தப் பாலம் வரைக்கும், அந்தப் பாலத்திலிருந்து சின்னமனூர் வரைக்கும் சாலையை அகலப்படுத்துகிற ஒரு பணியைச் செய்தால்தான், அந்தப் பாதைக்கு முழுமையான, அந்தத் திட்டம் நிறைவேறுவதற்குண்டான பலன் கிடைக்கும் என்பதை இந்த அரசுக்கு நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதோடுகூட, கடந்த நான்கு, ஐந்து மாதங்களுக்கு முன்னால், மாண்புமிகு அமைச்சர் அவர்களே, நேரடியாக அந்தப் பாலத்தைப் பார்க்க வருகின்றபொழுதுகூட, அந்தப் பகுதி மக்களும், அந்தப்பகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையிலே நானும், மதிப்பிற்குரிய உறுப்பினர் ஆசையன் அவர்களும் இதை வலியுறுத்திச் சொன்னதற்கு அமைச்சர் அவர்களும், உடனடியாக பரிசீலிப்பதாகச் சொல்லியிருக்கின்றார்கள். ஆகவே, மீண்டும் அதைப் பரிசீலனை செய்து உடனடியாக, அந்தப் பாதையை தேனியிலிருந்து துரைசாமிபுரம் பாலம் வரைக்கும், அந்தப் பாலத்திலிருந்து சின்னமனூர் வரைக்கும் பாதையை இருவழிப் பாதையாக ஆக்குவதற்கு அரசு முயற்சி செய்யுமா என்பதை தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்



2000 நவம்பர் 9]

குறிப்பிட்டதைப்போல, அந்தச் சாலையை 5.4 கிலோமீட்டருக்கு அகலப்படுத்த 67 இலட்சம் ரூபாய் அனுமதிக்கப்பட்டு, பணிகள் நடந்து வருகின்றன. அதற்காக மாண்புமிகு உறுப்பினர் தமிழக அரசுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் பாராட்டு தெரிவித்தார்கள். அதற்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதுதவிர, மீதமுள்ள பகுதியை அகலப்படுத்தவில்லையென்றாலும், சீர்செய்வதற்கு சிறப்புத் திட்டத்தின் மூலம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, ஒரு கிலோமீட்டருக்கு நான்கு இலட்சம் ரூபாய், அதாவது இலட்சுமிபுரம்-குப்பிநாயக்கன்பட்டிச் சாலையை சீர் செய்வதற்கு நான்கு இலட்சம் ரூபாயும், இலட்சுமிபுரம்-சோலைத்தேவன்பட்டி சாலையை சீர்செய்வதற்கு ஆறு இலட்சம் ரூபாயும், கோவிந்தநகரம்-சோலைத்தேவன்பட்டி சாலையை சீர்செய்வதற்கு ஆறு இலட்சம் ரூபாயும், மீண்டும் கொடுவிலார்பட்டி-கோவிந்தநகரம் சாலையை சீர்செய்வதற்கு 1.32 இலட்சமும் ஒதுக்கீடு செய்யப்பட்டு, இப்போது இருக்கிற சாலையைச் சீர்செய்வதற்கு இந்த நிதியாதாரம் வழங்கப்பட்டிருக்கிறது. சாலையைச் சீர்செய்யப்படுகிறது. அகலப்படுத்துகிற பணி—வருங்காலத்தில் அதுவும் செய்யப்படுகிறது. அகலப்படுத்துகிற பணி—வருங்காலத்தில் நிதியாதாரத்திற்குத் தக்கபடி, அந்தச் சாலைக்கு முன்னுரிமை அளிக்கப்படும். காரணம் துரைசாமிபுரம் பாலம் கட்டப்பட்ட காரணத்தால், இராஜபாளையத்தையும் தேனியையும் இணைக்கின்ற ஒரு குறுகிய சாலையாக அது இருக்கிறது. ஆகவே மாண்புமிகு உறுப்பினர் இதிலே மிகுந்த கவனம் செலுத்துகிறார் என்பது எனக்குத் தெரியும். எனவே வருங்காலத்தில் நிதியாதாரத்திற்குத் தக்கபடி, இந்தச் சாலை மேம்படுத்தப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 29, திரு. க. மணிவர்மா, மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

**29—**

## கோயில் திருப்பணி

***25319—திரு. க. மணிவர்மா:**

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தண்டராம்பட்டு தொகுதி, அகரம் பள்ளிப்பட்டு அருள்மிகு மாரியம்மன் கோயில் திருப்பணி தொடங்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம். இத்திருக்கோயிலுக்கு திருப்பணிகளுக்காக ரூ.4.40 இலட்சத்தில் மதிப்பீடு வரப்பெற்று இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை ஆணையரின் பரிசீலனையில் உள்ளது. விரைவில் மதிப்பீடு அங்கீகாரம் வழங்கப்பட்டதும் சட்ட விதிகளுக்குட்பட்டு திருப்பணி தொடங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியான அகரம் பள்ளிப்பட்டு கிராமத்தின் அருகே தென்பெண்ணை ஆற்றங்கரையிலே அவதரித்து அருள்பாலித்துக்கொண்டிருக்கின்ற அருள்மிகு மாரியம்மன் ஆலயத்திற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அனுமதி வழங்குவதாக அறிவித்திருக்கிறார்கள். அதற்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். என்னுடைய தொகுதியிலேயிருக்கின்ற அந்தப் பகுதி மக்கள் விவசாயத்தையே நம்பி வாழ்கிறார்கள். அவர்கள் ஒரு இலட்சத்து நாற்பதாயிரம் ரூபாய் பங்குத் தொகையாகக் கட்டவேண்டுமென்ற விதியைத் தளர்த்தி, அதை ஐம்பதாயிரம் ரூபாயாகக் கட்டுவதற்கு அனுமதி வழங்குவார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாகவே, அறநிலையத் துறைக்கு என்று தனி நிதி ஒதுக்கீடு என்பது கிடையாது. அந்தந்த கோயில்களில் ஏற்படுகிற வரவு செலவுகளையொட்டியும், அரசு 75 இலட்சம் ரூபாய் பொதுவாகத் தருகின்ற மானியத்தையொட்டியும், அதற்குப் பிறகுதான் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. எவ்வளவு பெரிய கோயிலாக இருந்தாலும், சிறிய கோயிலாக இருந்தாலும், பொதுமக்களின் நன்கொடை என்ற ஒரு பகுதி, கண்டிப்பாக அதில் நிறைவேற்றித்தான் எல்லாக் கோயில்களுக்கான திருப்பணியும் நடைபெறவேண்டும். எடுத்துக்காட்டாகச் சொல்லவேண்டுமானால், பவானி சங்கமேஸ்வரர் கோயிலுக்கு நாங்கள் 50 இலட்சம் கொடுத்திருந்தால், அவர்கள் இரண்டேமுக்கால் கோடி ரூபாய் தண்டி, அதற்குப் பிறகு அவர்கள் சிறப்பாக நடத்தியிருக்கிறார்கள்.





இதுபோலத்தான் ஒவ்வொரு கோயிலுக்கும் செய்யப்படுகிறது. எனவே தங்களுடைய கோயிலினுடைய வருவாய் ரூ.53,500 ஓர் ஆண்டிற்கு. அதிலும் 3.69 ஏக்கர் நிலத்திலிருந்து வெறும் 3,500 ரூபாய்தான் வருகிறது. அதை உயர்த்துவதற்கும், சரியான முறையில் அந்த குத்தகையை வசூலிப்பதற்கும் நீங்களும் முயற்சி செய்ய வேண்டும். பிறகு ஏற்கெனவே முதலீட்டில் இருக்கிற 47,000 ரூபாயை எடுத்துக்கொள்வதற்கு நாங்கள் அனுமதி தருவோம். அதே நேரத்தில் இப்போது வந்து இருக்கிற செய்தி, உங்களுக்கு 24-4-2000-ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுவிட்டது. 30-5-2000-ல் தொழில்நுட்ப அனுமதியும் வழங்கப்பட்டுவிட்டது. எனவே திருப்பணி தொடங்குவதற்கு எந்தத் தயக்கமும் இல்லை. உங்கள் பங்கை விரைந்து செலுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 9-55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 30, திரு. மீ.அ. வைதியலிங்கம், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

**30—**

## கோயில் குளத்தைச் சீரமைத்தல்

***32265—திரு. மீ.அ. வைதியலிங்கம்:**

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் தொகுதி, பம்மலிலுள்ள சூரத்தம்மன் கோயில் குளம் பழுதடைந்துள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இதுகுறித்து அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம், அறியும்.

(ஆ) பம்மல் அருள்மிகு அர்க்கீஸ்வரர் திருக்கோயிலின் உபகோயிலான அருள்மிகு சூரத்தம்மன் திருக்கோயில் குளத்தை ஆழப்படுத்த ரூ.15.00 இலட்சத்திலும், சுற்றுச்சுவர் எழுப்ப ரூ.5.70 இலட்சத்திலும் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு நடவடிக்கையில் உள்ளது. இக்குளத் திருப்பணிக்கு திருக்கோயிலில் நிதி வசதியில்லாததால் ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டம் மூலம் நடத்த காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியாளரை அணுகி, பரங்கிமலை ஊராட்சி மன்றத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. நிதி உதவி கிடைத்தவுடன் இதுகுறித்து தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ஒரு தொன்மை வாய்ந்த கோயிலும், மிகப் பெரிய குளமும் உடையது. அதுமட்டுமல்ல, இந்தப் பகுதியில் உள்ள நிலத்தடி நீர்தான் பம்மல் பகுதி மக்களின் வீட்டு உபயோகத்திற்கு ஓரளவுக்குப் பயன்படுகிறது. எனவே, இந்தக் குளம் சீரழிந்து விட்டால், நிலத்தடி நீரும் கெட்டுவிடும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்திலே சிபாரிசு செய்யுமாறு சொல்லியிருக்கிறார்கள். அங்கு இருக்கிறவர்கள் நமக்கு நாமே திட்டத்திலே செய்து கொடுப்பதற்குத் தயாராக இருக்கிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே நானும் சிபாரிசு செய்து கொடுத்திருக்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நமக்கு நாமே திட்டத்திலே செய்வதற்கு சிபாரிசு செய்து, அதைச் செய்து கொடுப்பார்களா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே எங்களுக்கு எந்த இடர்ப்பாடும் இல்லை. தாங்கள் ஒரு விண்ணப்பத்தை நீட்ட வேண்டியது; உடனே நான் கையொப்பமிட்டு அவர்களுக்கு நீட்ட வேண்டியதுதான் என்னுடைய கடமை; உடனடியாக அது செயல்படுத்தப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 31, திரு. சீ.வெ. கிருஷ்ணன், மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.





**31—**

### கூட்டுறவு வங்கி

***31859—திரு. சீ.வெ. கிருஷ்ணன்:**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடசந்தூர் தொகுதி, பாலப்பட்டி ஊராட்சி, அழகாபுரி பகுதிக்கு கூட்டுறவு வங்கி ஒன்று அமைத்துத்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருத்திய விடையை நான் இந்த அவைக்கு அளிக்க அனுமதி அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) திண்டுக்கல் மாவட்டம், பாலப்பட்டி ஊராட்சி, அழகாபுரி பகுதிக்கு கூட்டுறவு வங்கி அமைக்கக்கூடிய சாத்தியக் கூறுகள் இப்போது இருக்கிற சட்ட திட்டப்படி இல்லை. ஆனால் கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரிலே அறிவித்திருந்தோம், புதிய கூட்டுறவு வங்கிகளை உருவாக்குவோம் என்று. இந்த 4 ஆண்டு காலத்திலே 24 புதிய தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கு இந்த அரசு அனுமதியளித்து அவை தொடங்கப்பட்டிருக்கின்றன. NABARD வங்கியினுடைய விதிமுறைகள்படி 2,000 ஹெக்டேர் உழவு செய்வதற்குரிய சாகுபடி நிலங்களும் குறைந்தபட்சமாக 10 இலட்சம் ரூபாய் குறுகிய காலக் கடனாக வழங்கக்கூடிய வாய்ப்பும் இருக்குமானால்தான், புதிய தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி அமைக்க முடியும். ஆனால், இந்த அழகாபுரி பகுதியில் 1121 ஹெக்டேர் மட்டும்தான் இருக்கிறது. அதனால் NABARD வங்கியினுடைய அனுமதிக்காக இது அனுப்பப்பட்டிருக்கிறது. தொடர்ந்து துறையினுடைய அதிகாரிகள் NABARD வங்கியினுடைய மேலாளருடன் பேசிக்கொண்டிருக்கிறார்கள். இந்த விதியைத் திருத்தி, புதிய வங்கியைத் தொடங்குவதற்குரிய முயற்சிகளை எடுத்துக்கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2000 நவம்பர் 9

**திரு. சீ.வெ. கிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுக்கு முதலிலே நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். வேடசந்தூர் தொகுதி, அழகாபுரியில் இருக்கிற விவசாயிகள் வேடசந்தூரிலிருக்கிற வங்கிக்குச் செல்ல வேண்டியிருக்கிறது. அந்தப் பகுதியிலுள்ள விவசாயிகளின் நன்மை கருதி, அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து அந்த வங்கியை அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியின்கீழ் இயங்கக் கூடிய பகுதிநேர Ration கடைகளைப் பிரிக்கக்கூடிய நேரத்திலே Ration Card-களுடைய எண்ணிக்கையை வைத்தும், தூரத்தை வைத்தும் அரசு பிரிக்க உத்தரவிட்டது. கடந்த காலங்களிலே இந்த அடிப்படையை வைத்து ஒரு கடையை இரண்டு பகுதி நேரக் கடைகளாகவும், தேவையைக் கருதி 3-ஆவது கடையும் பிரிக்கப்பட்டு வந்தது. தற்பொழுது, அது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. எனவே நம்முடைய அரசு சிறப்பு முன்னுரிமை அடிப்படையிலே, மலைப் பகுதியிலே வாழக்கூடிய கிராமங்களை அல்லது போக்குவரத்து வசதியில்லாத சிறு கரடுகளை தாண்டிச் செல்லக்கூடிய பகுதிகளையெல்லாம் கவனத்திலேகொண்டு அவசிய, அத்தியாவசிய தேவையைக் கருத்தில்கொண்டு 3-ஆவது பகுதி நேரக் கடையைப் பிரிப்பதற்கு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலத்தில் நம்முடைய முதலமைச்சர் அவர்களிடம் பகுதி நேரக் கடையைத் திறப்பதற்காக அனுமதி கேட்டபோது, 800 அட்டைகளுக்கு மேல் இருந்தால், அதாவது 400 அட்டைகள் கூடுதலாக இருந்தால், அங்கு புதிய ரேஷன் கடைகளையும், 200 அட்டைகள் கூடுதலாக இருக்குமானால் பகுதி நேரக் கடைகளையும் திறக்கலாம் என்று சொல்லி அனுமதியளித்தார்கள். ஒரு கடையிலிருந்து இன்னொரு இடம், புதியதாகத் திறக்கக்கூடிய இடம் 2 கிலோமீட்டர் தூரத்தில் இருக்க வேண்டும் என்றும் தெரிவித்திருந்தார்கள். அதே நேரத்திலே குறைந்த தூரமாக இருந்தாலும், குறைவான அட்டைகள் இருந்தாலும், ஜாதிக் கலவரங்கள் அல்லது மற்ற அத்தியாவசியமாகத் தேவை என்று மாவட்ட ஆட்சியர்கள் விரும்புவார்களேயானால், அந்த இடத்திலே புதிய கடையைத் திறக்கலாம் என்றும் ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருக்கிறது. அந்த வகையில் தமிழ்நாடு



2000 நவம்பர் 9]

முழுவதும் இப்பொழுது 4,000 பகுதி நேரக் கடைகள் திறக்கப்பட்டிருக்கின்றன. கடந்த வாரம் தண்டராம்பட்டு மணிவர்மா அவர்கள்கூட மலைப் பகுதிக்குத் தேவை என்று சொன்னார்கள். மலைப் பகுதிக்குக் கொண்டுசெல்கின்றபோது பொருள்களை எடுத்துச் செல்கின்ற லாரி வாடகை அதிகமாக இருக்கிறது. குவிண்டால் ஒன்றுக்கு அவர்களுக்கு வருகிற இலாபத்தைவிட அதிகமாக இருக்கிறது. அதனால் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் அதைத் திறப்பதற்கு முன்வருவதில்லை. திரு. மணிவர்மா அவர்கள் சொன்னதற்குப் பிறகு அரசுச் செயலாளரிடம் சொல்லப்பட்டிருக்கிறது. புதிய கோப்பு தயாரிக்கப்பட்டு நிதித் துறை - மாண்புமிகு முதலமைச்சருடைய அனுமதியைப்பெற்று இதுபோல் சங்கடமாக இருக்கின்ற இடங்களுக்கு கொண்டுசெல்வதற்கு அரசு சார்பாக நிதி உதவி வழங்கப்பட்டு புதிய கடைகள் திறக்கலாமா என்று ஆலோசிக்கப்பட்டு வருகிறது. தருமபுரி மாவட்டத்திலே பெரும்பாலான பகுதி மலைப்பகுதியாக இருக்கிறது; அங்கெல்லாம் திறக்க வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் முல்லைவேந்தன் அவர்களும் கேட்டிருக்கிறார்கள். தருமபுரி மாவட்டத்திற்கு மட்டும் சிறப்பு அனுமதியாகப் பெற்று புதிய கடைகள் திறப்பதற்கு இந்த அரசு முயற்சி எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ம. சண்முகம்.

**திரு. ம. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு, 200 அட்டைகளுக்கு அதிகமாக இருந்தால் மாவட்ட ஆட்சித்தலைவரே பகுதிநேரக் கடைக்கு அனுமதி வழங்கலாம் என்ற நிலை இருந்தது. சமீப காலத்திலே 200 அட்டைகளுக்கு மேல் இருந்தாலும்கூட அரசின் அனுமதி பெற வேண்டும் என்று அரசாணை வந்திருக்கிறது. ஆகவே காலதாமதத்தைத் தவிர்க்கின்ற வகையிலே 200 அட்டைகளுக்கு அதிகமாக இருந்தால் மீண்டும் மாவட்ட ஆட்சித் தலைவரே அனுமதி வழங்கலாம் என்று அரசாணை வெளியிட முடியுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய அரசாணை அப்படி எங்கும் வெளியிடப்படவில்லை. இப்பொழுதும் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்தப் பகுதியைச்

[2000 நவம்பர் 9

சொன்னால் ஆய்வுசெய்து உடனடியாகக் கடையைத் திறப்பதற்கு முயற்சி எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. தளபதி.

**திரு. கோ. தளபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலையூர் வட்டத்திற்கென புதிதாக கூட்டுறவு நிலவள வங்கி ஏற்படுத்துவதற்காக அரசுக்கு விண்ணப்பம் செய்திருக்கிறோம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அனுமதி பெற்றுத் தருவாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதே சட்டமன்றத்திலே இந்த ஆண்டு அறிவித்திருக்கிறோம். புதிய வட்டங்களாக இருக்கின்ற இடங்களிலே புதிய நிலவள வங்கி-ஊரக வளர்ச்சி வங்கி—தொடங்கப்படும். 39 புதிய வட்டங்கள் இப்பொழுது ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. அந்த வட்டங்களிலே தொடங்கப்படும் என்று அறிவித்திருக்கிறோம். அதிலே 19 இடங்களுக்குத் தேவையான முன்மொழிவு வரப்பட்டு NABARD அனுமதிக்காக அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது. விரைவிலே அனுமதியைப் பெற்று அந்த 19 இடங்களிலும் புதிய ஊரக வளர்ச்சி வங்கி தொடங்குவதற்கு அனுமதி அளிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 200 குடும்ப அட்டைகளும் 2 கிலோமீட்டர் தூரமும் இருந்தால் கிளைக்கடைகள் திறக்கலாம் என்று அரசு விதி இருக்கிறது. மேலும் 199 குடும்ப அட்டைகளும் 1¾ கிலோமீட்டர் தூரமும் இருந்தால், அங்கே கடை திறப்பதற்கு சிறப்பு அனுமதி பெறவேண்டும் என்றும், அவ்வாறு உள்ள இடங்களுக்கு சிறப்பு அனுமதி கொடுக்கலாம் என்றும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்துவிட்டார்கள். என்னுடைய சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட 19 கடைகள் பிள்ளையார் குடியிருப்பு, அழகனேரி, அடங்கார்குளம், நக்கனேரி, பெரியகுளம், தாமரைகுளம், புஷ்பவனம், பெத்தரெங்கபுரம், வடக்கு கும்ளமாடு, சூடுஉயர்ந்தான்விளை, தோப்புவிளை, அரசர்குளம், காடுவிளா, கரைசுற்றுபுதூர், வடிவம்மன்பட்டி, ரம்மதபுரம்.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இவை எல்லாவற்றையும் Record-ல் ஏற்றிக்கொண்டிருக்கிறீர்களா? இதற்கெல்லாம் தனியாகப் போய்



2000 நவம்பர் 9]

அமைச்சரைப் பார்த்து மனு கொடுங்கள். அமைச்சர் கொள்கை எல்லாம் சொல்லிவிட்டார். அமைச்சரைப் போய்ப்பாருங்கள்.

**திரு. மு. அப்பாவு:** 10 முறை கொடுத்திருக்கிறேன். கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் சொல்லிவிட்டார். நீங்கள் நேரில் போய்ப் பாருங்கள். இதுகுறித்து என்ன என்று கேளுங்கள். இவற்றைப் படிக்க விடமாட்டேன். மாண்புமிகு அமைச்சர் பதில் சொல்லுங்கள். திரு. அப்பாவு, நீங்கள் உட்காருங்கள்.

**திரு. மு. அப்பாவு:** அந்தக் கடைகளுக்கு நான் பல தடவை மனு கொடுத்திருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் உட்காருங்கள் என்று சொன்னால் உட்காரவேண்டும். (குறுக்கீடு) அமைச்சர், பதில் சொல்லுங்கள். அவர் பல தடவை மனு கொடுத்துவிட்டாராம். நீங்கள் நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொல்கிறார். அதற்கு தயவுசெய்து பதில் சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நேரடியாகச் சொல்லி, அது உணவுத் துறை ஆணையருக்கு அனுப்பப்பட்டு, ஆய்வு செய்யப்பட்டு உள்ளது. ஏற்கெனவே புதிய ரேஷன் அட்டைகள் வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டபோது அதையும் இந்த அரசு செய்து தந்திருக்கிறது. புதிய பகுதி நேரக் கடைகளை அதிகமாகத் திறக்கின்றபோது என்ன நடக்கிறது என்று சொன்னால், ஒரு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி 5 இடங்களிலே ரேஷன் கடைகள் வைக்குமானால் 10 நபர்கள் வேலையிலே இருப்பார்கள். ஒரு கடைக்கு 2 கிளைக் கிடைகள் திறக்கப்படுமானால் 2 நாட்கள் அதை மூடிவிட்டு இவர்களேதான் அந்த இடத்திற்குச் சென்று பொருள்களை வழங்கவேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. அப்படிப் போகின்றபோது இந்தக் கடை மூடியிருக்கிறது என்று தொடர்ந்து மக்களிடம் இருந்து மனுக்களும் வந்துகொண்டிருக்கின்றன. 10 ஆட்களுக்குமேல் வேலையில் வைக்க முடியாது. அந்தச் சங்கடங்கள் எல்லாம் இருக்கின்றன. அதனால் அவசியம் தேவை என்று சொன்னால், மாண்புமிகு உறுப்பினர் கருதுவாரானால், முறைப்படி உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2000 நவம்பர் 9

முற்பகல் 10-05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 32, திரு. வ. வேலுசாமி, மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்.

**32—**

**சேலை கொள்முதல்**

***8224—திரு. வ. வேலுசாமி:**

மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரையில் தயாரிக்கப்பட்டு தேக்கமாக உள்ள சுமார் ரூ.3.00 கோடி மதிப்புள்ள கோடம்பாக்கம் ரகச் சேலைகளை அரசு கொள்முதல் செய்ய முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) 31-3-2000 அன்று 36,203 கோடம்பாக்கம் ரகச் சேலைகள் இருப்பில் இருந்தன. அதன் மொத்த மதிப்பு 1 கோடியே 14 இலட்சத்து 4 ஆயிரம் ரூபாயாகும். இவற்றில் ரூபாய் 42 இலட்சத்து 39 ஆயிரம் மதிப்புள்ள 13,500 சேலைகள் கோ-ஆப்டெக்ஸால் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது.

**திரு. வ. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாநகரத்தைப் பொறுத்த அளவிலே கைத்தறிக்குப் பெயர்போன இடம். அதிகமான மக்கள் அந்தத் தொழிலை நம்பி தமது வாழ்க்கையை நடத்தி வருகிறார்கள். இந்தச் சூழ்நிலையில் 2, 3 ஆண்டுகளுக்கு முன்பாக பல்வேறு கூட்டுறவுச் சங்கங்கள் வாயிலாக கோடம்பாக்கம் ரக சேலைகளை நெசவு நெய்யும்படிச் சொல்லி அவர்களும் அந்தச் சேலைகளை நெசவு செய்து சங்கங்களிடம் ஒப்படைத்திருக்கிறார்கள். ஆனால், அவை தேக்கமாகி இரண்டு ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டன. இப்போது நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள், 40 இலட்சம் ரூபாய்க்கு மாத்திரமே அவற்றைக் கொள்முதல் செய்திருப்பதாகச் சொல்கின்றார்கள். மீதிச் சேலைகள் 2, 3 ஆண்டுகளாகத் தேக்கமாகி இருக்கக்கூடிய காரணத்தினாலும் அவற்றினுடைய கொள்முதல் விலை இயற்கையிலேயே கூடுதலாகி



இருக்கக்கூடிய காரணத்தினாலும் புதிய ரகச் சேலைகளை மாத்திரம் கொள்முதல் செய்துகொண்டேயிருக்கிறார்கள். சேலைகள் தேக்கப்பட்டுவிட்ட காரணத்தினால் பல சங்கங்கள் நடத்த முடியாமல் நெசவாளர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்க இயலாத நிலை இருக்கிறது. எனவே மீண்டும் பரிசீலனை செய்து, ஏற்கெனவே தேக்கமாகியிருக்கக்கூடிய அனைத்துச் சேலைகளையும் கொள்முதல் செய்வதற்குத் துரிதமான நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்ததுபோல 3 கோடி ரூபாய் மதிப்புள்ள கோடம்பாக்கம் ரகச் சேலைகள் இருப்பிலே இல்லை. பொதுவாக, கோடம்பாக்கம் ரகச் சேலையை மக்கள் தற்போது விரும்புவதில்லை என்பது கடந்த 3 ஆண்டுகளாக அதனுடைய விற்பனை விவரத்திலே தெரியப்படுத்தப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்ததைப்போல புதிய சேலைகள் அனைத்தையும் நாங்கள் கொள்முதல் செய்கிறோம் என்பதற்குரிய காரணம், நாங்களே அவர்களுக்கு வேறு மாற்றுத் திட்டத்தைக் கொடுத்தபோது அதனை ஏற்றுக்கொண்டவர்கள் முழுமையாகச் செய்கின்ற காரணத்தினால் நாங்கள் அவற்றைக் கொள்முதல் செய்கிறோம். ஆனால், கோடம்பாக்கம் ரகச் சேலைகள், நுகர்வோரும் விரும்பாத ஒன்றாகவும், அதிலும் சில தரம் குறைந்தவைகளாகவும் உள்ளன. அப்படிப்பட்ட சேலைகள்தான் 2, 3 வருடத்திற்கு முந்தைய சேலைகள் என்பதையும் இதை ஒழுங்குபடுத்த வேண்டுமென்றால் மீண்டும் உட்கார்ந்து பேசி அதை ஒழுங்குபடுத்தித்தான் கொள்முதல் செய்ய இயலும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 33, திரு. டி. மணி, மாண்புமிகு இளைஞர் மற்றும் மாசுக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர்.

**33—**

**கழிவுநீரால் பாதிப்பு**

***12703—திரு. டி. மணி:**

மாண்புமிகு இளைஞர் மற்றும் மாசுக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அம்பாசமுத்திரம், மதுரா பேப்ரிக்ஸ் ஆலையிலிருந்து வெளிவரும் கழிவு நீரால் ஏற்படும் பாதிப்புகளைத் தடுக்க மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் மேற்கொண்ட நடவடிக்கையின் விவரம் என்ன?

[2000 நவம்பர் 9

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, இளைஞர் மற்றும் மாசுக் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

விவர அறிக்கை ஒன்று அவையில் வைக்கப்பட்டுள்ளது.

**அறிக்கை**

மதுரா பேப்ரிக்ஸ் மில் என்ற பெயர் தற்போது கோர்ட்ஸ் வியல்லா இந்தியா லிமிடெட் என்று பெயர் மாற்றப்பட்டுள்ளது. இத்தொழிற்சாலை நாளொன்றுக்கு சுமார் 1139 கி.லி. வடிகால் கழிவு நீரையும் 7693 கி.லி செயல்முறைக் கழிவுநீரையும் வெளியேற்றுகிறது. இந்நிறுவனம் சமன்படுத்தும் தொட்டிகள், படியவைக்கும் தொட்டி, தெளியவைப்பான் தொட்டி உட்பட பல்வேறு சுத்திகரிப்பு சாதனங்களைக் கொண்ட அமைப்பைக் கொண்டுள்ளது. சுத்திகரிக்கப்பட்ட நீரின் ஒரு பகுதியினை விவசாயத்திற்குப் பயன்படுத்துகிறது. வாரியத்தின் அறிவுறுத்தலின் பேரில் வண்ணம் நீக்கும் அமைப்பினை 1996 ஆம் ஆண்டு ஆகஸ்ட்முதல் இயக்கி வருகிறது. வாரிய நிபந்தனையின்டி இத்தொழிற்சாலை, ஈரப்பத முறையை நிறுத்தாததால், 24-10-1997 அன்று வாரியம் தொழிற்சாலையிடம் விளக்கம் கோரியது. நீதிமன்ற ஆணையின் பேரிலும், வாரியத்தின் ஆணையை மீறியதாலும் 8-4-1998 மற்றும் 9-4-1998-ல் வாரியம் இத்தொழிற்சாலையைப் பார்வையிட்டதன் விளைவாக 13-4-1998 முதல் ஈரப்பத முறையை முழுவதுமாக நிறுத்திவிட்டது. 17-4-1998 அன்று ஒரு சில நிபந்தனைகளுடன் இத்தொழிற்சாலையை இயக்க வாரியம் அனுமதி அளித்தது. இந்நிபந்தனைகளுக்கு எதிராக இந்நிறுவனம் செய்துகொண்ட மேல்முறையீட்டை ஏற்றுக்கொண்ட மேல்முறையீட்டு ஆணையம், இந்நிறுவனம் தாமிரபரணி ஆற்றில் வெளியேற்றும் கழிவுநீரின் அளவில் பத்து மடங்கு ஆற்றில் நீர் வரத்து இருந்தால்தான் சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரை ஆற்றில் வெளியேற்றலாம் என்றும் இல்லையேல் சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரை பொதுப் பணித் துறையின் முன்அனுமதி பெற்று கால்வாயில் விடலாம் என்றும் தெரிவித்து மூடப்பட்ட இந்நிறுவனம் மீண்டும் செயல்பட அனுமதித்துள்ளது. வாரியம் 29-5-1998 அன்று இத்தொழிற்சாலைக்கு கழிவுநீரை தாமிரபரணி ஆற்றில் மற்றும் தெற்கு கொடை மேலழகியான் கால்வாயிலும் வெளியேற்றுவதை நிறுத்துமாறு ஆணையிட்டது. வாரியம் அறிவுறுத்தியபடி இத்தொழிற்சாலை அமைந்துள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தின் சுத்திகரிப்புத் திறனை



2000 நவம்பர் 9]

மேலும் அதிகரிக்கும் பொருட்டு 25-8-1998 அன்று தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத் தலைவர் அவர்கள் தலைமையில் இத்தொழிற்சாலை நிர்வாகிகளுடன் கலந்தாலோசிக்கப்பட்டது. இத்தொழிற்சாலை அமைத்துள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தினை மேம்படுத்துதல் தொடர்பான திட்டங்களைத் தயார்செய்து அதை உடனடியாக செயல்படுத்த வேண்டும் என்று தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் அறிவுறுத்தியதை இத்தொழிற்சாலையின் நிர்வாகம் செயல்படுத்த ஒப்புக்கொண்டது. இதுதொடர்பாக உரிய திட்டங்களை தயார் செய்ய நாகபுரியில் உள்ள தேசிய சுற்றுப்புறச் சூழல் பொறியியல் மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தை நிர்வாகம் அணுகியது. இந்நிறுவனமும் எதிர்மறை சவ்வூடு பரவல் முறையில் சுத்திகரிக்கும் திட்டத்தை ஆராயவும், கழிவுநீர் சுத்திகரிப்பு தொடர்பான திட்டத்தைச் செயல்படுத்தவும் ஒப்புக்கொண்டுள்ளது. எனவே, இத்தொழிற்சாலை நிர்வாகம், மேற்கண்ட திட்டத்திற்கு செயல்வடிவம் மற்றும் திட்ட அறிக்கை ஆகியவற்றைப் பெறுவதற்கு ரூ.21 இலட்சம் தேசிய சுற்றுச்சூழல் நல பொறியியல் மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்திற்குச் செலுத்தியுள்ளது. மேற்கூறிய திட்டத்தைத் தயார்செய்தல் மற்றும் செயல்படுத்துதல் ஆகியவற்றிற்கு 11 மாதங்கள் தேவைப்படும் என்று தேசிய சுற்றுச்சூழல் பொறியியல் மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் இத்தொழிற்சாலைக்கு 27-1-1999 அன்று எழுதிய கடிதத்தில் தெரிவித்துள்ளது. கழிவுநீர் சுத்திகரிப்பு தொடர்பான முழுத்திட்டம் மற்றும் செயல்படுத்துதல் ஆகிய விவரங்களின் அடிப்படையிலேயே, தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாடு வாரியம் இத்தொழிற்சாலைக்கான இசைவாணையைப் புதுப்பிக்கும்.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கையின்படி, கழிவான இந்தத் தண்ணீரை நிலங்களுக்குப் பயன்படுத்துவதால் அந்த நிலங்களில்கூட பயிரேற்ற முடியாத ஒரு நிலை உள்ளது. மேலும், இதுபோன்ற கழிவுநீரைக் கால்வாய்களில் திறந்துவிடுவதனால் அது பயிருக்குப் பயன்படாத அடிப்படையில் உள்ளது. இதை முழுமையாகக் கட்டுப்படுத்துவதற்கு மற்ற புதிய முயற்சிகளை அரசு மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மதுரா கோட்ஸ் லிமிடெட் என்ற தொழிற்சாலை 1891 ஆம் ஆண்டு முதல் இயங்கி வருகிறது. 110 ஆண்டுகள் பழமையான அத்தொழிற்சாலையில் பல்வேறு நடவடிக்கைகளை தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் தற்போது எடுத்து, அதனுடைய கழிவுநீரைத்

தூய்மைப்படுத்த முயற்சிகள் மேற்கொண்டு வருகின்றது. தொடர்ந்து பல திட்டங்களைத் தயார்செய்ய நாகபுரியிலுள்ள தேசிய சுற்றுச்சூழல் பொறியியல் மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் அறிவுரையை நாட, மாசுக் கட்டுப்பாடு வாரியம் இத்தொழிற்சாலைக்கு அறிவுரைகள் வழங்கியுள்ளது. மேலும் Reverse Osmosis Process, எதிர்மறை சவ்வூடு பரவுதல் முறையைப் பின்பற்றியும் வேறுபல முறைகளைப் பின்பற்றியும் தொடர்ந்து கழிவுநீரைச் சுத்திகரிப்புச் செய்ய அந்தத் தொழிற்சாலை ஒப்புக்கொண்டுள்ளது. கடந்த 3-11-2000 அன்று மேற்படி தொழிற்சாலையை மாசுக் கட்டுப்பாடு வாரியத்தினுடைய தலைவி அவர்களும், உறுப்பினர்-செயலர் அவர்களும் நேரில் சென்று பார்வையிட்டபோது, சுத்திகரிக்கப்பட்ட நிறமற்ற நீர் வாய்க்காலில் விடப்பட்டு, தாமிரபரணி ஆற்றில் கலந்துவிடப்பட்டதாகக் கண்டறியப்பட்டுள்ளது. மேலும் பல நடவடிக்கைகள் எடுக்க வாரியம் அறிவுறுத்தப்பட்டு வருகின்றது.

முற்பகல் 10-10

**திரு. அ.லெ. சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அம்பாசமுத்திரம்பற்றியது என்றால் அனுமதிக்கிறேன். திரு. அ.லெ. சுப்பிரமணியன்.

**திரு. அ.லெ. சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2, 3 தினங்களுக்கு முன்னால் மத்திய சுற்றுப்புறச் சூழல் அமைச்சர் மாண்புமிகு திரு. டி.ஆர். பாலு அவர்கள், நெல்லை மாவட்டத்தில் ஆய்வு செய்து தாமிரபரணியை சுத்தப்படுத்துவதற்காக 60 கோடி ரூபாய் திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். அதற்காக நன்றி தெரிவிக்கிறேன். திருநெல்வேலியில் தாமிரபரணியை சுத்தப்படுத்துவது முக்கியம். ஏனென்றால் திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களிலுள்ள பல்வேறு நகரங்களுக்கும் குடிநீர் இங்கேயிருந்துதான் போகிறது. ஆகவே அப்படியிருக்கிற நேரத்தில் இப்படி திட்டம் நிறைவேற்றுகிறபோது அம்பாசமுத்திரம் மற்றும் வருகின்ற வழியில் இருக்கின்ற சில இடங்களில் அந்த ஆறு அசுத்தப்படுத்தப்படுகிறது. இங்கே மதுரை ஃபேப்ரிக்ஸ் மற்றும் சில தொழிற்சாலைகள் தங்களுடைய கழிவுநீரை ஆற்றிலே விடுகின்றன. அதைத் தடுத்து நிறுத்த அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகின்றேன்.



**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அமைச்சர் மாண்புமிகு பாலு அவர்கள் 3 நாட்களுக்கு முன்னால் திருநெல்வேலிக்குச் சென்று 60 கோடி ரூபாய் செலவிலே ஒரு பெரிய திட்டத்தை, திருநெல்வேலியிலே மக்கள் பயன்படுத்துகிற அளவுக்கு கழிவுநீரை சுத்திகரிப்பதற்கான திட்டத்தை அறிவித்துவிட்டு வந்தார்கள். ஆகவே அந்த நதியின் கரையில் இருக்கிற தொழிற்சாலையிலிருந்து வெளிவரும் கழிவுகளை எல்லாம் சரியாக சரிசெய்து, அந்தக் கழிவுகள் ஆற்றிலே விழாமல் இருப்பதற்கான நடவடிக்கைகளை தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 34, திரு. மு. அப்பாவு, மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.

**34—**

## சத்துணவு மையத்தைச் சீர் செய்தல்

***22885—திரு. மு. அப்பாவு:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் ஊராட்சி ஒன்றியம், கோட்டைக்கருங்குளம் கிராம சத்துணவு மையம் பழுதடைந்துள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது சரி செய்யப்படும்?

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ). திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் கோட்டைக்கருங்குளம் குழந்தைகள் நல மைய சத்துணவுக் கூடம் ரூ.20,000 மதிப்பீட்டில் பழுது நீக்கம் செய்யப்பட்டது.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய சத்துணவு மையங்கள் எல்லாம் நீண்ட காலத்திற்கு முன்னால் அதாவது 10, 15 ஆண்டுகளுக்கு முன்னால் கட்டப்பட்ட சத்துணவு மையங்கள். பள்ளிகளிலே இருக்கும் சத்துணவுக் கூடங்கள் எல்லாம்

10, 15 ஆண்டுகளுக்கு முன்னால் கட்டப்பட்டவை. எனவே அவை எல்லாம் மிகவும் பழுதான நிலையில் இருக்கின்றன. கோட்டைக்கருங்குளம் மட்டும் அல்ல; இராதாபுரம் ஒன்றியம், வித்யாபதி பஞ்சாயத்து, காடுஉலாவிலே உள்ள ஒரு பள்ளியிலே சத்துணவு கூடமே இல்லாமல் சத்துணவு மையம் நடைபெற்று வருகிறது. அதேபோன்று வள்ளியூர் பஞ்சாயத்து யூனியன், பழவூர் பஞ்சாயத்து யூனியன் ஆரம்பப் பள்ளிகளிலும் உள்ள சத்துணவு மையங்கள் மிகவும் மோசமான நிலையில் இருக்கின்றன. இவ்வாறு பல சத்துணவு மையங்கள், பள்ளிகளிலே இருக்கின்ற சத்துணவுக் கூடங்கள் எல்லாம் மிக மோசமான நிலையிலே இப்போது இருக்கின்றன. ஆகவே, இதற்கென்று தனியாக நிதி ஒதுக்கீடு செய்து தமிழகத்தில் இருக்கின்ற அனைத்து சத்துணவுக் கூடங்களையும் நல்லமுறையில் பராமரிப்பதற்கு ஏற்பாடு செய்வார்களா என்று தங்கள்மூலம் அறிந்துகொள்ள விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே 1999-2000 ஆண்டிலே இதற்காக ஆங்காங்கே உள்ளாட்சித் துறையின்மூலமாக சமன்பாட்டு நிதியிலே பல சத்துணவுக் கூடங்கள் பழுது பார்க்கப்பட்டிருக்கின்றன. அதனுடைய விவரங்களை நான் இங்கே படிக்க விரும்பினாலும் நிறைய இருக்கின்றன. குறிப்பாக கடந்த ஆண்டு மீண்டும் 2000-2001 ஆம் ஆண்டிற்கு நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், உள்ளாட்சி மன்றங்கள் மூலமாக—7 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து—இன்னும் இருக்கக்கூடிய ஏனைய சத்துணவுக் கூடங்களைப் பழுதுபார்ப்பதற்காக நிதியொதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 35, திரு. கொ. வீ. நன்னன், மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்.

**35—**

### பெரியார் நினைவு மணிமண்டபம்

***22902—திரு. கொ.வீ. நன்னன்:**

மாண்புமிகு செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) பகுத்தறிவுச்சுடர் பெரியாரின் நினைவாக சென்னையில் மணிமண்டபம் மற்றும் அரங்கம் ஆகியவற்றை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

**திரு. கொ.வீ. நன்னன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'புத்தனுக்குப் பின்பு ஒரு பெரியாரு. இந்த பூமியிலே வந்து பொறந்தாரு. தத்துவத்தை மக்களுக்குப் படித்தாரு. தன்மான இயக்கத்தை வளர்த்தாரு' அந்தப் பெரியார், பெண் உரிமைக்காகவும், மனித நேயத்திற்காகவும், உண்மை நேயத்திற்காகவும், உரிமை நேயத்திற்காகவும் பாடுபட்ட அந்தச் சிந்தனைச் சிற்பிக்காக, தமிழர்களைத் தட்டி எழுப்பி தன்மானம் வளர்த்த அந்தப் பகுத்தறிவுச் சிங்கத்திற்காக, மணிமண்டபம் கட்டுவது மட்டுமல்லாமல் அவருடைய வரலாற்றை வருகிற இளைய சமுதாயம் புரிந்துகொள்கிற அளவிற்கு ஆங்காங்கே ஒவ்வொரு ஊரிலும் ஒவ்வொரு பகுத்தறிவுப் பாசறையைக் கட்டி அங்கே பெரியார் அவர்களுடைய பெயரால் படிப்பகத்தை நிறுவி, மக்கள், இளைய சமுதாயம் புரிந்துகொள்ளக்கூடிய அளவிற்கு இந்த அரசு வகைசெய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-15

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் அவர்களுக்கு இந்த அரசு காணிக்கை' என்று நம்முடைய பேரறிஞர் அண்ணா அவர்களும் இந்த ஆட்சி அமைந்தபோது சொன்னதை மாண்புமிகு உறுப்பினருக்கு நினைவுபடுத்துவதோடு, தந்தை பெரியார் அவர்களுடைய பகுத்தறிவுக்கொள்கைகளை நிலைநாட்டுகின்ற வகையில் அவர்களுக்குப் பெருமை சேர்க்கின்ற வகையில், பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் அவர்களுடைய பெயரால் தந்தை பெரியார் நினைவு சமத்துவபுரங்களை உருவாக்கியிருக்கிறோம். வைக்கத்தில் பெரியார் அவர்களுடைய நினைவு இல்லம் உருவாக்கப்பட்டிருக்கிறது. ஈரோட்டில் தந்தை பெரியார் அவர்கள் வாழ்ந்த இல்லம் நினைவு இல்லமாக ஆக்கப்பட்டு சிறப்பாகப் பராமரிக்கப்பட்டு வருகிறது. தொடர்ந்து, சென்னையில் மணிமண்டபம்

அமைப்பது குறித்து அரசு பரிசீலித்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. தாமரைக்கனி.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பகுத்தறிவுத் தந்தை பெரியாருடைய சிலையை டெல்லியிலுள்ள தமிழக அரசு இல்லத்தில் வைப்பதற்கு அரசு ஆவன செய்யுமா? அதுமட்டுமல்லாமல் அவருடைய புகழை மேலும் பரப்புகின்ற அளவில் டெல்லி நாடாளுமன்ற வளாகத்தில் அவருடைய சிலையை வைக்க மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரின் கருத்து மத்திய அரசின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியாருடைய வாழ்க்கையைத் திரைப்படமாக ஆக்கி, வருகிற சமுதாயத்திற்குப் படைப்போமானால் அது மிகப்பயனுள்ளதாக இருக்கும் என்பதை, கப்பலோட்டிய தமிழன், வீரபாண்டிய கட்டபொம்மன் போன்ற திரைப்படங்கள் மூலமாக நாம் புரிந்துகொண்டோம். தந்தை பெரியாருடைய புகழைப் பரப்புகின்ற வண்ணம், அவருடைய வாழ்க்கை வரலாற்றைத் திரைப்படமாக ஆக்குவதற்கு அரசு முன்வரவேண்டும். சமீபத்திலேகூட அகில இந்தியத் தலைவர்களை எல்லாம் அழைத்து பெரியாருடைய பிறந்தநாளை எங்களுடைய அன்புத் தலைவர் ஐயா மூப்பனார் அவர்கள் கொண்டாடினார்கள். தன்னுடைய வாழ்நாளின் இலட்சியமே பெரியாராக நடிப்பதுதான் என்று சிவாஜி கணேசன் அவர்கள் கூறியிருக்கின்றார்கள். அப்படிப்பட்டவர்களும் வாழ்கின்றார்கள். தமிழக முதல்வரும் சிவாஜி கணேசன் அவர்களும் சமகாலத்திலே திரைப்பட வாழ்க்கையைத் தொடங்கியவர்கள். ஆகவே, அவரை வைத்து . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாவிற்கு வாருங்கள்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** பெரியாருடைய வாழ்க்கை வரலாற்றைத் திரைப்படமாக ஆக்குவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரறிஞர் அண்ணா அவர்களுடைய வாழ்க்கை வரலாற்றை திரைப்படப்பிரிவின் மூலமாக படமாக எடுத்து, அதை தமிழ்நாடு முழுவதும் வெளியிட்டிருக்கிறோம். இதற்காக ஜனாதிபதியினுடைய விருதே கிடைத்திருக்கிறது. அதேபோல பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியாருடைய வாழ்க்கை வரலாற்றைத் திரைப்படப்பிரிவின் மூலமாக ரூபாய் 11 இலட்சத்து 20 ஆயிரம் மதிப்பீட்டில் படம் எடுத்து, அதற்கான Editing மற்றும் ஒலிப்பதிவுப் பணிகள் எல்லாம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மாண்புமிகு தலைவர் முதல்வர் கலைஞர் அவர்கள் யாரும் சொல்வதற்கு முன்னாலே சிந்தித்துச் செயலாற்றுவதில் வல்லவர் என்பதற்கு இவை எல்லாம் உதாரணங்கள் என்பதைத் தெரிவிப்பதோடு (மேசையைத் தட்டும் ஒலி) தந்தை பெரியாருடைய பிறந்தநாளை நாம் கொண்டாடினால் மாத்திரம் போதாது. அந்த மாபெரும் தலைவரின் இலட்சியங்களைக் கடைப்பிடிக்கிற நல்ல பண்பாட்டை எல்லோரும் கடைப்பிடிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. குத்தாலம் பி. கல்யாணம்.

**திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல 'தந்தை பெரியார் அவர்களுக்கே இந்த அரசு காணிக்கை' என்று சொன்ன பேரறிஞர் அண்ணா அவர்களுடைய நினைவிடத்திற்குப் பக்கத்தில், அமைப்பதாகச் சொல்லப்பட்டிருக்கின்ற இந்த மணிமண்டபம் அமைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே நான் பெரியார் அவர்களுடைய மணிமண்டபம் அமைப்பதற்கு அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது என்று சொன்னேன். உரிய நேரத்தில் பரிசீலித்து உரிய முறையில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.பி. இராசன்.

**திரு. வி.பி.இராசன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** (குறுக்கீடு)

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2000 நவம்பர் 9

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது தேவை இல்லாதது, இந்தக் கேள்வியை நான் அனுமதிக்கவில்லை, உட்காருங்கள். இது அவைக்குறிப்பில் ஏறாது. திரு. கே. சுப்பராயன்.

முற்பகல் 10-20

**திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே தந்தை பெரியார் அவர்களுக்கு மணிமண்டபம் கட்டவேண்டும் என்ற கோரிக்கை எழுப்பப்பட்டிருக்கிறது. ஒருவருக்கு மணிமண்டபம் கட்டுவது அல்லது சிலைகள் வைப்பது அல்லது வேறுவகைகளில் கௌரவிக்க விரும்புவது என்பது அவர்கள் வாழ்ந்த காலத்தில் வலியுறுத்திய கொள்கைகள் வலுவானவை, தேவையானவை என்பதற்காகத்தான் அத்தகைய நடவடிக்கைகளில் நாம் ஈடுபடுகின்றோம். தந்தை பெரியார் அவர்களுக்கு மணிமண்டபம் கட்டப்படுவது குறித்து பரிசிலிக்கப்படும் என்று இங்கே அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். ஆனால் பெரியார் அவர்களுக்கு மணிமண்டபம் கட்டுகின்ற அதேநேரத்தில் பெரியார் வாழ்ந்த காலத்தில் அவர் வலியுறுத்திய கருத்துகள், இப்போது சமூக வாழ்க்கை நெறியாக எந்த அளவுக்கு மாற்றப்பட்டிருக்கின்றன என்பது குறித்த ஆய்வை மாநில அரசு மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தந்தை பெரியாருடைய இலட்சியங்களையும் உணர்வுகளையும் பிரதிபலிக்கின்ற ஓர் அரசாகத்தான் இந்த அரசு செயலாற்றிக்கொண்டிருக்கிறது என்பதற்கான அடையாளமாகத்தான் கடந்த ஆண்டை மதநல்லிணக்க ஆண்டாக இந்தியாவிலேயே முதன்முதலாக முதல்வர் கலைஞர் அவர்கள் அறிவித்து, தீண்டாமை ஒழிப்புப் பிரச்சாரத்தையெல்லாம் நடைமுறைப்படுத்தினார்கள். பெரியாருடைய எண்ணங்களை நிறைவேற்றுகின்ற வகையில், கலப்புத் திருமணம் செய்துகொள்கின்ற தம்பதிகளுக்கு இருபதாயிரம் ரூபாயை இந்த அரசு வழங்குகிறது. தீண்டாமை ஒழிப்பு என்ற உயர்ந்த நோக்கத்தை மையமாகக்கொண்டு தீண்டாமை ஒழிப்புப் பிரச்சாரப் படங்களையெல்லாம் எடுத்து வெளியிட்டிருக்கிறோம். பெரியாருடைய எண்ணங்களைப் பிரதிபலிக்கிற வகையில்தான் பெரியார் நினைவு சமத்துவபுரங்களை உருவாக்கியிருக்கிறோம். ஆக மொத்தமாகவே இந்த அரசே பெரியாருடைய எண்ணங்களைப் பிரதிபலிக்கிற அரசுதான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேநேரத்தில் பெரியார் கொண்டிருந்த சீர்திருத்த உணர்வுகளை மக்களிடம் கொண்டுசென்று



2000 நவம்பர் 9]

செம்மைப்படுத்துவதற்காகத்தான் சமூக சீர்திருத்தத் துறை என்ற ஒரு துறையை கலைஞர் அவர்கள் உருவாக்கியிருக்கிறார்கள் என்பதையும் நான் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்.

**திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கண்ணியத்திற்குரிய காயிதேமில்லத் அவர்களின் நினைவாக மணிமண்டபம் கட்டுவதாக கடந்த சட்டமன்றக் கூட்டத்தொடரிலே அரசு அறிவிப்புச் செய்திருக்கிறது. அது எந்த அளவிலே இருக்கிறது? எப்போது அதைச் செயல்படுத்த இருக்கிறார்கள் என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கண்ணியத்திற்குரிய காயிதேமில்லத் அவர்களுக்கு நினைவுமண்டபம் கட்ட இந்த அரசு அறிவித்தது. இடம் தேர்வு செய்வதில் சிலர் வேறுபல கருத்துகளைச் சொன்ன காரணத்தினால், அதைத் தீர ஆலோசித்து அதற்கான முடிவெடுத்து இப்போது அந்த நினைவுமண்டபம் கட்டுகிற பணியைத் தொடங்குவதற்கான எல்லா நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன. இந்த மாத இறுதிக்குள் அந்தப் பணி தொடங்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோட்டுச் சிங்கம், வெண்தாடி வேந்தன், பகுத்தறிவுப் பகலவன் ஈ.வே.ரா. அவர்களுக்கு -சென்னையிலே கலைஞர் அவர்கள் வள்ளுவர் கோட்டத்தை அமைத்ததுபோல, இந்தப் பகுத்தறிவுப் பகலவனுக்கு- சென்னையிலே மிக பிரம்மாண்டமான முறையிலே பெரியார் சொன்ன பகுத்தறிவுக் கருத்துகள் அடங்கிய அத்தனை வாசகங்களோடும் - வள்ளுவர்கோட்டம் அமைத்ததுபோல் - மணிமண்டபத்தை அமைக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் அத்தனை பேருடைய உணர்வுகளையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுசென்று, இதைப் பரிசீலிக்கும்போது அதை நிறைவேற்றுவதற்கான வாய்ப்பை உருவாக்கித் தருவோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2000 நவம்பர் 9

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 36, திரு. கோ. சண்முகம், மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்.

**36—**

**கால்நடை மருத்துவமனை**

***29456—திரு. கோ. சண்முகம்:**

மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பத்தூர் தொகுதி, சிவசக்தி நகரில் கால்நடை மருத்துவமனை தொடங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) திருப்பத்தூர் தொகுதி, சிவசக்தி நகரில் கால்நடை மருத்துவமனை தொடங்க தற்போது செயற்குறிப்பு ஏதுமில்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கோ. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பத்தூர் தொகுதி, சிவசக்தி நகரைச் சுற்றி 10 கிராமங்கள் இருக்கின்றன. அங்கே 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஆடு, மாடுகள் போன்ற கால்நடைகள் உள்ளன. ஆகவே அங்கே கால்நடை மருத்துவமனை தொடங்க அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி, சிவசக்தி நகரில் கால்நடை மருந்தகமோ அல்லது கால்நடைக் கிளை நிலையமோ தற்போது எதுவும் இல்லை. சிவசக்தி நகர் என்ற கிராமத்திற்கு மிக அருகில் திருப்பத்தூரில் ஒரு கால்நடை மருத்துவமனையும், மடவாளம் என்ற இடத்தில் கால்நடை மருந்தகமும், புதுப்பேட்டையில் ஒரு கால்நடைக் கிளைநிலையமும், இவற்றுக்கு முறையே விளக்கல்நத்தம் என்ற இடத்தில் ஒரு பார்வைக் கிளை நிலையமும் தற்போது செயல்பட்டு, சிவசக்தி நகரில் உள்ள கால்நடைகளுக்கு தற்போது சிறப்பான முறையில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. எதிர்வரும் ஆண்டுகளில் சிவசக்தி நகரில் உள்ள கால்நடைகளின் எண்ணிக்கையைக் கருத்தில் கொண்டும், அரசின் நிதிநிலைமையைக் கருத்தில்கொண்டும், அங்கே கால்நடை மருந்தகம் அமைக்க பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2000 நவம்பர் 9]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 37, திரு. கே. சுப்பராயன், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

**37—**

**திருமண உதவித் தொகை**

***22614—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு சமூகநலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெண்களுக்கான திருமண உதவித் தொகை பெறுவதற்கான நிபந்தனை வரம்புகளைத் தளர்த்த அரசு முன்வருமா?

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன், சமூக நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருமண உதவித் திட்டங்களில் உதவித்தொகை பெறுவதற்கான நிபந்தனை வரம்புகளை மேலும் தளர்த்த தற்சமயம் எந்தவித கருத்துருவும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு திட்டம் அறிவிக்கப்படுகிறது என்றால், அறிவிக்கப்படுகின்ற அந்தத் திட்டத்தின் பலன் சம்பந்தப்பட்டவர்களைச் சென்றடைய வேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடுதான், திட்டம் அறிவிக்கப்படுகிறது. ஆனால் மாநில அரசால் அறிவிக்கப்பட்ட, பெண்கள் திருமண உதவித்தொகைத் திட்டம், தேவையான பெண்களுக்குக் கிடைப்பதில், பல்வேறு இடையூறுகள், தடைகள் நடைமுறையில் இருக்கின்றன என்பதை நடைமுறை அனுபவங்களிலிருந்து அறிந்து, இந்த வரம்புகளை நீக்க வேண்டுமென்ற கோரிக்கைகள் எல்லா மட்டங்களிலும் இருந்து வந்திருக்கின்றன. ஆகவே மாநில அரசு, தன் பிடிவாதத்தைத் தளர்த்தி, அதை வழங்க மறுபரிசீலனை செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

[2000 நவம்பர் 9

முற்பகல் 10-25

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருமண நிதி உதவி பெறுவதில் தற்போது நடைமுறையில் இருந்து வருகின்ற விதிமுறைகளையொட்டித்தான் ஏராளமான பெண்களுக்கு நிதி உதவி வழங்கப்பட்டு வருகிறது. குறிப்பாக, மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதி உதவித் திட்டத்தின்கீழ் கடந்த ஐந்து ஆண்டு காலத்திலே முழுமையாக ஆண்டோம் என்று சொன்னவர்கள் ஆட்சியிலே 53 ஆயிரம் பேர்களுக்குத்தான் தலா ஐந்தாயிரம் ரூபாய் வழங்கப்பட்டிருந்தது. ஆனால், நம்முடைய முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பிறகு 10 ஆயிரம் ரூபாய் வழங்குவதாக அறிவித்த பிறகு, இந்த 4½ ஆண்டு காலத்திலே கிட்டத்தட்ட 200 கோடி ரூபாய்க்கு மேற்பட்ட தொகையை ஏழைப் பெண்கள் பெற்று பலன் அடைந்திருக்கிறார்கள் என்பதைக் குறிப்பிடுகின்றபோது . . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டு கோடியா, இரண்டு இலட்சமா?

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன்:** இரண்டு இலட்சத்து 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பெண்கள் இந்த நிதி உதவியைப் பெற்று இருக்கிறார்கள் என்று குறிப்பிடுகின்றபோது, தகுதியுள்ள பெண்கள் அனைவருக்குமே இந்த உதவி போய்ச் சேர்ந்திருக்கிறது என்பது அறியப்படுகிறது. விதிமுறைகள் தளர்த்தப்பட வேண்டுமென்று சொல்கின்றபோது, குறிப்பாக எந்த விதி என்று உறுப்பினரவர்கள் எடுத்துச் சொன்னால் அதுபற்றிப் பரிசீலிக்கலாம். தற்போது மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதி உதவித் திட்டத்தில் ஏற்கெனவே 20 வயது என்று இருந்ததை 18 வயதாகத் தளர்த்தியிருக்கிறோம். திருமண மண்டபங்களில் நடைபெற்றால் நிதி உதவி இல்லை என்று இருந்த விதியை நீக்கியிருக்கிறோம். திருமணங்கள் பதிவு செய்யப்பட வேண்டும் என்று இருந்த விதிமுறைகளும் இப்போது நீக்கப்பட்டு விட்டன. கல்வித் தகுதி 10 ஆம் வகுப்பும் அதற்கு மேலும் பயின்ற ஏழைப் பெண்களுக்கு என்ற அளவிலே திருத்தம் தரப்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் தலைவர் அவர்களே, முதலிலே 8 ஆம் வகுப்பு என்று இருந்தது. அது பின்னர் 10 ஆம் வகுப்பு என்று மாற்றப்பட்டுவிட்டது. எனவே 8 ஆம் வகுப்பு என்பதைக் காட்டிலும் கல்வி அறிவு மிகவும் குறைவாக இருக்கின்ற பகுதிகளில் தமிழ்நாடும்



2000 நவம்பர் 9]

ஒன்று. எனவே, 5 ஆம் வகுப்பு வரை என்கிற நிலையில் அதை மாற்ற அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி எஸ்.பி சற்குணபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே மலைவாழ் பெண்கள் 5 ஆம் வகுப்பு படித்திருந்தால் திருமண நிதி உதவி பெறலாம் என்று அரசு அறிவித்து வழங்கி வருகிறது என்பதை இந்த நேரத்திலே நினைவுகூர விரும்புகிறேன். 8 ஆம் வகுப்பு என்பது மாற்றப்பட்டு 10 ஆம் வகுப்பு என்று வந்த அளவிலேயும் கிட்டத்தட்ட 62 ஆயிரம் பெண்கள் கடந்த செப்டம்பர் மாதம் வரை விண்ணப்பித்திருக்கின்றார்கள் என்கிறபோது, இந்தத் திட்டம் முழுமையாக ஏழைப் பெண்களைப் போய்ச் சேருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் அ. செல்லக்குமார்.

**டாக்டர் அ. செல்லக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த திருமண உதவித் திட்டம் என்பது குறித்த கால அவகாசத்திலே அவர்களைச் சென்று சேருவதில்லை. திருமணம் முடிந்து பல மாதங்கள் ஆகி, குழந்தை பெற்று, அந்தக் குழந்தையோடு வந்து அந்தப் பணத்தைப் பெற்றுக்கொள்வதை இப்போது நடைமுறையில் நாம் பார்த்துக்கொண்டிருக்கிறோம். இந்தத் திட்டத்தின் முக்கியத்துவமே திருமணம் செய்வதற்கு வசதி இல்லாதவர்களுக்காக அரசு ஒரு சலுகைத் திட்டத்தைக் கொடுத்திருக்கின்றபோது, அவர்களுக்கு அந்த திருமணத் தேதிக்கு முன்னால் அந்தப் பணத்தைக் கொடுப்பதற்கு அரசு முன்வருமா? மேலும், வறுமையின் காரணமாக 10 ஆம் வகுப்பு வரை படிப்பதற்கு வசதி இல்லாத பெண்கள், இந்த திருமண உதவித் திட்டத்தின் மூலமாக பலன் பெறுவதற்கு வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது. எனவே, கல்வித் தகுதியை அறவே நீக்குவதுதான் பொருத்தமாக இருக்கும் என்ற கருத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன். ஏழைகளுக்கு முழுமையாக இந்தத் திட்டத்தின் பயன் சென்றடையவேண்டுமென்று சொன்னால், அவர்கள் அடிப்படைக் கல்வியைப் பெறவேண்டுமென்று சொன்னால், மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராயன் அவர்கள் சொன்னதுபோல், 5 ஆம் வகுப்பு வரை என்கிற தகுதியை அடிப்படையாக வைத்துக்கொண்டு நிதி உதவி தருவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன்:** பேரவைத் தலைவர் அவர்களே, பெண்கள் கல்வி அறிவு பெறவேண்டும் என்பதைத் தூண்டுவதற்காகவே இந்தத் திட்டம் கொண்டு வரப்பட்டது என்பதை,

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கருத்தை, இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதைத்தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் ஏராளமான உறுப்பினர்கள் இதுகுறித்து ஆரம்பத்திலே கேட்டபோது, கடந்த ஆண்டில் கிட்டத்தட்ட 70 ஆயிரம் பெண்கள் உதவி பெற்றிருக்கிறார்கள் என்று சொன்னால், அதைப்போல இந்த ஆண்டும் அதற்குரிய அளவு பெண்கள் 10-வது படித்திருப்பவர்களுக்கு வழங்கப்பட உள்ளது என்று சொன்னார்கள். இதுவரை 62 ஆயிரம் விண்ணப்பங்கள் வந்திருக்கின்றன என்பதை நினைக்கின்றபோது— இது செப்டம்பர் மாதம் வரை வந்த விண்ணப்பங்கள்—இன்னும் மார்ச் மாதம்வரை எதிர்பார்ப்பதையும் சேர்த்தால் அந்த 70 ஆயிரத்தையும் தாண்டிவிடும். 10 ஆம் வகுப்பு வரை படித்த பெண்களுக்கு என்று இருக்கின்ற திட்டம் இந்த மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டம் மட்டும்தான். மேலும் நான்கு திருமணத் திட்டங்களிலே, கல்வித் தகுதி தேவையில்லை என்று இருக்கிறது. குறிப்பாக, அஞ்சுகம் அம்மையார் நினைவு கலப்பு திருமணத் திட்டத்திற்கும், டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் நினைவு விதவை மறுமணத் திட்டத்திற்கும் வருமான வரம்புகூட இல்லை என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

வினா எண் 38, திரு. வெ. கோவிந்தன், மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்.

**38—**

### மாணவியர் விடுதி

***4840—திரு. வெ. கோவிந்தன்:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரணாம்பட்டில் ஆதிதிராவிடர் நலத் துறை மாணவியர் விடுதி கட்டி முடிக்கப்பட்டும் திறக்கப்படாததை அரசு அறியுமா?





(ஆ) ஆம் எனில், அவ்விடுதியை உடனடியாகத் திறக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) பேரணாம்பட்டில் அரசு மாணவியர் விடுதிக் கட்டடம் கட்டப்பட்டு, 31-12-1996-ல் திறக்கப்பட்டு, 11-3-1997 முதல் புதிய கட்டடத்தில் விடுதி இயங்கி வருகிறது.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**திரு. வெ. கோவிந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் தொகுதி மக்களின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 39, திரு. செங்கை சிவம், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

**39—**

### சுற்றுலா தகவல் மையம்

***25526—திரு. செங்கை சிவம்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னையில் சுற்றுலா தகவல் மையம் அமைக்கும் பணி எந்த நிலையில் உள்ளது?

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன், சுற்றுலாத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சென்னையில் சுற்றுலா தகவல் மையம் அமைக்கும் பணிக்கு ரூ.250 இலட்சத்திற்கு நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டு உள்ளது. மாநிலப் பொதுப் பணித் துறையால் செயல்படுத்தப்பட்டு, இத்திட்டம் டிசம்பர் 2000-க்குள் முடிக்க கால இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

[2000 நவம்பர் 9

**திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையில் அமைத்ததுபோல பிற மாநிலங்களிலும் இதுபோன்ற சுற்றுலா மையங்கள் அமைக்கப்படுமா? எந்தெந்த மாநிலங்களில் அமைக்கப்பட இருக்கின்றன? அதேபோல சுற்றுலாப் பயணிகள் தங்குவதற்கு வசதியாக யாத்ரி நிவாஸ் அமைக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுலா தகவல் மையத்தைப் பொறுத்தவரையில் இந்தியாவிலேயே முதல் மாநிலமாக தமிழகத்தில் அமைக்கப்பட்டு வருகிறது. மத்திய அரசு தற்போது வேறு மாநிலங்களிலும் இதுபோன்று அமைக்க வேண்டுமென்று அறிவுறுத்தி வருகிறது. யாத்ரி நிவாஸைப் பொறுத்தவரையில் தற்போது தேவையில்லை என்று கருதியதன் காரணமாக தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருக்கிறது என்பதையும் மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 40, திரு. ஜி.கே. மணி, மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர்.

**40—**

**வயர்லெஸ் கருவி**

***41510—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக மீனவர்களுக்கு வயர்லெஸ் கருவிகள் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன், மீன் வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) தமிழக மீன்பிடி விசைப்படகு மீனவர்கள் 1500 பேருக்கு 25% மானிய விலையில் V.H.F. என்ற wireless தொலைத் தொடர்புக் கருவிகள் வழங்கிட அரசு தக்க நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.



2000 நவம்பர் 9]

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய நிலையிலே நம்முடைய தமிழக மீனவர்கள் கடலுக்கு மீன் பிடிக்கச் செல்கிறார்கள் என்று சொன்னால், அவர்கள் வீடு திரும்புவார்களா என்பது கேள்விக்குறியாக இருந்து கொண்டிருக்கிற நிலை இருந்து வருகிறது. அதிலும் குறிப்பாக கடற்கரையிலே நம்முடைய மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் எந்தநேரத்திலே சுட்டுக்கொல்வார்களோ, கடத்திச் செல்வார்களோ என்ற நிலையும் உள்ளது. அதைப்போலவே புயல் போன்ற இயற்கைச் சீற்றங்களினாலே மீனவர்கள் படக்கூடிய அவதிகளை போக்கக்கூடிய வகையிலே மீன் பிடிப்பதற்கு உரிமம்-லைசன்ஸ் வழங்கக்கூடிய நேரத்திலே எல்லா மீனவர்களுக்கும் 25 சதவிகிதம் மானியம் என்பதைக் காட்டிலும் முழு மானியத்தோடுகூடிய Wireless கருவிகளை அளிப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன். கடந்த சட்டமன்ற கூட்டத் தொடரிலே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மீனவர் அங்காடிகள் திறக்கப்படும் என்று அறிவித்திருந்தார்கள். மீனவர் அங்காடிகளை திறப்பதற்கான சாத்தியக்கூறுகள் எந்த அளவிலே நடைபெற்று வருகின்றன என்பதை நம்முடைய அமைச்சர் அறிவிப்பார்களா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொலைத்தொடர்பு சாதனங்களைப் பொறுத்தவரையில் முதல் கட்டமாக 12-8-1998-லே ஒப்புதல் அளிக்கப்பட்டது. ஒப்புதல் அளிக்கப்பட்டவுடன் 1-2-1999-ல் சர்வதேச கடல் பகுதியில் G.M.D.S.S. என்ற உலக கடல் அபாய பாதுகாப்பு முறை உலக அளவிலே அறிமுகப்படுத்தப்பட்டது. உலக அளவில் அறிமுகப்படுத்தப்பட்டவுடன், இந்தியாவும் அதில் பங்கு கொண்டதால் அதுபோன்ற கருவிகள் மீனவர்களுக்கு வழங்க வேண்டும் என்பதால், வி.எச்.எப். கருவிகள் என மாற்றியமைக்கப்பட்டு, மீனவர்கள் அபாயத்தில் இருக்கும்போது அதுவும் சாட்டிலைட் மூலமாக அந்தத் தகவல்களை பக்கத்தில் உள்ள கப்பல்களுக்கு தெரிவிப்பதற்காக இந்தக் கருவிகள் எல்லாம் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஒரு கருவியின் மொத்த விலையே 13,312 ரூபாய்தான். இதில் 3,328 ரூபாய் மானியமாகவும், மீதியுள்ள 9,984 ரூபாய் மீனவர்களின் பங்காகவும் பெறப்பட்டு இப்போது கன்னியாகுமரி மாவட்டத்தில் 26 மனுக்கள் பெறப்பட்டு இருக்கின்றன. கூடிய விரைவில் அதையும் வழங்கயிருக்கிறோம்.

[2000 நவம்பர் 9

மீனவர் அங்காடியைப் பொறுத்தவரையில், முதலில் பரீட்சார்த்தமாக 10 இடங்களில் அமைக்க கலைஞர் அவர்கள் உத்தரவிட்டு, எல்லா மாவட்ட ஆட்சித் தலைவர்களும் அதற்குரிய நிலங்களை ஒப்படைப்பு செய்து வருகிறார்கள். சில பகுதிகளில் வேலைகள் நடந்து வருகின்றன. இந்தக் கேள்வி மூலக் கேள்விக்கு தொடர்பில்லாத கேள்வியாக உள்ளதால் குறிப்பாகச் சொல்ல முடியவில்லை. சில பகுதிகளில் வேலைகள் நடந்து வருகின்றன. சில பகுதிகளில் நிலங்கள் இன்னும் சில மாவட்ட ஆட்சித் தலைவர்களால் எங்களுக்குத் தரப்படவில்லை. ஆகவே அதையும் கூடியவிரைவில் நாங்கள் பெற்று, மீனவர் அங்காடிகள் அமைக்கும் பணியை விரைவில் முடிப்போம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[*குறிப்பு:* ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

முற்பகல் 10-35

## 2. அறிவிப்புகள்

### (அ) சந்தனக் கடத்தல் வீரப்பன், நடிகர் ராஜ்குமாரைக் கடத்தியது குறித்த பிரச்சினையைப் பிறிதொரு நாள் எடுத்துக்கொள்வது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. சட்டமன்ற நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை அளிக்கக்கூடிய நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தவிர்க்க முடியாத சில காரணங்களுக்காக இரண்டு, மூன்று நாட்கள் சட்டமன்றத்திற்கு வருவது சிறிது சிரமமாக இருக்கின்ற சூழ்நிலையில், நான் ஏற்கெனவே அறிவித்தபடி வீரப்பன் பிரச்சினை இன்று எடுப்பதாக இருந்தது. அந்தப் பிரச்சினைக்கு முதலமைச்சர் அவர்கள் பதில் சொன்னால்தான் முறையாக இருக்கும் என்று பலரும் கருத்து தெரிவித்த காரணத்தால், வருகிற திங்கட்கிழமை, 13 ஆம் தேதி கேள்வி நேரத்தை ஒத்திவைத்துவிட்டு இந்தப் பிரச்சினை எடுக்கப்படும். அன்று முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்கள் என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன்.



2000 நவம்பர் 9]

## 3. தகவல் கோரல்

### (அ) தமிழ்வழிக் கல்வி வழங்க வகை செய்யும் தனிச் சட்டம் இயற்றுவது குறித்து உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன்.

***திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் தலைவர் அவர்களே, இன்று வியாழக்கிழமை. நம்முடைய சட்டமன்ற விதிகளின்படி இது தனி நபர் அலுவலுக்குரிய நாள் ஆகும். நான் முறைப்படி, சட்டமன்ற விதிகளின்படி தனி நபர் தீர்மானம் ஒன்றை அனுப்பியிருந்தேன். தமிழ்நாட்டின், தமிழ் மக்களின் எதிர்கால நலன்களை உள்ளடக்கிய பிரச்சினையாகிய தமிழ்வழிக் கல்வி வழங்கப்படவேண்டும்; அது வழங்கப்படுவதற்கு உரிய தனிச் சட்டத்தை மாநில அரசு இயற்ற வேண்டுமென்று இந்தப் பேரவை கோருகிற முறையிலே ஒரு தீர்மானத்தை அனுப்பி இருந்தேன். அந்தத் தீர்மானம் எடுத்துக்கொள்ளப்பட இருக்கிறதா? அதுபற்றி விவாதிக்க இயலுமா என்றே தெரியவில்லை. அதுகுறித்து எனக்கு எந்தத் தகவலும் வரவில்லை. இது மிக முக்கியமான பிரச்சினை என்பதால், இந்தப் பிரச்சினையின்மீது அவசியம் இந்தப் பேரவை விவாதிக்க வேண்டும். மாநில அரசு வெளியிட்ட மூன்று ஆணைகளிலும் கடைசி ஆணை குறித்து சென்னை உயர் நீதிமன்றம் தெரிவித்திருக்கிற தீர்ப்பின் முழு விவரங்களை நான் வைத்திருக்கிறேன். அதன்மீது ஏராளமான பிரச்சினைகள் இருக்கின்றன. அரசாங்கமே நியமித்த கமிஷன், தனிச் சட்டம் இயற்ற வேண்டுமென்று சொன்னதற்குப் பின்னரும், தனிச் சட்டம் இயற்ற விருப்பமில்லாமல் ஓர் அரசாணையின் மூலம் தமிழ் பயிற்று மொழி என்று அறிவித்திருப்பது உள்நோக்கம் கொண்டதாக இருக்கிறது என்று பொதுவான, வலுவான விமர்சனம் எழுந்திருக்கிறது. எனவே இதுகுறித்து விரிவாக விவாதிக்க வேண்டும். விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதுகுறித்து எனக்கு எந்தத் தகவலும் இல்லையென்று நீங்கள் சொன்னது முறையல்ல. வேண்டுமானால் எழுத்து மூலமாகக் கொடுக்காமல் இருக்கலாம். நீங்கள் என்னை அறையிலே பார்த்தபோது உங்களிடம் திட்டவட்டமாகச் சொன்னேன். உச்ச நீதிமன்றத்திலே இந்த வழக்கு இருக்கிற காரணத்தால் நான் அனுமதி மறுக்கிறேன் என்று சொன்னேன். இருந்தாலும், 'நான் அதை எழுப்புகிறேன், நீங்கள் அந்தப் பதிலை அவையிலே சொல்லுங்கள்' என்று சொன்னீர்கள். நான் சொல்கின்றேன்... (குறுக்கீடு). அதையொட்டி இன்னொரு பிரச்சினையும் இருக்கிறது. இப்பொழுது நீதிமன்றத்தினுடைய நிலை உங்களுக்குத் தெரியும். இந்த நேரத்திலே அரசு, சட்டம் இயற்றுகிறேன் என்று சொன்னால் அதை Contempt of Court என்று உச்ச நீதிமன்றத்திலே பிரச்சினையை எழுப்பினால், அது அரசுக்கு சிக்கலாகும். ஆகவே, நான் அனுமதி கொடுக்கவில்லை.

[2000 நவம்பர் 9

**திரு. கே. சுப்பராயன்:** தாங்கள் சொன்னதை நான் ஏற்றுக்கொள்கிறேன். தாங்கள் வாய்மொழியாகச் சொன்னதை நான் மறுக்கவில்லை. ஆனால் நீதிமன்றத்தில் விசாரணையில் இருக்கிற ஒரு விஷயம் என்றாலும், இந்த மாநில அரசு சட்டம் இயற்றுவது விசாரணையில் இருக்கிற ஒரு விஷயம் பற்றி அல்ல. தமிழ் பயிற்று மொழி . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது பிரச்சினை அல்ல. (குறுக்கீடு) கொஞ்சம் இருங்கள், நான் சொல்லி முடிக்கிறேன். இந்த மாநில அரசு போட்ட உத்தரவை உயர் நீதிமன்றத்தில் இரத்து செய்துவிட்டார்கள். அதற்கு மேல்முறையீடு இப்போது செய்திருக்கிறோம். ஆக, இந்த அரசு உத்தரவு செல்லுபடியாகும் என்று சொல்லிவிட்டால், அதற்குப் பிறகு சாதாரணமாக சட்டம் கொண்டு வரலாம். அந்த Appeal pending-ஆக இருக்கும்போது அரசு சட்டத்தைக் கொண்டு வந்தால் அது Contempt of Court ஆகிவிடும் என்று வல்லுநர்கள் தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே இப்போது அனுமதி இல்லை. திரு. கிருஷ்ணசாமி. (குறுக்கீடு) சுப்பராயன், அது சரி, எனக்குச் சொன்ன வல்லுநர்கள் இப்படிச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே நான் அனுமதி மறுக்கிறேன்.

**திரு. கே. சுப்பராயன்:** உச்ச நீதிமன்றத்தில் தீர்ப்பு வேறு மாதிரி வந்தால் எதிர்காலத்தில் சட்டம் இயற்றவே இயலாத ஒரு நெருக்கடி நிலை ஏற்பட்டுவிடும் என்று சொல்கிறார்கள். எனவேதான் தனிச் சட்டம் இயற்றவேண்டுமென்று சொல்கிறேன். தனிச் சட்டம் இயற்ற மாநில அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலம் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். அப்படி மாநில அரசு சட்டம் இயற்ற முன்வரவில்லையென்றால், நாங்கள் எங்களுடைய கட்சியின் சார்பில் அடுத்த நடவடிக்கைக்குச் செல்லவேண்டி இருக்கிறது. மாநில அரசினுடைய நோக்கம் என்ன? எதிர்காலத்தில் என்ன செய்யப்போகிறது என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்த நடவடிக்கைக்குப் போய் ஒத்திவைப்புத் தீர்மானத்தில் பேசுகின்ற வாய்ப்பை இழந்துவிடப் போகிறீர்கள்.

## (ஆ) சந்தனக் கடத்தல் வீரப்பன் நடிகர் ராஜ்குமாரைக் கடத்தியது தொடர்பாக, அவையில் இல்லாத ஓர் உறுப்பினர் பற்றிப் பேசியது

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . .



2000 நவம்பர் 9]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் கிருஷ்ணசாமி ** 13 ஆம் தேதி எடுக்கிறபோது எல்லோரும் பேசுங்கள். இப்போது அனுமதிக்கமாட்டேன். (குறுக்கீடு) சுந்தரம், கொஞ்சம் உட்காருங்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** கடந்த இரண்டு நாட்களுக்கு முன்பு. இந்தச் சட்டமன்றத்திலே, சட்டமன்றத்திலே இல்லாத ஓர் அவை உறுப்பினர் . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அந்த விவகாரம் குறித்துப் பேச இப்போது நான் அனுமதிக்க முடியாது. திங்கட்கிழமை பேசுகிறபோது பதில் சொல்லிக்கொள்ளுங்கள். (குறுக்கீடு) இல்லை. நான் அதற்கு அனுமதி கொடுக்க முடியாது.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. நீங்கள் என்ன சொல்லப் போகிறீர்கள் என்பது எனக்குத் தெரியும். அதற்கு அனுமதி கிடையாது. நீங்கள் திங்கட்கிழமை பேசலாம். (குறுக்கீடு) டாக்டர் கிருஷ்ணசாமி உட்காருங்கள். நீங்கள் எல்லோருமே சட்டமன்றத்திலே எழுந்திருந்து 'நான் என்ன சொல்லப் போகிறேன் என்று தெரியாது உங்களுக்கு' என்று தவறாகச் சொல்கிறீர்கள். நீங்கள் என்ன சொல்லப் போகிறீர்கள் என்று என்னுடைய அறையிலே வந்து சொல்லிவிடுகிறீர்கள். அது வேண்டுமானால் அதிகாரப்பூர்வமாக இல்லாமல் இருக்கலாம். ஆகையினால் எனக்கு எல்லாம் தெரியும். இந்தப் பிரச்சினை குறித்த விவாதத்தை 13 ஆம் தேதிதான் நான் அனுமதிப்பேன்.

## (அ) தமிழ்வழிக் கல்வி வழங்க வகை செய்யும் தனிச் சட்டம் இயற்றுவது குறித்து உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிப்பு—தொடர்ச்சி

**திரு. ஜி. பழனிசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தோழர் சுப்பராயன் அவர்கள் கிளப்பி இருக்கின்ற இந்த அதிமுக்கியமான பிரச்சினை குறித்து . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதற்கு ஒன்றும் பதில் சொல்லவில்லையென்றால் பதில் இல்லை என்றுதான் அர்த்தம்.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை, உச்ச நீதிமன்றம் என்ன condemn பண்ணியிருக்கிறது என்று சொன்னால், இது சட்டமன்றத்தின் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சுப்பராயன் பேசிய பிறகு உங்களுக்கு என்ன உரிமை இருக்கிறது இதில் பேசுவதற்கு?

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

[2000 நவம்பர் 9

**திரு. கே. சுப்பராயன்:** சட்டமுன்வடிவு, சட்டமன்றம் நடக்கிறபோதுதான் கொண்டுவர முடியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் இரண்டு பேரும் பேசி முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. கே. சுப்பராயன்:** இந்தப் பேரவை தன்னுடைய சட்டம் இயற்றும் உரிமையை இழந்து விடுகிறதா என்று கேட்க விரும்புகிறேன். சட்டம் இயற்றுகின்ற உரிமையில் Supreme Court தலையிடுவதற்கு உரிமையில்லை.

* **மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றத்திலே சட்டம் நிறைவேற்றினாலும், அது அரசியல் சட்ட அமைப்பினுடைய விதிமுறைகளுக்கு மாறாக இருக்குமானால், ஏதேனும் ஒரு வகையில் மனித உரிமைகளுக்கு மாறுபட்டது என்று கருதப்படுமானால், சட்டங்களே அடிக்கப்படும். சட்டம் செய்துவிட்ட காரணத்தினால் அடிப்படை உரிமைகளுக்கு மாறானதாக கருதப்படக்கூடிய நிலைமை உச்ச நீதிமன்றத்திற்கோ, உயர் நீதிமன்றத்திற்கோ ஏற்படுமானால் அந்தச் சட்டமும் தடுக்கப்படும். இப்போது அரசாங்க ஆணை மூலமாக பிறப்பிக்கப்பட்டது என்பது இன்று மட்டும் அல்ல, என்றைக்கும் கல்வித் துறையில் மொழிக் கொள்கை அரசாங்க ஆணை மூலமாகத்தான் தொடர்ந்து பிறப்பிக்கப்பட்டு வந்திருக்கிறது. ஆகவே அந்த அடிப்படையில் நம்முடைய கொள்கை தாய்மொழியில் கல்வி வழங்க வேண்டும், தமிழ்கூட அல்ல, தமிழோ, தெலுங்கோ, கன்னடமோ, மலையாளமோ, அவரவர் தாய் மொழியில் கல்வி வழங்க வேண்டும் என்பது. அந்தக் கொள்கைக்கு ஓர் அடிப்படை நியாயம் இருக்கிறது. அந்த அடிப்படையிலேதான் உச்ச நீதிமன்றத்திலே மேல்முறையீடு செய்யப்பட்டிருக்கிறது. நியாயம் கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறோம். உச்ச நீதிமன்றத் தீர்ப்பு வருவதற்கு முன்னர், அங்கே பதிவு செய்யப்பட்ட மேல்முறையீடு இருக்கின்றபோது, இடைக்காலத்திலே சட்டம் கொண்டுவருவது என்பது உச்ச நீதிமன்றம் தீர்ப்பளிப்பதற்கு மாறாக ஒரு காரியத்தைச் செய்துவிட்டதாக தவறாக கருதப்படக்கூடும். ஆகவேதான் சட்டம் கொண்டு வர எண்ணவில்லை, கட்டாயம் தேவையென்று திட்டவட்டமாகக் கருத இயலாத காரணத்தினால்தான் கொண்டுவரவில்லையே தவிர வேறு காரணமில்லை. நம்முடைய கொள்கை அடிப்படையிலே மேல்முறையீடு செய்யப்பட்டிருக்கிறது. இதில் தாய்மொழிப் பற்றையோ, தமிழ்ப் பற்றையோ இந்த அரசாங்கத்திற்கு ஊட்ட வேண்டிய அவசியம் யாருக்கும் இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி)



2000 நவம்பர் 9]

**திரு. கே. சுப்பராயன்:** மாநில அரசு சார்பாக அறிவிக்கப்பட்ட விவரங்கள் எங்களுக்கு திருப்தி அளிக்காத காரணத்தினால் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பாக நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.

(இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.)

## (ஆ) சந்தனக் கடத்தல் வீரப்பன் நடிகர் ராஜ்குமாரைக் கடத்தியது தொடர்பாக அவையில் இல்லாத ஓர் உறுப்பினர் பற்றிப் பேசியது—தொடர்ச்சி

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சுந்தரம். (குறுக்கீடு) நான் சுந்தரத்தை கூப்பிட்டிருக்கிறேன், நீங்கள் உட்காருங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** 13 ஆம் தேதி எடுத்துக்கொள்வதாகக் கூறி இருக்கிறீர்கள். அதற்கு பதில் அளிக்கக்கூடிய முதல்வர் அவர்கள் இன்றைக்கு அவைக்கு வரவில்லையென்று கூறி இருக்கிறீர்கள். முதல்வர் அவர்கள் அவைக்கு வராததற்கு நான் உள்நோக்கம் கற்பிக்க விரும்பவில்லை. இருந்தாலும் இது ஒரு முக்கியமான பிரச்சினை. இதிலே கிட்டத்தட்ட இப்படி பேச்சுவார்த்தை நீண்டு கொண்டே போகிறதே? இப்படி நீண்டுகொண்டே போனால்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதிலே உங்களைப் பேச அனுமதிக்க முடியாது. நீங்கள், 13 ஆம் தேதிக்கு ஒத்திவைத்ததை விரும்பவில்லையென்றால், உங்கள் எதிர்ப்பைக் காண்பியுங்கள். எனக்கு ஆட்சேபணை இல்லை. ஒரு மனிதாபிமான அடிப்படையில் பேச வேண்டும் எந்தச் சட்டமன்ற உறுப்பினரும்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** அதுதான் நான் சொல்லிருக்கிறேன். நான் உள்நோக்கம் கற்பிக்கவில்லையென்று சொல்லியிருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள்...

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சந்தானம், நான் உங்களுக்குப் பேச அனுமதி கொடுக்கவில்லை, நீங்கள் உட்காருங்கள்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2000 நவம்பர் 9

முற்பகல் 10-45

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுக்கு நான் அனுமதி கொடுக்கவில்லை; உட்காருங்கள்.

**திரு. லா. சந்தானம்:** நான், இடது சாரி கட்சி . . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் எந்த சாரி கட்சியாக இருந்தாலும் சரி, உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் என்றைக்கு இடது சாரி கட்சியாக மாறினீர்கள் என்று எனக்குத் தெரியாது. (குறுக்கீடுகள்)

(அகில இந்திய ஃபார்வர்டு பிளாக் கட்சி மற்றும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.)

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரம் இன்றையதினம் முதலமைச்சர் வர இயலாத ஒரு சூழ்நிலை குறித்து, அவருக்கே உரிய பாணியிலே சில வார்த்தைகளைச் சொல்லியிருக்கிறார். **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, இது ஒன்றும் பிரச்சினை இல்லை. நான் திரு. சுந்தரத்தை இதற்குமேலே பேசுவதற்கு அனுமதிக்கப்போவதில்லை. ஒரு நியாயம், அவர் உள்நோக்கம் இல்லை என்று சொல்லிவிட்டார். அதோடு நிறுத்திக்கொள்ளவேண்டும். இதற்குமேலே பிரச்சினை ஒன்றும் கிடையாது.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்றே ஒன்று...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன? சொல்லுங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, நீங்கள் உட்காருங்கள்.(குறுக்கீடுகள்)

**திரு. பி.ஆர். சுந்தரம்:** **

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, **

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.



2000 நவம்பர் 9]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, ** அவருடைய வார்த்தையிலே வித்தியாசம் இருக்கலாம்; நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) சரி.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, உட்காருங்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, **(குறுக்கீடுகள்)

**திரு. சி. ஞானசேகரன்:** இது தேவையற்ற பேச்சு. What relevancy has he got in raising this point?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் தமிழில் பேசுங்கள்.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . .

**திரு. ச.அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . .

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் எல்லோரும் உட்காருங்கள். நான் அவருக்கு பதில் சொல்லிக்கொள்கிறேன்; (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள்; எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. ச. அழகிரி:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோரும் உட்காருங்கள். ஏற்கெனவே டாக்டர் கிருஷ்ணசாமி என்னை வந்து பார்த்தார். நான் சொல்லிவிட்டேன்; இந்தப் பிரச்சினையிலே யார் போவது; யார் போகவில்லை என்பதை சட்டமன்றத்தில் விவாதிக்க முடியாது. ஆகையினால், நீங்கள் எந்தக் கருத்தைச் சொன்னாலும், அதை திங்கட்கிழமைதான் அனுமதிப்பேன். இதற்குமேலே நீங்கள் இதிலே பேசுவதற்கு அனுமதி கொடுக்கமாட்டேன்.

**திரு. ச. அழகிரி:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் பேச்சை அவைக் குறிப்பிலிருந்து நான் எடுக்கிறேன்.

**திரு. ச. அழகிரி:** **

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

[2000 நவம்பர் 9

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லோருடைய பேச்சையும் அவைக் குறிப்பிலே இருந்து எடுக்கிறேன். அழகிரி, இந்த முறையை நீங்கள் கையாளக்கூடாது. நீங்கள் ஒரு தரமான சட்டமன்ற உறுப்பினர்; இதிலே நீங்கள் இப்படி கையாளக்கூடாது.

**திரு. ச. அழகிரி:** **

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** அழகிரி, உட்காருங்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** அதை நீக்குவதன் மூலமாக ஒரு பாதுகாப்பு தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் ஏற்கெனவே சொல்லிவிட்டேன். அதை நீக்கிவிட்டேன். (குறுக்கீடு)

## (இ) ஆசிரியர் பயிற்சி பெற்றவர்கள் வேலையில்லாமல் இருப்பது குறித்து

**திரு.மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள்; உங்களை யார் கூப்பிட்டார்கள்? (குறுக்கீடு) நான் உங்களுக்கு அனுமதி கொடுக்கவில்லை, உட்காருங்கள்.

**திரு. மு. அப்பாவு:** ஆசிரியர் பிரச்சினை . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் உங்களுக்கு அனுமதி கொடுக்கவில்லை, உட்காருங்கள்.

சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் அறிவித்துள்ள கட்டடங்களை முறைப்படுத்தும் அறிவிப்பு குறித்து..(குறுக்கீடு)

**திரு. மு. அப்பாவு:** தலைவர்' அவர்களே . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்போது நீங்கள் உட்காராவிட்டால் நான் உங்களை வெளியேற்றுவேன்.

**திரு. மு. அப்பாவு:** ஆசிரியர்கள் வேலை இல்லாமல் . . .

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.



2000 நவம்பர் 9]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காராவிட்டால் நான் இப்போது உங்களை வெளியேற்றுவேன். (குறுக்கீடு) திரு. அப்பாவு உட்கார வேண்டும், இல்லாவிட்டால் வெளியேற்றுவேன். இதை விளையாட்டாக நினைக்கக் கூடாது.

**திரு. மு. அப்பாவு:** இது நியாயமான பிரச்சினை....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சட்டமன்றத்தில் மரியாதையாக நடந்துகொள்ள வேண்டும். (குறுக்கீடு) நான் அனுமதி கொடுக்க முடியாது. உட்காருங்கள்.

**திரு. மு. அப்பாவு:** எங்கள் மாவட்டத்தில் 1997-லிருந்து ஆசிரியர் பயிற்சி பெற்றவர்கள் வேலை இல்லாமல் இருக்கிறார்கள். அதுகுறித்து ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்து இருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி மறுக்கப்படுகிறது, உட்காருங்கள்.

**திரு. மு.அப்பாவு:** 1997-லிருந்து ஆசிரியர்கள் வேலை இல்லாமல் இருக்கிறார்கள்.

முற்பகல் 10-50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் எதிர்ப்பைக் காண்பிப்பதற்கு நீங்கள் வெளிநடப்புச் செய்யலாம். மாண்புமிகு உறுப்பினர் அப்பாவு அவையை விட்டு வெளியேற வேண்டும். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் அப்பாவு அவையை விட்டு வெளியேற வேண்டும். (குறுக்கீடு) காவலர்கள், அவரை அழைத்துச் செல்லுங்கள். (குறுக்கீடு) அப்பாவு அவர்களை அவையை விட்டு வெளியேற்ற வேண்டும். (குறுக்கீடு) அப்பாவு, நீங்கள் போய் வாருங்கள். (குறுக்கீடு)

(திரு. மு. அப்பாவு பேரவைக் காவலர்களால் வெளியேற்றப்பட்டார்.)

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . .

**HON. SPEAKER:** You keep quiet. (குறுக்கீடு) அவர் அதற்கு வருத்தமாவது தெரிவிக்க வேண்டும். ஏதோ இதை கிண்டலாக நினைத்துக் கொண்டிருக்கிறார். (குறுக்கீடு)

[2000 நவம்பர் 9

**டாக்டர் தே. குமாரதாஸ்:** அப்பாவு சொன்னது மிக முக்கியமான பிரச்சினை. நாங்கள் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்து இருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வேண்டுமானால் நீங்களும் வெளிநடப்புச் செய்யுங்கள். (குறுக்கீடு) இப்படிப்பட்ட முறையற்ற செயலுக்கு நான் பேரவைத் தலைவராக உட்காரமுடியாது.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** 1987-லிருந்து அங்கே வேலை வாய்ப்பு இல்லை. அதனால்தான் அவர் அதைச் சொன்னார். (குறுக்கீடு) அதில் தப்பு ஒன்றும் இல்லை. (குறுக்கீடு) நான் அவரை Support செய்யவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்களும் சேர்ந்து வெளிநடப்புச் செய்யுங்கள். (குறுக்கீடு) நான் முறையாகத்தான் எடுக்கிறேன். (குறுக்கீடு) இப்போது நீங்கள் கொடுத்துள்ள தீர்மானத்தைத்தான் விவாதத்திற்கு எடுத்துக் கொண்டிருக்கிறேன். இடையிலே நீங்கள் பேசக் கூடாது.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** திரு. அப்பாவு சொன்னது மிக நியாயமான கோரிக்கை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** யார் இல்லை என்று சொன்னார்கள். நியாயமான கோரிக்கைகள் எல்லாவற்றையும் எடுத்துக் கொள்ள வேண்டுமென்றால் அவையை இன்னும் 3 மாதங்கள் நடத்த வேண்டும். (குறுக்கீடு) உட்காருங்கள்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பேசுவது அவைக் குறிப்பில் ஏறாது.

**டாக்டர் தே. குமாரதாஸ்:****

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் முறையோடு பேச வேண்டும். நீங்கள் சொன்னது வேறு. அவர் சொன்னது வேறு. நீங்கள் சொன்னது** என்று சொன்னீர்கள். எல்லா மாவட்டங்களிலிருந்தும் அதற்கு எதிர்ப்பு தெரிவிக்கிறார்கள். நான் அதை எடுத்துக்கொள்ள முடியாது. (குறுக்கீடு) சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்...

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.



2000 நவம்பர் 9]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதற்கு மேல் உங்களுக்குப் பேச அனுமதி கொடுக்க முடியாது. (குறுக்கீடு) சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் அறிவித்துள்ள கட்டடங்களை முறைப்படுத்தும் அறிவிப்பு குறித்து ஒத்திவைப்புத் தீர்மானம். திரு. சோ. பாலகிருஷ்ணன்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:****

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,...

**டாக்டர் தே. குமாரதாஸ்:** படித்தவர்களுக்கு வேலை இல்லை என்றால்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எல்லா மாவட்டங்களில் இருக்கிறவர்களுக்கும் வாய்ப்பு இருக்கவேண்டும்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற விதிமுறைகளின்படிதான் எந்தப் பிரச்சினையையும் கொண்டு வரலாமே தவிர, விதிமுறைப்படி வேறு பிரச்சினைகள் இந்த அவையில் எடுத்துக் கொள்ளப்படுகிறபோது, என் பிரச்சினைதான் முக்கியமென்று—ஒருவேளை முக்கியமாகக்கூட இருக்கலாம்—விதிமுறையை மீறி சபாநாயகரேகூட நினைத்தபடி மாற்ற முடியுமா? எதிர்க்கட்சித் தலைவர் உட்பட அனைத்துக் கட்சித் தலைவர்களும் உடைய அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்திலே பேசி, எது முக்கியம் என்று தீர்மானிக்கப்பட்டு, அது எடுத்துக் கொள்ளப்படுகிறபோது, என்னுடைய பிரச்சினை, என்னுடைய பிரச்சினை என்றால், அப்படி ஒவ்வொருவருடைய பிரச்சினையும் வருமானால் அவையே நடக்காது. ஆகவே, முறைகளை மீறுவதை தயவுசெய்து மாண்புமிகு உறுப்பினர்கள் கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. ச. அழகிரி:** அப்பாவு அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். நீங்கள் உட்காரச் சொன்னீர்கள். நாங்களும் உட்காரச் சொன்னோம். ஆகவே அவரை நீங்கள் வெளியேற்றியது என்பது...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் உட்கார மாட்டேன் என்றாரே. (குறுக்கீடு)

**டாக்டர் தே. குமாரதாஸ்:** எல்லோரும் பார்த்துக் கொண்டிருந்தோம். அவர் உட்கார்ந்தார்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

[2000 நவம்பர் 9

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அளவிற்கு மீறி தொடர்ந்து அவர் வலியுறுத்துவதை இந்த அவை பார்த்துக் கொண்டிருந்தது. வேறு வழியில்லாமல் சபாநாயகர் அந்த முடிவைச் சொன்னார். அப்படி ஒரு நிலைமை ஏற்பட்டபோது அப்பொழுதாவது அவர் வருத்தம் தெரிவிக்கத் தயாராக இருந்தால்— சபாநாயகர் ஒரு தீர்ப்பைக் கொடுத்து, அவரே அதை வாபஸ் பெற வேண்டுமானால், அதற்கு முன்னர் அந்த வருத்தம்—நான் அதற்காக வருந்துகிறேன் என்றால், உடனே அவர் அதனை வாபஸ் வாங்கி விடுவார். அவர் அந்த அளவிற்கு மேற்கொள்ளாமல்...

**திரு. ச. அழகிரி:** வருத்தம் தெரிவிக்கும் அளவிற்கு அவர் ஒன்றும் தவறாகச் சொல்லவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைத் தலைவரிடத்திலே மரியாதை இல்லாமல் நடந்து கொண்டால், அதற்கு வருத்தம் தெரிவிக்க வேண்டிய அவசியம் இல்லை என்று நீங்கள் சொல்வதில் எனக்கு ஒன்றும் வருத்தம் இல்லை.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** உங்களை அவமானப்படுத்த வேண்டுமென்கிற நோக்கத்தில் அல்ல. ஏதோ அந்த நேரத்தில் இருந்த சூழ்நிலையில், tension-ல் அப்படி நடந்தது.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. அப்பாவு அவர்கள் சட்டமன்றம் தொடங்கிய நாளிலிருந்தே இந்தப் பிரச்சினையைக் கிளப்ப வேண்டும், கிளப்ப வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருந்தார்கள். இருந்தாலும், இருக்கின்ற சூழ்நிலையின் காரணமாக தாங்கள் எடுத்துக் கொள்ளவில்லை. இப்போது நீங்கள் காவலர்கள் என்று சொன்னவுடன் கீழே உட்கார்ந்துவிட்டார். தயவு செய்து அவரை நீங்கள் மறுபடியும்.... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதில் ஒன்றும் எனக்கு பெரிய மரியாதைப் பிரச்சினை இல்லை. அவர் தாராளமாக திரும்பி வேண்டுமானாலும் வரட்டும். நான் அனுமதி கொடுக்கிறேன். நீங்கள் சொல்கிறமாதிரி எல்லாம் இல்லை. எதிர்க்கட்சித் தலைவருக்கு ஒன்று சொல்ல விரும்புகிறேன். சட்டமன்றம் தொடங்கியது 6ஆம் தேதி. இன்றைக்கு என்ன தேதி? இந்த 4 நாட்களில் ஒரு தடவைகூட திரு. அப்பாவு என்னிடம் வந்து இந்தப் பிரச்சினை குறித்துப் பேசியது கிடையாது .(குறுக்கீடு)



2000 நவம்பர் 9]

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** என்னிடம் சொன்னார்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே......

முற்பகல் 10-55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் உங்களைப்பற்றிப் பேசவில்லை. (குறுக்கீடு) நீங்கள் சொல்வது வேறு, அவர் சொல்வது வேறு. (குறுக்கீடு) நான் ஒன்றைச் சொல்கிறேன். திரு. குமாரதாஸ் என்னிடம் வந்து பேசினார். அவர் சொன்ன பிரச்சினை வேறு. ** என்று மற்ற மாவட்டங்களில் இருக்கிற படித்தவர்கள் எல்லாம் இந்தப் பிரச்சினையை கிளப்பினார்கள். அந்தப் பிரச்சினை பற்றிதான் திரு. குமாரதாஸ் என்னிடம் வந்து பேசினார்.** என்று அவர் கேட்டாரேயொழிய, இந்த நான்கு நாட்களில் மாண்புமிகு உறுப்பினர் திரு. அப்பாவு என்னிடம் இந்தப் பிரச்சினைப் பற்றி பேசியதே கிடையாது. சட்டமன்ற விடுதியிலே 10-வது மாடியிலே ஓர் அறை வேண்டுமென்று கேட்டாரே ஒழிய ஒரு நாள்கூட இந்தப் பிரச்சினைப் பற்றி என்னிடம் பேசி, உடனே எடுத்துக் கொள்ள வேண்டுமென்று சொன்னது கிடையாது. இருந்தாலும், நீங்கள் சொல்வதில் எனக்கு ஒன்றும் ஆட்சேபணை இல்லை. அவர் திரும்பவும் அவைக்கு வரட்டும். (குறுக்கீடு) ஆனால், அழகிரி போன்ற உறுப்பினர்கள் எல்லாம் கொஞ்சம் நியாயமாக நடந்துகொள்ள வேண்டும்.

**திரு. ச. அழகிரி:** பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் நியாயத்திற்குப் புறம்பாக நடக்கவில்லை. நீங்கள் இடையிடையே அதுமாதிரி ஒரு வார்த்தையைச் சொல்லி, record செய்து, நாங்கள் நியாயமே இல்லாமல் நடந்துகொள்வது மாதிரி....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் இன்று, இப்போது நியாயம் இல்லாமல்தான் நடந்து கொண்டீர்கள். (குறுக்கீடு) அதை நான் உறுதியாகச் சொல்கிறேன்.

**திரு. ச. அழகிரி:** ஓர் உறுப்பினர் ஒரு கருத்தைச் சொல்கிறார். உங்களிடம் கேட்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, "நீங்கள் உட்காருங்கள்" என்று சொன்னால் உறுப்பினர் உட்கார வேண்டுமல்லவா?

**திரு. ச. அழகிரி:** அவர் உட்கார்ந்தார்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காரவில்லை. (குறுக்கீடு) எத்தனை தரம் சொன்னேன் உட்காருங்கள் என்று.

**திரு. ச. அழகிரி:** மார்ஷல் நடந்து கொண்டது சரியில்லை. உறுப்பினர்மீது மார்ஷல் போய் கை வைக்கக்கூடாது. எப்படி ஓர் உறுப்பினர்மீது மார்ஷல் கை வைக்கலாம்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மார்ஷல், நான் அழைத்துக் கொண்டு போங்கள் என்று சொன்னால், கைதான் வைப்பார், வேறு எப்படிச் செய்வார்?

**திரு. ச. அழகிரி:** மார்ஷலுக்கு அந்த உரிமை கிடையாது. கை வைக்கிற உரிமை கிடையாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன உரிமை, நான் ஓர் உறுப்பினரை வெளியேறச் சொல்கிறேன்.

**திரு. ச. அழகிரி:** ஓர் உறுப்பினர் வெளியேறாமல் படுத்துக் கொண்டாலோ, உட்கார்ந்து கொண்டாலோ, அப்போதுதான் அவர் தூக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஓ அப்படியா!

**திரு. ச. அழகிரி:** அவர் நின்று கொண்டுதான் இருக்கிறார். நின்று கொண்டிருக்கும்போது எப்படி மார்ஷல் கை வைக்க முடியும்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நின்று கொண்டிருக்கும்போது என்கிறீர்கள், பிறகு உட்கார்ந்து கொண்டிருக்கும்போது என்கிறீர்கள் (குறுக்கீடு) சரி நீங்கள் உட்காருங்கள்.

**திரு. ச. அழகிரி:** உங்கள் மாதிரி பேரவைத் தலைவர் இருக்கிறபோது, மார்ஷல் வந்து ஓர் உறுப்பினர் மேல் கையை வைத்து பிடித்து இழுத்துக் கொண்டு போவது நியாயமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் உத்தரவு போட்டால் அது நியாயம்தான். (குறுக்கீடு) நான் உத்தரவு போட்டால் அது நியாயம்தான், உட்காருங்கள் நீங்கள்.



## 4. சிறப்புக் கவன ஈர்ப்பு

### சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம் அறிவித்துள்ள கட்டடங்கள் முறைப்படுத்தும் அறிவிப்பு குறித்து

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம் அறிவித்துள்ள கட்டடங்கள் முறைப்படுத்தும் அறிவிப்பு குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. சோ. பாலகிருஷ்ணன், திரு. டி.சுதர்சனம், திரு. வி. கே. லட்சுமணன், டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், திரு. சி. ஞானசேகரன், டாக்டர் அ. செல்லக்குமார் ஆகியோர் சிறப்புக் கவன ஈர்ப்பிற்கான அறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுதர்சனம் அவர்களைப் பேசுமாறு அழைக்கிறேன்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம் அமைக்கப்பட்ட பின்னாலே முதலிலே 'மாஸ்டர் பிளான்' தயாரிக்கப்பட்டு அறிவிக்கப்பட்டது. அந்த மாஸ்டர் பிளான் காலாவதி ஆன பின்னாலும் இரண்டாவது முறையாக ஒரு மாஸ்டர் பிளான் தயாரிக்கப்பட்டு ஐந்தாண்டு காலம் ஆகிறது. அது அரசினுடைய கையிலே இருக்கிறதே தவிர அதை முறைப்படுத்தி அறிவிக்கவில்லை. அறிவிக்கப்படாத நிலையில் சென்னையில் இருக்கிற அனுமதி பெறாத கட்டடங்கள் வரைமுறைப்படுத்தப்பட வேண்டுமென்ற ஓர் அறிவிப்பினை அரசு அறிவித்தது. அதிலே எங்களுக்கு எந்தவிதமான கருத்து வேறுபாடும் கிடையாது. முறையில்லாத கட்டடங்கள் கட்டுவது என்பது நியாயம் அல்ல. அதைத் தமிழ் மாநில காங்கிரஸ் கட்சி ஆதரிக்கவும் இல்லை. ஆனால் அந்த முறையில்லாமல் கட்டடங்கள் கட்டுவது எப்படி என்பதை நீங்கள் தயவுசெய்து சிந்தித்துப் பார்க்க வேண்டும். மாநகராட்சி எல்லைக்குள்ளாக 152 வட்டங்கள் இருக்கின்றன. அந்த வட்டங்களில் இருக்கிற A.E.க்கள் J.E.க்கள் ஆகியோருக்குத் தெரியாமல் ஒரு கட்டடம் கூட கட்ட முடியாது. அவர்களுக்குத் தெரிந்துதான் இந்தக் கட்டடங்களைக் கட்டியிருக்கிறார்கள். அதிலே Violation இருக்கிறது. அது வேறு விஷயம். ஆனால் ஓராண்டு காலத்திற்கு முன்னாலே இந்தக் கட்டடங்களை எல்லாம் வரைமுறைப்படுத்த வேண்டுமென்று முடிவு செய்து டில்லி, மும்பை, பெங்களூர், ஹைதராபாத் போன்ற பல்வேறு நகரங்களிலிருந்து, எப்படியெல்லாம் அவர்கள் வரைமுறைப்படுத்தினார்கள் என்றெல்லாம் தகவல் எடுத்து கர்நாடக மாநிலத்தில் இருக்கிற பெங்களூர் நகரத்தில் எப்படி வரைமுறைப்படுத்தினார்களோ அதுபோன்று கட்டடங்களின் அளவினை மிக அதிகமாக உயர்த்தி இந்த அரசு அறிவித்தது.

முற்பகல் 11-00

சென்னை மாநகரத்திலே மட்டும் சுமார் 3,00,000 கட்டடங்கள் C.M.D.A. அனுமதி பெறப்படாமல், டீவியேஷனாகவோ அல்லது ஒரு மாடி அதிகமாகவோ, இரண்டு மாடி அதிகமாகவோ கட்டப்பட்டிருக்கின்றன என்பதை நாம் நன்றாகவே அறிவோம். அதை வரைமுறைப்படுத்துவதிலே தமிழ் மாநில காங்கிரஸ் கட்சிக்கோ, இங்கே இருக்கிற உறுப்பினர்களுக்கோ, ஆட்சேபணை இல்லை. ஆனால் இதிலே ஏற்பட்டிருக்கின்ற சிக்கல் என்ன என்பதை நான் விரிவாக உணர்ந்துதான் இந்த அவை முன்னாலே அதை வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். கர்நாடக மாநிலத்திலே இருக்கின்ற பெங்களூரில் அபிவிருத்தி செய்கின்றபோது ஏராளமான தொகை கட்டவேண்டுமென்று வைத்திருந்த காரணத்தினாலேதான் அங்கே இருக்கின்ற குடியிருப்பாளர்கள் எல்லாம் சுமார் 60 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் நீதிமன்றத்திற்குச் சென்றதால், 60 ஆயிரம் வழக்குகள் அங்கே தேங்கிக் கிடக்கின்றன என்பதை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வரக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் ஹைதராபாத் நகரத்திலே ஒரு திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். அந்தத் திட்டம் மிகவும் எளிமையான திட்டம், அந்தத் திட்டப்படி நாம் வரைமுறைப்படுத்தினால்தான் மக்களுக்கு எந்தவிதமான இடையூறும், இன்னல்களும் ஏற்படாது. சாதாரணமாக ஓர் அரசு எப்படி இருக்க வேண்டுமென்று நான் சொல்லி நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டிய நிலை இல்லை. மக்களுக்காக, மக்களுடைய நன்மைக்காக செயல்படுகின்ற அரசாகத்தான் இந்த அரசு இருக்க வேண்டுமே தவிர, மக்களுக்குத் துன்பத்தை அளிக்கின்ற திட்டங்களை, துன்பத்தை அதிகமாக விளைவிக்கின்ற இதுபோன்ற ஒரு காரியத்தை அரசு செய்வது என்று சொன்னால் அது நலமாக இருக்க முடியாது.

அதுமட்டுமல்ல. இந்தக் கட்டடங்களை வரைமுறைப்படுத்துவதைப் பொறுத்தவரையில் அமைச்சர் அவர்கள் A1, A2, A3, B,C,D என்று 4 வகையாக வகைப்படுத்திக் கொடுத்திருக்கிறார்கள். அவ்வாறு வகைப்படுத்திக் கொடுத்திருக்கின்ற திட்டங்கள் Architect-களுக்கும், Engineer-களுக்கும்தான் புரிகிறதே தவிர, சாதாரண மக்களுக்கு அது புரியவில்லை. ஆனால், ஹைதராபாத் நகரத்திலே அறிவித்திருக்கின்ற அந்தத் திட்டத்தின்படி யார் வேண்டுமானாலும் அந்தப் படிவத்தை Fiil-up செய்து உடனடியாக அதை நிறைவேற்றிக் கொள்ள முடியும். அவ்வாறு செய்வதை விட்டுவிட்டு அமைச்சர் அவர்கள் ஓர் அறிவிப்பை வெளியிட்டிருக்கிறார்கள். 31-10-2000-க்குள் கட்டடங்களை





வரைமுறைப்படுத்தாவிட்டால் கட்டடங்கள் எல்லாம் இடிக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். இடிபாடுகளிலிருந்து நீங்கள் தப்பிக்க வேண்டுமென்று சொன்னால் 31ஆம் தேதிக்குள்ளாக பணம் கட்டிவிடுங்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். இந்தத் திட்டம் வெற்றிபெற்றுவிட்டது என்று 1ஆம் தேதி பத்திரிகையிலே அமைச்சர் சொல்லியிருக்கிறார், "சென்ற ஆண்டு ஆயிரம் பேர் இதிலே சேர்ந்து கொண்டார்கள்; இந்த ஆண்டு 4 ஆயிரம் பேர் சேர்ந்து கொண்டார்கள்; 47 கோடி ரூபாயைக் கட்டியிருக்கிறார்கள். சென்ற ஆண்டு 6 கோடி ரூபாயைக் கட்டினார்கள்; இந்த ஆண்டு 47 கோடி ரூபாயைக் கட்டினார்கள்" என்று சொல்லியிருக்கிறார்கள். சாதாரண ஏழை எளிய மக்கள், நடுத்தர மக்களை எல்லாம் பாதிக்கின்ற இந்தத் திட்டத்தை சரியான முறையிலே நீங்கள் செய்து கொடுப்பீர்களானால் இந்த அரசுக்கு சுமார் 500 கோடியிலிருந்து 600 கோடி ரூபாய் அளவுக்கு நிச்சயமாக வருவாய் வரும். இதை என்ன காரணத்தால் அமைச்சர் அவர்களோ, அதிகாரிகளோ விட்டுவிட்டார்கள் என்று எனக்குப் புரியவில்லை. நகரமன்ற உறுப்பினர்கள் எல்லாம் தெருவிலே நடந்து போக முடியாத அளவுக்கு மக்கள் அவர்களைப் பிடித்துக் கொள்கிறார்கள். இப்படிப்பட்ட அக்கிரமமான திட்டத்தை அறிவித்து விட்டீர்களே என்று கேட்கிறார்கள். சென்னையிலும், புறநகர்ப் பகுதியிலும் இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்களான நாங்கள் எல்லாம் வெளியிலே போகின்றபோது இப்படிப்பட்ட ஒரு மோசமான திட்டத்தை அறிவித்திருக்கிறீர்களே என்று சொல்கிறார்கள். ஏன் இப்படிப்பட்ட ஒரு குழப்பமான நிலை என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். அரசுக்கு 600 கோடி ரூபாய் வருமானம் வரக்கூடிய திட்டத்தை விட்டுவிட்டு, வெறும் 47 கோடி ரூபாய் மட்டுமே நம்பி, இந்த 47 கோடி ரூபாயை வைத்துக் கொண்டு அமைச்சர் சொல்கிறார் இந்தத் திட்டம் வெற்றி பெற்று விட்டது என்று. 4 ஆயிரம் பேர் பணம் கட்டிவிட்டார்கள் என்று அறிவிப்பது எந்த விதத்திலும் நியாயம் இல்லை என்பதை இந்த அவையிலே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 11-05

அதுமட்டுமல்ல. அமைச்சர் அவர்கள் இதிலே ஒன்றைச் சொல்லியிருக்கிறார்கள். குடியிருப்புப் பகுதி, வணிகக் கட்டடங்களுக்கு நில உபயோகம் மற்றும் தரைப் பரப்பளவு குறியீடுகள் விதிமீறல் இருந்தால் சென்ற முறை, 1,35,60,000 ரூபாய் கட்டவேண்டியதை 25,81,800 ரூபாயாகக் குறைத்திருக்கிறோம்; குடியிருப்புகளில் சாலை அகலம், குடியிருப்பு தரைப் பரப்பளவுக் குறியீடு, பக்க இடைவெளி விதிமீறல்கள் இருந்தால்

[திரு. டி. சுதர்சனம்] [2000 நவம்பர் 9

சென்றமுறை 13,09,500 ரூபாயாக இருந்ததை 3,61,000 ரூபாயாகக் குறைத்திருக்கிறோம். குடியிருப்புப் பகுதிகளில் வணிகக் கட்டடங்களுக்கு நில உபயோகம், தரைப்பரப்பு, குறியீடு மற்றும் பக்க இடைவெளி விதிமீறல்களுக்கு 1 கோடியே, 3 இலட்சத்து, 40 ஆயிரம் ரூபாய் என்பதை ரூ.8 இலட்சத்து, 25 ஆயிரத்து, 200-ஆகக் குறைத்திருக்கிறோம்; குடியிருப்புப் பகுதியிலே வணிகக் கட்டடங்களுக்கு நில உபயோகம், தரைப்பரப்பு குறியீடு, பக்க இடைவெளி மற்றும் அனுமதி இல்லாத உட்பிரிவு ஆகிய விதிமீறல்களுக்கு ரூ. 75 இலட்சத்து, 80 ஆயிரத்திலிருந்து ரூ. 27 இலட்சத்து, 12 ஆயிரத்து, 880-ஆகக் குறைத்திருக்கிறோம் என்று குறிப்பிட்டு இப்படி தினந்தினம் பத்திரிகைகளிலே செய்தி வெளியிட்டிருக்கிறீர்கள். ஓர் ஒட்டகத்தின் மீது மிகப் பெரிய சுமையை ஏற்றிவிட்டு, அந்த ஒட்டகத்திற்கு எதிரே இரண்டு மூட்டைகளை கீழே இறக்கி வைத்துவிட்டு, அந்த ஒட்டகத்தை ஏமாற்றுகின்ற கதையாக இப்போது சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம் மக்களை ஏமாற்றியிருக்கிறது என்பதை இந்த அவையிலே நான் தெள்ளத் தெளிவாகத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். கோடிக்கணக்கிலே அபராதத்தை விதித்துவிட்டு, ஏதோ குறைந்த அளவைக் குறைத்து, குறைத்து விட்டோம், குறைத்துவிட்டோம் என்று சொன்னால் என்ன நியாயம் என்று என்னாலே புரிந்து கொள்ள முடியவில்லை. அதையும் ஒரே மாதத்திலே கட்ட வேண்டுமென்று சொல்கிறீர்கள். ஒரே மாதத்திலே கட்டி முடியக்கூடிய நிலை இப்போது இருக்கிறதா என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். இலட்சக்கணக்கிலே கட்ட வேண்டிய பணத்திற்கு நீங்கள் மூன்று மாதமாவது அல்லது ஆறு மாதமாவது காலக்கெடு கொடுத்திருக்க வேண்டும். அதை விட்டுவிட்டு, 1ஆம் தேதி ஆரம்பித்து, 30 ஆம் தேதிக்குள் பல இலட்சங்ளைக் கட்டுங்கள் என்று சொன்னால், ஏழை மக்கள் எங்கே போவார்கள்; நடுத்தர மக்கள் எங்கே போவார்கள்? இதனாலே கட்டட வேலைகள் இப்போது பாதிக்கப்பட்டிருக்கின்றன. அப்படிப் பாதிக்கப்பட்டிருக்கின்ற காரணத்தினாலே கட்டடத் தொழிலாளர்கள் சுமார் 1½ இலட்சம் பேர் இப்போது வேலைவாய்ப்பை இழந்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சுருக்கமாகப் பேசி முடியுங்கள்.

**திரு. டி. சுதர்சனம்:** பேசி முடித்து விடுகிறேன். செங்கல் தயாரிக்கின்ற தொழிலாளர்கள் 1 இலட்சம் பேர் வேலைவாய்ப்பை இழந்திருக்கிறார்கள். லாரியிலே பணியாற்றுகின்ற 1 இலட்சம் பேர் வேலைவாய்ப்பை இழந்திருக்கிறார்கள். சுருமார், தச்சர் என்பவர்கள் 1 இலட்சம் பேர் வேலை



2000 நவம்பர் 9] [திரு. டி. சுதர்சனம்]

வாய்ப்பை இழந்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட ஒரு மோசமான நிலை இப்போது அமைச்சருடைய அறிவிப்பின் காரணமாக ஏற்பட்டிருக்கிறது என்பதை அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். எங்களுடைய எண்ணமெல்லாம் என்னவென்று சொன்னால், 31-10-2000 என்று அறிவித்ததை, 31-3-2001 என்று தேதி நிர்ணயிக்க வேண்டும்; காலக்கெடு நீட்டித்துக் கொடுக்க வேண்டும் என்பதுதான்.

அதுமட்டுமல்லாமல், ஆந்திரப்பிரதேசத்திலுள்ள ஹைதராபாத் நகரத்திலே அறிவித்திருக்கின்ற கட்டட விதிமுறைகள் போன்று அதை Simplify செய்து, சாதாரண மக்களுக்கும் புரிகின்ற வகையிலே—அது, சாலை அகலமாக்கப்பட்டதா, F.S.I. இருக்கிறதா, அல்லது வேறு ஏதாவது குற்றங்கள் இருக்கிறதா என்று பெரிய Architect-ஐ வைத்துக் கொண்டுதான் படித்து நாம் தெரிந்து கொள்ள வேண்டிய நிலையிலே நம்முடைய form இருப்பதால், அதையெல்லாம் தயவுசெய்து, விட்டு விட்டு இத்தனை சதுர அடிகள் கட்டியிருக்கிறீர்கள்; அதனாலே இத்தனை சதுர அடிக்கு இவ்வளவு fine என்று, simplify செய்து நீங்கள் அறிவித்தால், நிச்சயமாக 600 கோடி ரூபாய் கிடைக்கும்.

அதுமட்டுமல்லாமல், குடியிருப்புப் பகுதிகளுக்கு சதுர அடிக்கு 125 ரூபாய் என்று சொல்லியிருக்கிறீர்கள். ஆனால், வணிக வளாகம் என்று சொன்னால், சதுர அடிக்கு 500 ரூபாய் என்று சொல்கிறீர்கள். வணிக வளாகத்திற்கு 4 மடங்கு அதிகம் என்று சொல்கிறீர்கள். நான் ஒரு நண்பனைக் கேட்டேன். "ஏனப்பா, நீங்கள் கட்டிவிட்டீர்களா" என்று. "இல்லை" என்று சொன்னார். "ஏன் கட்டவில்லை?" என்று கேட்டேன். அதற்கு அவர், "தற்போது நிலத்தின் மதிப்புதான் அதிகமே தவிர, கட்டடத்தின் மதிப்பு ஒரு சதுர அடி வணிக வளாகம் கட்டுவதற்கு 400 ரூபாய்தான் ஆகிறது. எனவே எப்படி 500 ரூபாய் கட்ட முடியும்? அது மட்டுமல்ல; அது 10 ஆண்டு காலத்திற்கு முன்னாலே கட்டப்பட்ட கட்டடம், அங்கே வாடகைக்கு இருப்பவர்கள் வாடகையை அதிகமாக ஏற்றிக் கொடுக்க மறுக்கிறார்கள். அரசாங்கமே இடித்துவிடுமானால், அந்தக் கட்டடம் போய்விட்டால், அரசாங்கத்திற்கு 500 ரூபாயைக் கொடுப்பதைவிட 400 ரூபாய் செலவில் புதிய கட்டடம் கட்டிவிட்டு, அதிகமான வாடகையைப் பெற்றுக் கொள்ளலாம்; பகிடியும் தனக்குக் கிடைக்கும் என்று சொன்னார். இவ்வாறு சென்னை மாநகர மக்கள் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள் நீண்ட நெடுங்காலமாக சென்னை நகரமக்கள் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு ஆதரவு அளித்து

வந்திருக்கிறார்கள். அந்த ஆதரவை இந்த அறிவிப்பின் மூலமாக நீங்கள் இழக்கப் போகிறீர்களா என்பதை நீங்கள் தெளிவாகத் தெரிவிக்க வேண்டும்.

அதோடுமட்டுமல்லாமல், இப்போது அரசுக் கட்டடங்கள் நிறைய இருக்கின்றன. உதாரணமாக எல்.ஐ.சி. கட்டடம் இருக்கிறது. எந்தத் தேதியிலேயிருந்து கட்டப்பட்ட கட்டடங்களுக்கு இப்படிப்பட்ட அறிவிப்பு என்று நீங்கள் தெளிவாக அறிவிக்கவே இல்லை. 50 ஆண்டு காலத்திற்கு முன்னாலே கட்டப்பட்ட கட்டடமாக இருந்தாலும் வரன்முறைப்படுத்த வேண்டுமென்று சொல்கிறீர்கள். நேற்று கட்டப்பட்ட கட்டடமாக இருந்தாலும் சரி, அதையும் வரன்முறைப்படுத்த வேண்டுமென்று சொல்கிறீர்கள். இப்போது எல்.ஐ.சி. கட்டடம் அண்ணா சாலையிலே இருக்கிறது. அதை நீங்கள் இடித்து விடுவீர்களா? அதை வரைமுறைப் படுத்துவதற்கு என்ன திட்டம் வைத்திருக்கிறீர்கள்? C.M.D.A. கட்டடம் இருக்கிறது. அதற்குப் பக்கத்திலே மிகப் பெரிய 10 மாடிக் கட்டடம் கட்டியிருக்கிறார்கள். அது நிச்சயமாக C.M.D.A. சட்ட திட்டத்திற்கு உட்பட்டு வரவில்லை. அதற்கு என்ன செய்யப் போகிறீர்கள்? கவிஞர் நாமக்கல் மாளிகை இருக்கிறது. அது, C.M.D.A-விலே கொடுக்கப்படுகின்ற அத்தனைவிதமான திட்டங்களின் மூலமாகக் கட்டப்பட்டிருக்கிறதா? அதை நாம் இடித்துவிடுவோமா? இதையெல்லாம் தயவுசெய்து நீங்கள் சிந்தித்துப் பார்த்து, ஆந்திர மாநிலத்திலே அறிவித்திருப்பதைப் போன்று அறிவித்தால் 600 கோடி ரூபாய் அரசுக்கு வருமானம் வரும்; மக்களுக்கு இழைக்கப்படுகின்ற துன்பங்களிலிருந்து நீங்கள் தப்பிக்க வேண்டுமென்று சொன்னால், அருள்கூர்ந்து, நீங்கள் முதலமைச்சரைக் கலந்தாலோசித்து, ஆந்திர மாநிலத்தில் அறிவித்திருப்பது போன்று அறிவிக்க வேண்டும்; 31-3-2001 வரை என்ற காலக்கெடு நீடிக்கப்பட வேண்டும் என்று கேட்டு அமர்கிறேன்.

முற்பகல் 11-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ம. அப்துல் லத்தீப்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெருநகர் வளர்ச்சி மன்றம் மற்றும் மாநகராட்சி மன்றம் இந்த இரண்டும் Statutory bodies என்று சொல்லப்படக்கூடியவைகள். பெருநகரத்தில் கட்டப்படுகிற கட்டடங்களுக்கு இறுதி வடிவம் கொடுத்து, அதனுடைய Blue print-ஐ முதல் தளம், இரண்டாவது தளம் வரையிலே பெருநகர் வளர்ச்சி மன்றம் நேரடியாகத் தலையிடுவதில்லை என்று சொல்லப்படுகிறது.





அதற்கான அனுமதியை மாநகராட்சி மன்றமே வழங்குகிறது. இப்போது இவ்வளவு கட்டடங்கள் முறையாக இல்லை; வரையறைக்கு உட்படுத்தப்படவில்லை என்ற ஓர் அடிப்படையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. அவர்கள் மீது, மிக அபரிமிதமான வகையிலே, அவர்கள் Penalty கட்ட வேண்டுமென்ற முறையில் உத்தரவு வழங்கப்பட்டிருப்பதாகவும் சொல்லப்படுகிறது. நான் கேட்பது, மாநகராட்சி எல்லைக்கு உட்பட்ட இடத்தில், எத்தனை கட்டடங்கள் உங்களுடைய கணக்குப்படி வரையை மீறி, முறையை மீறி கட்டப்பட்டிருக்கின்றன என்பதற்கான ஓர் அறிவிப்பு தேவை. பொத்தாம் பொதுவாக கட்டடங்கள் எல்லாம் இப்படிக் கட்டப்பட்டிருக்கின்றன, அதற்காக அவர்கள்மீது மேற்கொண்டு கட்டணம் விதிக்கப்படுகிறது, அது Penalty-ஆக விதிக்கப்படுகிறது என்று சொல்வது எந்த வகையிலும் நியாயம் இல்லை. ஒரு விஷயம் இதுவரையில் சரியாக விளக்கப்படவில்லை. இறுதி வடிவத்தை யார் அங்கீகரித்து அதற்கான அனுமதியைத் தருகிறார்கள்? பெருநகர் வளர்ச்சி மன்றமா? அல்லது, நம்முடைய மாநகராட்சி மன்றமா என்பதை உறுதி செய்ய வேண்டும். இரண்டாவது, அனுமதி வழங்குவதற்கு முன்பு, இந்த இரண்டு அமைப்புகளுக்கிடையேயும் ஒரு Co-ordination இருக்கிறதா? இவர்களைக் கேட்டு அல்லது அவர்களைக் கேட்டு முறையாக இறுதியாக அனுமதி வழங்கப்படுகிறது என்று சொன்னால், பெருநகர் வளர்ச்சி மன்றம் மாநகராட்சி மன்றத்தைக் கேட்காமலே வழங்குகிறதா? அல்லது மாநகராட்சி மன்றம் அவர்களைக் கலந்து கொள்ளாமலே அந்த அனுமதியை வழங்குகிறதா என்பது நிச்சயமாக தெளிவாக்கப்பட வேண்டும். எனவே, இந்த விஷயத்தில் மிகப் பெரிய குழப்பம் மட்டுமல்ல; சட்ட அமைப்புகளுக்கிடையே முறையாக ஓர் ஒருங்கிணைப்பு, கலந்தாலோசித்தல், ஒரு mutual consultation, ஒரு consensus இவர்களுக்கிடையே இல்லாமல் இருப்பது மிக வேதனைக்குரியது. இவர்கள் கொடுக்கிற அனுமதியை அவர்கள் மறுப்பதும், அவர்கள் கொடுக்கிற அனுமதியை இவர்கள் அங்கீகரிக்காமல் இருப்பதும், இதனால் மக்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்பதைப் பற்றி சிறிதும் கவனம் செலுத்தாமல் இருப்பதும் மிகவும் வேதனைக்குரியது; இன்னும் சொல்லப்போனால், கண்டனத்திற்குரியது.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்ல வேண்டியது. எத்தனை கட்டடங்கள் வரைமுறையை மீறி, முறையை மீறி கட்டப்பட்டிருக்கின்றன என்பதை அறிவித்திருக்கிறீர்களா? சென்னை நகரத்தில் எத்தனை கட்டடங்கள் அப்படி முறையை மீறி வரையறைக்கு உட்படாமல்

கட்டப்பட்டிருக்கின்றன என்பதைக் குறித்து அதற்கேற்ப notify செய்திருக்கிறீர்களா? அப்படி notify செய்திருக்கிறீர்கள் என்று சொன்னால், அந்த notification-ஐ மாநகராட்சி மன்றம் செய்ததா? அல்லது உங்களுடைய பெருநகர் வளர்ச்சி மன்றம் செய்ததா என்பதைத் தெரிவிக்க வேண்டும்.

இன்னொன்று blue print approval இல்லாமலேயே, மாநகராட்சி மன்றத்தினுடைய approval-ம் பெருநகர் வளர்ச்சி மன்றத்தினுடைய approval-ம் இல்லாமல் கட்டப்பட்டு இருக்கிறதா? அப்படி கட்டப்பட்டிருக்கிறது என்றால், அப்படி கட்டுவதற்கு யார் அனுமதி தந்தார்கள்? இது தொடர்புடைய அதிகாரிகளிடத்திலே அனுமதி பெற்றுத்தானே கட்டடங்கள் கட்டப்பட்டிருக்கும்? இப்பொழுது திடீரென்று நீங்கள் அது தவறுதலாகக் கட்டப்பட்டிருக்கிறது என்று சொல்வதற்கு உங்களுக்கு என்ன உரிமை இருக்கிறது? அப்படி இருக்கிறது என்று சொன்னால், நான் கேட்கிறேன்; அதிகாரிகள் தவறுதலாகச் செய்துவிட்டார்கள்; மேலதிகாரிகளைக் கேட்காமல், சட்ட நுணுக்கங்களை எல்லாம் ஆராயாமல் statutory provisions என்ன என்பதைப் பற்றி எல்லாம் கவனம் செலுத்தாமல் அதிகாரிகள் அனுமதி கொடுத்துவிட்டாலும் நீங்கள் vicariously liable. You cannot punish me even if the permission is given, that is given without there being any statutory powers. அந்த அடிப்படையிலேதான் வருகிறது. இதையெல்லாம், கவனிக்காமல் அவர்கள் எங்கேயோ உட்கார்ந்து, இவர்கள் எங்கேயோ உட்கார்ந்து, மக்களுக்கு பல காரணங்களுக்காக அனுமதி கொடுக்கப்பட்டு, அவர்கள் கட்டடம் கட்டிய பிறகு, திடீரென்று இவ்வளவு அபரிமிதமான பணம் கட்ட வேண்டுமென்று சொன்னால், நான் கட்ட மறுக்கிறேன். உங்களுடைய அனுமதியோடுதான் கட்டினேன். நீங்கள் இப்பொழுது என்னை கட்டச் சொன்னால் நான் கட்ட மறுக்கிறேன்...

முற்பகல் 11-15

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அப்துல் லத்தீப் அவர்கள் பெரிய வழக்கறிஞர். எல்லா விவரங்களும் தெரிந்தவர். இப்போது இருக்கிற பிரச்சினை, அனுமதி வழங்கிய கட்டடங்களை யாரும் இடிக்க மாட்டார்கள். அனுமதி நான்கு மாடிகளுக்கு வாங்கி விட்டு, 6 மாடிகளை அவர்கள் கட்டிக் கொண்டிருந்தால், அது சட்டப்படி குற்றம். அதை முறைப்படுத்தத்தான் இந்தச் சட்டம்.





**திரு. ம. அப்துல் லத்தீப்:** அதைத்தான் நான் சொல்கிறேன். அனுமதி வாங்காமல் கட்டியிருந்தால் கட்டுகின்ற வரையிலே யார் அவர்களுக்கு அனுமதி கொடுத்தது? பார்த்துக் கொண்டிருந்தது யார்? உங்களுடைய கடமையைச் செய்யாமல்... (குறுக்கீடு) பிடிப்பதைத் தப்பு என்று சொல்லவில்லை. சரிதான். ஆனால் கட்டி முடித்துவிட்டேன். இப்பொழுது எத்தனை பேர் கட்டடங்கள் கட்டினார்கள். அவர்கள் எவ்வளவு பேருக்கு அனுமதியைக் கொடுத்தார்கள் என்ற அந்த விவரத்தையாவது தெரிவியுங்கள். C.M.D.A. யார், யாருக்கு அனுமதி கொடுத்தது? கொடுத்ததா? இல்லையா? கொடுக்கவில்லையென்றால் ஏன் கொடுக்கவில்லை? மாநகராட்சி மன்றம் யார், யாருக்கு அனுமதி கொடுத்தது? அப்படிக் கொடுத்திருந்தால் எந்த அளவிற்குக் கொடுத்தார்கள்? அதையும் மீறி அவர்கள் கட்டுகிறார்கள் என்றால், உங்களுடைய பார்வை என்ன? உங்களுடைய கண்காணிப்பு என்ன? அவர்கள் இரண்டு தளங்கள் கட்டுவதற்குப் பதிலாக ஆறு தளங்கள் கட்டுகிறார்கள், வரையறையை மீறிக் கட்டுகிறார்கள். முறையை மீறிக் கட்டுகிறார்கள் என்று சொன்னால், உங்களுடைய Supervision என்ன? சட்ட நடைமுறையை நீங்கள் எந்த அளவிற்குக் கண்காணிக்கிறீர்கள் என்பதுதான் இப்போதுள்ள பிரச்சினை. நான் கட்டிக் கொண்டு இருந்தேன். அனுமதி இல்லாமல் கட்டினேன். கட்டி முடித்து விட்டேன். இப்பொழுது நீங்கள் வந்து முறையின்றி கட்டியிருக்கிறீர்கள், அதற்காக இவ்வளவு பணம் கட்ட வேண்டுமென்று சொல்கிறீர்கள். அப்படிச் சொல்வதற்கு உங்களுக்கு சட்டப்படி எங்கு அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது என்பதுதான் எங்களுக்குத் தெரிய வேண்டும்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாட்டில் குற்றம் குறைகள் நடைபெறாமல் இருக்க, திருட்டு நடைபெறாமல் இருக்க, கொலை, கொள்ளை நடைபெறாமல் இருக்க காவல் துறை இருக்கிறது. காவல் துறை இருந்தாலும், அவை நடைபெற்றுவிட்டதற்குப் பின்னர், காவல் துறை அவர்களைக் கைது செய்கிறது. குற்றவாளியைக் கண்டுபிடித்து, கண்டுபிடிக்கப்பட்டால் கைது செய்கிறது. அதைப்போல இது ஒரு நடவடிக்கை. ஆகவே, அரசோ அல்லது அதற்கான ஒரு துறையோ இருந்தாலும்கூட, அதைமீறி தவறு செய்கிறவர்கள், திட்டமிட்டுச் செய்து விடுவதால் அதனுடைய விளைவாக இந்த நடவடிக்கை எடுக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** நான் சரியாக விளக்கவில்லையென்று கருதுகிறேன். குற்றம் செய்பவர்களைக் கண்டுபிடித்து தண்டிப்பது

அவர்களுடைய கடமை; அது வேறு விவகாரம். ஆனால் கட்டடம் கட்டுவது என்பது ஒரே நாளிலே கட்டி, மறைத்துக் கட்டிவிடுவது அல்ல. அவர்கள் செங்கல், செங்கலாக அடுக்கிக் கட்டடத்தைக் கட்டி முடிக்கிறார்கள். அப்படிக் கட்டி முடிக்கப்படுகிறது என்று சொன்னால், இரண்டு தளத்திலிருந்து நான்கு தளம் வரையிலே அவர்கள் கட்டுகிறார்கள் என்று சொன்னால் அப்படி நான்கு தளம் வரையிலே கட்டிய கட்டடத்தைப் பார்த்துக் கொண்டிருந்தவர்கள் யார்?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனுமதி வாங்கித்தான் சென்னை போன்ற மாநகரங்களில், நகரசபைகளில் கட்டடம் கட்ட வேண்டுமென்று விதிமுறை இருக்கிறது. அந்த அனுமதியைப் பெறுகிறார்கள். ஆனால், அனுமதியை மீறி செய்யப்படுகிற காரியத்தைப்பற்றி கவனித்தார்களா, அல்லவா என்பது கேள்வியல்ல. அனுமதியை மீறிச் செய்ததே குற்றம். அந்தக் குற்ற அடிப்படையிலேதான் நகரம் பாழ்படுகிறது. நகர மக்களுடைய வாழ்க்கை அதனால் பாதிக்கப்படுகிறது என்பதால் இந்த முறைகளை வேறு பல மாநிலங்களிலேயும் மேற்கொண்டிருக்கிறார்கள். இங்கே ஏற்கெனவே பேசிய மாண்புமிகு உறுப்பினர் சொன்னதுபோல ஹைதராபாத், கர்நாடகம் போன்ற பல இடங்களிலே மேற்கொண்டிருக்கிறார்கள். அந்த முறைதான் இப்பொழுது மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் அவர்கள் கொஞ்சம் சீக்கிரம் பேசி முடியுங்கள்.

பிற்பகல் 11-20

**திரு. ம. அப்துல் லத்தீப்:** ஹைதராபாத் முறையைக் கடைப்பிடிக்க வேண்டுமென்ற ஒரு வேண்டுகோளை அவர் வைத்தார். அதை நீங்கள் கடைப்பிடிக்கப் போகிறீர்களா? அந்த முறையை நீங்கள் இங்கே மேற்கொள்ளப் போகிறீர்களா என்பது வேறு பிரச்சினை. என்னுடைய கேள்வியெல்லாம் இந்தக் குற்றம் மறைமுகமாகச் செய்யப்படவில்லை. உங்களிடத்திலே இருக்கிற கண்காணிப்பு இயந்திரம் என்ன? கண்காணிப்பு இயந்திரம் என்ன என்று கேட்டால் நாங்கள் சட்டப்படி செய்கிறோம் என்று சொல்கிறீர்கள். இப்போது சட்டப்படிதான் இந்த மாதிரியான ஒரு முறையை நீங்கள் மேற்கொண்டிருப்பதாகச் சொல்கிறீர்கள். என்னுடைய குற்றச்சாட்டு என்னவென்றால், ஒரு பெருநகரத்திலே இவ்வளவு கட்டடம் கட்டிய பிறகு, இப்போது திடீரென்று நீங்கள் அதிக அளவில் கட்டணத்தை அவர்கள் மீது விதிப்பீர்கள் என்று சொன்னால் அது அனுபவ சாத்தியம்





தானா? அவற்றையெல்லாம் நீங்கள் உடைக்கப் போகிறீர்களா? உடைத்தால், பாரதூரமான விளைவுகள் ஏற்படும். எனவேதான், இதுகுறித்து சரியான ஆய்வுகள் வேண்டும். அதுமட்டுமல்லாமல் பெருநகர வளர்ச்சி மன்றத்திற்கும் மாநகராட்சி மன்றத்திற்கும் சரியான ஒருங்கிணைப்பு வேண்டும்; Consultation வேண்டும். அவற்றையெல்லாம் செய்யாமல் இப்போது திடீரென்று இவ்வளவு நாளைக்குப் பிறகு, நீங்கள் மக்களிடத்தில் இத்தனை வீடுகளைக் கட்டிவிட்டீர்களே, இவற்றையெல்லாம் உடைக்கிறோம் என்று சொல்லப் போகிறீர்களா? அல்லது அபரிமிதமான கட்டணத்தை நீங்கள் கொடுத்துத்தான் ஆக வேண்டும் என்று வற்புறுத்தப் போகிறீர்களா? அப்படி அவர்கள் கொடுக்காவிட்டால், கட்டடங்களை எல்லாம் இடிக்கப் போகிறீர்களா? உங்களுடைய முடிவு என்ன என்பதை நீங்கள் தெளிவாக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய கேள்வி. அதற்கு அமைச்சர் பதில் அளிப்பார் என்று நான் எதிர்பார்க்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கு சுட்டிக்காட்டியிருக்கிற கருத்துகளை எண்ணத்திலேகொண்டு, இந்த விளக்கத்தை அளிக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பாக, இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு, சென்னை மாநகரத்திலே நீண்ட காலமாக பல்வேறு கட்டடங்கள் விதியை மீறிக் கட்டியிருப்பது கண்டறியப்பட்டு வருகின்றது. மாண்புமிகு உறுப்பினர் அப்துல் லத்தீப் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, அவ்வப்போது இதுபோன்று விதிமுறைகளை மீறி கட்டடங்கள் கட்டப்பட்டபோது, அவர்களுக்கு நோட்டீஸ்களும், சுற்றறிக்கைகளும் அனுப்பப்பட்டிருக்கின்றன. அவற்றை வைத்தே பலபேர் நீதிமன்றங்களுக்குச் சென்று stay order வாங்கி இருப்பதும் வழக்கமாக இருந்து வந்திருக்கிறது. அவற்றையெல்லாம் முறைப்படுத்த வேண்டும் என்ற உணர்வோடுதான் இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு பெருநகரக் குழுமம் உருவாக்கப்பெற்றதற்குப் பிறகு விதிகளை மீறி கட்டப்பட்ட கட்டடங்கள் அனைத்திற்கும், எந்த அளவிற்கு விதிகளை மீறியிருக்கிறார்கள் என்பதைக் கணக்கிட்டு அதற்கு ஏற்றபடி ஓர் அபராதத் தொகையைக் கட்ட வேண்டும் என்று சொன்னோம். இதைக்கூட ஒரே தடவைதான் பயன்படுத்திக்கொள்ள முடியுமே தவிர, தவறு செய்கிறபோதெல்லாம் பணத்தைக் கட்டிவிடலாம் என்ற எண்ணத்தில் யாரும் இவ்வாறு செய்ய முடியாது. மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் சொன்ன கருத்துக்களைப்போல, தவறி கட்டிவிட்டார்கள், அதை இடிப்பதும் சரியாக இருக்காது என்ற உணர்வோடுதான் அவற்றை வரைமுறைப்படுத்த

[டாக்டர் க. பொன்முடி] [2000 நவம்பர் 9

வேண்டும். அரசாங்கத்திற்கு அதனால் வருமானம் வந்தால் மற்ற சலுகைகளுக்கு அதைச் செலவிட முடியும் என்ற உணர்வோடுதான் இந்தத் திட்டமே கொண்டு வரப்பட்டிருக்கிறது.

இந்தத் திட்டம் ஹைதராபாத், பெங்களூர் போன்ற மாநகரங்களிலே கொண்டு வரப்பட்டிருப்பது மட்டுமின்றி, சுப்ரீம் கோர்ட்டிலேயும் இதற்கு வழிவகைகள் இருப்பதாக அங்கேயும் இதற்கு தீர்ப்பும் வழங்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்தச் சட்டத்தைக் கொண்டு வருவதிலே எந்தத் தவறும் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் சுதர்சனம் போன்றவர்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் சுதர்சனம் அவர்களுடைய வாதமே இந்தத் தொகை அதிகமாக இருக்கிறது, ஹைதராபாத்திலே குறைவாக இருக்கிறது, ஹைதராபாத்தைப் போல இருந்தால் 500 கோடி 600 கோடி ரூபாய் வரும் என்பதுதான்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன். ஹைதராபாத்திலே இதுவரை பெற்றிருக்கிற வருமானமே 35 கோடி ரூபாய்தான். நம்முடைய மாநிலத்திலே நாம் பெற்றிருக்கிற வருமானம் கிட்டத்தட்ட 60 கோடி ரூபாய். அந்த 35 கோடி ரூபாய்கூட அங்கே சுமார் 4,500 விண்ணப்பங்களிலேயிருந்து பெற்றிருப்பதுதான். நம்முடைய மாநிலத்திலே 6,000 விண்ணப்பங்களிலேயிருந்து நாம் பெற்றிருக்கிற தொகை இந்த அளவிற்கு இருக்கிறது. இதிலே ஹைதராபாத்திற்கும், நமக்கும் ஒரு பெரிய வேறுபாடு என்னவென்று சொன்னால், ஹைதராபாத்திலே சிறிய தப்பு செய்தவனுக்கும் ஒரே விதிதான், பெரியதாக Building கட்டி இருப்பவனுக்கும் ஒரே விதிதான். அதுபோல வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நினைக்கிறார்களா? சாதாரணமாக ஏழைக் குடியானவன் ஒருவன் கட்டடம் கட்டி குடியிருந்தான் என்றால், அவன் ஒரு சிறிய தப்புதான் பண்ணியிருப்பான். எல்லா விதிமுறைகளும் இருக்கும், விட வேண்டிய இடம், F.S.I. சரியாக இருக்கும். மற்ற எல்லா திட்டமும் correct-ஆக இருக்கும். ஒரேயொரு தப்பு பண்ணியிருப்பான். விண்ணப்பம் போடாமல் கட்டடம் கட்டியிருப்பான். அவனுக்கு நாம் fine போட வேண்டுமா? அவனுக்கு நாம் என்ன செய்கிறோம் என்றால், அவனிடம் விண்ணப்பதைப் போட்டுவிடு, உனக்கு fine கிடையாது. நீ தெரியாமல் விண்ணப்பம் மட்டும் போடவில்லை. அதனால் நீ கட்டி விட்டாய் என்றால்-ஏழைக் குடியானவன் அப்படித்தான் பண்ணியிருப்பான்—சிறிய வீடு கட்டியவன் சிறிய ஏழையாக இருப்பான்—அப்படித்தான் பண்ணியிருப்பான்—அந்தமாதிரி விண்ணப்பம் போடாமல் கட்டடம் கட்டியிருந்தால்—



2000 நவம்பர் 9] [டாக்டர் க. பொன்முடி]

நீ விண்ணப்பம் போட்டால் என்ன scrutiny fee கட்ட வேண்டுமோ அதைக் கட்டினாலே போதும், உனக்குக் கொடுத்து விடுகிறோம் என்று அவர்களுக்கு விதிவிலக்கு கொடுத்திருக்கிறோம். இது ஏழை எளிய மக்களுக்குப் பயன் அளிக்கக்கூடிய ஒரு திட்டம்.

முற்பகல் 11-25

ஹைதராபாத்திலே என்ன செய்திருக்கிறார்கள் தெரியுமா? அந்த மாதிரி ஏழை ஒருவன் கட்டடம் கட்டியிருந்தால்கூட விண்ணப்பம் போடாமல் இருந்தாலே, 1,000 சதுர அடியிலே கட்டியிருந்தான் என்றால், 1,000 சதுர அடிக்கும், 1 சதுர அடிக்கு 160 ரூபாய் வீதம் பணம் கட்டியாக வேண்டும். அப்பொழுது அங்கே ஏழைக்கும் ஒரே தண்டனை, பணக்காரனுக்கும் ஒரே தண்டனை. கட்டடம் கட்டி வியாபாரம் செய்கிறவனுக்கும் ஒரே தண்டனை; சாதாரணமாக குடியிருக்க வேண்டும் என்று போகிற சாதாரண எளிய மக்களுக்கும் ஒரே தண்டனை. ஆனால் கலைஞர் அவர்களின் அரசு, it is a welfare state உறுப்பினர் சொன்ன மாதிரி, மக்களுக்காக மக்களே ஆளுகிற ஆட்சியாக இருந்தாலும்கூட இது அடித்தளத்து மக்களுக்கும், ஏழைகளுக்கும் பயன் அளிக்க வேண்டும்; பணக்காரன் அதிகமாக இதிலே சம்பாதிப்பதால் கொஞ்சம் அதிகமாகக் கட்ட வேண்டும் என்ற உணர்வோடுதான், மிகவும் கண்காணிப்போடு, இந்தத் திட்டத்தை உருவாக்கி இருக்கிறோம். அந்த உணர்வோடுதான் மிகச் சிறிய அளவே violations குறைந்த அளவு தவறு செய்திருப்பவர்கள், permission மட்டும் வாங்கவில்லை என்றால் அவர்களுக்கு அபராதமே கிடையாது. அதே மாதிரி இதிலே இரண்டு கட்டங்கள் இருக்கின்றன. இரண்டு application இருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத்திலே அனுமதி வாங்க வேண்டும் என்று சொன்னாலே இரண்டு விதமான applications கொடுக்க வேண்டும். ஒன்று A. இன்னொன்று B. 'A' என்பது மனைக்காக வாங்குகிற அனுமதி. அதாவது conversion. Agricultural land-ஆக இருப்பதை industrial land ஆக மாற்ற வேண்டும் என்று சொன்னால் அதற்கு விண்ணப்பத்தை வாங்கிக் கொள்ளவேண்டும். முதலாவதாகச் செய்வது.

மற்றொன்று, மனைப் பிரிவுகள். ஒரு land-ஐ plot போட்டு விற்கிறோம் என்று சொன்னால் அதற்கு அனுமதி வாங்கிக் கொள்ள வேண்டும். இது

மனைக்காக பெறுகிற அனுமதி. இந்த அனுமதி பெற்ற பின்னர்தான் கட்டடத்திற்கான அனுமதியைப் பெற வேண்டும். இது 'B'; அதற்கடுத்த application. பல பேர் என்ன செய்வார்கள் என்றால் கட்டடத்திற்கு முதலிலே போட்டுவிட்டு `A' வை வாங்காமல் அதை வாங்கிக் கட்டுகிறவர்கள் உண்டு. மாண்புமிகு உறுப்பினர் சுதர்சனம் அவர்கள்கூட ஒரு கல்லூரி நடத்துகிறபோது land conversion, அது ஒன்றும் தவறு கிடையாது. Agriculture to Institution. அதை முதலிலே வாங்கிவிட்டிருந்தார் என்றால் அவருக்கு ஒன்றும் பிரச்சினையே கிடையாது. அதை வாங்காமல் institution கட்டியாகிவிட்டது. இப்பொழுது மறுபடியும் அதற்கு விண்ணப்பம் வந்த பிறகு என்ன ஆயிற்று என்றால் அது institution வாங்கவில்லை—அதற்கு முதலிலே இருந்த திட்டப்படி அவர் கட்ட வேண்டிய Fine மட்டும் கிட்டத்தட்ட 40 இலட்சம் ரூபாய் வந்தது. இப்பொழுது குறைத்தபோது அவருக்கு 13 இலட்சம் ரூபாய்தான் வருகிறது. அவர் சொன்னமாதிரி ஒட்டகத்திலே அதிகமாக ஏற்றினாலும் குறைத்தாலும் பளு கொஞ்சம் ஓரளவிற்குக் குறைந்திருக்கிறது. முன்பை விட குறைந்திருக்கிறது. அவர் ஒத்துக் கொள்கிறார், அதைக் குறைத்திருக்கிறோம் என்று. அதேநேரத்திலே அவர் சொல்கிறமாதிரி இது அதிகமாக இருக்கிறது என்றால் 10, 15 வருடத்திற்கு முன்பே இவர் செய்திருந்தால் 10,000 ரூபாயிலே முடிய வேண்டிய வேலை இது. தவறு இல்லை. எனவே இன்னும் தவறு செய்பவர்களுக்கு இந்த எண்ணம் வந்துவிடக்கூடாது. எப்போது வேண்டுமானாலும் நாம் கட்டிக் கொள்ளலாம்; அடுத்து இந்தமாதிரி ஏதாவது 10,000 ரூபாய் பணம் கட்டினால் சரிபண்ணிக்கொள்ளலாம் என்ற எண்ணமும் வரக்கூடாது. அது இந்தச் சட்டத்தினுடைய நோக்கமாகவும் இருக்கிறது. ஆகவே இனிமேல் அதுபோல் தவறும் நடக்கக்கூடாது. தவறு செய்து விட்டார்கள், அதை நாம் திருத்தவும் முடியாது, நீங்கள் சொன்னமாதிரி அதையும் முறைப்படுத்த வேண்டும் என்ற உணர்வோடுதான் இந்தச் சட்டம் உருவாக்கப்பட்டு இருக்கிறது. ஆகவே அந்த நோக்கத்தின் அடிப்படையிலேதான் இது பல்வேறு முறையிலே செய்யப்பட்டிருக்கிறதே தவிர யாருக்கும் எந்தவிதமான தவறும் இதனால் இழைக்கப்படவில்லை.

குறிப்பாக இதிலே பணம் கட்டியிருக்கிறவர்கள் பட்டியலை நீங்கள் எடுத்துப் பார்த்தீர்கள் என்றால் 1 இலட்சம் ரூபாய்க்குள்ளே கட்டியிருக்கிறவர்கள் மட்டும் கிட்டத்தட்ட 6,000 பேர், ரொம்ப சாதாரணமானவர்கள் இதனால் பயன் அடைந்திருக்கிறார்கள். கட்டாதவர்கள் யார் என்று சொன்னால் Real Estate செய்கிறவர்கள்,



building கட்டி வைத்து வியாபாரம் செய்து கொண்டு இருக்கிறார்கள், பாருங்கள் அவர்கள்தான் இன்னும் ஆளைப் பிடித்துக் கொண்டு அலைந்து கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் ஒரு மாதம் தயவுசெய்து ஒத்துழைத்தால் யார் யார் இதை வைத்துப் பிழைக்கிறார்களோ அவர்கள் பூராவும் பணம் கட்டிவிடுவார்கள். நான் யாரையும் தவறாகச் சொல்ல வேண்டும் என்று எண்ணவில்லை. நான் இங்குள்ள மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர் சொன்னதற்குப் பிறகு, மாண்புமிகு உறுப்பினர் லட்சுமணன் அவர்கள் கலந்து கொண்ட ஒரு கூட்டத்திலே எவ்வளவு குறைக்கலாம் என்பதுபற்றி எல்லாச் சங்கங்களையும் கூப்பிட்டு வைத்து ஒரு முடிவு எடுத்தோம். முதலிலே அதிகமாக இருக்கிறது என்று சொன்னார்கள். பெங்களூரைப்போல அதிகமாக இருக்கிறது என்று சொன்ன பிறகு முடிவு எடுத்தோம். மாண்புமிகு உறுப்பினர் லட்சுமணனுக்குத் தெரியும், அதிலே ஒரு சங்கத்திலேயிருந்து வந்து சொன்னார்கள், இதை நீங்கள் குறைக்கவே கூடாது, நீங்கள் போட்டிருக்கிற தொகைதான் right என்று சொன்னார்கள். இன்னும் சிலர் ரொம்ப குறைக்க வேண்டும் என்று சொன்னார்கள். நாங்கள் குறைப்பது பற்றிக்கூட அப்பொழுது பேசவில்லை. அமைச்சரவையிலே பேசிவிட்டு அப்புறம் பேசுகிறோம் என்று சொன்னோம். முதலிலே அமைச்சரவையிலே வைத்துப்பேசி இதிலே எவ்வளவு குறைக்கலாம் என்று solution சொல்லலாம் என்று சொன்னோம். அந்த அடிப்படையிலே பாதியாகக் குறைத்தோம். அதாவது 2500 ரூபாய் என்பதை 1250 ரூபாயாகக் குறைத்தோம். சாதாரண residential area-ஆக இருந்தால் அதற்கு 2500 ரூபாய். அதை 1250-ஆகக் குறைத்தோம். Commercial-ஆக இருந்தால் 10,000-லிருந்து 5,000-ஆகக் குறைத்திருக்கிறோம்.

அது மட்டுமல்ல. ஒரு F.S.I. என்பது, 2,400 சதுர அடி இருந்தால் 3,600 சதுர அடிக்குக் கட்டடம் கட்டலாம். 1.5. F.S.I. இருக்கிறது. இதிலே 3,600 அடிக்குக் கட்டியிருந்தால் பிரச்சினையில்லை. காரணம் 3,600 அடி அவனுக்கு permissible, allowed. ஆனால் அவன் 3,800 அடி கட்டியிருப்பான். அவன் அளவு மீறியது 200 சதுர அடிதான். அதனால் fine செய்தபோது என்ன செய்தார்கள் என்றால் முதல் திட்டத்தின்படி 3,800 சதுர அடிக்கும் சேர்த்து fine போட்டார்கள். அதைத்தான் எல்லோரும் கேட்டார்கள். இந்த மாதிரி இருக்கக் கூடாது. எவ்வளவு அளவு மீறினோமோ அதற்கு மட்டும் fine போடுங்கள் என்று சொன்னார்கள். அப்படிச் சொன்ன பிறகு அந்தக் கருத்தையும் எடுத்துக்கொண்டு 200 சதுர அடிக்கு மட்டும் நாங்கள் fine போடுகிறோம் என்று சொல்லி அந்த 200 சதுர அடிக்குத்தான் இப்பொழுது போட்டிருக்கிறோம். ஆக

50 சதவீதமாகக் குறைத்தது மட்டுமல்ல; விதி மீறல் எதிலே இருக்கிறதோ அதற்கு மட்டும்தான் போட்டோம்.

இன்னும் ஒன்று. இப்பொழுது ரோடு length குறிப்பிட்ட அளவு இல்லை என்று சொன்னால்—ஒரு சாலையினுடைய அகலம் இந்த அளவுக்கு இருக்க வேண்டும் என்று சொல்கிறோம், அந்தச் சாலை அகலத்தை மீறி கட்டடம் கட்டப்பட்டு இருந்தால்—அந்த முழுக் கட்டடத்திற்கும் fine போட்டிருந்தோம். இப்பொழுது அதுவும் கிடையாது. சாலை அகலம் மட்டும் மீறியிருந்தால் அதற்கு மட்டும் உரிய fine-ஐத்தான் போடுகிறோம். ஆகவே, இது பல்வேறு முறையிலே குறைக்கப்பட்டிருக்கிறது. வேண்டும் என்றே சிலபேர் அதிகமாக கட்டடத்தைக் கட்டி வைத்திருப்பவர்கள், இதிலே real estate செய்பவர்கள், பெரும் பணக்காரர்களுக்கு இது சரியாக வரவில்லை. ஏனென்றால் 1 கோடி கட்டினவன், 10 லட்சமாகப் போகவேண்டும் அவனுக்கு இன்னும் குறைத்தால் நல்லதுதானே. அவர்களும் கட்டத் தயாராக இருக்கிறார்கள். சில பேர் அவர்களுக்குத் தவறான ஒரு encouragement-ஐ கொடுக்கிறார்கள். அது எங்கள் கட்சியிலே இருக்கலாம். உங்கள் கட்சியிலே இருக்கலாம். இது எல்லோரும் செய்கிற தவறான encouragement. தயவுசெய்து அதை மட்டும் நாம் செய்யக்கூடாது. இடிக்கத்தானே போகிறார்கள்; செய்தது தவறு என்று நாமும் சொன்னால் நிச்சயமாக எல்லோரும் கட்டுவதற்குத் தயாராக இருக்கிறார்கள். ஆகவே, மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கின்றபோது நியாயமான ஒரு சமூக நீதி அடிப்படையிலே இது ஏழைகளுக்குப் பலன் அளிக்க வேண்டும்; உண்மையிலேயே middle income group மாதிரி இருக்கிறவர்கள் கட்டிக் கொண்டிருந்தால், விவரம் தெரியாமல் கட்டியிருந்தால் அவர்களுக்கும் பலன் அளிக்கும் என்ற உணர்வோடு உருவாக்கப்பட்டிருக்கிற திட்டம்தான்.

அதேபோல சுதர்சனம் அவர்கள் இங்கே விமர்சனம் செய்தார். அவரும் அதை ஏற்றுக் கொண்டிருக்கிறார். அதனால்தான் மனமுவந்து பணத்தையும் கட்டியிருக்கிறார். அவர் சொல்வதைப் போல சில தவறுகளுக்கு சில fine அதிகமாக இருந்தாலும்கூட அதிகமாக இருப்பது என்பது மீண்டும் தவறு செய்து விடக் கூடாது என்ற உணர்வோடுதான் உருவாக்கப்பட்டிருக்கிறது. One time regularisation-தான் இப்பொழுது Income-Tax-லே எப்படிக் கட்டாமல் இருந்தால், Voluntary Disclosures கொடுக்கிறார்களோ அதுபோன்று கொடுக்கப்பட்டிருக்கிற திட்டம்தான்.





ஆகவேதான் ஒரு குறிப்பிட்ட தேதியை நாங்கள் கொடுத்திருக்கிறோம். தேதியை கொஞ்சம் நீட்டித்துக் கொடுக்க வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் கேட்டிருக்கிறார்கள். மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர்கள் எல்லாம் சொன்னதைப் பற்றி நான் முதலமைச்சரிடம் கலந்து பேசி வேண்டுமானால்—ஒரு மாதமோ அல்லது அதுகூட அவர் கேட்கிற மாதிரி மார்ச் வரையிலேதான் முடியும். ஏனென்றால், இது இப்பொழுது உருவாக்கின Scheme கிடையாது. முதன் முதலில் இந்தத் திட்டம் அறிவிக்கப்பட்டபொழுதே 6,000 விண்ணப்பங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இப்பொழுது கிட்டத்தட்ட 12,000 பேர் விண்ணப்பங்களைக் கொடுத்திருக்கிறார்கள். இவ்வளவு பேர் விண்ணப்பங்கள் கொடுத்த பிறகு மீண்டும் அதை நாம் தள்ளிப் போட்டுக்கொண்டே போக முடியாது. ஆகவே ஒரு மாத கால நீட்டிப்பைக் கொடுப்பதற்காக வேண்டுமானால் நான் முதலமைச்சரிடம் பேசி—மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்களிடம் கலந்தாலோசித்து முடிவு எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 11-30

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . .

**டாக்டர் அ. செல்லக்குமார்:** தலைவர் அவர்களே,.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. சுதர்சனம், நீங்கள் கொஞ்சம் இருங்கள். ஒரு நிமிஷம். முதலில் டாக்டர் செல்லக்குமார் அவர்கள் இரண்டு நிமிடங்கள் பேசுவார்கள். நீங்கள் இருவரும் பேசியதற்குப் பிறகுதான் அமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்கள். டாக்டர் செல்லக்குமார், உங்களுக்கு இரண்டே இரண்டு நிமிடங்கள்தான்.

**டாக்டர் அ. செல்லக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, C.M.D.A.-யினுடைய இந்தத் திட்டத்தை தமிழ் மாநில காங்கிரஸ் ஏற்றுக் கொள்கிறது என்று முதலிலேயே நாங்கள் சொல்லியிருக்கிறோம். ஏனென்று சொன்னால், இந்தத் திட்டம் இல்லாத காரணத்திற்காக, சென்னை நகரில் யாரோ செய்த தவறுக்காக, சென்னையிலே வீடு வாங்க வேண்டுமென்ற எண்ணத்தோடு வாங்கிய நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள், சில அதிகாரிகள், சில அரசியல் செல்வாக்குப் பெற்றவர்களுடைய மிரட்டுதலுக்கு ஆளாக்கப்பட்டு அவ்வப்போது பல வழிகளில் நன்கொடையாகக் கப்பம் கட்டுகின்ற சூழ்நிலை தொடர்ந்து நீடித்து வந்து கொண்டிருந்தது. அதை வரைமுறைப்படுத்துகிற முகமாக அரசு இந்தத் திட்டத்தை ஒத்துக் கொண்டதனை நாங்கள் முழுமையான மனதோடு

ஏற்றுக் கொண்டோம். எங்களுடைய கருத்துகள் என்னவென்று சொன்னால்—இதிலே யாருக்காகவும் நாங்கள் பரிந்து பேசவில்லை—ஆங்காங்கே பல்லாயிரக்கணக்கான மக்கள் வீடு கட்டுகின்றபோது சென்னை நகரத்திலுள்ள இடத்தினுடைய விலை மதிப்பை ஒப்பிட்டுப் பார்க்கின்றார்கள். நடுத்தர வர்க்கத்தைச் சார்ந்தவர்கள், இன்னும் குறிப்பிட்ட வருவாய்க்கும் கீழே வாழ்ந்து கொண்டிருப்பவர்கள்கூட, தெரிந்தே அந்தத் தவறைச் செய்ய வேண்டுமென்று விரும்புகிறார்கள். அதற்குக் காரணம் என்னவென்று சொன்னால், இப்போது சென்னை நகரத்திலுள்ள இடத்தினுடைய விலை மதிப்பீட்டைப் பார்க்கிறார்கள். 100 சதுர அடி இடத்தை விட்டுவிட்டுக் கட்டடம் கட்ட வேண்டுமென்று சொல்கின்றபோது, அவர்கள் அந்த 100 சதுர அடி இடத்தினுடைய விலை மதிப்பைப் பார்க்கின்றபோது, ஒரு நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்தவர் தன்னுடைய வருமானத்திலே 10 ஆண்டுகள் வருமானத்தை இழக்க வேண்டிய சூழ்நிலை வருகிறது. எனவே, அதற்காக அந்த 100 சதுர அடியை உட்படுத்தி அவர்கள் அந்தக் கட்டடத்தைக் கட்டிவிட்டார்கள்.

இப்போது நீங்கள் விதித்திருக்கின்ற இந்தக் கட்டணம் சற்று அதிகமாக இருக்கிறது என்பதுதான் எங்களுடைய கருத்து. ஹைதராபாத்திலே ஏழைகளுக்கும், பணக்காரர்களுக்கும் ஒரே கட்டணத்தை வைத்திருக்கிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் இங்கே சொன்னார்கள். மற்ற மாநிலங்களை ஒப்பிட்டுப் பார்க்க நான் விரும்பவில்லை. ஏன் தமிழகம் மற்ற மாநிலங்களுக்கு முன்மாதிரியான மாநிலமாக இருக்கக்கூடாது? ஏழை, நடுத்தர மக்கள் கட்டடத்தைக் கட்டி விட்டார்கள். ஏற்கெனவே தவறு நடந்து விட்டது. அந்தத் தவறுக்கு அதிகாரிகளும் உடந்தையாக இருந்திருக்கிறார்கள் என்பதை அமைச்சர் அவர்களும் மறுத்துச் சொல்லமாட்டார்கள். ஏன் என்று சொன்னால் மாநகராட்சியினுடைய அதிகாரிகளுக்குத் தெரியாமல் எந்த காலகட்டத்திலும், எந்தக் கட்டடமும் எந்தப் பராமரிப்பு வேலையும் எந்த வீட்டிலும் நடைபெறுவதில்லை. எனவே, அவர்களுடைய உடந்தையோடு அவர்கள் கொடுத்த தைரியத்தின் அடிப்படையிலேதான் அந்தப் பணி நடந்திருக்க முடியும்; அந்தத் தவறு நடந்திருக்க முடியும். இப்போது இது முடிந்து விட்ட ஒரு பிரச்சினை. இன்றைக்கு அதற்கு இறுதி வடிவம் கொடுக்கப்பட வேண்டுமென்று நமது அமைச்சர் அவர்களும் விரும்புகிறார்கள்; அரசும் விரும்புகிறது. எனவே ஏழை எளிய மக்கள், நடுத்தர மக்கள் பயன்பெறுகின்ற விதத்தில், இப்போது விதிக்கப்பட்டிருக்கின்ற இந்தக் கட்டணத்தை, முழுமையாக





இல்லையென்றாலும் அதைப் பாதியாகக் குறைத்தீர்கள் என்று சொன்னால்கூட, பல்லாயிரக்கணக்கான மக்கள் தாங்களாகவே முன் வந்து அந்தத் தவறை அரசிடம் சொல்லி அந்தக் கட்டணத்தைச் செலுத்துவதற்கு தயாராக வருவார்கள்.

அடுத்து இன்னொன்று. தனியார்கள் இப்போது கட்டடங்களைக் கட்டி விலைக்கு விற்றிருக்கிறார்கள். Flat Promoters, அவர்கள் தவறு செய்துவிட்டார்கள். அவற்றை 10,15 ஆண்டுகளுக்கு முன்னால் வாங்கியவர்கள், இப்போது இந்தத் தண்டனையை, அதற்கான அபராதத் தொகையைச் செலுத்த வேண்டிய நிலையில் இருந்து கொண்டிருக்கிறார்கள். அந்தக் கட்டடத்தைக் கட்டி விற்றவர்கள் இலாபத்தைச் சம்பாத்தித்துவிட்டு எங்கோ சென்று விட்டிருப்பார்கள். பணக்காரர்களாக ஆகி அவர்கள் சம்பாதித்த செல்வத்தை வேறு எங்காவது முன்பே முதலீடு செய்திருப்பார்கள். ஆனால் அவற்றை வாங்கிய நடுத்தர மக்கள், சென்னை நகரிலே வீடு வேண்டுமென்பதற்காக, குடியிருப்பதற்கு மனை வேண்டுமென்பதற்காக யாராலோ ஏமாற்றப்பட்டு வாங்கியவர்கள் இப்போது அந்தக் கட்டணத்தைக் கட்டவேண்டிய நிலையிலே இருக்கிறார்கள் என்று சொன்னால், அது ஏற்றுக்கொள்ள முடியாத ஒரு சூழ்நிலையாக இருக்கிறது. எனவே, கட்டடத்தைக் கட்டியவர்களின் மீது நீங்கள் அதைத் திணிக்க வேண்டும். மாறாக இப்போது யார் அதிலே குடியிருக்கிறார்களோ, யார் அந்த வீட்டிற்குச் சொந்தக்காரர்களாக இருக்கிறார்களோ, அவர்களிடமிருந்து வாங்காமல் இருக்க ஒரு விதிவிலக்கை அரசு கொண்டுவர முன்வர வேண்டும். இல்லையென்று சொன்னால், அப்படிக் கட்டடம் கட்டி விற்றவர்களிடமிருந்து வசூலிக்க முடியவில்லை என்று சொன்னாலும்கூட, இப்போது அந்த வீட்டினை விலைக்கு வாங்கி அதிலே குடியிருப்பவர்களிடமிருந்து இன்னும் குறைவாக, மற்றவர்கள் என்ன கட்டுகிறார்களோ அதைவிட இன்னும் 25 சதவீதம் குறைவாக, அவர்களுக்கு நீங்கள் அபராதக் கட்டணத்தை விதித்தீர்கள் என்று சொன்னால், சென்னை நகரிலே பெரும்பான்மையானவர்கள் இதற்கு முன்வந்து செலுத்துவார்கள். அதன் மூலமாக அன்றாடம் அதிகாரிகளினுடைய தொல்லைகளிலிருந்தும், அரசியல்வாதிகளினுடைய தொல்லைகளிலிருந்தும் விடுபட்டு அவர்கள் நிம்மதியான வாழ்க்கை வாழ்வதற்கு இது வழிவகுக்கும்.

[டாக்டர் அ. செல்லக்குமார்] [2000 நவம்பர் 9

முற்பகல் 11-35

அண்மையிலேகூட பார்த்திருக்கிறோம். சென்னை நகரத்திலே ஒரு பிரச்சினை. நீதிமன்றத்திலே ஒரு தீர்ப்பு வந்தது. அதிகாரிகளுடைய துணையோடு ஒரு கட்டடம் கட்டப்பட்டிருந்தது. அதற்கு தடையாணை பிறப்பிக்கப்பட்டு இடித்துத் தள்ள வேண்டும் என்று நீதிமன்றமே உத்தரவு பிறப்பிக்கக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. அந்த அளவுக்கு அதிகாரிகளினுடைய துணையோடுதான், பல்வேறு மாநகராட்சி அதிகாரிகளினுடைய துணையோடுதான் இத்தகைய தவறு தொடர்ந்து நடந்து கொண்டிருக்கிறது. எனவே, இம்மாதிரியான தவறு இனிமேல் நடைபெறாமல் இருப்பதற்கு நிரந்தரமான ஒரு தீர்வினை சட்டமன்றத்தின் மூலமாக, சட்டத்தின் மூலமாக, நீங்கள் தருவீர்கள் என்று சொன்னால் சென்னை நகரிலே வீடு கட்டுகிறவர்கள் லஞ்சம் கொடுக்கின்ற சூழ்நிலை மறைவதற்கு ஒரு நல்ல வாய்ப்பாக இருக்கும். எனவே, அதற்காக அமைச்சர் முன்வருவார்களா என்று நான் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. சுதர்சனம்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் நான் 13 இலட்ச ரூபாய் கட்டியதைப்பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். ஏன் கட்ட வேண்டிய அவசியம் ஏற்பட்டது என்பதை நான் முதலிலே பேசுகின்றபோது ஏன் குறிப்பிடவில்லை என்று சொன்னால், ஏதோ எனக்காகப் பேசுவதாக நீங்கள் கருதிவிடக்கூடாது என்பதால்தான். 1998 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் விவசாய நிலமாக இருப்பதை, Agricultural zone-ஆக இருப்பதை மாற்றிக்கொடுங்கள் என்று C.M.D.A. விற்கு நான் விண்ணப்பித்தேன். பல ஆண்டுகளாக வந்தார்கள், பார்த்தார்கள், போனார்கள். அதற்குப் பின்னாலே மீண்டும் வந்தார்கள்; அப்போது நான் கட்டடத்தைக் கட்டிக்கொண்டிருந்தேன். ஏன் கட்டினேன் என்று சொன்னால் All India Technical Education விதிப்படி ஓராண்டு காலத்திற்குள்ளாக கட்டடங்கள் கட்டி அந்த இடத்திற்குப் போக வேண்டும். தமிழக அரசினுடைய விதிப்படி ஓராண்டு காலத்திற்குள்ளாக கட்டடங்கள் கட்டி அந்த Permanent Place-க்குப் போக வேண்டும். பொறியியல் கல்லூரிகளுக்கு அந்தமாதிரி விதி இருக்கிற காரணத்தினாலே நாங்கள் கட்டடங்கள் கட்ட ஆரம்பித்தோம். கட்டடங்கள் கட்டிய காரணத்திற்காக நீங்கள் 12 பேர் கொண்ட கமிட்டியை கூட்டினீர்கள். அதற்கு என்னென்ன Fees கட்ட வேண்டுமோ அவற்றை நாங்கள் கட்டித்தான் application



2000 நவம்பர் 9] [திரு. டி. சுதர்சனம்]

கொடுத்தோம். பத்திரிகையிலே விளம்பரம் செய்தீர்கள். பத்திரிகையிலே விளம்பரம் செய்த பின்னாலும் யாரும் ஆட்சேபணை தெரிவிக்கவில்லை. ஒரு மாத காலத்திற்கு யாரும் ஆட்சேபணை தெரிவிக்கவில்லை. அதற்குப் பின்னாலே உள்ளாட்சி அமைப்பிலேயிருந்து ஒரு Certificate வாங்கிக் கொடுக்க வேண்டுமென்று சொன்னீர்கள். அதையும் வாங்கிக் கொடுத்தோம். உள்ளாட்சி அமைப்பிலிருந்து No Objection Certificate வாங்கிக் கொடுக்க வேண்டும் என்று சொன்னீர்கள். அதையும் வாங்கிக் கொடுத்தோம். அதற்குப் பின்னாலேகூட நான் அமைச்சரைப் பார்த்துப் பேசினேன். இதுபோன்று கட்டடம் கட்டியிருக்கிறோம், அதை நீங்கள் regularise செய்து கொடுங்கள் என்று கேட்டேன். ஆனால் கட்டடங்கள் கட்டி விட்டார்கள். கட்டடங்களைக் கட்டிய காரணத்தினாலே Agricultural zone-ஐ வேறு Zone-ஆக மாற்றக்கூடாது என்று சட்டத்திலே இல்லை. ஆனால் நீங்கள் அமைச்சர் பொறுப்பை ஏற்ற பின்னாலே ஒரு மரபாக வைத்திருக்கிறீர்கள். அந்த மரபின்படி நீங்கள் அதற்கு மறுப்புத் தெரிவித்து விட்டீர்கள். மறுப்பு தெரிவித்த காரணத்தினால்தான் 13 இலட்ச ரூபாயைக் கட்ட வேண்டிய அவசியம் வந்ததே தவிர, இல்லாவிட்டால் 50,60 ஆயிரம் ரூபாய் கட்டியிருக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கும். இப்படிப்பட்ட நிலைமை இரண்டு ஆண்டு காலமாக இருந்தது. இருக்கிறது அல்லது இல்லை என்று சொல்வதற்கு இரண்டு ஆண்டு காலம் C.M.D.A.-விற்குத் தேவைதானா என்பதை நீங்கள் உணர வேண்டும்.

அது மட்டுமல்ல. ஹைதராபாத்தைப் பற்றி நான் குறிப்பிட்டபோது அங்கே ஏழைக்கும் பணக்காரர்களுக்கும் வித்தியாசம் இல்லை என்றார்கள். ஹைதராபாத்தினுடைய அந்த application form-ஐ இப்போது நான் இங்கே கொடுத்திருக்கிறேன். அதை நீங்கள் படித்துப் பார்த்திருப்பீர்கள். தயவு செய்து நீங்கள் ஹைதராபாத் முறையைப் பின்பற்றுங்கள். இல்லாவிட்டால் இப்போது போட்டிருக்கிற தொகையில் மூன்றில் ஒரு பங்காவது குறைக்க வேண்டும். குறைத்தால் நிறைய வருமானம் கிடைக்கும். தமிழக முதல்வர் அவர்கள் விற்பனை வரியிலே 4 சதவிகிதத்தை 2 சதவிகிதமாகக் குறைத்தார்கள். அதனால் வருமானத்தை ஒன்றும் இழந்துவிடவில்லை. அதிகமாகத்தான் வந்திருக்கிறது. தமிழக முதல்வரே சொல்லி இருக்கிறார்கள். அதேபோன்று நீங்கள் கண்டிப்பாக இதைக் குறைத்தீர்களேயானால் நிச்சயமாகக் கட்டுவார்கள். அமைச்சர் அவர்கள் தன்னுடைய பிடிவாதத்தை தயவுசெய்து விட்டுவிட்டு அதைக் குறைத்து பொதுமக்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

[2000 நவம்பர் 9

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவர்களுடைய கல்லூரிக்கு 1998-லே விண்ணப்பித்தேன் என்றார்கள். முதலிலே நடந்ததை அவர் சொன்னார். அவரே சொல்லியிருக்கிறார் அதையும், கட்டியதற்குப் பிறகு மரபுப்படி நாங்கள் கொடுப்பதில்லை என்று, அவ்வளவுதான். முதலிலே Permission வாங்கி விட்டு கட்ட வேண்டும். அவ்வளவுதான். அதைச் செய்துவிட்டார்கள். அதைக் கட்டிவிட்டார்கள். அதிலே ஒன்றும் பிரச்சினை கிடையாது. அதிலே வேறு எந்தத் தப்பும் கிடையாது. F.S.I. லே எந்த Violation-ம் கிடையாது. ஒரு சிறிய தவறுதான். குறிப்பாக நான் சொல்கிறபோதே குறிப்பிட்டேன். மீண்டும் இந்தத் தவறுகள் நடக்கக்கூடாது என்ற உணர்வோடுதான் இதுபோன்ற Heavy fines போடப்பட்டிருக்கிறது. அதிலே பலபேர் கட்டியிருக்கிறார்கள். இப்போது கிட்டத்தட்ட 6,600 பேர் அதைக் கட்டியிருக்கிறார்கள். 6,600 பேர் கட்டியதன் விளைவாக 47 கோடி ரூபாய் இப்போது வருமானம் வந்திருக்கிறது. இந்த 4 நாட்களுக்கு முன்பு அதற்கு முன்பு 6 கோடி ரூபாய் வந்திருக்கிறது. மொத்தம் ஏறத்தாழ 56 கோடி ரூபாய் வருமானம் வந்திருக்கிறது. அதனால் அதில் இப்போது போய் குறைத்தோம் என்று வைத்துக்கொள்ளுங்கள், கட்டியவன் எல்லாம் நான் என்ன இளித்தவாயனா என்று கேட்பான். மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரியும். நாம் இப்போது போய் குறைக்கப் போகிறோம் என்று சொன்னால், குறைப்பதை பரிசீலிக்கப் போகிறோம் என்று சொன்னாலே கட்டுகிறவனும் கட்டமாட்டான். அது அவருக்கே தெரியும். மாண்புமிகு உறுப்பினர்களுக்கு இந்தச் சங்கடங்கள் எல்லாம் தெரியும். இது ஒரு வரன்முறைத் திட்டம். இதிலே மிகச் சிறிய வீடு கட்டி இருப்பவர்களுக்கு எல்லாம் நிறைய சலுகைகள் இருக்கின்றன. இதிலே அதிக fines வரவில்லை. மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் சொன்னதைப்போல Middle Class-ஐச் சேர்ந்த ஒருவர் வீடு கட்டியிருந்தார் என்றால், அதற்கு ரொம்பக் குறைந்த கட்டணம்தான் வருகிறது. அந்த மாதிரி குறைந்த கட்டணம் வசூலிக்கும்போது கணக்குகளில் ஏதாவது தவறு இருக்கும் என்று சொன்னால், அந்தத் தவறுகளைச் சரிசெய்து அதை ஒழுங்காகச் செயல்படுத்துவதற்கு எல்லாவிதமான நடவடிக்கைகளையும் மேற்கொள்ள இந்த அரசு தயாராக இருக்கிறது. எனவே, மற்றும் இருப்பவர்களும் இந்தத் தொகையைக் கட்டுவதற்கு மாண்புமிகு உறுப்பினர்கள் அருள்கூர்ந்து இந்த அரசோடு ஒத்துழைப்புத் தரவேண்டும். கால நீட்டிப்பு வேண்டுமானால் நான் மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் பேசி அதைப் பெற்றுத் தருவதற்குத் தயாராக இருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் செல்லக்குமார் போன்ற உறுப்பினர்களும், இதனால் அடித்தளத்து மக்களுக்கு நிச்சயமாகப் பயன் இருக்கும் என்ற உணர்வோடு ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)



2000 நவம்பர் 9] [டாக்டர் க. பொன்முடி]

முற்பகல் 11-40

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரத்திலே விழிப்புடையவர்கள் இருக்கிறார்கள். நாம் போய் ஒரு நிலம் வாங்குகிறோம் என்றால், முதலிலே வில்லங்கம் போட்டு, எல்லாம் பார்த்து வாங்குகிற ஆட்கள்தான். Flat வாங்கும்போதுகூட C.M.D.A. approval எல்லாம் இருக்கிறதா என்று பார்த்து வாங்குபவர்கள்தான் நிறையபேர் இருக்கிறார்கள். Approval இல்லாதவற்றை வாங்குவது அவர்களுடைய தப்பு. பெரும்பாலும் C.M.D.A. approval எல்லாம் கட்டும்போது கட்டடங்களுக்கு வாங்கிவிடுகிறார்கள். வாங்கித்தான் கட்டுகிறார்கள். அந்த மாதிரி இருப்பவர்களுக்குக்கூட முழுக் கட்டடத்திற்கும், முதலிலே என்ன செய்தார்கள் என்றால் ரொம்ப heavy fine போட்டிருந்தார்கள். நான் முதலிலே சொன்னதுமாதிரி எவ்வளவு violations இருந்தாலும் எல்லாவற்றுக்கும் சேர்த்து fine போட்டிருந்தார்கள். அதைக்கூட என்ன செய்தோம் என்று சொன்னால், எவ்வளவு விதிமீறல்கள் இருக்கின்றனவோ அவற்றிற்கு மட்டும்தான் Fine என்று சொன்னோம். இதிலே எங்களிடம் Flat Owners கேட்டது, மொத்தம் 100 Flats இருக்கும் என்று சொன்னால், 50-க்கு மேற்பட்டவர்கள் வந்தார்கள் என்று சொன்னால் முழுத்தொகையையும் கட்டினால் நாங்கள் கொடுத்துவிடுகிறோம் என்று சொன்னோம் ஆனால், Individual Flat Owners, நாங்கள் ஒவ்வொருவராக வந்து கட்டி விடுகிறோம் என்று கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். அதைப் பரிசீலித்து, அந்த மாதிரி கட்டுவதற்கு வாய்ப்பு இருந்தாலும், அதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும்.

## 5. அறிக்கை அளித்தல்

### பொதுக் கணக்குக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அறிக்கை அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கை, டாக்டர் தே. குமாரதாஸ்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுக் கணக்குக் குழுவின் இருநூற்று எண்பத்தொன்றாவது முதல் இருநூற்று தொண்ணூற்று ஐந்து வரையிலான பதினைந்து அறிக்கைகளை குழுவின் சார்பாக பேரவைக்கு அளிக்கிறேன்.

## 6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

### (அ) தமிழ்நாடு பொது நூலகங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, அரசினர் சட்டமுன்வடிவுகள் அறிமுகம் செய்தல். 2000 ஆண்டு தமிழ்நாடு பொது நூலகங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2000 ஆண்டு தமிழ்நாடு பொது நூலகங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை).

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 2. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (ஆ) இந்திய சுங்க வரிகள் (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2000 ஆண்டு இந்திய சுங்க வரிகள் (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தனது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.



## 6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்) - தொடர்ச்சி

### (ஆ) இந்திய சுங்க வரிகள் (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு, 2000

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து அரசினர் சட்டமுன்வடிவுகள் அறிமுகம் செய்தல். 2000 ஆண்டு இந்திய சுங்க வரிகள் (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவு; மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2000 ஆண்டு இந்திய சுங்க வரிகள் (தமிழ்நாடு திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.

***திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதை அறிமுக நிலையிலேயே இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நான் ஆட்சேபிக்கிறேன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மசோதாவை அறிமுகம் செய்வதை நான் ஆட்சேபிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

[2000 நவம்பர் 9

### (இ) தமிழ்நாடு நீர்ப்பாசன (மேம்பாட்டு வரிவிதிப்புத்) திருத்தச் சட்டமுன்வடிவு, 2000

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, 2000 ஆண்டு தமிழ்நாடு நீர்ப்பாசன (மேம்பாட்டு வரிவிதிப்புத்) திருத்தச் சட்டமுன்வடிவு. மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2000 ஆண்டு தமிழ்நாடு நீர்ப்பாசன (மேம்பாட்டு வரிவிதிப்புத்) திருத்தச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 7. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கை, 2000-2001 மற்றும் திருத்திய மதிப்பீடுகள், 1999-2000, விவாதம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கை மீது பொது விவாதம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 2000-2001 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை மற்றும் 1999-2000 ஆண்டுக்கான திருத்திய மதிப்பீடுகள் ஆகியவற்றை இம்மாமன்றத்திலே விவாதத்திற்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என்று முன்மொழிகிறேன்.



2000 நவம்பர் 9] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

நான் ஆற்ற வேண்டிய உரையை மாண்புமிகு உறுப்பினர்களின் வசதிக்காக ஆங்கிலத்திலும், தமிழிலும் நூல்களாக இம்மன்றத்தில் வைத்துள்ளேன். இங்கே வைக்கப்பட்டிருக்கும் என்னுடைய தமிழ் உரையை@ சபைக் குறிப்பில் ஏற்ற அனுமதி வேண்டுகிறேன். மின்சார வாரியத்தின் செயல்முறைகள் குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவிக்கும் கருத்துகளை அரசும் மின்சார வாரியமும் கருத்தில் கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு மின்சார வாரியம், பணிகளை இன்னும் சிறப்பாக ஆற்றிட தங்களின் ஆக்கபூர்வமான கருத்துகளைத் தெரிவிக்குமாறு மாண்புமிகு உறுப்பினர்களைக் கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் அளிக்கும் கருத்துகளின் அடிப்படையில் இறுதியில் என்னுடைய பதிலுரையை இந்த அவைக்கு அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதத்தை மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.கே. லட்சுமணன் அவர்கள் தொடங்கிவைப்பார்கள். இன்று மாண்புமிகு உறுப்பினர்கள் 13 பேர் இந்த விவாதத்தில் பங்கேற்பதாக இருக்கின்றார்கள். அதைக் கருத்தில் கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் பேச்சை அமைத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, விவாதத்தைத் தொடங்கி வைப்பவர் பத்து நிமிடங்களும், அடுத்துப் பேச வருகின்ற உறுப்பினர்கள் எட்டு நிமிடங்கள் வீதமும் பேசுமாறு அன்போடு வேண்டுகின்றேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 2000-2001 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை விவர அறிக்கை மற்றும் 1999-2000 ஆண்டுக்கான திருத்திய மதிப்பீடுகள் குறித்த இந்த விவாதத்தைத் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் தொடங்கி வைத்துப் பேச என்னை அனுமதித்ததற்காக நன்றி கூறுகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின் வாரியம் என்பது ஆண்டுதோறும் ஏறத்தாழ 1700 கோடி ரூபாய் இழப்பில் நடக்கிற ஒரு வாரியம். இந்த வாரியமானது, மின் உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்பதற்காகவும், சீராக மின் விநியோகம் செய்யவேண்டும் என்பதற்காகவும், பல்வேறு திட்டங்களை வகுத்திருக்கின்றது.

**(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)**

---

@141 முதல் 177 வரையிலான பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

குறிப்பாக, கோவை மாவட்டத்தில் 'ஒரே நாளிலே வீட்டுக்கு மின்சாரம்' என்ற திட்டத்தை அரசு அறிவித்ததற்காக நான் இந்த அரசுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். நம்முடைய மின்சாரத் தேவை என்பது, இப்போது இருக்கிற நிலைமையிலே ஆண்டு ஒன்றுக்கு 5,000 மெகாவாட் ஆகும். ஆனால் நம்முடைய மின்சார உற்பத்தி என்பது வெறும் 4,500 மெகாவாட்தான். ஆக ஒவ்வோர் ஆண்டும் 500 மெகாவாட் மின்சாரம் நமக்குப் பற்றாக்குறையாக இருக்கிறது. 9-வது ஐந்தாண்டுத் திட்டத்தினுடைய இறுதியில் நமது மின்சாரத் தேவை என்பது 6,825 மெகாவாட் ஆக இருக்கவேண்டுமென்று அதைக் கணித்தவர்கள் சொல்லி இருக்கிறார்கள். இதில் என்ன ஆச்சரியம் என்று சொன்னால், ஒட்டுமொத்தமாக அனல், புனல் என்று மின் உற்பத்தி நிறுவனங்கள், எல்லாவற்றையும் கணக்கில் எடுத்துக்கொண்டால், மொத்தமாக (Installed capacity) அதாவது உற்பத்தித் திறன் என்பது 7204 மெகாவாட் ஆக இருக்கின்றது. ஆனால் 7204 மெகாவாட் உற்பத்தித் திறன் இருந்தும் நமக்கு 6,000 மெகாவாட் கூட கிடைக்கவில்லை என்று சொன்னால், இதில் எங்கே கோளாறு இருக்கிறது என்பதை நாம் கண்டுபிடித்தாக வேண்டும். ஆனால் வாரியத்திலே சொல்வார்கள், இயந்திரங்கள் பழுது அடைந்துவிட்டன என்று.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, Installed capacity 7204 மெகாவாட், ஆனால் இப்போது நமக்குக் கிடைப்பது குறைவாக இருக்கிறது, எங்கே கோளாறு என்று கேட்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். காற்றாலை மூலம் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது என்று சொன்னால், அதில் 12 மாதமும் காற்று ஒரே மாதிரியாக வீசாது. எப்போது காற்று வீசுகிறதோ அப்போது மின்சாரம் கிடைக்கும். எப்போது காற்று வீசவில்லையோ அப்போது மின்சாரம் உற்பத்தியாகாது. இது ஒன்று. இரண்டாவது, நீர் மின் நிலையங்களில் ஆண்டு முழுவதும் நீர் இருக்காது. உதாரணத்திற்குச் சொல்கிறேன். மேட்டூர் அணையிலே 6 மாதம் நீரைத் திறந்து விடுகிறார்கள் என்று வைத்துக்கொள்வோம். அந்த ஆறு மாதத்திற்குத்தான் மின்சாரம் உற்பத்தியாகும். ஆனால் Installed capacity அங்கே 350 மெகாவாட் என்று வைத்துக்கொள்ளுங்கள். ஆறு மாதத்திற்கு மின்சாரம் உற்பத்தியாகும். மீதி ஆறு மாதத்திற்கு மின்சாரம் உற்பத்தி ஆகாது. ஆகவேதான் இந்த வேறுபாடு.

*முற்பகல் 11-50*

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது தமிழ்நாட்டைப் பொறுத்தமட்டில், நமக்கு



நீர்வளம் குறைந்திருக்கிற இந்த காலகட்டத்திலே, அதிகமான தொழில்கள் இங்கே வளரவேண்டுமென்று சொன்னால், அதற்கு மின்சாரம் மிக மிக இன்றியமையாதது. மின்சாரம் என்று சொல்லும்போது, தரமான மின்சாரம் வழங்கப்பட வேண்டும். Quality Power, அது மிக முக்கியம். ஆனால் இப்போது இருக்கிற நிலைமையில், ஒரு பெரிய குறைபாடு Voltage drop ஆகும். அதற்கு அடுத்து குறைவான frequency-ல் மின்சாரம் கிடைப்பது. இந்த இரண்டு காரணங்களாலும் மின்சாரத்தைப் பயன்படுத்துகிற அந்தக் கருவிகள் பெரிதும் பழுதடைந்துவிடுகின்றன.

நாம் இப்போது Privatise செய்ய வேண்டுமென்று எண்ணி தனியார் துறையிலே மின் உற்பத்தியைத் தொடங்குவதற்கு 6 நிறுவனங்களுக்கு அனுமதி கொடுத்திருக்கிறோம். அப்படி Privatise செய்வது என்பது எவ்வளவு முக்கியமோ, அதுபோல, globalise செய்வதும் முக்கியம். Globalisation என்று சொன்னால், உலகளாவிய முறையிலே, தரமான மின்சாரத்தை நாம் வழங்க வேண்டும். Voltage drop இல்லாமல், frequency குறைவு இல்லாமல், நாம் அதை வழங்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அதற்குண்டான முயற்சியை மேற்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நாம் எல்லோரும் இப்போது பெருமையாகப் பேசிக் கொள்வது, Line loss-ஐப் பற்றி. Line Loss-ஐப் பொறுத்தமட்டிலே National average என்பது 21 சதவிகிதம். ஆனால், தமிழ்நாட்டில் 14.7 சதவிகிதம்தான் line loss இருக்கிறது என்று சொல்லிக்கொள்கிறோம். 1 சதவிகிதம் குறைந்தாலும்கூட பல கோடி ரூபாய் நமக்கு மிச்சம் ஆகும் என்பதை நாம் கருத்திலே கொள்ள வேண்டும். ஆக, நவீன முறைகளைக் கையாண்டு line loss-ஐ 13 சதவிகிதமாகக் குறைக்க அரசு முயற்சி மேற்கொள்ளும் என்று சொன்னால், இந்த மின்வாரியம் நஷ்டத்திலே இயங்காது; இலாபத்திலேகூட இயங்குவதற்கு வாய்ப்பு இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

அடுத்தபடியாக, இணை மின் உற்பத்தி, Co-generation. Co-generation-ஐப் பொறுத்த மட்டிலே, நாம் இப்போது ஒரு தனியார் நிறுவனத்திற்கு அனுமதி கொடுத்திருக்கிறோம். பல தனியார் நிறுவனங்களுக்கு, Co-generation-ஐப் பொறுத்தமட்டிலே installed capacity-தான் கொடுக்கப் பட்டிருக்கிறதேயொழிய, 142.1 மெகாவாட் நிறுவுத் திறன் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறதேயொழிய, அது உண்மையாக எவ்வளவு மின் உற்பத்தி செய்தது என்று இங்கே குறிப்பிடப்படவில்லை. ஆகவே,

Installed capacity மட்டும் போதாது, எவ்வளவு உற்பத்தி செய்தது என்பதைக் குறிப்பிட வேண்டும் என்று நான் இங்கே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதுமட்டுமல்லாமல், தமிழ்நாட்டிலே தனியார் சர்க்கரை ஆலைகள் மட்டுமன்றி, கூட்டுறவு சர்க்கரை ஆலைகளும் ஏராளமாக இருக்கின்றன. குறிப்பாக செய்யாறிலே கூட்டுறவுச் சர்க்கரை ஆலை இருக்கிறது. அந்த செய்யாறு சர்க்கரை ஆலையில்—பகாஸை—கரும்புச் சக்கையை வைத்துக்கொண்டு நல்லமுறையிலே, co-generation செய்து கொண்டிருக்கிறார்கள். நான் இங்கே கேட்டுக்கொள்ள விரும்புவதெல்லாம், எப்படி தனியார் துறையிலே நாம் இணை மின் உற்பத்திக்கு அனுமதி அளித்திருக்கிறோமோ, அதேபோல் முன்மாதிரியாக எல்லா கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளிலும், முதன்முதலிலே இந்த இணை மின் உற்பத்தியைத் தொடங்குவதற்கு நாம் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று நான் உங்களைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

சென்ற ஆண்டு இங்கே அளிக்கப்பட்ட அறிக்கையை நான் பார்த்தேன். அந்த அறிக்கைக்கும், இந்த ஆண்டு கொடுக்கப்பட்டிருக்கிற அறிக்கைக்கும், குறிப்பாக, ஜெயங்கொண்டத்தைப் பொறுத்தமட்டிலே ஒரு சிறு எழுத்துகூட வேறுபாடு இல்லை. ஒரே மாதிரிதான் இருக்கிறது இந்த அறிக்கை. நான் உங்களைக் கேட்டுக்கொள்ள விரும்புவதெல்லாம், உண்மையாக, ஜெயங்கொண்டம் திட்டம் எந்த நிலையில் இருக்கிறது? எப்பொழுது மின் உற்பத்தியைத் தொடங்கும் என்பதைத் தெளிவாக இங்கே குறிப்பிட்டிருக்க வேண்டுமென்று நான் உங்களை அன்போடு கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) இரண்டு நிமிடம் கொடுங்கள். Voltage drop-ஐப் பொறுத்தமட்டிலே, நடுத்தரமான கம்பிகளைப் பயன்படுத்துகிறபொழுது 1 கிலோ மீட்டருக்கு .52 சதவீதம் Voltage குறைகிறது. ஆனால், அதே சமயத்திலே பெரிய கம்பிகளைப் போடுகின்றபொழுது Voltage drop என்பது .33 சதவிகிதமாகக் குறையும் என்று இதிலே விவரம் தெரிந்தவர்கள் சொல்ல நான் கேட்டிருக்கிறேன். எனவே, அரசு பெரிய கம்பிகளைப் பயன்படுத்தி, Voltage drop-ஐக் குறைக்க முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயிகளைப் பொறுத்தமட்டிலே, விவசாயத் தோட்டங்களில் வீடுகள் கட்டி வசித்துவருகின்ற மக்கள், ஆடு மாடுகளுக்காக கொட்டகை போட்டிருக்கின்றார்கள். அந்தக் கொட்டகைகளுக்கு



வழங்கப்படுகின்ற மின்சாரத்திற்கு Commercial tariff போட்டு மின் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. இலவசமாக அவர்களுக்கு நீங்கள் கொடுக்காவிட்டாலும்கூட domestic tariff-ல் அதாவது I-A Tariff-லாவது அவர்களுக்கு மின்சாரத்தை வழங்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வேலூர் மாவட்டத்திலே small scale industry-லே—flour mills-மினி அரவை இயந்திரங்கள் வைத்திருப்பவர்களுக்கு இதுநாள் வரை ஒரு யூனிட்டுக்கு ரூ.1.30 பைசா வசூலிக்கப்பட்டு வந்தது. அது III-A Tarriff-லே…

(திரு. சி. ஞானசேகரன் உட்கார்ந்துகொண்டு ஏதோ பேசிக் கொண்டிருந்தார்).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஞானசேகரன், நீங்கள் வாயசைத்து, பின்னணிக் குரல் கொடுத்துக் கொண்டிருக்கிறீர்களா? (சிரிப்பு)

முற்பகல் 11-55

**திரு. வி.கே. லட்சுமணன்:** அது இப்போது 3 ரூபாய் 30 பைசாவாக உயர்த்தப்பட்டிருக்கிறது. எனவே, அதை பழைய நிலைக்கு குறைக்க வேண்டுமென்று உங்களைக் கேட்டுக்கொள்கிறேன். மேலும் அந்த மின்சாரக் கட்டணத்தை வசூலிக்கிறபோது பழைய தேதியிட்டு, பாக்கிகளைக் கொடுக்க வேண்டுமென்று அவர்கள் வற்புறுத்தப்படுகிறார்கள். ஒரு சிறிய தொழில் வைத்திருப்பவர்கள்கூட 20,000 ரூபாய் அளவிற்கு பாக்கி கட்டவேண்டிய நிலை ஏற்படுகிறது. அதையும் நீங்கள் கருத்திற்கொள்ள வேண்டுமென்று உங்களைக் கேட்டுக்கொள்கிறேன். ஏற்கெனவே நம்முடைய பரிசீலனையில் இருக்கிற பல்வேறு திட்டங்களை முழுமையாக படித்துப் பார்க்கிறபோது, ஏறத்தாழ 3 ஆண்டுகள் கழிந்த பின்னாலேதான் நாம் எதிர்பார்க்கிற அளவுக்கு மின் உற்பத்தி கிடைக்கும் என்று தெரிகிறது. ஆனால் நம்முடைய மின் தேவை என்பது ஆண்டுக்கு 10 சதவிகிதம் கூடிக் கொண்டே போகிறது (மணியடிக்கப்பெற்றது) ஒரு நிமிடத்தில் முடித்து விடுகிறேன்.

இந்த ஆண்டு நம்முடைய மின் தேவை 5,000 மெகாவாட் என்று சொன்னால், அடுத்த ஆண்டு அது 5,500, அதற்கு அடுத்த ஆண்டு

6,000, அதற்கு அடுத்த ஆண்டு 6,500 என்று உயருகிறது. ஆக, நாம் திட்டமிடுகிறபோது ஓராண்டைப் பற்றிக் கவலைப்படாமல் இன்னும் 10 ஆண்டுகளுக்கு நம்முடைய மின் தேவை என்ன என்பதைக் கணக்கிட்டு திட்டமிட்டால்தான் மூன்று ஆண்டுகள் கழித்து நம்முடைய தேவையை பூர்த்தி செய்ய முடியும் என்ற என்னுடைய கருத்தைத் தெரிவித்து, வாய்ப்புக்கு நன்றி கூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி.என். சுப்பிரமணி.

**திரு. பி.என். சுப்பிரமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்வாரிய நிதிநிலை அறிக்கையின்மீது பேசுகிற வாய்ப்பை ஏற்படுத்தித் தந்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆற்காடு கோட்டத்தில் கடந்த ஒரு மாதத்தில், அதாவது அக்டோபர் 2000 வரை, வீட்டு மின் இணைப்பு வேண்டுமென்று விண்ணப்பித்த அன்றே 250 வீடுகளுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளதை மனதாரப் பாராட்டுகின்றேன். இந்த மானியத்தின் மீது சில கருத்துகளைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

400 கி.வோ. மற்றும் 230 கி.வோ. துணை மின் நிலையங்களில் தைரிஸ்டார்களை வைத்து வார் மின்னோட்டத்தைக் கட்டுப்படுத்தி மின் உற்பத்தி செய்யும் மின் ஆக்கிகளின் (ஜெனரேட்டர்) மின் உற்பத்தி செய்யும் திறனை அதிகரிக்கலாம். இதனால் மின் அழுத்த மாற்றத்தின் அளவையும் மின் இழப்பையும் தவிர்த்து மின் நுகர்வோருக்குத் தரமான மின்சாரத்தை வழங்க முடியும். இதற்காக சில கோடி ரூபாய்களை தற்போது செலவு செய்தாலும் இதன்மூலம் நிரந்தரத் தீர்வு ஏற்பட வாய்ப்பு உள்ளது.

தற்போது நமது மிகு மின்தொடரில் உள்ள மின்கடத்திகளை வைத்து சுமார் 30,35 வருடங்களுக்கு மேல் ஆகின்றது. இவற்றையெல்லாம் மாற்றுவதன் மூலம் மட்டுமே தங்குதடையற்ற சீரான மின்சாரத்தை மின் நுகர்வோருக்கு வழங்க முடியும். மேலும் மின் தடை Break-down அறவே நீக்கப்பட்டு மின் உற்பத்தி நிலையங்களில் உள்ள மின் ஆக்கிகள் தங்குதடையின்றி செயல்பட முடியும். தற்போது வாரியத்தில் பணிபுரியும் களப் பணியாளர்களில் மிகுதியான நபர்கள் சுமார் 50, 55 வயதை தாண்டியவர்களாக உள்ளனர். இவர்களைக்கொண்டு துரித சேவை செய்வதென்பது சிரமம் மிகுந்த காரியமாக உள்ளது. எனவே,



கீழ்மட்டத்தில் அடிப்படைப் பணிபுரியும் களப் பணியாளர்கள் இளைஞர்களாகவும், படித்தவர்களாகவும் இருப்பது மிக அவசியமாகும். இவ்வாறு செய்வதால் மின் வாரியத்தின் மாண்பு, மக்கள் மத்தியில் உயரும்.

தற்போது சுயநிதித் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் விவசாய மின் இணைப்புகளில் வாரியத்தின் மூலமாகவே உரிய Capacitor-களைப் பொருத்தி அதற்கான தொகையை நுகர்வோரிடம் வசூலித்து விடலாம். இதன்மூலம் கிராமங்களில் உள்ள குறைவழுத்த மின்தொடரின் கடைசி முனையிலும் நல்ல அழுத்தத்துடன் கூடிய மின்சாரம் கிடைப்பதுடன், தொடரில் செல்லும் மின்சாரத்தின் அளவும் குறைவதால் மின் சேமிப்பும் ஏற்பட வாய்ப்பாகிறது. இதன் மூலம் மோட்டார்களில் சூடு ஏறுவது தடுக்கப்பட்டு, மோட்டார்களில் உள்ள winding coil-களும் பல வருடங்களுக்குப் பாதுகாக்கப்படும்.

நண்பகல் 12-00

இவ்வரசின் கோட்பாடுகளுக்கு ஏற்ப வீடுகள் மற்றும் கடைகளுக்கு ஒரே நாளில் மின்சாரம், விவசாயம் மற்றும் தொழிலகங்களுக்கு துரித முறையில் மின்சாரம் போன்ற திட்டங்கள் மின் வாரிய ஆட்கள் பற்றாக்குறையால் மிகுந்த சிரமங்களுக்கு இடையே செயல்படுத்தப்பட்டு வருகிறது. இக்கோட்பாடுகள் நுகர்வோரை எளிதில் சென்றடைய போதுமான பணியாளர்களை உடனடியாகப் பணியமர்த்துவது மிக முக்கியமானதாகும்.

மின் வாரியப் பண்டகசாலைகளில் போதுமான மின்மாற்றிகள் மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் இருக்கும்படி ஏற்பாடு செய்வதன் மூலம் மட்டுமே அரசின் திட்டங்கள் மக்களைச் சென்றடையும் வாய்ப்பு ஏற்படும். இல்லையெனில், இத்திட்டங்கள் வெறும் எழுத்து வடிவில் மட்டுமே இருக்கும். போதுமான மின்மாற்றிகளை துணைப் பண்டகசாலைகளில் வைத்திருப்பதன் மூலம் மின்மாற்றிகள் பழுதடையும்போது உடனடியாக அவற்றை மாற்றி மின்சாரம் வழங்கும்பட்சத்தில் பொதுமக்களுக்கு ஏற்படும் இடையூறுகளையும் அதனால் ஏற்படும் பிரச்சினைகளையும் தடுக்க வாய்ப்பு உள்ளது.

Urban Development Programme மூலம் கடன் பெற்று ஆற்காடு நகருக்கு 110 கி.வோ. துணைமின் நிலையம் அமைக்க கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. மேற்படி திட்டம் இரண்டு ஆண்டுகளாக நிலுவையில் உள்ளது. சரித்திரப் புகழ் பெற்ற ஆற்காடு நகருக்கு ஆள்

இல்லாத, புதிய 110/33 கி.வோ. துணைமின் நிலையம் அமைத்தால், இத்தாலுகாவில் உள்ள பல 33 கி.வோ. துணைமின் நிலையங்களுக்கு மின்சாரம் இழப்பின்றியும், நல்ல voltage-2-டன் கூடிய மின்சாரத்தை உபயோகிக்க முடியும். மேலும், ஆற்காடு தொகுதி பாலாற்றையே நம்பி இருக்கிறது. பாலாற்றில் கடந்த சில காலங்களாக தண்ணீர் வருவதில்லை. தண்ணீர் வராத காரணத்தால் கிணற்றை நம்பித்தான் விவசாயம் செய்ய வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. அந்தக் கிணறுகளுக்கு உடனடியாக மின்சாரம் வழங்குவதற்கு 110/33 கி.வோ. துணை மின் நிலையத்தை தாங்கள் தயவுசெய்து அமைத்துத் தரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாம்பாக்கம் 110 கி.வோ. துணை மின் நிலையத்தில் தற்போது புதிதாக நிர்மாணிக்க உள்ள கூடுதல் டிரான்ஸ்பார்மரை 33 கி.வோ. ஆக மாற்றினால் கலவைப் பகுதிக்கு மின் இழப்பீடின்றி விநியோகிக்கலாம். அப்பகுதி மக்களுக்கும் நல்ல வோல்டேஜ் உள்ள மின்சாரத்தை வழங்கலாம்.

ஒரு தறி வைத்திருக்கும் ஏழை கைத்தறி நெசவாளிக்கு இலவச மின்சாரம் மாதம் ஒன்றுக்கு 10 யூனிட் வழங்கலாம். இதன் தொகையை அவர்கள் சார்ந்துள்ள (மணியடிக்கப் பெற்றது) கூட்டுறவு உற்பத்திச் சங்கத்தை கட்டச் செய்யலாம். ஒரு விசைத்தறி மட்டும் வைத்திருக்கும் நெசவாளி தன்னுடைய வீட்டு மின் இணைப்பிலேயே மேற்படி விசைத்தறியின் மோட்டாரை இணைத்துக்கொள்ள அனுமதிக்கலாம். வீட்டளவில் நடைபெறும் சிறிய சாயப் பட்டறைகளுக்கு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் மூலம் பெறவேண்டிய அனுமதியை ரத்து செய்ய வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொண்டு என் உரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. இரா. விசுவநாதன்.

**திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின் வாரியத்தினுடைய 2000-2001 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கைமீது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக கருத்துகளை முன்வைக்க அனுமதி அளித்ததற்கு முதலில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். முதலிலே எனது தொகுதியிலே இருக்கிற ஒரு பிரச்சினையைச் சொல்லிவிட்டு, அடுத்து கருத்துகளைச் சொல்ல விரும்புகிறேன். எங்களுடைய நத்தம் தொகுதியிலே நத்தம் ஊராட்சி ஒன்றியத்தைச்



சேர்ந்த செந்துறையிலும், சாணார்ப்பட்டி ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த கம்பளியம்பட்டியிலும் புதிய துணை மின் நிலையங்கள் ஏற்படுத்துவதற்கு அரசு அறிவிப்பினை மட்டுமே செய்தது. ஆனால், இப்பொழுது கம்பளியம்பட்டியில் மட்டும் அந்தப் பணியை தொடங்கிவிட்டு நத்தம் தொகுதி செந்துறைப் பகுதிக்கு அறிவித்த அறிவிப்பு செயல்படுத்தப்படாமல் அப்படியே அறிவிப்போடு நின்றுவிட்டது. ஆகவே அரசு அறிவித்தபடி, மின்சார வாரியம் அறிவித்தபடி செந்துறையிலும், கம்பளியம்பட்டியிலும் துணை மின் நிலையங்களை ஏற்படுத்த வேண்டுமென்று முதலிலே மின் வாரியத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-05

புதிய ஊராட்சிகளுக்கு புதிய தெரு விளக்குகள் அமைப்பதிலே, ஊராட்சிகளோடு மின்துறை ஒத்துப்போவதேயில்லை. உள்ளாட்சித் துறை அமைச்சருக்கு மிக நன்றாகத் தெரியும். எங்களுடைய மாவட்டத்திலே review meeting நடத்தும் போது கூட சொன்னார்கள். அங்கே நேரடியாக விசாரணை செய்தார்கள். மின் துறை அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்புகளோடு, ஊராட்சி மன்றத் தலைவர்களோடு ஒத்துப்போவதில்லை. ஆகவே, புதிய கிராமங்களிலே தெரு விளக்குகள் அமைப்பதிலே பல்வேறு இடையூறுகள் இருக்கின்றன. இவற்றையெல்லாம் மின்சாரத் துறை அமைச்சர் கவனத்திற்குக் கொண்டு வந்து, புதிய தெரு விளக்குகள் அமைப்பதில் மின் துறையினுடைய ஒத்துழைப்பைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல குடிநீர்ப் பிரச்சினையிலும், G.L.R. and O.H.T போன்ற திட்டங்களின் கீழ் கட்டடங்களைக் கட்டி முடித்துவிட்டு மின் இணைப்பிற்காக பல ஊர்களிலே காத்துக்கொண்டிருக்கிறார்கள். மின் இணைப்பு கிடைக்கவில்லை. இதுபோல பல்வேறு அனுபவங்கள் உள்ளன. நானே எங்களுடைய தொகுதியிலே G.L.R., என்கிற தரைமட்ட குடிநீர்த் தொட்டியைக் கட்டிவிட்டு மின் இணைப்பிற்காக பல முறை போராடிக் கொண்டிருக்கிறேன். இன்னும் கிடைக்கவில்லை. அப்படியே கிடைத்தாலும் கூட குறைந்த மின் அழுத்தம் காரணமாக அங்கு போதிய மின்சாரம் கிடைக்காததால் மோட்டார் அடிக்கடி புகைந்துவிடுகிறது. விவசாய பம்ப்செட் அதிகமாக உள்ள பகுதிகளிலேயும் குடிநீர்ப் பிரச்சினை உள்ள பகுதிகளிலேயும் உள்ள குறைந்த மின் அழுத்தக் குறைபாடுகளை சரி செய்வதற்கு உடனடியாக

நடவடிக்கை எடுக்க வேண்டும். அங்கே மின் வாரிய அதிகாரிகளிடம் நாங்கள் பல முறை போராடினாலும்கூட, குறைந்த மின்அழுத்தக் குறைபாடுகள் இன்னும் தீர்க்கப்படாமல் இருக்கின்றன. அதிகமான கிராமப் பகுதிகளிலே இரவில் ஆறு மணிக்கு மேல் மின்சாரமே வருவதில்லை. குறிப்பாக, பள்ளிக்கூடம் செல்கின்ற மாணவர்கள் இரவிலே படிப்பதற்குக் கஷ்டப்படுகிறார்கள். பழைய கற்காலம்போல் இன்னும் மண்ணெண்ணெய் விளக்குகளை வைத்துக்கொண்டு படிக்கின்ற சூழ்நிலைதான் இருக்கிறது. அந்த அளவிற்கு பல்வேறு கிராமங்களிலே சரியான அளவிற்கு மின்சாரம் கிடைப்பதில்லை. இத்தகைய குறைபாடுகளைத் தீர்க்க அரசு எந்த முயற்சியும் எடுக்கவில்லை என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டுகிறேன். ஆகவே, அப்படிப்பட்ட குறைபாடுகளை நீக்குவதற்கு அரசு முன்வர வேண்டும்.

அதற்கடுத்தபடியாக, மின்வெட்டு இல்லையென்று நீங்கள் அடிக்கடி பெருமையாகச் சொல்கிறீர்கள். ஆனால், நடைமுறையிலே அறிவிக்கப் படாத மின்வெட்டு அமலில் இருக்கிறது என்பதுதான் உண்மை. அமைச்சர் அவர்கள் கிராமப் பகுதிகளுக்கு வந்து பார்த்தால் தெரியும். அடிக்கடி மின்வெட்டுகள், மின்தடைகள் ஏற்படுகின்றன. அறிவிக்கப்படாத மின்வெட்டுகளை இந்த அரசு அமல்படுத்தியிருக்கிறது என்று நான் இந்த நேரத்திலே குற்றம்சாட்ட விரும்புகிறேன். மின்வெட்டு இருக்கிறது என்று வெளிப்படையாக அறிவித்துவிட்டால் அந்த நேரத்திலே விவசாயிகளும் சரி, பொதுமக்களும் சரி, இதிலே முன்னெச்சரிக்கையாக இருப்பதற்கு வாய்ப்பாக இருக்கும். மின்வெட்டு இல்லை, இல்லையென்று பெருமையாக அறிவிப்பதை விட்டுவிட்டு, மின்வெட்டு இருப்பதை நீங்கள் உணர வேண்டும். ஆகவே, விவசாயிகளுக்கும், பொதுமக்களுக்கும் தடையில்லாத மின்சாரம் கிடைப்பதற்கு வழி ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதற்கடுத்தபடியாக, மற்றொரு பிரச்சினையான ஒப்பந்தத் தொழிலாளர்களைப் பொறுத்தவரையிலே மின் வாரியத்தில் விநியோகத் துறையிலே பணியாற்றுகின்ற ஒப்பந்தத் தொழிலாளர்கள் ஏராளமாக இருக்கிறார்கள். அமைச்சர் சட்டமன்றத்திலே சொல்லியிருக்கிறார்; சென்ற மின் வாரிய பட்ஜெட்டிலேகூட அமைச்சர் உறுதியளித்திருக்கிறார். அதற்குப் பின்பும், பேச்சுவார்த்தையிலே உறுதியளித்திருக்கிறார். ஒப்பந்தத் தொழிலாளர்களைப் பணி நிரந்தரம் செய்வது குறித்து. இந்நிலையில் ஒரு பகுதி தொழிலாளர்களைப் பணி நிரந்தரம் செய்துவிட்டு, ஒரு பகுதி தொழிலாளர்களை இன்னும் பணி நிரந்தரம்



செய்யாமல் இருப்பதை இந்த அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், எங்களுடைய திண்டுக்கல் சிஸ்டத்திலே—திண்டுக்கல் மின் திட்டப் பகுதியிலே—இருக்கின்ற ஒப்பந்தத் தொழிலாளர்களின் பணி இன்னும் நிரந்தரம் செய்யப்படவில்லை.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் விசுவநாதன் அவர்கள் ஒப்பந்தத் தொழிலாளர்களை நிரந்தரம் செய்கிறோம் என்று இந்த அவையிலே சொல்லி, அதன்படி நிரந்தரம் செய்யவில்லை என்று சொல்கிறார்கள். என்னுடைய பேச்சை எடுத்துப் படித்துப் பார்த்தாலே தெரியும். Generation side, மின்சாரம் உற்பத்தி செய்கின்ற இடத்திலே எங்கேயெல்லாம் ஒப்பந்தத் தொழிலாளர்கள், 5 ஆண்டு காலத்திற்கு மேல் பணியாற்றியிருக்கிறார்களோ அவர்களை இந்த அரசு நிரந்தரம் செய்வது என்ற ஒரு முடிவை எடுத்திருக்கிறது என்று சொன்னேன். அந்த அறிவிப்பின்படி இதுவரையிலே கிட்டத்தட்ட 7,900 பேர் நிரந்தரம் செய்யப்பட்டுவிட்டார்கள். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் புதியதாக இப்போது விநியோக திட்டத்திலே இருக்கக்கூடிய ஒப்பந்தத் தொழிலாளர்களை நிரந்தரம் செய்யவில்லை என்று சொல்கிறார்கள். மின்சார வாரியத்தில் விநியோகப் பிரிவில் நிரந்தரமாக, 5 ஆண்டுகளுக்கு மேல் எத்தனை பேர் இருக்கிறார்கள் என்று எந்தச் சங்கத்திற்கும் கணக்கே தெரியவில்லை. உதாரணத்திற்குச் சொல்கிறேன். மின் விநியோகத்திலே ஒப்பந்தத் தொழிலாளர்கள் என்பது, மயிலாப்பூரில் ஒரு வேலை நடக்கும்; அங்கே 25 பேரை அவர்கள் ஒப்பந்தக் கூலிகளாக நியமிப்பார்கள். அந்த வேலை முடிந்துவிடும். அதற்குப் பிறகு மயிலாப்பூரிலே அந்த வேலை இருக்காது. அடுத்து கொருக்குப்பேட்டையிலே வேலை வரும். அங்கு இந்தத் தொழிலாளர்கள் போகமாட்டார்கள். அங்கு இருப்பவர்களை புதிதாக நியமித்துக்கொள்வார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலை இருக்கின்ற காரணத்தினாலேதான் யார், யார், எவ்வளவு பேர் மின் வாரியத்திலே 5 ஆண்டுகளுக்கு மேல் நிரந்தரமாகப் பணியாற்றுகிறார்கள் என்ற கணக்குத் தெரியாமல் இருந்தது. இருந்தாலும் அதிகாரிகளை விட்டு கணக்கு எடுக்கச் சொன்னேன். அதிலே கிட்டத்தட்ட 10 ஆயிரம் பேர் 5 ஆண்டுகளுக்கு மேலே ஒப்பந்தத் தொழிலாளர்களாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அவர்களுக்கு போனஸ் வழங்குகின்ற நேரத்திலே 400 ரூபாய் வழங்கலாம் என்று உத்தரவு பிறப்பித்தேன். ஆனால், சங்கங்களை கேட்டால்,

ஒப்பந்தத் தொழிலாளர்கள் 35 ஆயிரம் பேர் இருப்பதாக கணக்குக் கொடுக்கிறார்கள். அந்தக் கணக்கு சரிவராத காரணத்தினாலேதான் அதிலே இந்த அரசு எந்த முடிவும் எடுக்கவில்லை.

பிற்பகல் 12-10

**திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதிலே சிறப்புக் கவனம் செலுத்தி, அந்தக் கணக்குகளைப் பெற்று நீண்ட காலக் கோரிக்கையான, நிரந்தரம் செய்யப்படாத ஒப்பந்தத் தொழிலாளர்களைப் பணி நிரந்தரம் செய்வதற்கு ஆவன செய்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக விவசாயிகளுக்கு மின் இணைப்பு வழங்குவதைப் பொறுத்தவரையில் அரசு கொண்டு வந்திருக்கிற திட்டத்தில் சில நடைமுறைச் சிக்கல்கள் இருப்பதை நான் இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகிறேன். முதலிலே விவசாயிகளுக்கு மின் இணைப்பு கொடுக்கும்போது, சாதாரண திட்ட முன்னுரிமை முறை மட்டும்தான் கடைப்பிடிக்கப்பட்டது. அதற்கு அடுத்தபடியாக சுயநிதித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த சுயநிதித் திட்டத்தையும் இப்போது 3 பிரிவாகப் பிரித்து, அதிலேயும், சீனியாரிட்டி முறையை புகுத்தி இருக்கிறார்கள். அதிலே 50 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டுத் தொகை உள்ள மின் இணைப்புகளுக்கு 10 ஆயிரம் ரூபாய் கட்டினால் அது ஒரு வகையாகவும், 25 ஆயிரம் ரூபாய் கட்டினால் அது ஒரு வகையாகவும், 50 ஆயிரம் ரூபாய் கட்டினால் விசேஷ சிறப்பு முன்னுரிமையாகவும் என நீங்கள் 3 வகையாகப் பிரித்திருக்கிறீர்கள். இதன் மூலமாக ஏற்கெனவே இருந்த அந்த சாதாரண திட்ட முன்னுரிமை முறையை நீங்கள் மறைமுகமாக ரத்து செய்கின்ற முயற்சியாகத்தான், சாதாரண திட்ட முன்னுரிமையை எடுத்துவிட வேண்டும் என்பதற்காகத்தான், அறிவிக்காமல் மறைமுகமாக இந்த 3 முறைகளைப் புகுத்தி, சாதாரண திட்ட முன்னுரிமையை நீங்கள் எடுத்திருக்கிறீர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, Self-financing scheme என்ற திட்டத்தைப் பற்றி, விவசாயிகளின் பம்புசெட்டுகளுக்கு மின்சாரம் வழங்குவது குறித்து மாண்புமிகு உறுப்பினர் சொல்கிறார். கடந்த கால ஆட்சியிலேதான் முதன்முதலில் Self-financing scheme, 10 ஆயிரம் ரூபாய் கட்டினால் மின்சாரம் வழங்குவது என்ற திட்டத்தைத்





தொடங்கி வைத்தார்கள். அந்தத் திட்டத்திற்கு விவசாயிகள் மத்தியிலே வரவேற்பு இருந்தது. அந்தத் திட்டத்தை அமல்படுத்துவதற்கு ஓராண்டுகாலம், 2 ஆண்டுகாலம் ஆகிற காரணத்தினாலே, உடனடியாக மின்சாரம் தேவை என்று கேட்கின்ற விவசாயிகள், 25 ஆயிரம் ரூபாய் கட்டினால், உடனடியாகக் கொடுக்கிறோம் என்று சொல்லி, அந்தத் திட்டம், தமிழ்நாடு எங்கும் வேகமாக இன்னும் சொல்லப்போனால், சட்டமன்ற உறுப்பினர்களில் சில பேர் 25 ஆயிரம் ரூபாய் கட்டினாலும் பரவாயில்லை, மின்சாரம் வேண்டும், எனவே அந்தத் திட்டத்தை அமல்படுத்துங்கள் என்று சொல்லியதால்தான் அதை அமல்படுத்தி இருக்கிறோம்.

**திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, சுயநிதித் திட்டத்தை நாங்கள் வரவேற்கிறோம். இல்லை என்று சொல்லவில்லை. அதை அறிமுகப்படுத்தியதே எங்களுடைய புரட்சித் தலைவி ஆட்சிக் காலத்திலேதான். நீங்கள் அந்தத் திட்டத்தைக் கடைப்பிடிப்பதிலே எங்களுக்கு மகிழ்ச்சிதான். இருந்தாலும்கூட, அதிலே சில திருத்தங்களைக் கொண்டுவந்து, 50 ஆயிரம் ரூபாய், 25 ஆயிரம் ரூபாய் என்று பிரித்திருக்கிறீர்கள். இதிலே ஒட்டுமொத்தமாக 10 ஆயிரம் ரூபாய் என எல்லோருக்கும் சீராக ஒரே கட்டணத்தை நிர்ணயம் செய்ய வேண்டும். 25 ஆயிரம் ரூபாய், 50 ஆயிரம் ரூபாய் என்றால், சாதாரண நடுத்தர, சிறு விவசாயிகளால் அதைக் கட்ட இயலவில்லை; ஆகவே, எங்களுடைய கோரிக்கை, சுயநிதித் திட்டத்திலே 10 ஆயிரம் ரூபாய் மட்டும் கட்டினால் போதும் என்ற அளவை நிர்ணயித்து—3 பிரிவாகப் பிரிக்காமல்—அவர்களுக்கு முன்னுரிமை கொடுத்து, மின் இணைப்பு கொடுக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே உங்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அதற்கு அடுத்தபடியாக, இந்த அரசு பொதுத் துறைகளையும், அரசுத் துறை நிறுவனங்களையும் தனியார்மயமாக்குவதிலே முனைப்போடு செயலாற்றிக் கொண்டிருக்கிறது. ஏனென்றால், இப்போது இருக்கின்ற மத்திய அரசும் சரி, மாநில அரசும் சரி, கொள்கை ரீதியாகவே தடுமாற்றத்தோடு தனியார் துறையை ஊக்கப்படுத்துகின்ற வகையிலே செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. அந்த வகையிலேதான் மின் துறையிலும் 2038 மெகாவாட் உற்பத்தி செய்வதற்கு 6 மின் திட்டங்களை கருத்தளவு ஒப்பந்த முறையில் தனியார் மின்திட்ட முனைவர்களிடம் அரசு ஒப்படைத்திருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறீர்கள். இதிலே நான் குறிப்பிட விரும்புவது, இப்போது தமிழ்நாடு மின் வாரியத்தைப் பொறுத்தவரையிலே, தொழில் நுட்ப வல்லுநர்கள் இருக்கிறார்கள்;

திறமை வாய்ந்த அனைத்து அதிகாரிகளும் இருக்கிறார்கள்; அவ்வளவு கட்டமைப்புகளும் இருக்கின்றன; ஆள் பலம் இருக்கிறது. ஓர் அரசுத் துறை நிறுவனமான தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு, அனைத்து வசதிகளும், கட்டமைப்பு வசதிகளும், தொழில்நுட்ப வல்லுநர்களும், திறமை வாய்ந்த அதிகாரிகளும் இருக்கும்போது, மின் உற்பத்தியை மின் வாரியத்தின் மூலமாகச் செய்யாமல் தனியாருக்குத் தாரை வார்ப்பதினுடைய இரகசியம் என்ன என்பதுதான் எங்களுடைய......

பிற்பகல் 12-15

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. விசுவநாதன் அவர்கள் விவரம் தெரியாமல் சொல்கிறார் என்று நான் சொல்லமாட்டேன். நீங்கள் தனியார் துறையினிடத்திலே மின் உற்பத்தியைக் கொடுத்திருப்பதன் இரகசியம் என்ன என்று கேட்கிறார். இந்த அரசாங்கம் வந்த பிறகு எந்தத் தனியாருக்கும் மின்சாரம் உற்பத்தி செய்ய அனுமதி வழங்கவில்லை. இப்போது நாங்கள் சொல்லியிருக்கிறோமே 2038 மெகாவாட் உற்பத்தி செய்வதற்கான 6 திட்டங்களும் 1993 ஆம் ஆண்டு நரசிம்மராவ் அவர்கள் பிரதமராக இருந்தபோது, அம்மையார் ஜெயலலிதா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, M.O.U. செய்து தொடங்கப்பட்ட திட்டங்கள்.

**திரு. பி.ஆர் சுந்தரம்:** மாண்புமிகு......

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. விசுவநாதன் பேசிக் கொண்டிருக்கிறாரே? என்ன இரகசியம் என்று அவர் கேட்டார். இருந்த இரகசியத்தை அமைச்சர் சொல்லிவிட்டார். அவர் தொடர்ந்து பேசட்டும். (குறுக்கீடு)

(திரு. இரா. விசுவநாதன் நின்று கொண்டேயிருந்தார்.)

அவர் ஒத்துக்கொள்ளமாட்டேன் என்கிறார். நீங்கள் குறுக்கிடுவதை திரு. இரா. விசுவநாதன் ஏற்றுக்கொள்ள மாட்டார்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்த 6 மின் திட்டங்களுக்கு அப்பொழுது கொடுத்த கான்ட்ராக்ட்டுகளை நீங்கள் இரத்து செய்துவிட்டு, புதிதாக இப்போது கான்ட்ராக்டர்களுக்கு ஒப்பந்தங்களைக் கொடுத்திருக்கிறீர்கள் என்பதுதான்.



**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, யாருக்கு கான்ட்ராக்ட் கொடுப்பது என்பது நாங்கள் நிர்ணயிப்பது அல்ல. அது அந்த நிறுவனங்களே நிர்ணயிப்பது. அவர்கள் M.O.U. செய்யும்போது எந்த கான்ட்ராக்டர்கள் என்று விண்ணப்பத்திலே குறிப்பிட்டிருந்தார்களோ அவர்கள்தான் இப்போதும் அந்த கான்ட்ராக்ட்டுகளைச் செய்துகொண்டிருக்கிறார்கள். எனவே, இந்த அரசாங்கம் அதிலே எந்தவிதமான மாற்றத்தையும் செய்யவில்லை. இன்னும் சொல்லப்போனால் P.P.A. ஒன்றுதான் அவர்கள் போடாமல் இருந்தார்கள். நாங்கள் வந்து Power Purchase Agreement போட்டிருக்கின்றோம். மின்சாரம் உற்பத்தி செய்தால், ஒரு யூனிட் மின்சாரம் எவ்வளவு விலைக்கு வாங்குவது என்பதை மட்டும்தான் நாங்கள் செய்திருக்கிறோமே தவிர மின்சாரம் உற்பத்தி செய்வதற்கு அனுமதி வழங்கியது மத்தியிலே நரசிம்மராவ் ஆட்சி, மாநிலத்திலே ஜெயலலிதா ஆட்சி.

**திரு. இரா. விசுவநாதன்:** அதிலே குறிப்பிட்டிருக்கின்ற சில கம்பெனிகளைப் பொறுத்தவரையில், வீடியோகான் பவர் லிமிடெட், நிறுவனத்தின் ஒப்பந்தம் காலாவதியாகிவிட்டது என்றும் மற்ற நிறுவனங்கள் 2001 ஆம் ஆண்டு மே மாதத்திலும், பிப்ரவரி மாதத்திலும் மின் உற்பத்தி செய்யும் என்றும் குறிப்பிட்டிருக்கிறீர்கள். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் 16 நிமிடங்கள் பேசியிருக்கிறீர்கள்.

**திரு. இரா. விசுவநாதன்:** ஒரேயொரு நிமிடத்தில் பேசி முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 8 நிமிடம்தான் பேரவைத் தலைவர் உங்களுக்குப் பேச அனுமதித்திருந்தார்.

**திரு. இரா. விசுவநாதன்:** அந்த நிறுவன ஒப்பந்தம் காலாவதியாகிவிட்டது என்று சொல்லியிருக்கின்றீர்கள். ஆனால் அதன்மீது வாரியம் எடுத்த நடவடிக்கை பற்றி எதையுமே குறிப்பிடவில்லை. இந்த நிறுவனத்திடம் அரசு ஏன் ஒரு soft corner, மென்மையானப் போக்கைக் கடைப்பிடிக்கிறது என்பது சந்தேகத்திற்குரியதாக இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே சொல்லக்...

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வீடியோகான் பவர் புராஜெக்டைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் சொல்கிறார். அது குறித்து விவரமான பதிலை நான் என்னுடைய பதிலுரையிலே சொல்கிறேன். ஆனால் அவருக்கு ஒன்றைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதைப்பற்றி இப்போது விவாதிப்பதேகூட தவறு. வீடியோகான் நிறுவனம் நீதிமன்றத்திற்குப் போயிருக்கிறது. வழக்கு நீதிமன்றத்திலே இருக்கிறது. அதைத் தவிர இப்போது விளக்கங்கள் சொல்ல விரும்பவில்லை. ஆனால் ஏன் அதை ரத்து செய்தார்கள் என்பதற்கான விவரத்தைக் கேட்டிருக்கிறார். என்னுடைய பதிலுரையிலே நான் சொல்லத் தயாராக இருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் க. கிருஷ்ணசாமி.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2000-2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின் வாரிய நிதிநிலை அறிக்கை மற்றும் திருத்திய மதிப்பீடுகளுக்கான அறிக்கையின்மீது புதிய தமிழகம் கட்சியின் சார்பாக சில கருத்துக்களை எடுத்து வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். முதற்கண் எனது தொகுதிக்கு உட்பட்ட, ஒட்டநத்தம் கிராமத்தில் 1995-96 ஆம் ஆண்டே ஒரு துணை மின் நிலையம் அமைப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு, அதற்கான பூர்வாங்க வேலைகள் தொடங்கப்பட்டன. ஆனால் இன்னும் அதற்கான எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. விரைந்து நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அந்தத் துணை மின் நிலையத்தினைக்கூட, எல்லா மக்களுக்கும் பயன்படக்கூடிய வகையிலே பாளையங்கோட்டை-அருப்புக்கோட்டை சாலையிலே அமைந்துள்ள லட்சுமியாபுரம் அருகே அமைத்துத்தர வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

பிற்பகல் 12-20

மின் வாரியத் துறையிலே, 1996ஆம் ஆண்டு முதன்முறையாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு இலட்சம் வீடுகளுக்கு ஒரு விளக்குத் திட்டம் அமல்படுத்தப்படும் என்று அறிவித்தார்கள். ஆனால் அந்த ஒரு விளக்குத் திட்டம் கடந்த ஐந்தாண்டு காலமாக முறையாக அமல்படுத்தப்படவில்லை. அதற்கு மாறாக தெரிந்தோ தெரியாமலோ ஒரு விளக்குக்கு மேலாக போட்டிருக்கக்கூடியவர்கள் வீட்டிலேகூட மீட்டர் பொருத்தி அவர்களிடத்திலேயும் கட்டணம் வசூலிக்கக்கூடிய நிலைமைக்குப் போய் இருக்கிறது. பெரிய விவசாயிகளுக்கு எல்லாம் நாம் மனமுவந்து இலவச மின்சாரம் கொடுக்கிறோம்.



**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, டாக்டர் கிருஷ்ணசாமி அவர்களுக்கு நாட்டு நிலைமை தெரியும். திட்டத்திற்குப் பெயரே ஒருவிளக்கு திட்டம்தான். ஒருவிளக்கு திட்டம் என்று இணைப்பு வாங்கிக்கொண்டு பல விளக்குகள் போட்டு, அதிலே ரேடியோவும் வைத்துக்கொண்டு, டி.வி.-யும் வைத்துக்கொண்டு, இன்னும் சொல்லப்போனால் கிரைண்டரும் வைத்துக் கொண்டால் மீட்டர் வைக்காமல் வேறு என்ன வைப்பது என்பதை உறுப்பினர் சொன்னால் அதை இந்த அரசு அமல்படுத்தத் தயாராக இருக்கிறது.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** ஒருவிளக்கு திட்டத்தை குறைந்தபட்சம் தொகுப்பு வீடுகளுக்காவது விரைந்து செயல்படுத்த உத்தரவுகள் பிறப்பிக்க வேண்டும். ஒருவிளக்குக்கு மேல் வைக்கக்கூடாது என்று சொல்லி, கட்டாயப்படுத்தி, மீட்டர் பொருத்துகிற காரணத்தாலே குடிசைகளில் வாழ்கிற பல குடும்பங்கள் பழைய நிலைக்குச் செல்ல வேண்டியிருக்கிறது. அந்த ஒரு விளக்குக்காவது exemption கொடுக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய வேண்டுகோள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** துணைத் தலைவர் அவர்களே, எங்கேயாவது ஒரு விளக்கு வைத்துக் கொண்டிருக்கிற குடிசைகள்மீது நடவடிக்கை எடுத்திருந்தால் அந்த இடத்தின் பெயர், அங்கே நடவடிக்கை எடுத்த அதிகாரியின் பெயரைச் சொன்னால், இந்த அவையிலே சொல்கிறேன். நாளைக்கே அந்த அதிகாரிமீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மேலும் ஒரு இலட்சம் வீடுகளுக்கு என்று அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அந்த ஒரு இலட்சத்தை இன்னும் எட்டவில்லை என்பதுதான் என்னுடைய குற்றச்சாட்டு. எனவே, அந்த ஒரு இலட்சம் வீடுகளுக்கு விரைந்து செயல்படுத்துவதற்குண்டான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அடுத்தது ஜீவன்தாரா கிணறுகளுக்கு மின்சாரம் வழங்குவது. ஜீவன்தாரா கிணறு திட்டம் குறிப்பாக நிலமற்ற வறிய ஏழை விவசாயிகளுக்கும் தாழ்த்தப்பட்ட விவசாயிகளுக்குமாகக் கொண்டு வரப்பட்ட திட்டம். ஜீவன்தாரா கிணறுகள் வெட்டக்கூடிய அவர்களுக்காவது ஒரு வருடத்திற்கு இவ்வளவு என்று இலக்கு வைக்காமல் ஆறு மாதம் அல்லது மூன்று மாதங்களுக்குள்ளாக ஜீவன்தாரா கிணறு வெட்டுகிற அத்தனை பேருக்கும் மின் இணைப்பு வழங்குவதற்குண்டான நடவடிக்கை எடுத்தால்தான் ஜீவன்தாரா கிணறு திட்டம் வந்ததனுடைய நோக்கமே நிறைவேறும்.

222456

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நிலமற்றவர்களுக்கு ஜீவன்தாரா கிணறு என்கிறார். நிலமே இல்லாதவர்கள் கிணறு எங்கே வெட்டப் போகிறார்கள். அப்படி இல்லை. குறுகிய நிலம் உள்ளவர்கள் அதாவது மிகக் குறைந்த அளவு நிலம் உள்ளவர்களுக்காக இந்தத் திட்டம் அமல்படுத்தப்பட்டு வருகிறது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் சொன்னது நிலமற்றவர்கள் என்ற பொருளில் அல்ல. நான் சொன்னது மிகக் குறைந்த, மிகச் சிறிய விவசாயி என்றுதான் பொருள். எனவே, அவர்களுக்கு முன்னுரிமை கொடுப்பதற்கு அல்லது ஒரு குறிப்பிட்ட காலகட்டத்திற்குள் அதை நிறைவேற்றித் தருவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதுதான் என் வேண்டுகோள்.

அடுத்தது கான்ட்ராக்ட் தொழிலாளர்களை நிரந்தரமாக்குவது சம்பந்தமாக கடந்த ஆண்டு அரசு ஓர் உத்தரவு பிறப்பித்தது. ஏறக்குறைய 11,000 தொழிலாளர்களை ஒரே நேரத்திலே - கான்ட்ராக்ட் தொழிலாளர்களை - நிரந்தரப்படுத்துகிறபோது ஒட்டுமொத்தமாக சமூக நீதி அங்கே புறக்கணிக்கப்படுகிறது. தாழ்த்தப்பட்டவர்கள், மிக, மிகப் பிற்படுத்தப்பட்டவர்கள், பிற்படுத்தப்பட்டவர்கள் போன்றவர்களுக்கான இட ஒதுக்கீடு கணக்கிலே கொள்ளப்படாமல் ஐந்து வருடமோ, ஆறு வருடமோ, ஏழு வருடமோ பணியில் இருக்கக்கூடிய அத்தனைபேரும் ஒட்டுமொத்தமாக நிரந்தரம் ஆக்கப்படுகிறபோது பல தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினைச் சேர்ந்தவர்களும், மிக, மிகப் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களும் பாதிக்கப்படுகிறார்கள் என்று நான் குரல் எழுப்பினேன். அப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அப்படி தாழ்த்தப்பட்டவர்களோ அல்லது மிக, மிகப் பிற்படுத்தப்பட்டவர்களோ, பிற்படுத்தப்பட்டவர்களோ போதிய எண்ணிக்கையில் இல்லாத பட்சத்தில் அதை ஈடுகட்டக்கூடிய வகையிலே தனியாக ஆள்சேர்ப்புக்கு நான் நடவடிக்கை எடுப்பேன் என்று அறிவித்தார்கள். ஆனால் அதற்குண்டான நடவடிக்கை இன்னும் எடுக்கப்படவில்லை என்பதையும், இந்த மாமன்றத்தில் நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)



பிற்பகல் 12.25

அடுத்தது மின்சாரத் துறையிலே மிக முக்கியமானது மின் இழப்பு என்பது. நாம் உற்பத்தி செய்யக்கூடிய மின்சாரத்திலே—தேசிய அளவிலே 21% மின் இழப்பு ஏற்பட்டாலும்கூட—தமிழ்நாட்டிலே 16.7 விழுக்காடு அளவுக்கு இருக்கிறது என்று நாம் சொல்கிறோம். இதைக் கட்டுப்படுத்துவதற்கு, இந்த மின் இழப்பைச் சரி செய்வதற்கு நல்ல ஜெனரேட்டர் கடத்திகள் உட்பட, மின் அளவைகள், மீட்டர் பயன்படுத்துவது உட்பட பல நடைமுறைகள் கையாளப்படுகின்றன.

மீட்டரைப் பொறுத்தவரையில் ஒரு பெரிய குளறுபடி நடந்திருப்பதாக நான் அறிகிறேன். Single Phase line என்றால் 325 ரூபாய் பெறுமானம் உள்ள மீட்டருக்கு இப்போது 733 ரூபாய் கொடுத்து வாங்கக்கூடிய அளவுக்கு நிலைமை போய் இருக்கிறது. அதேபோல, Three Phase மீட்டருக்கு 850 ரூபாய் என்று இருந்தது, இப்போது 1,820 ரூபாய் கொடுத்து வாங்கக்கூடிய நிலைமை வந்திருக்கிறது. இதிலே நான் என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால், இண்டியா மீட்டர் என்று சொல்லக்கூடிய ஒரு தரம் வாய்ந்த கம்பெனி முதலிலே மின்சார வாரியத்திற்கு மீட்டர்களை தந்து கொண்டிருந்தது. ஆனால் இப்போது அது தடைப்பட்டிருக்கிறது. இப்போது Havels என்ற கம்பெனியினுடைய மீட்டர்கள் வாங்கப்படுவதாக அறிகிறேன். இதிலே மிகப் பெரிய மோசடி நடப்பதாக நான் கேள்விப்படுகிறேன். இந்த Havels என்ற கம்பெனிக்குப் பதிலாக Elimer என்ற கம்பெனி ஏற்கெனவே மின்சாரத் துறையின் மூலமாக blacklist செய்யப்பட்டது. அந்த Havels கம்பெனியினுடைய சொந்த மருமகன்தான் அந்தக் கம்பெனியை நடத்தி வரக்கூடியவர். எனவே, blacklist செய்யப்பட்ட அந்தக் கம்பெனி மூலமாகச் செய்யப்படக்கூடிய மீட்டர்கள் எப்படி தரம் வாய்ந்தவையாக இருக்க முடியும்? அதைத் தடுப்பதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறது? ஏனென்றால் ஒரே சமயத்தில் . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. ஆற்காடு. நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மீட்டர் வாங்குவதாக இருந்தாலும் சரி, கேபிள் வாங்குவதாக இருந்தாலும் சரி, டிரான்ஸ்பார்மர் வாங்குவதாக இருந்தாலும் சரி, எந்தப் பொருளை மின்சார வாரியம் வாங்குவதாக இருந்தாலும் மின்சார வாரியம் டெண்டர்கள் கேட்டு, அதிலே யார் எல்-1 ஆக வருகிறார்களோ, Lowest-ஆக யார் வருகிறார்களோ அவர்களுக்குத்தான் உத்தரவுகள் வழங்கப்படுகின்றன.

மாண்புமிகு உறுப்பினர் single phase மீட்டர் 325 ரூபாயாக இருந்தது, அதன் விலை இப்போது உயர்ந்து விட்டது என்று சொன்னார், 325 ரூபாய்க்கு Single Phase மீட்டர் கொடுத்து, கொடுத்த 6-வது மாதத்திலேயே அந்த மீட்டர் வேலை செய்யாமல் போய்க் கொண்டிருந்தது. அதற்காக வாரியம் இப்போது என்ன செய்துள்ளது என்றால், Single Phase மீட்டராக இருந்தாலும், Three Phase மீட்டராக இருந்தாலும், 10 ஆண்டு காலத்திற்குள் அந்த மீட்டர்கள் பழுதானால் அவற்றை அவர்கள் திரும்பப் பெற்றுக்கொண்டு புதிய மீட்டர் கொடுக்க வேண்டும்; அப்படிக் கொடுப்பதற்கு யார் தயாராக இருக்கிறார்களோ அவர்களுக்கு எல்-1 ரேட்டிலே நாங்கள் உத்தரவு வழங்குவோம் என்று தெரிவித்திருக்கிறார்கள். அதற்குக் காரணம் தரமான மீட்டர்களாகவும் இருக்க வேண்டும். மின்சார வாரியத்திற்கு இழப்பும் ஏற்படக்கூடாது என்ற நல்ல எண்ணத்திலேதான் மின்சார வாரியம் இந்த ஏற்பாட்டைச் செய்திருக்கிறது. தவறு எங்காவது நடைபெற்றிருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் ஆதாரத்தோடு கூறுவார்களேயானால் அவர்கள் எவ்வளவு பெரிய அதிகாரத்திலே இருப்பவர்களாக இருந்தாலும் நிச்சயம் நடவடிக்கை எடுக்கப்படும்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** இதிலே நான் வலியுறுத்த விரும்புவது, Havels என்ற கம்பெனியினுடைய மீட்டர் இப்போது வாங்கப்படுகிறது. இந்த Havels கம்பெனியினுடைய son-in-law மருமகன்தான் Elimer என்ற கம்பெனியை நடத்தி வந்தவர். Elimer என்ற கம்பெனி ஏற்கெனவே மின்சார வாரியத்தால் கரும்புள்ளி குத்தப்பட்டு, ஒதுக்கப்பட்டது. ஆனால் அதே கம்பெனிக்காரர் மீண்டும் தன்னுடைய மாமனார் மூலமாக மீட்டர்களைக் கொடுப்பதாக இப்போது நான் கேள்விப்படுகிறேன். அப்படியென்றால் தரமற்ற மீட்டர்கள் மீண்டும் மின் வாரியத்திற்கு வருவதற்குண்டான வாய்ப்புகள் இருக்கின்றன. அதைத் தடுத்து நிறுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள் தெரிகிறது, வருகிறது, போகிறது என்று சொல்வதைப் பற்றி நான் கவலைப்படவில்லை. மாமனாரா, மருமகனா அல்லது தந்தையா, பிள்ளையா என்பதெல்லாம் மின்சார வாரியத்திற்குத் தெரியாது. ஆதாரத்தோடு Elimer கம்பெனியினுடைய மருமகன்தான் வேறு ஒரு கம்பெனியிலே போய் இப்படிச் செய்திருக்கிறார் என்று சொன்னால்கூட, அவர் கொடுத்திருக்கிற மீட்டர் 5 வருடங்களுக்கு வேலை செய்யுமா,





செய்யாதா? 5 வருடங்களுக்குக் கொடுத்திருக்கின்ற மீட்டர் வேலை செய்யவில்லையென்றால் திரும்ப எடுத்துக் கொண்டு புது மீட்டர் கொடுப்பாரா இல்லையா என்பதுதான் மின்சார வாரியத்திற்கு முக்கியமே தவிர, அவர் மாமனாரா, மருமகனா என்பதுபற்றி அவசியம் இல்லை. கொடுக்கின்ற மீட்டர் 10 ஆண்டு காலத்திற்கு வேலை செய்யவேண்டும். மீட்டர் சப்ளை செய்பவர்கள், வாரியத்திற்கு, மீட்டர்கள் நன்றாகச் செயல்படும் என்றும், தரம் குறைவான மற்றும் தவறாக டிசைன் செய்யப்பட்ட மீட்டர்கள் என 10 வருடத்திற்குள் தெரியவந்தால் அம்மீட்டர்கள் இலவசமாக மாற்றப்படும் என்றும் செயல் உத்தரவாதம் (Security cum performance guarantee) அளித்துள்ளனர்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. குத்தாலம் பி. கல்யாணம். (குறுக்கீடு) நேரம் அதிகமாகிவிட்டது.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு வெள்ளை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டபோது அனைத்துத் துறைகளிலும், தாழ்த்தப்பட்டவர்கள், மிக, மிகப் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு இட ஒதுக்கீடு அமலாக்கப்படும் என்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். தமிழ்நாடு மின்சார வாரியத்தில் C.E. அளவில் 33 பேர் இருக்கிறார்கள். ஆனால் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் ஒருவர்கூட இல்லையே. அதேபோல Superintending Engineer அளவிலே 80 பேர் இருக்கிறார்கள். தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் 2 பேர் மட்டும் இருக்கிறார்கள். அதேபோல E.E. அளவிலே 580 பேர் இருக்கிறார்கள். அதிலே 50 பேர்தான் இருக்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால் C.E. அளவிலே ஒருவர்கூட இல்லாத நிலை ஏன் ஏற்படுகிறது? வேலாயுதம் என்று அழைக்கப்படுகிற . . .

பிற்பகல் 12-30

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, Chief Engineer ஆகப் பணியாற்றக் கூடியவர்கள், Superintending Engineer-ஆகப் பணியாற்றக்கூடியவர்கள், எல்லாம் 30 ஆண்டு காலம், 35 ஆண்டு காலமாக பணியாற்றிக் கொண்டிருப்பவர்கள். 35 ஆண்டு காலத்திற்கு முன்னாலே B.E. படித்துவிட்டு தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த நபர்கள் A.E. ஆகவோ, J.E. ஆகவோ சேர்ந்திருப்பார்களானால் அவர்களும் இந்தப்

[திரு. ஆற்காடு நா. வீராசாமி] [2000 நவம்பர் 9

பதவிக்கு வந்திருப்பார்கள். அப்பொழுது அந்த அளவிற்கு பணியிலே வந்து சேர்வதற்கான வாய்ப்பு இல்லாமல் இருந்தது. அவற்றையெல்லாம் எண்ணிப் பார்த்துத்தான் மின்சார வாரியம் கடந்த ஆண்டு குறிப்பிட்ட ஒரு பதவிக்கு ஆட்களை எடுக்கும்போது backlog எவ்வளவு இருக்கிறது என்று பார்த்து தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கு 50% இடத்தை ஒதுக்கிவிட்டு மற்றவர்களுக்கு 50% என்று ஒதுக்கியிருக்கிறது. இப்பொழுது நன்றாகப் படித்துவிட்டு தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் வருகிறார்கள். அவர்களுக்கு விகிதாச்சாரப்படி வேலை கொடுப்போம். அவர்கள் 20 ஆண்டு காலம் கழித்து Superintending Engineer-களாக 30 ஆண்டு காலம் கழித்து தலைமைப் பொறியாளர்களாக எதிர்காலத்தில் வருவார்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு நிமிடத்தில் பேசி விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் அதிக நேரம் எடுத்துக் கொண்டீர்கள். பேசியது போதும். உட்காருங்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** ரொம்ப முக்கியமான Point, சொல்லி முடித்துவிடுகிறேன். இப்படி C.E. அளவிலே இருக்கக்கூடிய Engineer பதவிகளுக்கு தகுதியானவர்கள் இல்லை என்று அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள், ஆனால் ஏறக்குறைய 30 ஆண்டு காலம் Superintending Engineer-ஆக இருக்கக்கூடியவர்களுக்கு இப்பொழுது மின் துறையிலே புதிதாக interview நடத்தி—C.E. பதவிக்கு interview வைத்து promote செய்கிற பழக்கம் இதுவரைக்கும் கிடையாது—இப்பொழுது புதிதாக அந்தமாதிரி ஒரு நடைமுறையை வைத்து அவர்களுக்கு ஒரு examination வைப்பது என்பது ஒரு தவறான நடைமுறை. வேலாயுதம் என்ற Engineer, interview-விற்கு போயிருக்கிறார். அவரை, நீங்கள் தகுதியில்லை என்று சொன்னதால் அவர் பதவி இழந்து நிற்கிறார். ஒருவருக்கு ஒரு வாய்ப்பு வருகிறபோது அவருக்கு புதிதாக interview வைத்து அந்த interview-லே mark போட்டுத் தள்ளுகிறபோது எப்படி S.C., B.C., M.B.C.—யிலே இருப்பவர்கள் வர முடியும்? எனவே இதை அமைச்சர் அவர்கள் கண்காணித்து அவர்களுக்கு வாய்ப்பு கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. குத்தாலம் பி. கல்யாணம்.



2000 நவம்பர் 9]

***திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின் வாரியத்தின் 2000-2001 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கை மற்றும் 1999-2000 ஆண்டுக்கான திருத்திய மதிப்பீடு குறித்த விவாதத்தில் பங்கேற்க வாய்ப்பு அளித்தமைக்கு முதலில் நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கு மின்சாரம் எவ்வளவு அவசியம் என்பதை இப்போது உலகம் முழுமையாக அறிந்திருக்கிறது. மின்சாரம் இன்றி மனித வாழ்வே இல்லை என்பதுதான் இப்போது நடைமுறையிலே இருக்கிற ஒரு யதார்த்தமான உண்மை.

இந்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் புதிய மின் திட்டங்களுக்கு சென்ற ஆண்டைவிட கூடுதலாக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. பற்றாக்குறை காரணமாக நிதி குறைக்கப்படவில்லை. வளர்ச்சிப் பணிகள் தொடர்ந்து நடைபெறுவதற்கு ஏதுவாக இருக்கக்கூடிய ஒரு நிலையை அரசு எடுத்திருப்பதை நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். பல்வேறு சிரமங்களுக்கிடையில் மின் வாரியத்தின் மூலம் பல்வேறு சாதனைகளை நிகழ்த்தி வரும் தமிழக அரசையும் மாண்புமிகு முதல்வர் அவர்களையும், மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களையும் இந்த நேரத்திலே நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

2000-2001ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் பற்றாக்குறை இடைவெளி ரூ.1,272 கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது. இப்பற்றாக்குறைக்கு முக்கிய காரணம் விவசாய மின் இணைப்புகளுக்கு இலவச மின்சாரம் அளிப்பதுதான். மின் உற்பத்தியில் 26% விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கப்படுகிறது. மத்திய அரசு விவசாய மின் இணைப்புகளுக்கு கட்டணம் வசூலிக்க வேண்டும் என்ற நெருக்குதல் தந்த போதிலும் விவசாயிகளின் நலன் கருதி, இழப்பு ஏற்பட்டாலும் இந்த அரசு "சொல்வதைச் செய்வோம், செய்வதைச் சொல்வோம்" என்ற கொள்கையை விவசாயிகளுடைய பிரச்சினையிலே கடைப்பிடித்து வருவதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த அரசு பொறுப்பேற்றபோது ஒரு பத்திரிகையிலே ஒரு செய்தி வந்தது. அது என்ன செய்தி என்றால் 'தமிழகம் அடுத்த ஆண்டுகளில் இருளில் மூழ்கப் போவது நிச்சயம்' என்கிற செய்தி. அந்தச் செய்தி நூற்றுக்கு நூறு உண்மைக்குப் புறம்பானது என்று நிரூபித்துக் காட்டியிருக்கிற தமிழக அரசினுடைய மின் துறை அமைச்சர் அவர்களையும், அந்தத் துறையையும் நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12-35

அந்தப் பத்திரிகையிலே இன்னொன்றையும் சொல்லியிருந்தார்கள். 'அறிவிக்கப்பட்டும் துவக்கப்படாத திட்டங்கள்' என கேலி செய்யப்பட்டிருந்தது. ஆனால், நல்ல முறையில் செயல்பட்டுவரும் இந்த அரசு திட்டங்களை நிறைவேற்றி மின் உற்பத்தியில் தன்னிறைவு நிலையை ஏற்படுத்தியுள்ளதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த நேரத்திலே நான் சொல்ல விரும்புவது, நாகை மாவட்டம் நரிமணத்திலே இருக்கிற எரிவாயு மின் சுழலி இயந்திரத்தினுடைய ஆயுட்காலம் முடிந்துவிட்ட காரணத்தினால் மின் உற்பத்தி நிறுத்தப்பட்டிருக்கிறது. அந்தக் கட்டுமானப் பணிகள் அப்படியே இருக்கிற காரணத்தினால், மீண்டும் அதைத் தொடங்கி நடத்த வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று. பிள்ளைப்பெருமாள்நல்லூர் மின் திட்டம் மற்றும் கோவில்களப்பால் மின் திட்டம் ஆகியவற்றின் பணிகள் முடிந்து மின் உற்பத்தி தொடங்குகிற நிலையில் இருக்கின்றன. சுதந்திரம் அடைந்தபின் முதல் முறையாக தமிழ்நாட்டில் தேவைக்கு அதிகமாக மின் உற்பத்தி செய்யப்படும் சாதனையை நிகழ்த்தியுள்ள மாநிலம் நம்முடைய தமிழ் மாநிலம். இதற்காக மாண்புமிகு முதல்வர் அவர்களையும், மின்சாரத் துறை அமைச்சர் அவர்களையும் மின் வாரியத் தலைவர் போன்ற அலுவலர் பெருமக்களையும் நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இதே நேரத்தில், 'ஒரே நாளில் மின் இணைப்புத் திட்டம்' என்கின்ற ஒரு புரட்சிகரமான திட்டத்தை நிறைவேற்றியிருப்பது வரவேற்கத்தக்க ஒன்று. மேலும் இங்கே குறிப்பிடப்பட்டுள்ள குறுகிய காலத்தில் பயனளிக்கும் மின் உற்பத்தித் திட்டங்களில் ஒன்றான எரிவாயுத் திட்டத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருப்பது பாராட்டக்கூடிய ஒன்று.

என்னுடைய குத்தாலம் தொகுதியில் 100 மெகாவாட் மின்சாரம் தயாரிக்கும் திட்டத்திற்கான விவரம் இந்த நிதிநிலை அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது. ரூபாய் 350 கோடியில் இப்படிப்பட்ட ஒரு அரிய, மிகப்பெரிய திட்டம் என்னுடைய தொகுதியிலே அமைய நிதி ஒதுக்கீடு செய்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், இந்தத் திட்டத்தை வழங்கிய மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்களுக்கும், இந்தத் திட்டத்திற்கான நிலம் கையகப்படுத்த பெரிதும் உதவியுள்ள



மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில், ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ள நிலையில் 2003 ஆம் ஆண்டில் திட்டம் செயலாக்கத்திற்கு வரும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதற்குக் காரணமாக இருக்கிற மின் வாரியத் தலைவர் அவர்களையும், தொடர்புடைய அதிகாரிகளையும் நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். மேலும் இந்தத் திட்டத்திற்கான நிலத்தைக் கையகப்படுத்த Emergency Clause-ல் போடப்பட்டுள்ள 4(1)-Notification நடவடிக்கையை விரைவாக துரிதப்படுத்தி இந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தர வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் நம்முடைய மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் ஒருமுறை இந்த மாமன்றத்திலே எனக்குப் பதிலளிக்கிறபோது "குத்தாலத்திலே எவ்வளவு எரிவாயு கிடைக்கிறதோ, அதை முழுமையாக இந்தத் திட்டத்திற்குப் பயன்படுத்திக் கொள்வோம்" என்று சொன்னார்கள். இந்தத் திட்டத்தின் உற்பத்தி அளவான 100 மெகாவாட்டோடு மேலும் 100 மெகாவாட் மின்சாரம் அதிகமாக தயாரிக்கக்கூடிய அளவிற்கு குத்தாலம் பகுதியில் நிரம்ப எரிவாயுக் கிணறுகள் கிடைத்துக் கொண்டிருக்கின்றன என்ற மகிழ்ச்சியான செய்தியைச் சொல்ல விரும்புகிறேன். எனவே இந்தத் திட்டத்திற்கான உற்பத்தித் திறனை, மெகாவாட்டைக் கூட்டுகிற அளவிற்குப் போதிய அளவில் இடவசதியும், எதிர்காலத்தில் கிடைக்கக்கூடிய வாய்ப்புள்ள அந்த இடத்தில் ஏற்படுத்த வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு இந்தத் திட்டத்திற்காக 6 கிலோ மீட்டர் தூரம் வரை சாலை போட வேண்டிய நிலை இருக்கிறது. கோமல் ஷேத்திரபாலபுரம் சாலையிலிருந்து மருத்தூர் கிராமம் வரை சாலை போட வேண்டும். அதையும் இந்தத் திட்டம் முழுமையாகச் செயல்பட அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் என்னுடைய குத்தாலம் தொகுதி, கடலங்குடியில் 230 கிலோவாட் துணை மின் நிலையப் பணிகள் முடியும் தருவாயில் இருக்கின்றன. ஆனால், அதேநேரத்தில் நடைபெற வேண்டிய simulta-neous-ஆக ஒரே நேரத்தில் நடைபெற வேண்டிய 110 கிலோவாட் துணை மின் நிலையப் பணி இன்னும் தொடங்கப்படவில்லை. ஆரம்ப நிலையிலேயே இருக்கிறது. அதையும் விரைந்து முடித்துத் தருமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. குத்தாலம் பி. கல்யாணம்] [2000 நவம்பர் 9

இதுநாள் வரையிலும் நாகை மாவட்டமும், திருவாரூர் மாவட்டமும் ஏன் ஒன்றுபட்டத் தஞ்சை மாவட்டமும் மின்சாரத்திலே கடைமடைப் பகுதிகளாக இருந்தன. அதாவது Tail end என்று சொல்லக்கூடிய நிலை இருந்தது. இப்போது அவற்றையெல்லாம் மாற்றக்கூடிய அளவிற்குப் பல்வேறு திட்டங்களைக் கொண்டு வந்து இந்த அரசு நிறைவேற்றியிருக்கிறது.

பிற்பகல் 12-40

அடுத்தபடியாக நாகை மாவட்டத்திலே இருக்கிற வைத்தீஸ்வரன் கோயிலிலே ஒரு துணை மின் நிலையம் அமைக்க தேவையான இடத்தை மின்சார வாரியத்திற்கு ஒப்படைக்க நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் அதிகக் கவனம் செலுத்தி அந்த இடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. இன்னும் அந்த துணை மின் நிலையப் பணி தொடங்கப்படவில்லை என்பதை அரசினுடைய கவனத்திற்கு நான் கொண்டு வருகின்றேன்.

இன்னும் ஒன்றே ஒன்று. இங்கே பேசிய நண்பர்கள் எல்லாம் சொன்னார்கள். இந்த சுயநிதி மின் திட்டத்தைப் பொறுத்த அளவிலே இந்தியாவிலேயே மிக அதிகமாக விவசாய மின் இணைப்புகளை அளித்து சாதனை படைத்துள்ள ஒரே அரசு தமிழக அரசுதான் என்பதை இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்வது, இந்த 10 ஆயிரம், 20 ஆயிரம் ரூபாய் திட்டத்தில் 10 ஆயிரம் ரூபாய் கட்டினால் மின் இணைப்புத் தர வேண்டும் என்ற குறிப்பிட்ட அளவுக்குள்ள அந்த இலக்கினை மேலும் உயர்த்தித் தர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று. மின் வாரிய அலுவலகங்களில் உதவிப் பொறியாளர் இயக்குதலும், பேணுதலும், அலுவலகங்கள்—O&M—மக்கள் தொடர்புடைய முக்கியமான அலுவலகங்களாகும். இந்த அலுவலகங்கள் அனைத்திலும் தொலைபேசி வசதி ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். காரணம், மின் தடை, மின் தடங்கல் ஏற்படுகின்ற காலங்களில் விரைவில் மின்னோட்டம் அளிக்க இயலும். எனவே இந்தப் பிரிவுகளில் தொலைபேசி வசதியை செய்து தர வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இந்த அரசைப் பொறுத்த அளவிலே, அதிலும் நம்முடைய மின் துறையைப் பொறுத்த அளவில் நான் முன்னாலேயே



2000 நவம்பர் 9] [திரு. குத்தாலம் பி. கல்யாணம்]

சொன்னதைப்போல, பத்திரிகைகள் எல்லாம் பயமுறுத்திய நிலையில் இந்த ஆட்சிப் பொறுப்பை ஏற்று திறம்பட செயல்பட்டதால் இப்போது அதே பத்திரிகைகள் எல்லாம் பெரிதும் பார்த்துப் பாராட்டக்கூடிய அளவுக்கு மின் துறையிலே திட்டங்கள் நிறைவுபெற்றிருக்கிறபடியால் இந்த அரசையும், அமைச்சரையும் பாராட்டி அமைகின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்.

**திரு. எஸ்.எஸ். முகம்மது இஸ்மாயில்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2000-2001 ஆம் ஆண்டு மின் வாரிய நிதிநிலை அறிக்கையின்மீது தமிழ் மாநில தேசிய லீக் இயக்கத்தின் சார்பாக எனது கருத்துக்களை எடுத்துச்சொல்ல முன்வருகிறேன்.

தமிழகத்திலே விவசாயிகளுக்காக இலவச மின்சாரத்தைத் தொடர்ந்து வழங்கி சாதனை படைத்துக் கொண்டிருக்கிற தமிழக அரசினுடைய மின்சாரத் துறை அமைச்சராக பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிற மின் துறை அமைச்சர் அவர்கள், எத்தனை சிரமங்கள், கஷ்டங்கள் வந்தாலும் அவற்றை ஏற்றுக்கொண்டு, மத்திய அரசானது விவசாயிகளுக்கு மின் இணைப்பு வழங்குவதைத் தடை செய்தாலும் அவற்றையெல்லாம் தகர்த்தெறிந்து, தமிழகத்திலே வாழக்கூடிய ஏழை விவசாயப் பெருங்குடி மக்களுக்கு இலவச மின்சாரத்தை வழங்குவதுதான் இந்த அரசினுடைய சாதனை என்ற அடிப்படையிலே தொடர்ந்து வழங்கி இப்போது விவசாயிகளுடைய நன்மதிப்பையும், பாராட்டையும் பெற்றிருக்கிறார் என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்வதிலே பெருமகிழ்வடைகின்றேன்.

அதேபோன்று 24 மணி நேரத்திலே மின் இணைப்பு வழங்கும் புரட்சிகரமான ஒரு புதிய திட்டத்தை நம்முடைய மின் துறை அமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பிறகு அறிமுகப்படுத்தி, தமிழகத்திலே இப்போது ஒரு சாதனை படைத்திருக்கிறார்கள். எனவே, சாதாரண, சாமானிய மக்கள், நடுத்தர மக்கள் அத்தனை பேர்களும் பாராட்டுகின்ற வகையில் செயல்பட்டுக் கொண்டிருக்கிற மின் துறை அமைச்சர் அவர்களை தமிழ் மாநில தேசிய லீக் கட்சியின் சார்பில் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். 1996 ஆம் ஆண்டு தமிழகத்திலே மொத்த உற்பத்தித் திறன் 6,908 மெகா வாட் என்று இருந்த நிலைக்கு மாறாக தற்போது உற்பத்தித் திறன் 7,120 மெகா வாட் என்ற அளவிற்கு

உயர்ந்துள்ளது என்றால் அந்தத் துறையை கவனித்து வருகின்ற மின் துறை அமைச்சர் அவர்களும், அவரோடு பணியாற்றுகின்ற துறையைச் சார்ந்த அதிகாரிகளும் சிறப்போடு பணியாற்றி தமிழகத்திற்கு இப்பெருமையை ஈட்டித் தந்திருக்கிறார்கள் என்பது புலனாகும். இதை எண்ணிப் பார்க்கும்போது, இங்கே மின் தடை இல்லாமல் எந்தவிதமான சிரமங்களும் இல்லாமல் இந்தத் துறை சிறப்பாகச் செயலாற்றி வருகிறது என்பதை இங்கே எடுத்துச் சொல்வதில் நான் பெருமை அடைகின்றேன்.

அதேபோன்று ஊரக மின்மயமாக்கித் திட்டத்தின்கீழ் 1999-2000 ஆண்டு 40,000 விவசாயப் பம்பு செட்டுகளுக்கும் 2000-2001 ஆம் ஆண்டில் 40,000 குடிசைகளுக்கும் மின் இணைப்பு கொடுக்க மின் திட்டத்திலே உத்தேசிக்கப்பட்டுள்ளது. திட்டம் சாராப் பணிகளைப் பொறுத்தவரையில் 2000-2001 ஆம் ஆண்டில் ஊரக மின்மயமாக்கும் கழகம் NABARD மற்றும் வணிக வங்கிக் கடனுதவி பெற்று விரைவில் அமல்படுத்த அரசு முன்வந்துள்ளதை இங்கே வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

அதேபோன்று எங்கள் தொகுதியில் ஆற்றோரப் பகுதியில் இருக்கிற விவசாயப் பெருங்குடி மக்கள் தாங்கள் வைத்துள்ள பம்புசெட்டுகளுக்கு மின் இணைப்புப் பெறுவதற்காக விண்ணப்பித்திருக்கிறார்கள். இந்நிலையில் Oil Engine வைத்துச் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். சில இடங்களில் அவர்கள் மின் இணைப்பைப் பெறுவதற்கு விண்ணப்பம் செய்தும் துறையினுடைய அதிகாரிகள் அவர்களிடத்திலே பாரபட்சம் காட்டி காலதாமதப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே என்னுடைய அரவக்குறிச்சி தொகுதிக்குட்பட்ட பரமத்தி, சின்னதாராபுரம் போன்ற பகுதியிலே வாழக்கூடிய விவசாயப் பெருங்குடி மக்கள் ஆற்றுப் படுகையிலிருந்து தண்ணீர் எடுப்பதற்குத் தேவையான மின் இணைப்பு பெறுவதற்கு உரிய வழிமுறைகளை இலகுபடுத்தி அவை கிடைப்பதற்குரிய வழிவகைகளைச் செய்து கொடுக்குமாறு இந்த நேரத்திலே பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-45

அதேபோன்று என்னுடைய அரவக்குறிச்சி தொகுதியிலே தொழிற்சாலைகள் தொடங்குவதற்குத் தேவையான உயர் அழுத்த மின் இணைப்புப் பகுதி எதுவும் கிடைக்கப்பெறவில்லை. இவற்றைப் பற்றி கடந்த கூட்டத் தொடரிலேயே மாண்புமிகு அமைச்சரிடத்தில் எழுதிக்கொடுத்திருந்தேன். ஆகவே, என்னுடைய அரவக்குறிச்சி வறண்ட பகுதியாக இருக்கிற காரணத்தால் அங்கே தொழிற்சாலைகள் தொடங்குவதற்கு உரிய வகையிலே, Three face supplies உயர் மின் அழுத்தப் பகுதி கிடைப்பதற்கு உரிய வழிவகைகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



அதேபோல என்னுடைய தொகுதியிலே உள்ளடங்கிய பள்ளப்பட்டி நகரத்திலே இஸ்லாமியப் பெருமக்களும், பிற்படுத்தப்பட்ட மக்களும் வாழ்கின்ற பகுதிகளிலே 110 கே.வி. அழுத்தம் உள்ள மின்சாரம் வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே எழுதிக் கொடுத்திருந்தேன். கடந்த ஆண்டே அதற்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. கரூர் மாவட்ட S.E. அவர்களால் அது விரைவில் தொடங்கப்படும் என்று அறிவிப்புச் செய்திருந்தார்கள். ஆனால் இன்னும் அதற்குரிய பணிகள் ஆயத்தப்படுத்தபபடவில்லை; அதில் காலதாமதம் இருந்து கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டி அதை விரைவிலே செய்து கொடுக்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்திலே மின்சார வாரியமானது மின் கட்டணத்தை நேரடியாக வசூல் செய்கின்ற ஒரு திட்டத்தை உருவாக்கி மக்களிடத்திலே நல்ல மதிப்பையும் பாராட்டுதலையும் பெற்றிருக்கிறது. அதையும் தமிழ் மாநில தேசிய லீக் கட்சியின் சார்பிலே வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பள்ளப்பட்டியிலே இருக்கக்கூடிய மின் நிலையமானது, இப்போது மக்கள்தொகை அடிப்படையின் காரணமாக விரிவாக்கம செய்யப்பட்டிருக்கிறது. ஆனால், அந்த மின் வாரிய அலுவலகத்திலே ஒரேயொரு தொலைபேசிதான் உள்ளது. அந்தத் தொலைபேசி A.D. அல்லது A.E. அவர்களால் மட்டும் உபயோகப்படுத்தப்படுகிறது. Fuse of call போன்றவற்றை எழுதிவைத்துவிட்டு வருவதற்கும், தொலைதூரத்தில் உள்ளவர்கள் தொடர்பு கொண்டு, மின்சாரம் பெறுவதற்கும் L.I. போன்றவர்களுக்கு டெலிபோன் வசதி செய்துகொடுக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் அங்கே பணியாற்றிக் கொண்டிருக்கிறவர்கள் அங்கேயே தங்கியிருப்பதற்கு குடியிருப்பு வளாகம் கட்டிக் கொடுக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் அவர்கள் அலுவலகத்தை விட்டு, தொலைதூரத்திலே இருக்கின்ற காரணத்தால் இரவு நேரங்களில் ஆபத்து மற்றும் விபத்து ஏற்படுகின்ற நேரத்திலே தொடர்பு கொண்டு

அவர்களை அழைத்து வருவதற்கு வசதி வாய்ப்புகள் இல்லாமல் இருக்கிறது. அவர்கள் குடியிருக்கின்ற வீடுகளிலிருந்து அவர்களை அழைத்து வரவேண்டிய நிலை இருக்கின்ற காரணத்தால், தமிழக அரசு பொறுப்பேற்றவுடன் எல்லாத் துறைகளிலும் பணியாற்றுகின்றவர்களுக்கும் குடியிருப்பு வளாகம் கட்டிக் கொடுத்திருப்பதைப்போல, அந்தப் பகுதியில் வாழுகின்ற குறிப்பிட்ட நபர்களுக்காவது குடியிருப்பு வளாகம் கட்டிக் கொடுத்து அவர்களை அந்தப் பகுதியிலே அமரச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதனால் அந்தப் பகுதியில் உள்ளவர்களுக்கு வசதியாக இருக்கும் என்றும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல குடிசை வீடுகளுக்கு ஒற்றை மின்விளக்கு அளிக்கும் திட்டத்திலே, என்னுடைய தொகுதியிலே இன்னும் சில பகுதிகளிலே உள்ள குடிசை வீடுகளுக்கு மின் இணைப்பு கிடைக்காமல் இருக்கிறது. இதைப்பற்றி மாவட்ட ஆட்சித் தலைவரிடம் எடுத்துச் சொல்லியிருக்கிறேன். லிங்கமநாயக்கன்பட்டி, பெரியமஞ்சபள்ளி, பாப்பநாயக்கன்பட்டி போன்ற கிராமங்களிலே குடிசைகள் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். ஆதிதிராவிட மக்களுக்கு ஒற்றை விளக்குத் திட்டத்தின்கீழ் விளக்குகள் வழங்குவது வரைமுறைப்படுத்தப்பட்டு நிதியொதுக்கீடு செய்யப்பட்ட அளவு முடிந்து விட்டது என்று அங்கேயுள்ள துறையின் அதிகாரிகள் சொல்கின்றார்கள். ஆகவே, அவற்றை அதிகப்படுத்தி அவர்களுக்கு இந்தத் திட்டத்தின்கீழ் மின் இணைப்பு கொடுக்க வேண்டுமாய் கேட்டு, வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி உரையை முடித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மின்வாரிய நிதிநிலை அறிக்கைமீது சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகின்றேன். ஏற்கெனவே நம்முடைய மாநிலத்தினுடைய மின் தேவை என்பது எந்த அளவிற்கு அதிகரிக்கப்பட்டாலும், இன்னும் அந்தத் தேவை பூர்த்தி அடைகிற நிலையில் இல்லையென்பதுதான் பொதுவாக உள்ள கருத்து.

பொதுவாக கன்னியாகுமரி மாவட்டத்தில் அனல் மின் நிலையம் ஆரம்பிப்பதற்கான ஏற்பாட்டை ஒரு காலகட்டத்தில் செய்தார்கள். மணவாளங்குறிச்சி என்ற பகுதியிலே அது அரசினுடைய திட்டத்திலே இருக்கிறதா இல்லையா என்பது தெரியவில்லை.



இதேபோல அறிவிக்கப்படாத மின்வெட்டு, யதார்த்தமாக எங்களுடைய மாவட்டத்திலே இருக்கின்றது. எங்களுடைய பகுதியிலே விளவங்கோடு தாலுகாவிலே, குறிப்பாக காலையிலே 9 மணி, இல்லையென்றால் 10 மணிக்கு, 1 மணி, 1-1/2 மணிக்கு இல்லை என்ற அந்தச் சூழ்நிலை இருந்து வருகின்றது.

மின்சாரத்தைப் பயன்படுத்துபவர்கள் சுமார் 1 கோடிக்குமேலே இருக்கின்றார்கள். அந்தப் பயனாளிகளுக்கு முழுமையாக மின்சாரம் கிடைப்பதற்கு உரிய நடவடிக்கையை அரசு மேற்கொள்ள வேண்டும். மத்திய அரசும், மாநில அரசும் இதுசம்பந்தமான சட்டங்களைக் கொண்டு வருவதில் ஏற்பட்டிருக்கின்ற கோளாறுகள் காரணமாக மத்திய அரசினுடைய கையிலே இது முழுமையாகச் சென்று விடாமல்— ஏற்கெனவே ஆந்திர மாநிலத்திலே இந்தச் சூழ்நிலை உருவாகி 1 ரூபாய் 80 காசு என்று இருந்த அந்த நிலை மாறி 7 ரூபாய் என்று உயர்ந்திருக்கின்றது—அந்த நிலைக்குச் செல்லாமல் நாம் பார்த்துக்கொள்ள வேண்டிய கடமை நமக்கு இருக்கின்றது. அந்த அடிப்படையிலே நாம் நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும்.

அதேபோல 1 கோடிக்கு மேலே பயனாளிகள் இருக்கின்றபோது, இந்த வேலைகளைச் செய்வதற்கு பல்வேறு கோணங்களிலே சுமார் 3 வகுப்புகளாக 30 ஆயிரத்திற்கும் அதிகமான ஊழியர்கள் இருக்கிறார்கள்; தொழிலாளர்கள் இருக்கிறார்கள். இதிலே ஒப்பந்தத் தொழிலாளர்களும் இருக்கிறார்கள்; பகுதி நேரத் தொழிலாளர்களும் இருக்கிறார்கள். மொத்தத்திலே அவர்களை நிரந்தரப்படுத்தினால்தான் அந்த நிர்வாகத்தை சீரமைத்ததாக ஆகும். அந்த அடிப்படையிலே நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதுபோன்று நெல்லை மாவட்டத்தில் காற்றாலை மின்சாரத் தொழிலாளர்களை எல்லாம் ஓரளவுக்கு நிரந்தரப்படுத்தியிருக்கிறார்கள். ஆனால் ஆரல்வாய்மொழியில் உள்ள தொழிலாளர்களை நிரந்தப்படுத்தாத ஒரு தன்மை இருந்துகொண்டிருக்கிறது. அவர்களையும் நிரந்தரப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-50

கன்னியாகுமரி மாவட்டத்திலே கொல்லங்கோடு பகுதி என்பது மூன்று வருவாய் கிராமங்களைச் சேர்ந்தது. கொல்லங்கோடு, ஏழுதேசம் மற்றும் ஆறுதேசம் கிராமங்கள். ஏறத்தாழ இலட்சத்திற்கு அதிகமான மக்கள்தொகை உள்ள பகுதிகளாகும். அங்கே குறைந்த மின் அழுத்தப் பிரச்சினை என்பது நீண்டகாலமாகத் தொடருகிற விஷயமாகும். அங்கே

ஒரு Sub-station வேண்டுமென்ற கோரிக்கையும் இருக்கிறது. இன்ன பகுதியிலிருந்து நிலத்தை எடுத்துக்கொண்டால் வசதியாக இருக்கும் என்று அதிகாரிகளுக்குச் சுட்டிக்காட்டியிருக்கிறோம். ஆனால் அதை இன்னும் கொண்டுவராத நிலைதான் இருக்கிறது. அதுபோன்று மார்த்தாண்டம் பகுதியில் மின்சாரத் தேவை என்பது அதிகமாக இருக்கிறது. முழு அளவில் மின்சாரத்தைப் பயன்படுத்திக்கொள்ள முடியாத நிலை இருக்கிறது. அந்தப் பகுதியிலேகூட இடத்தை அதிகாரிகளுக்குச் சுட்டிக்காட்டி இரண்டு ஆண்டுகள் ஆகியும் விஷயம் இழுத்தடிக்கப்படுகிறது. என்ன காரணம் என்று தெரியவில்லை. அந்தவகையிலே ம. .த்தாண்டத்திலே ஒரு துணை மின் நிலையம் உருவாக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோன்று நாகர்கோயிலில் இப்போது பல்வேறு அலுவலகங்கள் வாடகைக் கட்டடங்களில் இருக்கின்றன. ஏறத்தாழ மாதம் 30,000 ரூபாய் அரசாங்கத்திலிருந்து வாடகை கொடுக்கிறோம். ஒரு கண்காணிப்புப் பொறியாளர் அலுவலகத்தை அங்கே கட்டி நான்கு மாதம் முடிந்துவிட்டது என்று நினைக்கிறேன். அதைத் திறப்பதில் ஏன் காலதாமதம் ஆகிறது என்று தெரியவில்லை. அந்தவகையில் அதை உடனடியாகத் திறப்பதற்குரிய நடவடிக்கையை எடுக்க வேண்டும்.

அதேபோன்று வி. எண்ணூரில் ஒரு Sub-station அமைத்தார்கள். அந்த Sub-station-ஐ அமைக்கிறபோது அதில் கொஞ்சம் பேருக்கு வேலைவாய்ப்புத் தருவதாகச் சொன்னார்கள். அதை நிறைவேற்றுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

குழித்துறை அரசு மருத்துவமனையில், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து 10 இலட்சம் ரூபாய் செலவு செய்து பிணவறை கட்டப்பட்டது. அதற்கு மின்சார இணைப்பு வேண்டுமென்று எட்டு மாதங்களாகக் கேட்டுக் கொண்டிருக்கிறோம். மின்சாரம் தருவதற்குக் காலம் கடத்தி வருகிறார்கள். எதைக் கேட்டாலும் 'கன்னியாகுமரி மாவட்டத்தில், விளவங்கோடு தாலுக்காவில் உதிரிப்பொருட்கள் இல்லை, பொருட்கள் வராத காரணத்தினால் வேலை நடைபெறவில்லை' என்று சொல்கிறார்கள். இத்தகைய நிலை இருந்து வருகிறது. இந்நிலையை மாற்றி துரிதமான நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும்.

அதுபோன்று இடைக்கோடு என்ற இடத்தில் ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் இருக்கிறது. அந்த ஆரம்ப சுகாதார நிலையத்தில் Operation



theatre இருக்கிறது. அதற்குக்கூட மின்சாரம் வேண்டுமென்று இரண்டாண்டு காலமாகப் பேசி வருகிறேன். விஷயம் நடந்தபாடில்லை. அதைப்போல மருதங்கோடு கிராமப் பஞ்சாயத்தில் ஒரு பகுதியில், மூன்றாண்டுகளாக இந்த மின் அழுத்தக் குறைவு காரணமாக மண்ணெண்ணெய் லாந்தர் விளக்கில் மாணவர்கள் படிக்க வேண்டிய துரதிருஷ்டவசமான சூழ்நிலை இருக்கிறது. பலமுறை பேசிவிட்டோம். இன்னும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. அதையும் துரிதமாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போன்று மலைப்பாங்கான பகுதிகளான கடையாலுமூடு பேரூராட்சி, புலியூர் சாலை, சிற்றூராட்சி போன்ற கிராமங்களுக்கு எல்லாம், ஒரு விளக்குத் திட்டம் வேண்டும். அதிகாரிகளைக் கேட்டால் முடிந்து போய் விட்டது, அது எல்லாம் காலாவதியான சமாச்சாரம் என்று சொல்கிறார்கள். அவை பின்தங்கியிருக்கிற கிராமங்கள். ஒரு விளக்குத் திட்டத்தின் மூலமாக எதிர்காலத்தில் வளர்ச்சி அடைவதற்கான வாய்ப்பைப் பெற முடியும் என்ற வகையில், அதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து மின்சாரப் பற்றாக்குறை. ஏற்கெனவே கன்னியாகுமரி மாவட்டத்தில் தண்ணீரிலிருந்து மின்சாரம் எடுக்கிற ஒரே ஒரு திட்டம், கோதையாறில் இருக்கிறது. சமீபகாலத்திலே, மூன்று, நான்கு ஆண்டுகளுக்கு முன்னால் பரளியாறு திட்டம் என்ற ஒரு திட்டத்தை எடுத்துக் கொண்டார்கள். அது என்ன நிலையில் இருக்கிறது என்று தெரியவில்லை. ஆண்டுகள் பல ஓடிவிட்டன. என்ன நிலை என்பது தெரியவில்லை. ஆகவே அந்தவகையிலே மின்சாரத்தை அதிகமாக உற்பத்தி செய்வதற்கும், அதை நம்முடைய நாட்டு மக்களுக்கு, பயனாளிகளுக்குக் கிடைக்கக்கூடிய வகையில் நடவடிக்கைகளை உரிய முறையில் மேற்கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

மின் அழுத்தக் குறைவைப் போக்குவதற்கான உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு, துணை மின் நிலையங்களை உரிய பகுதிகளிலே ஏற்படுத்த வேண்டும். மேலும் மின் மாற்றிகளையும் ஏற்படுத்த வேண்டும். குறிப்பாக என்னுடைய தொகுதியிலே பெருவாரியான கிராமங்கள் மலைப்பாங்கான கிராமங்களாக இருக்கின்றன. அங்கே துணை மின் நிலையங்களை ஏற்படுத்த வேண்டும். மேலும் திருவட்டாறு தொகுதியிலும் இதேபோன்ற நிலைதான் இருக்கிறது. அந்தப் பகுதியிலும் மின்சாரம் அழுத்தக் குறைவு இல்லாமல் கிடைப்பதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டு வாய்ப்புக்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. வேலாயுதன்.

*பிற்பகல் 12-55*

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மின்சார வாரிய நிதிநிலை அறிக்கையின்மீது என்னுடைய கருத்துகளைச் சொல்வதற்கு வாய்ப்பு தந்ததற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். வீட்டுக்கு ஒரு மின் விளக்கு என்ற திட்டத்தின் மூலம் சாதாரண ஏழை மக்கள் மிகவும் பயன்பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். அதிலும் தற்போது புறம்போக்குப் பகுதிகளில் வாழ்கிற ஏழைகள்கூட பயன்பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். இது பாராட்டப்படக்கூடிய திட்டம். ஆனால் அதேவேளையில், கன்னியாகுமரி மாவட்டத்தில் அரசாங்க புறம்போக்கு நிலத்தில் இருக்கும் நூலகம், கோயில்கள், வழிபாட்டு ஸ்தலங்கள் போன்ற பகுதிகளுக்கு மின்சார இணைப்பு கேட்டால் வருவாய்த் துறை அதிகாரிகளிடமிருந்து ஆட்சேபணையில்லை என்ற சான்றிதழ் வாங்கி வர வேண்டும் என்று கேட்கிறார்கள். 25 ஆண்டுகளாக இந்த நூலகம் இருக்கின்றது அல்லது கோயில் இருக்கின்றது இன்ன புறம்போக்கில் இருக்கின்றது என்றுதான் எங்களால் வருவாய்த் துறை அதிகாரிகளுக்கு தகவல் கொடுக்க முடியும். ஆட்சேபணை இல்லை என்று—அதுவும் அரசாங்க இடம், ஆட்சேபணை இல்லை என்று—எப்படிச் சொல்ல முடியும்? வீடுகளுக்குக் கொடுக்கும்போது எங்களிடம் ஆட்சேபணை இருக்கின்றதா என்று கேட்பது கிடையாது. ஆனால் இதுமாதிரி பொதுக் காரியங்களுக்கு மட்டும் ஆட்சேபணை இல்லை என்று சான்றிதழ் கொடுங்கள் என்று ஏன் கேட்க வேண்டும். இவ்வாறு கேட்பதன் மூலம் அவர்களுக்குக் கொடுக்க விருப்பமில்லை என்ற தன்மையை அவர்கள் காட்டுகின்றார்கள். எனவே, எப்படி வீடுகளுக்கெல்லாம் கொடுக்கிறீர்களோ, அதேபோன்று ஆலயங்கள், நூலகங்கள், பொது இடங்கள், இவை இன்ன புறம்போக்கில் இருக்கின்றன; இத்தனை ஆண்டுகளாக இருக்கின்றன என்று கொடுத்தால் போதுமானது என்று சொல்கிறார்கள். எனவே, இந்தச் சட்டத்தைச் சற்றுத் தளர்த்தி—அரசாங்க புறம்போக்கு இடத்திற்கு ஆட்சேபணை இல்லை என்று அரசாங்கம் சான்றிதழ் கொடுக்க முடியாது—பிரச்சினை இல்லை, பாதிப்பு இல்லை என்று கருதினால், அவற்றிற்கு மின் இணைப்பு வழங்குவதற்கு உண்டான வாய்ப்பினை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



ஒரு பெரிய பிரச்சினையை நான் சந்தித்தேன். மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுக்கும், தலைவருக்கும்கூட Fax அனுப்பியிருந்தேன். அப்படியும்கூட காரியம் இன்னும் நடைபெறவில்லை. கன்னியாகுமரி மாவட்டத்தில் என்னுடைய தொகுதியில் அழகியமண்டபம் பக்கத்தில் கண்டன்கோணம் என்ற ஊர் இருக்கிறது. அங்கு 43 வீடுகள் இருக்கின்றன. 1998 ஆம் ஆண்டு பஞ்சாயத்து சார்பில் தீர்மானம் போட்டு, தெருவிற்கு கான்கிரீட் போட்டு, 9 மின்கம்பங்கள் அமைத்து, தெருவிளக்குகளும் போட்டிருக்கிறார்கள். தங்களுடைய வீட்டிற்குப் பக்கத்தில் தெருவிளக்குகள் வந்துவிட்டனவே என்று சந்தோஷப்பட்ட ஏழை மக்கள் 15 பேர் அவர்களுடைய வீடுகளுக்கு wiring செய்தார்கள். ஆனால் 1998-லேயிருந்து இதுநாள் வரை அந்த வீடுகளுக்கு மின் இணைப்புக் கொடுக்கப்படவில்லை. என்ன காரணம் என்று கேட்டால், அந்தத் தெருவின் ஆரம்பத்தில் இருக்கக்கூடிய ஒருவர், அது என்னுடைய பட்டா இடம், மின் இணைப்புக் கொடுக்கக்கூடாது என்று சொல்கின்றாராம். அப்படியானால் எப்படி அந்த 9 மின் கம்பங்கள் நடப்பட்டன. தெருவிளக்குகள் போடப்பட்டன? வீடுகளுக்கு மின் இணைப்புக் கொடுக்கக்கூடாது என்று ஒருவர் மறுத்துக் கொண்டிருக்கிறார். உண்மையிலேயே அரசாங்க அதிகாரிகள், A.E. போன்றவர்கள், அவரிடம், record-களைக் கொண்டு வா என்று கேட்டிருக்க வேண்டும். உங்களுடைய ஆவணங்களைக் கொண்டு வாருங்கள் என்று கேட்காமல், 3 ஆண்டுகளாக காலம் கடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வேலாயுதன் அவர்கள் சொல்வதுபோல, தெருவிளக்குகள் போடப்பட்டதற்குப் பிறகு வீடுகளுக்கு இணைப்பு கொடுக்கின்ற நேரத்தில் அந்த இடம் தனக்குச் சொந்தம் என்று யாராவது சொந்தம் கொண்டாடி இணைப்பு கொடுக்கக்கூடாது என்று தெரிவித்திருந்தால், மாண்புமிகு உறுப்பினர் அந்தக் குடியிருப்புதாரரைப்போய் அணுகி Indemnity Bond-ஐ மின்சார வாரியத்திற்கு எழுதிக் கொடுக்கச் சொல்லி, மின் இணைப்பு பெற்றுக் கொள்ளலாம். அந்த ஏற்பாட்டை மாண்புமிகு உறுப்பினர் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. சி. வேலாயுதன்:** இதில் சம்பவம் என்னவென்று சொன்னால், அது தன்னுடைய சொந்த இடம் என்று சொன்ன அந்த நபரிடம் அதிகாரிகள், ஆவணங்களைக் கொண்டு வாருங்கள் என்று கேட்டிருக்கலாம். அப்படிக் கேட்காமல், 3 ஆண்டுகள் காலம்

கடத்திவிட்டார்கள். தற்போது, என்னுடைய தலையீட்டிற்குப் பிறகு, அவரிடம் ரெகார்டுகளைக் கேளுங்கள் என்று சொன்னதற்குப் பிறகு, அது அவருடைய பட்டா பூமி இல்லை என்றும், தாசில்தார் வேறு 9 பேர்களுடைய பட்டா record-களையும் கொடுத்திருக்கிறார். அந்த 9 பேர்களுக்கும் ஆட்சேபணை இல்லை. ஆக இப்படி யாரோ ஒருவர் சொன்னார் என்ற காரணத்திற்காக மின்வாரிய அதிகாரிகள் இவ்வாறு நடந்துகொள்கிறார்கள் என்று சொன்னால், அவர்களுடைய இத்தகைய நடவடிக்கையினால்,. பாமர ஏழை மக்கள் 3 ஆண்டுகளாகக் காத்துக் கொண்டிருக்கிறார்கள். அதன் பிறகு என்னுடைய முயற்சியால், மாவட்ட ஆட்சித் தலைவர் தலையீட்டால், அங்கே மின் இணைப்பு கொடுத்த பிறகு, 3 மின் கம்பங்களை அதே நபர் அடித்து, உடைத்து விட்டார்; அவரை காவல் துறை கைது செய்தது. ஆனால், இப்போது 1 மாதம் ஆகிவிட்டது. இன்னும் Line கொடுக்கவில்லை. இதை நான் ஏன் சொல்கிறேன் என்றால்—இந்த அளவுக்குப் பிரச்சினை உள்ள ஒரு நபர் மீது காவல் துறை நடவடிக்கை எடுத்தாகிவிட்டது, காவல் துறை எந்தப் பிரச்சினையும் இல்லை என்று எழுதியாகிவிட்டது— மாதம் ஒன்றாகிவிட்டது. இன்னும் line கொடுக்கவில்லை. எனவே, இதை கவனத்தில் கொண்டு அரசாங்கம் செயலாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏழை மக்கள் எந்த அளவிற்கு வாடுகின்றார்கள்; சட்டமன்ற உறுப்பினராகிய நான் தலையிடுகிறேன். ஆனாலும்கூட அந்தக் காரியம் இன்னும் நடைபெறவில்லை என்பது வேதனையான சம்பவம்.

அதேபோன்று 1965-ல் போடப்பட்ட பல மின் கம்பங்கள் இப்போதும் நன்றாக இருக்கின்றன. ஆனால் 1993, 1995 ஆம் ஆண்டுகளில் போடப்பட்ட மின் கம்பங்கள் கீழே விழக்கூடிய நிலை இருக்கிறது. ஆகவே, 1965-ல் யாரிடம் கான்ட்ராக்ட் கொடுத்தார்கள் அல்லது எப்படிச் செய்தார்கள் என்று அந்தத் தொழில்நுட்பத்தினைத் தெரிந்து, அதைப் பயன்படுத்தி, அதேபோன்று நல்ல முறையிலே மின்கம்பங்ளைத் தயாரிக்கக்கூடிய சூழ்நிலையை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும்.

அதேபோன்று என்னுடைய ஊரில் கீழக்கருப்புக்கோடு, மேலக்கருப்புக்கோடு இணைப்புச் சாலை என்று ஒரு சாலை வருவதற்கு முன்னால், மின்கம்பங்களை வயல்வெளியில் நட்டுக் கொண்டிருந்தார்கள். இப்போது சாலை வந்தாகிவிட்டது. சாலை வந்தபிறகு சாலை ஓரத்தில் மின் கம்பங்களை அமைத்தால் சாலைக்கு மின் விளக்கு கிடைக்கும். மேலும் தென்னை மரங்களின் ஓலைகள் எல்லாம் அடித்து மின்



கம்பங்கள் பாழாகாமல் தடுப்பதற்கும் வாய்ப்பு உள்ளது. அதை மாற்றியமைக்க வேண்டும் என்று சொன்னால், பஞ்சாயத்தில் சொல்கிறார்கள், ஒரு கம்பம் நடுவதற்கு இவ்வளவு பெரிய தொகை எங்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று. எனவே ஒன்றிரண்டு கம்பங்களைக் குறைத்துக் கொள்ளுங்கள் என்று சொல்கிறார்கள். இரண்டும் அரசாங்கத் துறைகள்தான். ஆகவே, அரசாங்கம் இதில் என்ன செய்ய முடியும் என்பதைப் பார்த்து, மின் கம்பங்களை மாற்றியமைப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

பிற்பகல் 1-00

அதுபோன்று சாலைகள். தேசிய நெடுஞ்சாலையில் ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டு விட்டது. 10,15 அடிக்கு ஆக்கிரமிக்கப்பட்ட கடைகள் எல்லாம் அகற்றப்பட்டு சாலை இப்போது மிகச் சிறப்பாக, பெரியதாக இருக்கிறது. ஆனால் முதலிலிருந்த 15 அடி உள்ளே இருக்கக்கூடிய மின் கம்பங்கள் இன்னும் மாற்றப்படவில்லை. வருடங்கள் பல ஆகிவிட்டன. சம்பந்தப்பட்ட பஞ்சாயத்தோ அல்லது முனிசிபாலிட்டியோ பணம் கட்ட வேண்டும் என்று மின் வாரியம் சொல்ல அவர்கள் எங்களிடம் பணம் இல்லை என்று சொல்ல மீண்டும் அந்த ஆக்கிரமிப்பு வரக்கூடிய நிலை இருக்கிறது. ஆக்கிரமிப்பை அகற்றுவதற்கு அரசாங்கம் செலவு செய்த அந்தப் பணம் Waste. ஆக மீண்டும் ஆக்கிரமிப்பு ஏற்படக்கூடிய நிலை இருக்கிறது. இவற்றை கருத்திற்கொண்டு இதுபோன்ற ஆக்கிரமிப்புகளை அகற்றிய இடத்திலாவது திரும்பவும் ஆக்கிரமிப்பு வருவதைத் தடுக்கக்கூடிய வகையில் இந்த மின்கம்பங்களை விரைந்து மாற்றி அமைக்க அரசாங்கம் ஆவன செய்ய வேண்டும். (மணியடிக்கப்பெற்றது) ஒரு கருத்தை மட்டும் சொல்லி முடிக்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் எந்தவித பெரிய தொழிற்சாலையும் கிடையாது. அங்கே தேங்காய் நாரிலிருந்து கயிறு பின்னக்கூடிய 200 தொழிற்சாலைகள் இருக்கின்றன. அதில் 20,000 பேர் வேலை பார்க்கிறார்கள். தற்போது மின் வாரியத்திலே 1,500 யூனிட்டுக்கு மேலே போனால் ரூ.4.20 வாங்குகிறார்கள். இந்நிலையை மாற்றி 1,500 யூனிட்டுக்குள் இருந்தால் 1 யூனிட்டுக்கு 2 ரூபாய் 90 காசு என்று வாங்கக்கூடிய அளவுக்குச் செய்தால் சிறிய தொழிற்சாலைகள் வளர்வதற்கு வாய்ப்பாக இருக்கும் என்று சொல்லி வாய்ப்புக்கு நன்றிகூறி, அமர்கின்றேன்.

*'வாழிய செந்தமிழ், வாழ்க நற்றமிழர்*
*வாழிய பாரத மணித்திருநாடு*
*வந்தே மாதரம்! வந்தே மாதரம்!*
*பாரத் மாதாகீ ஜே!*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மின் வாரியத்தின் நிதிநிலை அறிக்கையில் என்னுடைய கருத்துகளை கூற வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி என்னுடைய உரையைத் தொடங்குகின்றேன்.

மின் உற்பத்தியிலே தனியாரை ஈடுபடுத்தி மின் உற்பத்தியைப் பெருக்குவதற்கு இந்த அரசு பல்வேறு முயற்சிகளைச் செய்து வருகிறது. அது பாராட்டுக்குரிய விஷயமாகும். அதேநேரத்திலே மேலும் தனியார்களை ஊக்கப்படுத்தி, அவர்களை இத்தொழிலில் ஈடுபடுத்த வேண்டுமாய் இந்த அரசை நான் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாடு எரிவாயு மின் திட்டம், நரிமணம் 10 மெகாவாட் மின் உற்பத்தி செய்து வந்தது. அந்தப் பகுதியிலே போதுமான அளவிற்கு எரிவாயு இருந்தும்கூட அந்தத் திட்டத்தை மூடுவதற்கு இந்த அரசு உத்தரவு பிறப்பித்திருக்கிறது. அங்கே உள்ள machine-களை scrap-க்கு விற்பனை செய்வதற்காகவும், அந்தப் பகுதியை குடியிருப்புப் பகுதிகளாக பயன்படுத்துவதற்காகவும் ஓர் உத்தரவு பிறப்பித்திருப்பதாக நான் அறிகிறேன். நிறைய இயற்கை எரிவாயு கிடைக்கிற வாய்ப்பு இருக்கிற காரணத்தினால், அந்தத் திட்டத்தை மீண்டும் விரிவுபடுத்திச் செய்வதற்குப் பதிலாக அதை மூடுவது என்பது முறையான காரியமாக இருக்காது. ஏனென்றால் மின்சாரப் பற்றாக்குறையால் நாம் இப்போது மிகவும் கஷ்டத்தை அனுபவித்துக்கொண்டு வரும் சூழ்நிலையில் அந்தப் பகுதியிலே தினம்தினம் மின்வெட்டு இருக்கக்கூடிய சூழ்நிலையில் அதை மூடுவது என்பது எப்படிச் சாத்தியமாகும்? அல்லது முறையாகும் என்பதை நான் அறிய விரும்புகிறேன். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இவற்றைக் கருத்திற்கொண்டு, அந்தத் திட்டத்தினை 100 மெகாவாட் கொண்ட திட்டமாக, 100 கோர்டி ரூபாய் செலவிலே செய்வீர்களேயானால் பலன் கிடைக்கும். ஏனென்றால் அந்த இடத்திலே infrastructure facilities இருக்கிறது; இட வசதி இருக்கிறது; மற்ற வசதிகள் எல்லாம் இருக்கின்றன. மத்திய அமைச்சர்கூட 'நிறைய எரி



மின்வாயு இருக்கிறது, அதைப் பயன்படுத்தாமல் தமிழக அரசு விட்டுக்கொண்டு இருக்கிறது' என்று குறிப்பிட்டு இருக்கிறார்கள். ஆகவே அந்த உத்தரவை வாபஸ் செய்து அதை மீண்டும் இயக்க வேண்டுமாய் நான் கேட்டுக்கொள்கிறேன்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு, கீளையூர் ஒன்றியத்திலே, வேட்டைக்காரன்இருப்பு பகுதியிலே துணை மின்நிலையம் அமைக்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உறுதியளித்திருந்தார்கள். அதுசம்பந்தமாக ஒரு வேலைகூட தொடங்கப்படவில்லை என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்; ஏற்கெனவே கொண்டு வந்தேன். இதுகுறித்து Member (Distribution) அவர்களைச் சந்தித்து மனு கொடுத்திருந்தேன். ஆனால் இதுவரையில் அந்தத் திட்டத்தைத் தொடங்கவில்லை. அந்த இடத்திற்கு 5 மணிக்கு மேலே சென்றால் இருண்டு கிடக்கிறது, ஒரு தெருவிளக்குகூட எரிய மாட்டேன் என்கிறது. ஆகவே இதுகுறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்தில்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நிறைய இடங்களில் H.T. line பழுதடைந்து ரொம்ப மோசமான நிலையிலிருக்கிறது. இதனால் பலர் இறப்புக்குள்ளாகிறார்கள். நிறைய இடங்களில் wire அறுந்து விழுந்து நிறைய பேர் இறக்கிறார்கள். 1999 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 20 ஆம் தேதி நாகூரில் முகம்மது பக்ருதீன் என்பவர் ஒயர் அறுந்து விழுந்ததால் இறந்தார். அதற்கு, நிதி கேட்டு நான் மனுச் செய்திருந்தேன். அந்தக் குடும்பத்திலே 2½ வயதிலேயும், 3½ வயதிலேயும் இரண்டு சிறிய குழந்தைகள் இருக்கின்றன. ஆனால் அங்கேயிருந்த அதிகாரி அவர்களிடம் போய், 'நான் இழப்புக்கு வழக்காடுமன்றம் செல்ல மாட்டேன்' என்று எழுதிக் கொடுத்தால் நான் நிவாரணத் தொகையைத் தருகிறேன் என்று அந்தக் குடும்பத்தை மிரட்டிப் பார்த்திருக்கிறார். ஆனால் அவர்கள் எழுதிக் கொடுக்கவில்லை. என்னிடம் இதுகுறித்து கேட்டார்கள். 'நீங்கள் அப்படி எழுதிக் கொடுக்க வேண்டியதில்லை; அரசாங்கம் ஆரம்பத்தில் 20,000 ரூபாய், 30,000 ரூபாய் கொடுக்கும். அதனால் கோர்ட்டிற்குச் செல்ல மாட்டேன் என்று எழுதிக் கொடுத்து விடாதீர்கள். உங்களுக்கு முழுமையாகக் கிடைக்க வேண்டிய நியாயமான தொகை கெட்டுவிடும்' என்று சொல்லி தடுத்து விட்டேன். இப்படி அவர்களிடம் போய் 25,000 ரூபாய் தருகிறேன், நான் வழக்காடுமன்றம் செல்ல மாட்டேன் என்று எழுதிக் கொடுங்கள் என்று கேட்பது எந்த வகையில்

நியாயமாகும்? அது ஒரு ஏழை குடும்பத்தை பாதிப்பதாக அமைந்து கொண்டிருக்கிறது. ஆகவே, உடனடியாக அவர்களுக்கு தற்காலிக இழப்பீட்டுத் தொகை வழங்க வேண்டும். அதுமட்டுமல்லாமல் முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து அவர்களுக்குக் குறைந்தது இரண்டு இலட்சம் ரூபாயாவது வழங்க வேண்டும். ஏனென்றால் அந்த இளம் விதவையின் வயது 22. 3½ வயதிலே ஒரு பெண் குழந்தையையும், 2½ வயதிலே ஒரு ஆண் குழந்தையையும் வைத்துக்கொண்டு நடுத்தெருவில் தத்தளித்துக் கொண்டிருக்கிறார்கள். இது முழுக்க முழுக்க இலாகாவினுடைய தவறுதான். காலை 5 மணிக்கு short ஆகிறது. வெளியே போய்ப் பார்க்கிறார். மேலே wire-ல் கால் வைத்து இறந்து போகிறார். இதுகுறித்து எந்த நடவடிக்கையையும் இலாகா செய்யவேயில்லை. அவர்களுக்கு ஒரு ரூபாயைக்கூட நிவாரணத் தொகையாகத் தரவேயில்லை. ஆகவே இதுபோன்று இந்த ஆட்சியில் நடக்கக்கூடாது என்பதற்காகக் குறிப்பிடுகிறேன். உடனடியாக நிவாரணத் தொகை வழங்கப்பட வேண்டுமென்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கருத்திலேகொள்ள வேண்டும்.

பிற்பகல் 1-05

அதுபோல நாகூர், நாகப்பட்டினம், வேளாங்கன்னி, நாகூர் தர்கா, சிக்கல், திருநள்ளாறு போன்ற ஊர்கள் இருப்பதால் சுற்றுலாப் பயணிகள் வந்து செல்லும் இடமாக இருக்கிறது. அங்குள்ள எல்லா டிரான்ஸ்பார்மர்களிலும் மின்அழுத்தக் குறைவு இருக்கிறது என்றே சொல்கிறார்கள். பட், பட் என்று வெடிக்கிறது. கந்தூரி நேரத்தில் 14 நாட்களில், 8 நாட்கள் மின்சாரமே இல்லை. பல இலட்சம் பேர் கூடக்கூடிய நிலையிலே, இருட்டினால் ரொம்ப சிரமப்பட்டுக் கொண்டிருந்தோம். ஆகவே இதையெல்லாம் மாற்றி அமைப்பதற்கான ஏற்பாடுகளை இந்த அரசு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல ராசிமணல் மின்திட்டம் தொடர்ந்து எந்தவித செயல்பாடும் இல்லாமல் இருந்துகொண்டிருக்கிறது. நமக்கு மிகவும் மோசமான மின்பற்றாக்குறை இருந்து அதைச் சந்தித்துக் கொண்டிருக்கிற சூழ்நிலையில் இப்போது இருக்கக்கூடிய இந்த அரசு, மத்திய அரசோடு தொடர்புடைய அரசாக இருக்கிற காரணத்தால் இப்பொழுது விட்டால் எப்போதும் செயல்படுத்த முடியாது என்பதால் இந்த ஆட்சிக் காலத்திலேயே அந்த ராசிமணல் மின்திட்டத்தைச் செயல்படுத்த வேண்டும். அப்படிச் செயல்படுத்தும்போது பல நூறு மெகாவாட்



மின்சாரத்தை நாம் பெற முடியும். இந்தத் திட்டத்தில் கர்நாடகத்திற்கு பங்கு கொடுத்தாவது எப்படியாவது செயல்படுத்த வேண்டும். இல்லையெனில், மிகவும் மோசமான நிலையை நாம் எய்த வேண்டியிருக்கும்.

நான் ஏற்கெனவே சென்ற கூட்டத் தொடரில் வலியுறுத்திப் பேசினேன், tariff-ஐப் பற்றி. இரண்டுவிதமான tariff - commercial, non-commercial, domestic tariff என்பது மக்களை ஏமாற்றுவதாக இருக்கிறது. Non-commercial-ம் மக்கள்தான் கொடுக்கிறார்கள், Commercial-ம் மக்கள்தான் கொடுக்கிறார்கள். அப்படி இருக்கும்போது இரண்டுவிதமாக ஏன் வைக்கவேண்டும். பொதுவாக ஒரு பொருளை உற்பத்தி செய்யும்போது அந்தப் பொருள் மக்களைத்தான் சென்றடைகிறது. ஒரு paint-ஐ உற்பத்தி செய்தால், அந்தப் paint-ஐ உற்பத்தி செய்பவன் கூடுதலாக charge செய்தால், அந்த charge யாரிடம் போய்ச் சேருகிறது என்றால் மக்களிடம்தான் போய்ச் சேருகிறது. மக்கள்தான் அந்த paint-ஐ வாங்கி பயன்படுத்துகிறார்கள். அப்படியானால் இதில் ஏன் இரட்டை வேடமான நிலை. ஆகவே ஒரே மாதிரியான common tariff இருக்கவேண்டும். ஏன் என்றால் நாம் transparency, transparency என்று சொல்லிக் கொண்டிருக்கிறோம். இப்படி இருக்கும்போது இதில் எப்படி transparency வரும்? consume செய்வது மக்கள்தான். தொழிற்சாலைக்குக் கொடுத்தால்கூட, தொழிற்சாலைகாரனா உற்பத்தி செய்த பொருளை பயன்படுத்திக் கொண்டு போகிறான்? எந்தப் பொருளை உற்பத்தி செய்தாலும், அந்தப் பொருள் மக்களைத்தான் சென்றடைகிறது. ஆகவே, auditing-ல் நிறைய பேரைப் போடவேண்டி இருக்கிறது. இது செலவைக் கூட்டுகிறது. எனவே, இரண்டுவிதமான tariff-ஐ எடுத்துவிட்டு common tariff கொண்டுவரப்பட வேண்டும். Slab system எல்லாம் வைக்கக்கூடாது. (குறுக்கீடு) நான் மின்சாரக் கட்டணத்தைப் பற்றிச் சொல்கிறேன். மின்சாரக் கட்டணத்தில் domestic, non-domestic என்று இரண்டு சிஸ்டத்தை வைத்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, domestic, non-domestic என்று இரண்டு கட்டணத்தை வைத்திருப்பதாகச் சொல்கிறார்கள். வீடுகளுக்கு ஒரு கட்டணத்தை வசூலிக்கிறோம். 300 யூனிட்டுக்குக் கீழே இருந்தால் ஒரு கட்டணம். 300 யூனிட்டுக்கு மேலே என்றால் 3 ரூபாய் ஒரு யூனிட்டுக்கு என்று வைக்கிறோம். வீட்டையும் வைத்துக்கொண்டு அதிலே அலுவலகமோ, அல்லது கடையோ அல்லது commercial activities இருந்தால் அதற்கு அவர்கள் commercial tariff தான்

கொடுக்கவேண்டும். வீட்டுக்காரர் புத்திசாலியாக இருந்தால் மேலே குடியிருக்கிறோம், கீழே கடை வைத்திருக்கிறோம், எனவே மேலே இருக்கக்கூடிய பகுதிக்கு domestic service-ம், கீழே இருக்கக்கூடிய பகுதிக்கு commercial service-ம் எடுக்கிறோம் என்று விண்ணப்பம் கொடுத்தால் இரண்டுக்கும் தனித்தனியாக கட்டணம் வசூலிப்பார்கள். ஆகவேதான் இப்போது மின்சார வாரியமே என்ன செய்திருக்கிறது என்றால், மக்கள் இந்தத் திட்டத்தைப் புரிந்துகொள்ளாமல், வீட்டையும் கட்டிவிட்டு அதற்குப் பிறகு அதிலே கடையையும் வைத்துக்கொள்கிறார்கள் என்பதற்காக அவர்களுக்கு அவகாசம் கொடுத்து. யார் யார் இப்படி tariff-ஐ மாற்றிக்கொள்ள வேண்டுமென்று விரும்புகிறார்களோ அவர்கள் ஒரு விண்ணப்பம் கொடுத்தால் உடனடியாக commercial tariff தனியாகவும், domestic tariff தனியாகவும் பிரித்துக் கொடுக்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசியதன் மூலம் ஏற்கெனவே மின்சார வாரியம் இதை அறிவித்திருந்தாலும் பொதுமக்கள் இந்தத் திட்டத்தைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பா. கோபால். (குறுக்கீடு)

**திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் இரண்டுவிதமான tariff ஏன் என்றுதான் கேட்கிறேன். ஒரு கடையை வைத்திருந்தால்கூட அந்தக் கடையிலுள்ள பொருளை வாங்குவது, மக்கள் தான். ஆகவே இரண்டுவிதமான tariff என்பது தவறானதாகும். அதாவது indirect ஆகவும் மக்கள்தான் கொடுக்கிறார்கள், direct ஆகவும் மக்கள்தான் கொடுக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** அப்படிப் பார்த்தால் மின்சார வாரியம் உற்பத்தி செய்கின்ற மின்சாரத்தை ஒரே tariff என்று வைத்து எல்லோருக்கும் ஒரே கட்டணத்தை வசூலிக்கலாம். ஆனால் அப்படி முடியாது. தொழிற்சாலைக்குத் தனி. அதிலேகூட High Tension தொழிற்சாலைகளுக்குத் தனி; Low Tension தொழிற்சாலைகளுக்குத் தனி; பள்ளிகளுக்குத் தனி; வீடுகளுக்குத் தனி. அலுவலகத்திற்குத் தனி என்று தான் வைத்திருக்கிறோம். ஏனென்றால், வீடுகளிலே குடியிருப்பவர்களுக்கு வீட்டு வசதிக்காக அவசியம் தேவை. வீடுகளுக்கு மின்சாரம் தேவை. வியாபாரம் செய்கின்றவர்கள் இலாபம் சம்பாதிக்கிறார்கள். அதிலிருந்துதான் மின்சாரக் கட்டணத்தை செலுத்தப்



போகிறார்களே தவிர, வீட்டிலே குடியிருந்து கொண்டு தனியாக செலுத்தப் போவதில்லை. (குறுக்கீடு)

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசியல் கட்சி அலுவலகங்களுக்குக்கூட commercial தான் போடுகிறார்கள். சேவை செய்வதற்கு என்று சேவைச் சங்கங்கள் வைத்திருந்தால்கூட commercial என்று போடுகிறார்கள். இந்தமாதிரி இருப்பதற்குக்கூட விதி விலக்கு அளிக்கலாம். அவர் சொல்வது correct. நீங்கள் பரிசீலனை செய்ய வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. நிஜாமுதீன், உங்கள் நேரம் முடிந்துவிட்டது, 9 நிமிடங்கள் பேசியாகிவிட்டது. திரு. பா. கோபால். (குறுக்கீடு)

**திரு. ஜி. நிஜாமுதீன்:** ஒரேயொரு point. அதேமாதிரி, விவசாயத்திற்கு இலவசமாக மின்சாரம் வழங்கப்படுகிறது. அதற்குள் நான் போக விரும்பவில்லை. ஆனால், கிட்டத்தட்ட வருடம் ஒன்றுக்கு 900 கோடி ரூபாய்க்கு மின்சாரம் வழங்கப்படுகின்றது. இந்தத் தொகை அரசிடமிருந்து வாங்கப்படவில்லை, இந்தச் சுமையெல்லாம் மக்கள்மீதே சுமத்தப்படுகிறது என்ற குற்றச்சாட்டு தொடர்ந்து அந்த யூனியன் மூலமாகவும், இதுகுறித்து ஆய்வு செய்து எழுதுவதன் மூலமாகவும் நாட்டுக்கு வந்துகொண்டே இருக்கிறது. இதனுடைய உண்மை நிலை என்ன? இந்த 900 கோடி ரூபாய்க்கான மானியம் அரசிடமிருந்து பெறப்படுகிறதா? அல்லது அதை ஈடு செய்ய மக்கள் தலையில் கட்டுகிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

பிற்பகல் 1-10

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பா. கோபால்.

**திரு. பா. கோபால்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மின்வாரிய நிதிநிலை அறிக்கையின்மீது பேசுவதற்கு வாய்ப்பு அளித்த தங்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழகத்தினுடைய மின் தேவையில் கணிசமான மின் உற்பத்தியை வழங்குகின்ற மேட்டூர் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுத்து இங்கே பேசுகின்ற வாய்ப்பளித்த மேட்டூர் தொகுதி மக்களுக்கும், தங்களுக்கும் என்னுடைய முதற்கண் நன்றி. மேட்டூர் அனல் மின் நிலையம் 840 மெகாவாட் அனல் மின் நிலையமாகத் தொடங்கப்பட்டு, தொடங்கிய காலத்திலிருந்து மத்திய அரசினுடைய உற்பத்திக்கான

விருதைப் பெற்று வருகிறது என்பது பெருமைக்குரிய ஒன்றாகும். அதற்காக மின் வாரியத்தினுடைய அனைத்து ஊழியர்களுக்கும், நம்முடைய மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியை, பாராட்டுதலை முதலில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேட்டூர் அனல் மின் நிலையம் கட்டுவதற்காக நிலம் எடுக்கப்பட்டதிலிருந்து பாதிக்கப்பட்டவர்களுக்கெல்லாம் வேலைவாய்ப்பு வழங்கப்பட்டு வந்தது. தற்போது மேட்டூர் அனல் மின் நிலையத்தின் சார்பாக ஒரு சாம்பல் அணை, மேல் சாம்பல் அணை கட்டுவதற்காக, சா. புதுரெட்டியூர், புதுசின்னாகாவூர் பகுதிகளைச் சார்ந்த 300-க்கும் மேற்பட்ட விவசாயிகள் தங்களுடைய நிலங்களை மின் வாரியத்திற்குக் கொடுக்க சம்மதித்துள்ளார்கள். அப்படிக் கொடுக்கச் சம்மதித்த நிலங்களை எடுத்து நில ஆர்ஜிதம் முடிவதற்கு முன்பாகவே, வருவாய்த் துறை Enter upon permission கொடுப்பதற்கு முன்பாகவே அங்கே அணையைக் கட்டி அதிலே சாம்பல் நீரைத் தேக்கி வைப்பதால், அந்தப் பகுதி விவசாயிகள் மிகப் பெரிய போராட்டங்களை எல்லாம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அந்தப் போராட்டங்கள் நடத்தியதன் அடிப்படையில் நம்முடைய மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் பாதிக்கப்பட்ட விவசாயிகளையும், மின் வாரியத்தினுடைய அதிகாரிகள், மாவட்ட ஆட்சித் தலைவர் உட்பட வருவாய்த் துறை அதிகாரிகளை எல்லாம் அழைத்து ஒரு முத்தரப்புக் கூட்டத்தை நடத்தினார்கள். அந்த முத்தரப்புக் கூட்டத்திலே பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு, வட சென்னை அனல் மின் நிலையத்தில் எவ்வாறு வேலைவாய்ப்புகள், வீட்டுமனைகள் வழங்கப்பட்டதோ அந்த அடிப்படையிலே வழங்கப்பட வேண்டுமென்ற ஒரு முடிவு எடுக்கப்பட்டு, 1997 ஆம் ஆண்டிலிருந்து கடந்த மூன்று ஆண்டுகளாக காலம் கடத்தப்பட்டு இன்னும் அவர்களுக்கு வேலைவாய்ப்பும் வழங்கப்படாத நிலை உள்ளது. அதைப்போலவே நில ஆர்ஜிதம் முழுமையாக முடிக்கப்படாத நிலை உள்ளது. பாதிக்கப்பட்டவர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா கொடுக்கப்படாத நிலையெல்லாம் இருந்துகொண்டிருக்கிறது. நான் மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சரைக் கேட்டுக்கொள்வதெல்லாம் இந்தப் பிரச்சினையிலே தாங்கள் உடனடியாகத் தலையிட்டு இதனை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும். நான் தொகுதிக்குள் சென்றால் தினமும் இந்தப் பிரச்சினையைத்தான் சந்திக்க வேண்டியிருக்கிறது. எனவே, மின்சார வாரியத்தினுடைய அதிகாரிகளுக்கு தக்க அறிவுரை வழங்கி, இந்தப் பிரச்சினையை முடித்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





மேட்டூர் அனல் மின் நிலையத்தில் சற்றேறக்குறைய 2 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஒப்பந்தத் தொழிலாளர்கள் 4, 5 ஆண்டுகாலமாக தொடர்ந்து பணியாற்றி வந்தார்கள். நம்முடைய மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் மேட்டூர் வந்தபோது பல்வேறு தொழிற்சங்கங்கள், ஊழியர்கள் எல்லாம் எங்களை நிரந்தரமாக்க வேண்டுமென்று ஒரு கோரிக்கையை வைத்தார்கள். நம்முடைய மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் அந்த விழாவிலேயே உடனடியாக உங்கள் கோரிக்கை கவனிக்கப்பட்டு நீங்கள் எல்லாம் நிரந்தரம் ஆக்கப்படுவீர்கள் என்று அறிவித்ததற்கிணங்க 2 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்களை நிரந்தரமாக்கி, அவர்களுடைய குடும்பத்திலே ஒளி விளக்கு ஏற்றி வைத்திருக்கின்றார்கள். அதற்காக அந்தத் தொழிலாளர்கள் சார்பாக என்னுடைய மனமார்ந்த நன்றியை இந்த நேரத்திலே நம்முடைய மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுக்கும், நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மேலும் நம்முடைய மேட்டூர் தொகுதியிலே இருக்கின்ற கீழ் மேட்டூர் நீர் மின் திட்டத்திற்காக நிலம் கையகப்படுத்தப்பட்டபோது பாதிக்கப்பட்ட விவசாயிகளின் குடும்பத்தினருக்கு பன்னெடுங்காலமாக வேலைவாய்ப்புகள் வழங்கப்பட்டு வந்தன. அவ்வாறு வேலைவாய்ப்பு வழங்கப்பட்டு வந்ததில் தற்போது என்னுடைய தொகுதியில் 12 பேருக்கு மட்டும் வேலைவாய்ப்பு கிடைக்கவில்லை. அவர்களுக்கு நேர்காணல் எல்லாம் நடத்தப்பட்டுவிட்டது. நேர்காணல் நடத்தப்பட்ட பின்னர், அவர்களுக்கு வருவாய்த் துறையினுடைய அத்தாட்சி வேண்டும், குடும்பத்திலே யாருக்கும் வேலையில்லை என்ற மாவட்ட ஆட்சித் தலைவருடைய சான்றிதழ் வேண்டும் என்று எல்லாம் கேட்டார்கள். அந்தச் சான்றிதழ்களும் கொடுக்கப்பட்டுவிட்டன. இருந்தாலும்கூட இன்னும் மின் வாரியத்திலிருந்து அவர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்படவில்லை. அவர்களுடைய நீண்டநாள் கோரிக்கையை கனிவுடன் பரிசீலித்து அவர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள இந்த நேரத்திலே ஆசைப்படுகிறேன்.

பிற்பகல் 1-15

என்னுடைய தொகுதியில் ஜலகண்டபுரம் பகுதியிலே 110 கிலோவாட் துணை மின் நிலையம் வேண்டும் என்று பன்னெடுங்காலமாகக் கேட்டுக்கொண்டிருந்தோம். 20 ஆண்டுகாலமாக நிறைவேற்றாத கோரிக்கையை நம்முடைய மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்களும், நம்முடைய மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்

அவர்களும் கவனித்து இப்போது அந்தக் கோரிக்கையை நிறைவேற்றி இருக்கிறார்கள். 611 இலட்சம் ரூபாய் திட்ட மதிப்பீட்டிலான அந்தத் துணை மின் நிலையத்தை 6 ஆண்டுகாலத்திலே நம்முடைய மின் வாரியத்தின் அதிகாரிகள் செய்து முடித்து மிகப்பெரிய பாராட்டுதல்களைப் பெற்று இருக்கிறார்கள். அதற்கு அந்தப் பகுதி மக்கள் சார்பாக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய தமிழகத்தில் 2 இலட்சத்திற்கும் மேற்பட்ட தொகுப்பு வீடுகள் கட்டப்பட்டு இருக்கின்றன. அவற்றிற்கு ஒரு விளக்கு மின்சாரம் வழங்கப்படாமல் இருக்கின்றது. அதை உடனடியாக வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த அரிய வாய்ப்பை நல்கிய தங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின் வாரியத்தின் 2000-2001 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின்மீது என்னுடைய கருத்துகளை இங்கே முன்வைக்க விரும்புகிறேன். முதலாவதாக மின் வாரியத்தினுடைய சிறப்புமிகு செயலாற்றலின் காரணமாக மின் வாரியத்திற்கு இதுவரையிலே ஏற்பட்டுவந்த தேசிய சராசரி மின் இழப்பானது 21 விழுக்காடாக இருக்கும்போது, நம்முடைய அமைச்சர் அவர்களுடைய சிறப்பான செயல் திட்டத்தின் காரணமாக தமிழ்நாட்டில் மின் இழப்பானது 16.75 விழுக்காடாக குறைக்கப்பட்டு இருப்பதை நான் பாராட்டி வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். மேலும் பல முயற்சிகளின் காரணமாக இந்த மின் இழப்பை மேலும் குறைக்க முயற்சிகள் எடுக்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்து இருக்கிறார்கள். அதை நான் பாராட்டி வரவேற்கிறேன்.

தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்தின் மூலமாகவும், Reliance Industry-ன் மூலமாகவும் இணைந்து செயல்படுகின்ற என்னுடைய மாவட்டத்தில் உள்ள ஜெயங்கொண்டம் நிலக்கரி சுரங்கத் திட்டத்திலே, இப்போது மின் கொள்முதல் ஒப்பந்தத்திற்கு வாரியம் ஒப்புதல் அளித்து இருக்கிறது. இந்தநேரத்திலே மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு நான் ஒன்றைக் கொண்டுவருகிறேன். நெய்வேலி நிலக்கரிச் சுரங்கங்களுக்கு இடம் தந்து, இன்றையவரையிலே இடர்பட்டுக் கொண்டிருப்பவர்களுடைய நிலைமைகளை எல்லாம்



கவனத்திலேகொண்டு ஜெயங்கொண்டம் நிலக்கரி சுரங்கத் திட்டத்திற்கு நிலம் கையகப்படுத்துகிறபோது, நிலம் தந்தவர்களுக்கு உரிய நட்ட ஈடாக குறைந்தபட்சம் 5 இலட்சம் ரூபாயாவது வழங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முயற்சி எடுக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. தீரன் அவர்கள் தமிழ்நாட்டினுடைய வளர்ச்சியிலே அக்கறை உள்ளவர் என்பதை நான் நன்கு அறிவேன். அந்தப் பகுதியில் இந்தத் திட்டம் வருவதற்கு முன்னால் ஒரு ஏக்கர் நிலத்தை 5,000 ரூபாய், 10,000 ரூபாய் கொடுத்து வாங்குவதற்கு ஆள் இல்லை. ஆனால் 10 ஆயிரம் ஏக்கரில் நிலக்கரி எடுத்து கிட்டத்தட்ட 6 ஆயிரம் கோடி ரூபாயில் ஒரு திட்டத்தைக் கொண்டுவர வேண்டுமென்று நினைக்கின்ற நேரத்தில் ஓர் ஏக்கருக்கு 5 இலட்சம் ரூபாய் கொடுங்கள் என்று சொன்னால், அந்தத் திட்டம் வரவும் வராது; அந்தத் திட்டத்தை மூடுவதைத்தவிர வேறு வழியும் இல்லை. நியாயமான விலை என்னவோ, Guide-line value என்னவோ, அதைவிடக் கொஞ்சம் கூடுதலாகக் கொடுங்கள் என்றால், அதிலே பொருள் இருக்கிறது. அதற்காக போட்டி போட்டுக்கொண்டு, பாட்டாளி மக்கள் கட்சி 3 இலட்சம் ரூபாய் என்று சொன்னால், உடனே, திரு. தீரன் அவர்கள் ஓர் ஏக்கருக்கு 5 இலட்சம் ரூபாய் கொடுக்க வேண்டுமென்று சொல்வதன் மூலம் அந்த மக்கள் மத்தியிலே இப்படிப்பட்ட உணர்வுகளை உருவாக்கி, திட்டமே வராமல் செய்வதற்கு தயவுசெய்து யாரும் தடையாக இருக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே தெரிவித்தார்கள். ஜெயங்கொண்டம் திட்டத்திற்கு 12-7-1999-லே P.P.A. sign பண்ணியதாகச் சொன்னார்கள். ஆனால், இன்றைக்கு வரைக்கும் எஸ்குரோ வரவில்லை. கிட்டத்தட்ட ஓர் ஆண்டு, 3 மாதம் ஆகிவிட்டது. இன்றுவரை அந்த P.P.A.-விற்கான எந்தவிதமான நடவடிக்கையும் இல்லை. அந்தத் திட்டம் வருமா, வராதா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-20

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்ன காரணத்தாலோ உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்களுக்கு திடீரென்று ஒரு கேள்வி. கேட்க வேண்டுமென்று ஆசை தோன்றி இருக்கின்றது. நான் உறுதியாகச் சொல்கிறேன். ஜெயங்கொண்டம் திட்டத்தை அமல்படுத்த வேண்டும் என்பது இந்த அரசாங்கத்தினுடைய நோக்கம். அதை நிறைவேற்றாமல் இருப்பதற்கு விவசாயிகளை சில குறுக்கு வழிகளில் சிலபேர் தூண்டி விடுகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் தீரன் சொல்வதைப்போல் ஓர் ஏக்கருக்கு 5 இலட்சம் ரூபாய் கொடுப்பது என்று சொன்னால், 10 ஆயிரம் ஏக்கருக்கு எவ்வளவு ரூபாய் ஆகும்? இந்தத் திட்டமானது 500 மெகாவாட்டுக்கான திட்டம். கிட்டத்தட்ட 2,000 கோடி, 3,000 கோடி ரூபாய் நிலத்திற்கு மட்டும் கொடுப்பது என்றால், திட்டத்தினுடைய செலவு என்ன, அதனுடைய விளைவு என்ன ஆகும் என்றால், ஒரு யூனிட் மின்சாரம் 10 ரூபாய் ஆகும். ஏனென்றால் நிலத்தினுடைய விலை, திட்டத்தினுடைய செலவு எல்லாம் சேர்ந்துதான் மின்சார உற்பத்தியினுடைய விலையை நிர்ணயிக்க வேண்டியிருக்கிறது. இந்த நாட்டிலே ஒரு யூனிட் மின்சாரம் 10 ரூபாய் என்று சொன்னால் யார் வாங்குவார்கள்? எதற்காக அந்தத் திட்டம்? ஆகவே ஒரு திட்டம் வர வேண்டுமென்று சொன்னால் இவற்றையெல்லாம் எண்ணிப்பார்த்து அதற்கு அங்கேயிருக்கிற மக்கள் பிரதிநிதிகளும் ஒத்துழைக்க வேண்டும்; அனைவரும் ஒத்துழைக்க வேண்டும். இங்கே மாண்புமிகு உறுப்பினர் குத்தாலம் கல்யாணம் அவர்கள் சொன்னதைப்போல, அங்கே ஒரு திட்டம் வரவேண்டுமென்று சொன்னபோது, அவர்கள்கூட அப்படித்தான் கேட்டார்கள். ஏக்கருக்கு 2 இலட்சம் ரூபாய் என்று சொன்னார்கள். பிறகு Guide-line value என்ன இருக்கிறதோ அதைத்தான் கொடுப்போம் என்று சொன்னவுடன், மாண்புமிகு அமைச்சர் திரு. கோ.சி. மணி அவர்களும், குத்தாலம் கல்யாணம் அவர்களும் விவசாயிகளை அழைத்து, 'நம் ஊருக்கு இப்படிப்பட்ட நல்ல திட்டம் வருகிறது. Guide-line value என்னவோ, அதன்படி வாங்கிக்கொள்ளலாம்' என்று அனைவரும் கையெழுத்துப் போட்டுக் கொடுத்தவுடன், இப்பொழுது குத்தாலம் 100 மெகாவாட் பவர் புராஜெக்ட்டை அங்கே தொடங்கவிருக்கின்றோம். 350 கோடி ரூபாயிலே திட்டம் வருகிறது. அந்தப் பகுதியினுடைய பல்வேறு வளர்ச்சிகளுக்கு அது காரணமாக இருக்கும். அதைத்தான் அடிப்படையாகக்கொள்ள வேண்டுமே தவிர தனிப்பட்ட விவசாயிகளுக்கு 10,000 ரூபாய்,



20,000 ரூபாய் மதிப்புள்ள நிலத்தை 5 இலட்சம் ரூபாய் என்று உயர்த்திக் கொடுத்து அல்லது கேட்டு - அதுபோல் செய்து - திட்டம் வராமல் இருப்பதற்கு யாரும் தடையாக இருக்கக் கூடாது என்றுதான் நான் அனைவரையுமே கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. தீரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, இல்லை. நேரம் இல்லை. அடுத்து இன்னொரு உறுப்பினர் பேச வேண்டும். (குறுக்கீடு) நாளைக்கு உங்களுடைய வினாவைக் கேட்டுக்கொள்ளலாம். திரு. சி. ஞானசேகரன், உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. தீரன், பேசி முடிக்கட்டும். திரு. தீரன் ஏற்றுக்கொள்ளமாட்டார். அவருடைய நேரம் போய்விடும், நீங்கள் உட்காருங்கள்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) என்னுடைய நேரத்தை எடுத்துக் கொள்ளாதீர்கள், கொஞ்சம் இருங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உறுப்பினர் சொல்வதை திரு. ஞானசேகரன் கேட்க வேண்டும்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய நாட்டிலே ஒரு பழமொழி உண்டு. 'ஏற்றுக்கோல் அளவிற்குக் கேட்டால் அருவாப்பிடி அளவிற்குத்தான் கிடைக்கும்' என்பார்கள். எனவே, மக்களுடைய எண்ணங்களை பிரதிபலிக்கின்ற வகையிலே நாங்கள் இந்தக் கோரிக்கையை வைக்கிறோமே தவிர, வேறல்ல. அதற்காக எந்த ஒரு நல்ல திட்டமும் அந்தப் பகுதியிலே வருவதற்கு நாங்கள் இடையூறாக இருக்க மாட்டோம். மறைமுகமாக சில பேர்கள் மக்களைத் தூண்டி, இதிலே ஓர் ஆதாயம் அடைவதற்கான சில முயற்சிகளிலே ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதற்கு நாம் வழிவகுத்துவிடக் கூடாது என்ற காரணத்திற்காகத்தான் சொல்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) இப்போதுதான் நான் பேசத் தொடங்கினேன். எல்லோருமே குறுக்கிட்டார்கள். கொஞ்சம் நேரம் கொடுங்கள். எனவே அரசே ஒரு நியாயமான விலையைத் தந்து, நிலம் கொடுத்தவர்களுக்கு கட்டாயமாக ஒரு குடும்பத்தில் ஒருவருக்கு வேலைவாய்ப்பு கிடைக்க ஆவன செய்ய வேண்டுமென்று இந்தநேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல இப்போது விவசாய மின் இணைப்பு மதிப்பீட்டுத் தொகை ஒரு மின்னிணைப்புக்கு 50,000 ரூபாய்க்குமேல் இருந்தால் அந்த விவசாயி முழுத் தொகையையும் செலுத்த வேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறீர்கள். நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் வேண்டுகோளாக வைக்க விரும்புவது 50,000 ரூபாய்க்குமேலே, ரூ. 55,000-மோ அல்லது மேற்கொண்டோ வருகிறபோது, மிகுதியாக வரக்கூடிய அந்த 5,000 ரூபாயை மட்டும் செலுத்தினால் அவர்களுக்கு முன்னுரிமை வழங்குகிறமாதிரி ஆணை பிறப்பித்தால் நலமாக இருக்கும். ஏனென்று சொன்னால், 50,000 ரூபாய் வரையில் உள்ள மதிப்பீட்டுத் தொகையை அரசு ஏற்றுக்கொள்ளும்போது, அதற்குக் கூடுதலாக வரும் மதிப்பீட்டுத் தொகையை விவசாயிகளைக் கட்டச் சொன்னால் அது நியாயம். அதை விடுத்து, 55,000 ரூபாயையும் ஒரு விவசாயி கட்ட வேண்டுமென்றால் அதைக் கட்டுவதற்கு வாய்ப்பு இருக்காது என்ற காரணத்தினாலே, 50,000 ரூபாய்க்கு மேலே கூடுதலாக வரக்கூடிய அந்தத் தொகையை மட்டும் விவசாயிகள் கட்டுவதற்கு அரசு ஆவன செய்ய வேண்டுமென்று நான் இந்தநேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) பேசி முடித்து விடுகிறேன்.

சூரிய மின் சக்தி உற்பத்தியிலே இப்போது ஜப்பானிலே ஒரு நல்லமுறையைக் கடைப்பிடிக்கிறார்கள். சூரிய வெப்ப மின்கலப் பெட்டிகளின் மூலம் மின் உற்பத்தி செய்யும் திட்டம் இப்போது தனியார் சிலரிடம் விடப்பட்டு, அவை மூலம் மின்சாரத்தை அரசு கொள்முதல் செய்து கொண்டிருக்கிறது. அதை அதிகமாக ஊக்கப்படுத்துவதற்கு நிறைய வாய்ப்புகளை ஏற்படுத்தித்தர வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல அரசு அலுவலகங்களிலாவது, வோல்டேஜ் குறைவாகச் செலவாகக்கூடிய நியான் பல்புகளைப் பயன்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்போது சூரிய மின்சக்தியிலிருந்து நாம் நிறைய மின்சாரத்தை எடுக்க வாய்ப்புகள் இருக்கும்போது கூடங்குளம் அணு மின் நிலையத்தினாலே — நான் மீண்டும் மீண்டும் தொடர்ந்து இந்த அவையிலே பல முறை வலியுறுத்தியிருக்கிறேன். கூடங்குளம் அணு மின் நிலையத்தினாலே — கிடைக்கக்கூடிய மின்சாரத்தைவிட அந்த அணு மின் கழிவுகளாலே, அதைப் பாதுகாக்கின்ற முறைகளிலே உள்ள செலவினங்களாலே நமக்கு எதிர்காலத்திலே அதிக சுமையும், அதிக ஆபத்தும் வர வாய்ப்பிருக்கிறது என்ற காரணத்தினாலே, இது மாதிரி இயற்கைச் சக்திகளை, அதாவது சூரிய சக்தியிலிருந்து மின்சக்தி எடுப்பது போன்றவற்றிலே அரசு அதிக அக்கறை செலுத்த வேண்டும். அதிலே





கூடுதலாக மின்சாரம் கிடைக்கிறது. ஆனாலும்கூட சுமார் 10,000 கோடி ரூபாய் இந்தத் திட்டத்திற்குச் செலவாகிறது என்று சொன்னால், சூரிய சக்தியிலிருந்து மின்சக்தி எடுக்கும் திட்டத்தினைச் செயல்படுத்துவதால் ஆகும் செலவு இந்தத் தொகையைவிடக் குறைவாகத்தான் ஆகும். ஆனால் ஆபத்து இல்லாதது.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கூடங்குளம் திட்டம் பற்றி இப்போதுதான் மக்கள் ஓரளவிற்கு அறிந்து, அதனாலே ஆபத்து இல்லையென்று புரிந்துகொண்டு — ரஷ்யாவும் இந்தியாவும் ஒப்பந்தம் செய்ததற்குப் பிறகு — அந்தத் திட்டத்தை வரவேற்று இருக்கிறார்கள். ஏறக்குறைய அடுத்த ஆண்டு இந்தத் திட்டத்தினைத் தொடங்கவிருக்கிறார்கள். இந்த நேரத்திலே மாண்புமிகு உறுப்பினர்கள் போன்றவர்கள் இப்படிப்பட்ட கருத்துகளைச் சொல்வதன்மூலம் அவை பத்திரிகையிலே வந்தால், ஏதோ தங்களுக்கு ஆபத்து என்று சொல்லி மறுபடியும் கூடங்குளம் திட்டம் வராமல் போவதற்குத்தான் மாண்புமிகு உறுப்பினருடைய இந்தப் பேச்சு பயன்படும். அவர் பேச்சால் ஏற்கெனவே அவர் குறிப்பிட்ட ஜெயங்கொண்டம் திட்டம் வருமா என்று எனக்குத் தெரியவில்லை. அதைப்போல இப்போது சொல்லக்கூடிய கூடங்குளம் மின்சாரத் திட்டமும் இப்படிப்பட்ட பேச்சுக்களால் வருமா என்பதும் எனக்குத் தெரியவில்லை. ஏனென்றால் நாம் மக்களுக்கு நல்ல அறிவுரைகளைச் சொல்ல வேண்டும். தவறான அறிவுரைகளைச் சொல்வதன்மூலம் நாட்டு மக்கள் வேறு திசைக்குப் போய்விடக்கூடாது.

பிற்பகல் 1-25

இன்னொரு கருத்தைச் சொன்னார். சூரிய ஒளியின் மூலம் மின்சாரம் பெறுகிற திட்டம். இதைவிடக் குறைவாக இருக்கும் என்று சொன்னார். இந்தக் கூடங்குளம் திட்டத்திற்கு, எவ்வளவு செலவாகுமோ அதைப்போல 10 மடங்கு செலவாகும். சூரிய ஒளியின் மூலம் மின்சாரம் உற்பத்தி செய்யும் திட்டத்தைக் கொண்டுவருவது என்றால் அதிக செலவாகும். மேலும் சூரிய ஒளியின் மூலம் 500 மெகாவாட் 1,000 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியுமா என்றால் முடியாது. அதற்கு ஆகக்கூடிய செலவு அதிகம். அனல்மின் திட்டத்தின்கீழ் ஒரு மெகாவாட் மின் உற்பத்தி செய்ய 4 கோடி ரூபாய் செலவாகிறது என்றால் சூரிய ஒளியின் மூலம் அதே மின்சாரத்தை உற்பத்தி செய்ய வேண்டுமென்றால் இன்றையதினம் ஏறக்குறைய 50 கோடி ரூபாய் செலவாகும். அப்படி மூலதனம் போட்டு

திட்டத்தை உருவாக்கினால் மின்சாரத்தை வாங்கும்போது ஒரு யூனிட் 20 ரூபாய், 25 ரூபாய் என்ற அளவிற்கு ஆகும். ஆகவேதான் சூரிய ஒளி நமக்குக் கிடைத்திருந்தும்கூட அந்த Technology-யை நாம் இன்னும் விரிவுபடுத்துவதற்கு முயற்சிகளை எடுத்துக்கொண்டிருக்கிறோம். இப்போதுதான் — இந்த தெருவிளக்குகள் போன்ற — மலைப் பகுதிகளுக்கு தெருவிளக்குகள் போன்ற விளக்குகளை தயார்செய்து subsidy கொடுத்து அதை வாங்க வைக்கிறோம். எனவே சூரிய ஒளி நமக்கு நல்லது. ஏராளமாகக் கிடைக்கிறது. ஆனால் அதிக முதலீடு செய்ய வேண்டியிருக்கிறது. எனவே, தயவுசெய்து மாண்புமிகு உறுப்பினர் திரு. தீரன் அவர்கள் கூடங்குளம் மின் திட்டத்தைப் பற்றி சொன்ன கருத்துகளை பத்திரிகையிலே வராத அளவிற்கு அவரே திரும்பப் பெற்றுக்கொண்டால் நல்லது. இல்லையென்றால் நிச்சயமாக மறுபடியும் ஒரு போராட்டம் நடைபெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட அந்தக் கருத்துகளை நான் மறுப்பதாக தயவுசெய்து கருதக் கூடாது. நாம் இதிலே அதிகமாக கவனம் செலுத்தி இப்போதைய அறிவியல் சூழ்நிலைகளில் சில பாதுகாப்பு முறைகளை கையாளுவதற்கு வாய்ப்புகள் குறைவு என்ற காரணத்தால்தான் நான் அந்தக் கருத்தைக்கூட சொன்னேன். ஆனால் ஒரு திட்டம் வரக்கூடாது என்பதற்காக அல்ல. இன்றைக்கு இதைப்பற்றி தனியாகக்கூட ஒரு விவாதம் வைத்தால் அமெரிக்கா போன்ற தொழில்நுட்பம் மிகுந்த நாடுகளிலிருந்து நான் பல ஆதாரங்களை எடுத்துக்காட்டத் தயாராக இருக்கிறேன். இருந்தாலும் இந்த விவாதத்தை நீட்டிக்க விரும்பவில்லை. அதிலும் குறிப்பாக தமிழகத்தினுடைய முன்னேற்றத்திற்காக கொண்டுவரப்படுகிற திட்டம் என்கிறபோது, நான் அதிலே தலையிட, குறுக்கீடாக இருக்க விரும்பவில்லை என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு ஒரே ஒரு வேண்டுகோள். மின் வாரியத்திலே நான் பலமுறை அதாவது உதவியாளர்களாக . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. மு. அப்பாவு.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்தத் திட்டம் வர வேண்டும் என்றுதான் விரும்புகிறோம். அந்தப் பகுதியில் யாருமே நாங்கள் அதற்குத் தடையாக இல்லை. நிலம் கொடுக்கும்போதே இந்தத் திட்டம் வந்தால் இந்தப் பகுதி



முன்னேறும் என்ற நல்ல எண்ணத்தோடுதான் கிட்டத்தட்ட 10,000 ஏக்கருக்கு மேற்பட்ட நிலங்களை கூடங்குளம், செட்டிக்குளம் போன்ற பகுதியிலிருந்து நாங்கள் கொடுத்திருக்கிறோம். நாங்கள் இப்போது விரும்புவது, எப்போது இந்தத் திட்டம் வரும் என்பதுதான். எங்களுடைய ஐக்கிய முன்னணியினுடைய மத்திய அமைச்சரவையில் இருந்த முன்னாள் நிதியமைச்சர் திரு. ப. சிதம்பரம் அவர்கள் காலத்தில் 246 கோடி ரூபாய் இந்தத் திட்டத்திற்கு Detailed Project Report-க்காக வழங்கப்பட்டது. அந்த நிதி ஆதாரத்திற்குப் பிறகு மத்திய அரசோ, மாநில அரசோ அல்லது ரஷிய அரசோ இந்தத் திட்டத்தை எப்போது ஆரம்பிக்க வேண்டும், எப்போது ஆரம்பிப்போம் என்பதை மட்டும் இதுவரை தெளிவுபடுத்தவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அடுத்த ஆண்டு ஆரம்பிக்கிறார்கள் என்றால். அதற்கு யார் நிதி வைப்பது? மத்திய அரசா, மாநில அரசா அல்லது ரஷிய அரசா? நாங்கள் கேள்விப்பட்ட அளவில் ரஷிய அரசிடமிருந்து எந்த நிதி ஆதாரமும் இல்லை. பணத்தைத் தந்தால் நாங்கள் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தித் தருகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் இந்தத் திட்டம் எப்போது வரும் என்று இந்தப் பகுதி மக்களுக்கு நீங்கள் தெரிவிக்க வேண்டும். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. தீரன் தனது உரையை முடிக்கட்டும்.

பிற்பகல் 1-30

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு போவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு ஏற்கெனவே கொண்டுவரப்பட்ட செய்தி தான். 1995 ஆம் ஆண்டிலே நிர்வாகப் பிரிவிலே உதவியாளர்களாக 119 பேர் தேர்வு செய்யப்பட்டார்கள். அவர்களுக்கு இன்னும் பணி வழங்கப்படாமல் உள்ளது. இதுகுறித்து துறையினுடைய கவனத்திற்குக் கொண்டுவந்தபோது, காலம் ஆகிவிட்ட காரணத்தினாலே இயலாது என்று சொன்னார்கள். எத்தனையோ பேர்களுக்கு கருணை அடிப்படையிலே பணி வழங்கக்கூடிய இந்த அரசானது, இந்த 119 பேர்களுக்கும் கருணை அடிப்படையிலாவது பணி வழங்க வேண்டும். ஏனென்றால் இதிலே மிகப் பெரும்பான்மையாக தாழ்த்தப்பட்டவர்கள் மிகப் பிற்படுத்தப்பட்டவர்கள், பெண்கள், உடல் ஊனமுற்றவர்கள் இருக்கிறார்கள். மருத்துவச் சான்றிதழ் எல்லாம் அளிக்கப்பட்டதற்குப் பின்னாலே இவர்களின் பணி நிறுத்தப்பட்டிருக்கிறது. எனவே,

[திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்] [2000 நவம்பர் 9

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களிடம் கலந்து பேசியாவது கருணை அடிப்படையிலே நிர்வாகப் பிரிவிலே பணி கிடைக்காமல் நிறுத்தப்பட்டுள்ள 119 பேர்களையும் உதவியாளர்களாக பணி நியமனம் செய்ய அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டு, விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** விவாதம் நாளையும் தொடர இருக்கின்ற காரணத்தால், பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்றன.

பேரவை மீண்டும் நாளை (10-11-2000) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

*பின்னர், பேரவை பிற்பகல் 1-31 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.*

## 8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

61. 24-7-1996 ஆம் நாளிட்ட வணிகவரிகள் மற்றும் அறநிலையத் துறையின் II (1) வ.வ.அ.நி./86/96 ஆம் எண் அறிவிக்கையில் திருத்தங்கள் செய்தது குறித்து வணிக வரிகள் துறையின் 2-8-2000 ஆம் நாளிட்ட 280 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவு மற்றும் 1970 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 14/1970) 4(3) பிரிவு ஆகியவற்றின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

62. 1999 ஆம் ஆண்டு விண்ணப்பம், மதிப்பீடு மற்றும் முறைப்படுத்தல் கட்டணம் வசூல் (சென்னைப் பெருநகர் பகுதிகள்) விதிகளில் சில திருத்தங்கள் செய்தது குறித்து வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 29-9-2000 ஆம் நாளிட்ட 400 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்புச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

63. 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம், 1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரிச் (மேல்வரி) சட்டம்



2000 நவம்பர் 9]

மற்றும் 1970 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரிச் சட்டம் ஆகிய சட்டங்களின்கீழ் 3-4-1991-லிருந்து 30-6-1997 வரையிலான கால அளவிற்கு மசாலா பவுடர் விற்பனைமீது அனைத்து வணிகர்களும் செலுத்தத்தக்க வரி, மேல்வரி, கூடுதல் வரி ஆகியவற்றின் மொத்த தொகையினை தள்ளுபடி செய்வது குறித்து வணிக வரிகள் துறையின் 21-9-2000 ஆம் நாளிட்ட 149 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவு, 1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரிச் (மேல்வரி) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 24/1971) 7(3) பிரிவு மற்றும் 1970 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 14/1970) 4(3) பிரிவு ஆகியவற்றின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது).

64. 1996-97, 1997-98 மற்றும் 1998-99 ஆகிய ஆண்டுகளுக்கான கரூர் மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கைகள். (1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்)

65. 1996-97, 1997-98 மற்றும் 1998-99 ஆகிய ஆண்டுகளுக்கான திண்டுக்கல் மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கைகள். (1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்)

66. 1997-98 மற்றும் 1998-99 ஆகிய ஆண்டுகளுக்கான இராமநாதபுரம் மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கைகள். (1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்)

67. 1998-99 ஆகிய ஆண்டிற்கான தமிழ்நாடு சர்க்கரைக் கழகத்தின் இருபத்து நான்காவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்)

68. 1999-2000 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மாநில வாணிபக் கழகத்தின் பதினேழாவது ஆண்டறிக்கை. (தமிழ்நாடு சாராவி கழகத்தின் பதினொன்றாவது ஆண்டறிக்கை உள்ளிட்டது). (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்)

69. 1999-2000 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றத்தின் ஆண்டறிக்கை. (1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 40/1992) 16-வது பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்)

70. 1997-98 ஆம் ஆண்டிற்கான தருமபுரி மாவட்ட வளர்ச்சிக் கழகத்தின் இருபத்து மூன்றாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது). (தமிழ், ஆங்கிலம்)

## ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

33. தமிழ்நாடு மின் வாரியத்தின் 2000-2001 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை விவர அறிக்கை மற்றும் 1999-2000 ஆம் ஆண்டுக்கான திருத்திய மதிப்பீடு குறித்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் விவாதத்தை தொடங்கி வைத்து மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி அவர்கள் ஆற்றும் உரை. (தமிழ், ஆங்கிலம்)

34. பொதுக் கணக்கு குழுவின் இருநூற்று தொண்ணூற்று ஒன்றாவது அறிக்கை. (2000-2001)

35. பொதுக் கணக்கு குழுவின் இருநூற்று தொண்ணூற்று இரண்டாவது அறிக்கை. (2000-2001)

36. பொதுக் கணக்கு குழுவின் இருநூற்று தொண்ணூற்று மூன்றாவது அறிக்கை. (2000-2001)

37. பொதுக் கணக்கு குழுவின் இருநூற்று தொண்ணூற்று நான்காவது அறிக்கை. (2000-2001)

38. பொதுக் கணக்கு குழுவின் இருநூற்று தொண்ணூற்று ஐந்தாவது அறிக்கை. (2000-2001)



# இணைப்பு

## தமிழ்நாடு மின்சார வாரிய நிதிநிலை அறிக்கை, 2000-2001 மற்றும் திருத்திய மதிப்பீடுகள் 1999-2000

(85 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் அவர்களே,

1. தமிழ்நாடு மின்வாரியத்தின் 2000-2001 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையும் 1999-2000 ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடும் 17-5-2000 அன்று சட்டமன்றப் பேரவையில் வைக்கப்பட்டன. அதனை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென இம்மாமன்றத்தைக் கேட்டுக்கொள்கிறேன். தமிழ்நாடு மின்சார வாரியத்தால், 1948 ஆம் ஆண்டின் மின்சார (வழங்கல்) சட்டத்தின் 61 ஆம் பிரிவின்படி, தமிழ்நாடு மின்வாரிய ஆலோசனைக் குழுவின் ஒப்புதலுடன், தமிழ்நாடு மின்சார வாரியத்தின் நடவடிக்கைகளைப் பற்றிய இந்த நிதிநிலை விவர அறிக்கைகள் அரசுக்கு பணிந்தனுப்பப்பட்டுள்ளன.

2. தமிழ்நாட்டில் மின் உற்பத்தி, மின் செலுத்துகை மற்றும் மின் பகிர்மானம் ஆகியவற்றின் ஒருங்கிணைந்த வளர்ச்சிக்கு சிக்கனமாகவும், சிறப்பாகவும் செயல்பட தமிழ்நாடு மின்சார வாரியம் தீவிர முயற்சி எடுத்துள்ளது. பொருளாதார வளர்ச்சிக்கும், தொழில் வளர்ச்சிக்கும் மின்சாரம் மிக அவசியமான இடுபொருளாகும். இந்த அரசு மின் உற்பத்தியை போதுமான அளவுக்கு உயர்த்தி மாநிலத்தில் மின்தட்டுப்பாடு இல்லாத வண்ணம் பார்த்துக் கொள்வதில் கவனமாக இருக்கிறது. மின் உற்பத்திக்கு, நீர் ஆதாரங்கள் முழுமையாகப் பயன்படுத்தப்பட்டுவிட்ட நிலையில், அனல்மின் உற்பத்திக்கும் குறுகிய காலத்தில் பயன் அளிக்கும் எரிவாயுவை உபயோகித்து அமையும் மின் உற்பத்தி திட்டங்களுக்கும் அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது.

3. இந்த நிதிநிலை அறிக்கையின் மீதான விவாதம் அரசின் திட்டங்களை ஆழ்ந்து விவாதிக்கவும், மின் உற்பத்தியை அதிகப்படுத்துவதற்கான திட்டங்களைப் பற்றி ஆழ்ந்து பரிசீலிக்கவும், மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நல்லதொரு வாய்ப்பாக அமையும் என்று நம்புகிறேன். முதல்கட்டமாக, மாநிலத்தின் தற்போதைய மின்சார நிலைமை பற்றி விளக்க விரும்புகிறேன்.

[2000 நவம்பர் 9

**மின் விநியோக நிலைமை**

4. 1999-2000 ஆம் ஆண்டில் வடகிழக்குப் பருவமழை தீவிரமாக இருந்ததால் நிலத்தடி நீர்மட்டம் திருப்திகரமாக இருந்தது. இதன் காரணமாக விவசாய பம்புசெட்டுகள் முழு வீச்சில் செயல்பட்டு விவசாயம் வளர்ச்சி அடைந்தது. தமிழ்நாட்டின் மின் பயனீட்டு அளவு நாளொன்றுக்கு 119.282 மில்லியன் யூனிட்டுகள் என்ற அளவினை மார்ச் 2000-ல் எட்டி அந்த அளவில் கடந்த கோடைகாலம் முழுவதும் இருந்தது. இராமகுண்டம் அனல்மின் நிலையத்தின் 500 மெகாவாட் மின் உற்பத்தி திறனுள்ள பிரிவு 4, எதிர்பாராத காரணங்களினால் 23-3-2000 முதல் 16-5-2000 முடிய செயல்படவில்லை. மேலும், அந்த மின் நிலையத்தில் உள்ள மற்றுமொரு 500 மெகாவாட் பிரிவு 6, கொதிகலனில் ஏற்பட்ட பழுது காரணமாக 26-5-2000 முதல் 30-5-2000 வரையிலும், 7-6-2000 முதல் 9-6-2000 வரையிலும் செயல்படவில்லை. புனல் மின்நிலைய நீர்தேக்கங்களில், கையிருப்பில் இருந்த நீரை தென்மேற்கு பருவமழை வரும் வரையிலும் சேமித்து வைப்பதற்காக, விவசாய மின் இணைப்புகளுக்கு வழங்கப்பட்டு வந்த 14 மணி நேர மின்சாரம் 12 மணி நேரமாக 15-3-2000 முதல் 10-7-2000 வரை குறைக்கப்பட்டது. இது தவிர நகர்ப்புற மின் விநியோகத்தில் 15-3-2000 முதல் 15-5-2000 வரை தினமும் ஒன்றரை மணி நேர அளவிற்கு பகல் நேரத்தில் மின் விநியோகம் நிறுத்திவைக்கப்பட்டது. மேற்கண்ட நடவடிக்கைகளினாலும், நமது அனல்மின் நிலையங்களின் உற்பத்தியை பெருக்கியதினாலும், மின் கட்டமைப்பின் செயல்பாடுகளை சிறப்பாக கையாண்டும், தமிழ்நாடு மின் வாரியம் கடந்த கோடை மாதங்களின் உச்சகட்ட மின் தேவையை ஈடுசெய்ய முடிந்தது.

5. தமிழ்நாடு மின்சார வாரியம் கிழக்குப் பிராந்தியத்திலிருந்து 88 மெகாவாட் அளவிலான மின் சக்தியினை வாங்குகிறது. மேலும் பாண்டிச்சேரி மின் கழகம், காரைக்காலில் உள்ள தனது எரிவாயு சுழலி மின் நிலையத்திலிருந்து 24 மெகாவாட் அளவிலான மின்சாரத்தினை தமிழ்நாட்டிற்கு வழங்கி வருகின்றது.

6. இந்த ஆண்டில் தென்மேற்கு பருவக்காற்று, செப்டம்பர் மாதம் முடிய போதிய நீர்வரத்தினை தந்துள்ளது. 12-6-2000 முதல் மேட்டூர் அணையிலிருந்து பாசனத்திற்காக நீர் திறந்துவிடப்பட்டது. இதன் காரணமாக தமிழ்நாடு மின்சார வாரியம் கூடுதலாக 360 மெகாவாட் வரை மின்சாரம் உற்பத்தி செய்ய முடிந்தது. இதன் விளைவாக 10-7-2000 முதல் விவசாய மின் இணைப்புகளுக்கு விதிக்கப்பட்டு இருந்த மின் கட்டுப்பாடு விலக்கிக்கொள்ளப்பட்டது. 1999-2000 ஆண்டில் மின் பயனீட்டு அளவு 1998-99 ஆம் ஆண்டை விட 8.9% அதிகமாக இருந்தது. 1999-2000 ஆம் ஆண்டில் உபயோகிக்கப்பட்ட மின் பயனீட்டு அளவு 38,313 மில்லியன் யூனிட்டுகளாகவும் 1998-99 ஆம் ஆண்டில் இந்த அளவு 35,172 மில்லியன் யூனிட்டுகளாகவும் இருந்தது. இந்த ஆண்டு ஏப்ரல் 2000 முதல் செப்டம்பர் 2000 வரையிலான காலத்தில் தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மின் பயனீட்டு அளவு 20,679 மில்லியன் யூனிட்டுகளாகும். 8% (சதவீத) வளர்ச்சி விகிதத்தில் 1-10-2000 முதல் 31-3-2001 வரையிலான காலத்திற்கு, மின் தேவை 20,856 மில்லியன் யூனிட்டுகளாக இருக்கலாம் எனவும், மேற்கண்ட காலத்தில் 20,945 மில்லியன் யூனிட்டுகள் கிடைக்கும் என்பதால் 89 மில்லியன் யூனிட்டுகள் மின்சாரம் உபரியாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



2000 நவம்பர் 9]

7. 30-9-2000 அன்று நிலவரப்படி, மேட்டூர் நீர்த்தேக்கம் நீங்கலாக உள்ள பிற புனல் மின் நீர்த்தேக்கங்களின் நீர் இருப்பு 1,694 மில்லியன் யூனிட்டுகளுக்குச் சமமாகும். இந்த நீர்த்தேக்கங்களின் மொத்த கொள்ளளவு 2393 மி.யூ ஆகும். 30-9-2000 அன்று மேட்டூர் அணையின் நீர் இருப்பு 130 மி.யூ. ஆகும். இதன் கொள்ளளவு 210 மி.யூ. ஆகும். இதே நாளில் சென்ற ஆண்டில் மேட்டூர் நீர்த்தேக்கம் நீங்கலாக நீர் இருப்பு 1456 மி.யூ. ஆகவும், மேட்டூரில் 6 மி.யூ. ஆகவும் இருந்தது. மேட்டூர் அணைக்கு நீர்வரத்து மிகவும் அதிகரித்ததால், அதன் முழு அளவான 120 அடியை அடைந்து, 8-10-2000 அன்று அணை நிரம்பி வழிந்தது.

**கூடுதல் நிறுவு திறன்**

8. கீழ்க்கண்ட தனியார் மின் உற்பத்தி நிலையங்கள் வரும் 2001 ஆம் ஆண்டு கோடைகாலத்திற்குள் இயக்கி வைக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

| வ.எண் | திட்டத்தின் பெயர் | நிறுவு திறன் (மெகாவாட்) |
|---|---|---|
| 1. | சாமல்பட்டி மின் திட்டம் | 106 |
| 2. | பிள்ளைப்பெருமாள்நல்லூர் மின் திட்டம் | 330 |
| 3. | சமயநல்லூர் மின் திட்டம் | 106 |
| | மொத்தம் | **542** |

[2000 நவம்பர் 9

இதுமட்டுமல்லாது கீழே கொடுக்கப்பட்டுள்ள மின் திட்டங்கள் தமிழ்நாடு மின்சார வாரியத்தால் நிறைவு செய்யப்பட்டு, வரும் 2001 ஆம் ஆண்டு கோடைகாலத்தின் மின் சுமையை ஈடுசெய்ய உதவும்.

| வ.எண் | திட்டத்தின் பெயர் | நிறுவு திறன் (மெகாவாட்) |
|---|---|---|
| 1. | திருவாரூர் எரிவாயு மின் திட்டம் | 107 |
| 2. | எண்ணூர் அனல்மின் நிலையத்தில் கூடுதல் திறன | 330 |
| | மொத்தம் | 437 |

இதனால் சென்ற கோடையைவிட கூடுதலாக 979 மெகாவாட் மின்திறன் வரும் 2001 ஆம் ஆண்டு கோடைகாலத்தில் இயக்கத்திற்கு வரும். எனவே வரும் கோடைகாலத்தில் எந்தவொரு மின் தட்டுப்பாடும் இருக்காது என்று உறுதியாக நம்புகிறேன். இதனால், விவசாயிகளுக்கு தற்போது உள்ளது போலவே தொடர்ந்து மின்சாரம் விநியோகிக்கப்படும். மேலும், தமிழ்நாடு மின்சார வாரியம் கீழேகுறிப்பிட்ட ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளினால் மின்சாரத்தின் தரத்தை மேலும் உயர்த்த தொடர்ந்து நடவடிக்கை எடுத்து வருகிறது.

## சிறந்த கட்டமைப்பு ஒழுங்குமுறை

9. தமிழக மின்கட்டமைப்பு இணைக்கப்பட்டுள்ள தென்மண்டல மின்கட்டமைப்பிற்கு ஒழுங்குமுறை நடவடிக்கைகள் தேவைப்பட்டன. எனவே பல்வேறு நடவடிக்கைகள் மூலம், குறிப்பாக மாநிலங்களுக்கிடையே உள்ள 400 கிலோவோல்ட் மின் இணைப்பில் நடைமுறையிலிருந்த தாழ்வு அலை எண் உணர்த்திகளை (Under Frequency Relays) செயல் இழக்க செய்தல் மற்றும் மத்திய மின் ஆணையம், தென்மண்டல மின்வாரியம் ஆகியவற்றுடன் தொடர்ந்து ஒழுங்குமுறைகளை வற்புறுத்தி வந்ததன் விளைவாக தென்மண்டல மின் கட்டமைப்பு வலுவுள்ளதாக மாறியுள்ளது. இதனால் தென்மண்டல மின்கட்டமைப்பில் அடிக்கடி ஏற்பட்டு வந்த மின்கட்டமைப்பின் சரிவு (Grid Collapse) தவிர்க்கப்பட்டுள்ளது. தென்மண்டல மின்கட்டமைப்பில் பல்வேறு பிரச்சினைகள் இருந்தபோதிலும் சரியான வழிமுறைகளை மேற்கொண்டதால் தமிழ்நாடு மின்கட்டமைப்பில் 2000 வருடம் ஜூன் திங்களில் ஏற்படவிருந்த மூன்று பெரிய மின்கட்டமைப்பு சரிவு (Grid Collapse) தவிர்க்கப்பட்டுள்ளது.



2000 நவம்பர் 9]

கட்டமைப்பின் அலை எண்ணை நிலையாக வைப்பதற்கான அவசியத்தை இந்திய அரசிடமும், தென்மண்டல மின்வாரியத்திடமும் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம்.

## மேட்டூர் அணை நீரை உச்ச மின்சுமை நேரத்தில் உபயோகப்படுத்துதல்

10. கோடைகாலங்களில், மேட்டூர் அணையிலிருந்து வெளியேறும் குறைந்த அளவு நீரை முறைப்படுத்தி சுரங்கப்பாதை மின்நிலையம் மற்றும் தடுப்பு அணை மின்நிலையங்களில் பயன்படுத்தியதன் மூலம், 20 மெகாவாட்டிலிருந்து 190-240 மெகாவாட் வரை கூடுதலாக மின் உற்பத்தி உச்சநேர தேவையின்போது செய்ய முடிந்தது. இது தமிழ்நாடு மின்சார வாரிய வரலாற்றில் முதன்முறையாக செயல்படுத்தப்பட்டது.

## மின் தேவை மற்றும் நிறுவுத்திறன்

11. தமிழ்நாட்டில் மின் கட்டமைப்பின் உச்சத்தேவை 2000-2001 ஆம் நிதியாண்டில் 20-10-2000 அன்று 5,869 மெகாவாட் அளவை எட்டியுள்ளது. 1999-2000 ஆம் நிதியாண்டில் இந்த அளவு 5,580 மெகாவாட் ஆக இருந்தது.

12. சென்ற நிதியாண்டில் புனல் மின் நிலையங்களான பார்சன்ஸ் பள்ளத்தாக்கு (30 மெவா.) திருமூர்த்தி குருபுனல் மின்நிலையம் (1.95 மெவா.) மற்றும் முக்குருத்தி (0.70 மெ.வா.) இயக்கி வைக்கப்பட்டுள்ளன. இத்துடன் தமிழக மின் கட்டமைப்பின் மொத்த மின் நிறுவுத்திறன் 7204 மெகாவாட்டாகும். (34 புனல் மின் நிலையங்கள் - 1996 மெ.வா., 4 அனல்மின் நிலையங்கள் - 2,970 மெ.வா., 2 எரிவாயு மின்நிலையங்கள் - 130 மெ.வா., காற்றாலை மின் உற்பத்தி - 19 மெ.வா., மத்திய மின் உற்பத்தி நிலையங்களிலிருந்து தமிழ்நாட்டின் பங்கு - 1,893 மெவா. தனியார் மின்நிலையத்திலிருந்து (ஜி.எம்.ஆர். வாசவி - பேசின்பாலம் டீசல் என்ஜின்) - 196 மெ.வா.

## அனல் மின்நிலையங்களின் செயல்பாடு மற்றும் பரிசு பெற்ற விவரம்

13. இந்திய அரசு அனல் மின் உற்பத்தி நிலையங்களுக்கு அவற்றின் சீரிய செயல்பாட்டின் அளவீடுகளுக்கு ஏற்ப விருதுகள் வழங்க திட்டங்கள் வகுத்துள்ளது. தூத்துக்குடி மற்றும் மேட்டூர் அனல்மின் நிலையங்கள் 1997-98 ஆம் ஆண்டில் சிறப்பான செயல்பாட்டிற்காகவும், குறைந்த அளவிலான எரி எண்ணெய் உபயோகம் மற்றும் அனல் மின்நிலைய துணை உபகரணங்களில் குறைவான மின்சக்தி உபயோகத்திற்காகவும்,

[2000 நவம்பர் 9

விருதுகள் வென்றுள்ளன. எண்ணூர் அனல்மின் நிலையம் குறைந்த அளவு எரி எண்ணெய் உபயோகத்திற்கான விருதினை வென்றுள்ளது. இந்திய அரசு ரூ. 39.35 இலட்சம் இம்மூன்று அனல்மின் நிலையங்களுக்கும் பரிசுத் தொகையாக வழங்கியுள்ளது. மேற்கண்ட பரிசுகள் 11-10-2000 அன்று பெற்றுக்கொள்ளப்பட்டன.

**1998-99 மற்றும் 1999-2000-க்கான விருதுகளைப் பெறுவதற்கான செயற்குறிப்பு**

14. 1998-99 மற்றும் 1999-2000 ஆம் ஆண்டுகளிலும் அனல்மின் நிலையங்களின் செயல்பாடு தொடர்ந்து திருப்தியாகவே இருந்தது. குறைவான எரி எண்ணெய் உபயோகத்திற்காகவும், துணை உபகரணங்களில் குறைவான மின்சக்தி உபயோகத்திற்காகவும், மற்றும் உற்பத்தி திறன் உயர்வு ஆகியவற்றிற்காகவும் கீழ்க்கண்ட பரிசுகளுக்கு நமது அனல்மின் நிலையங்கள் தகுதி பெற்றுள்ளன.

| வ. எண் | அனல் மின் நிலையம் | வருடம் | பரிசுக்கான தகுதி |
|---|---|---|---|
| 1. | மேட்டூர் | 1999 | குறைவான எரி எண்ணெய் உபயோகத்திற்கான ரொக்கப்பரிசு |
| | | 1999-2000 | அதிக அளவு உச்ச மின் உற்பத்திக்கான ரொக்கப்பரிசு, கேடயம் மற்றும் வெள்ளிப்பதக்கம் |
| 2. | தூத்துக்குடி | 1998 மற்றும் 1999 | குறைவான எரி எண்ணெய் உபயோகம் மற்றும் துணை உபகரணங்களில் குறைவான மின்சக்தி உபயோகத்திற்கான ரொக்கப்பரிசு. |
| | | 1998-1999 | அதிக அளவு உச்ச மின் உற்பத்திக்கான ரொக்கப் பரிசு மற்றும் கேடயம் |



2000 நவம்பர் 9]

| வ. எண் | அனல் மின் நிலையம் | வருடம் | பரிசுக்கான தகுதி |
|---|---|---|---|
| | | 1999-2000 | அதிக அளவு உச்ச மின் உற்பத்திக்கான ரொக்கப்பரிசு, கேடயம் மற்றும் வெள்ளிப்பதக்கம் |
| 3. | வட சென்னை | 1998-1999 | அதிக அளவு உச்ச மின் உற்பத்திக்கான ரொக்கப்பரிசு மற்றும் கேடயம் |
| | வட சென்னை | 1999-2000 | அதிக அளவு உச்ச மின் உற்பத்திக்கான ரொக்கப்பரிசு. கேடயம் மற்றும் வெள்ளிப் பதக்கம். |
| 4. | எண்ணூர் | 1998 | குறைவான எரி எண்ணெய் உபயோகத்திற்கான ரொக்கப்பரிசு. |

மேற்கண்ட பரிசுகளுக்கான செயற்குறிப்பு மத்திய மின்சார ஆணையத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. அனைத்து அனல் மின் நிலையங்களும் எதிர்காலத்தில் ரொக்கப்பரிசுகளும், தங்கப்பதக்கங்களும் பெற வேண்டும் என்ற நோக்கில் தொடர்ந்து நல்ல முறையில் இயங்கி வருகின்றன.

**1999-2000-த்தில் அனல் மின் நிலையங்களின் செயல்பாடு**

15. கடந்த நிதியாண்டில் அனல் மின் நிலையங்களின் நிலைய உற்பத்தி காரணி (Plant Load Factor) ஏறக்குறைய 80 சதவீதம் இருந்தது. இது 1998-99-ஆம் ஆண்டை ஒப்பிட்டுப் பார்க்கும் போது 10.18 சதவீதம் அதிகமாகும். அதன் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| அனல் மின் நிலையத்தின் பெயர் | 1999-2000-ல் மின் உற்பத்தி (மி.யூ) | நிலைய உற்பத்தி காரணி (சதவீதம்) |
|---|---|---|
| வடசென்னை அனல் மின் நிலைம் | 4,331 | 78.26 |
| மேட்டூர் அனல் மின் நிலையம் | 5,786 | 78.42 |
| தூத்துக்குடி அனல் மின் நிலையம் | 7,449 | 80.76 |
| மொத்தம் | **17,566** | **79.15** |

இந்த நடப்பாண்டிலும் அனல் மின் நிலையங்கள் தொடர்ந்து சீரிய முறையில் இயங்குகின்றன. இந்த நடப்பு நிதியாண்டில் மின் நிலைய உற்பத்தி காரணி 85 விழுக்காடு இலக்கை அடைய உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஜனவரி 1999 முதல் செப்டம்பர் 1999 வரையிலான மின் உற்பத்தியை ஒப்பிடும் போது, இந்த வருடம் (2000-ல்) அதே காலத்தில் மின் உற்பத்தி கூடுதலாக 1672 மி.யூ. (13.42 சதவீதம்) உயர்ந்துள்ளது.

**உதிரி பாகங்கள் வாங்குவதை ஒழுங்குபடுத்துதல்**

16. பாரத கனரக நிறுவனத்திடமிருந்து வாங்கப்படும் உதிரி பாகங்கள் வகைப்படுத்தப்பட்டு அந்த பட்டியல் பாரத கனரக நிறுவனத்திற்கு கொடுக்கப்பட்டது. வழங்கப்படும் பொருட்களின் தரம் சரிபார்க்கப்படுகின்றன. உற்பத்தியாளர்களிடமிருந்து உதிரி பாகங்களை வாங்குவதால் பல கருவிகள் அடிக்கடி பழுதடைவது குறைந்திருக்கிறது. பாரத கனரக நிறுவனம் மற்றும் பிற உற்பத்தியாளர்கள் குறைந்த விலையில் உதிரி பாகங்கள் வழங்க ஒப்புக்கொண்டுள்ளனர். இது இயந்திரங்களின் வருடாந்திர பராமரிப்பு கால அளவை வெகுவாக குறைத்துள்ளது.

**எண்ணூர் அனல் மின் நிலையத்தை புதுப்பித்தல் மற்றும் மேம்படுத்துதல்**

17. எண்ணூர் அனல் மின் நிலையத்தில் உள்ள ஐந்து பிரிவுகளிலும் ரூ.290 கோடி செலவில் புதுப்பித்தல் மற்றும் மேம்படுத்தும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 110 மெகாவாட் திறன் கொண்ட ஒரு பிரிவில் மேம்பாட்டுப் பணிகள் முடிக்கப்பட்டு 28-9-2000 அன்று மின்கட்டமைப்போடு இணைக்கப்பட்டது. மற்ற இரண்டு 110 மெ.வா. திறன் கொண்ட பிரிவுகளில் மேம்பாட்டுப் பணிகள் டிசம்பர் திங்கள்





2000-க்குள் முடிக்கப்படும். இதனால் கூடுதலாக 330 மெ.வா. மின்சாரம் வரும் கோடைகால தேவையை ஈடுகட்ட தமிழ்நாட்டிற்குக் கிடைக்கும்.

**மின் தேவை கணிப்பு**

18. மத்திய மின்சார ஆணையத்தின் 16-ஆவது மின்சார ஆய்வு குழுவின் பரிந்துரைப்படி, தமிழ்நாட்டின் உச்ச மின் சுமை தேவை, மின் பயனீட்டு தேவை ஆகியவை 9, 10-வது ஐந்தாண்டு திட்டங்களின் இறுதியில் கீழ்க்கண்டவாறு இருக்குமென்று கணிக்கப்பட்டுள்ளது.

| காலம் | உச்ச மின்சுமை தேவை (மெ.வா) | மின்பயனீட்டு தேவை (மி.யூ) |
|---|---|---|
| 9-வது திட்ட முடிவில் | 6825 | 42341 |
| 10-வது திட்ட முடிவில் | 8847 | 54872 |

எந்த விதமான கட்டுப்பாடும் விதிக்காமல் மின் சுமை தேவையையும், மின் பயனீட்டையும் வழங்குவதே இந்த அரசின் நோக்கமாகும். இப்பொழுது நடைபெற்றுக் கொண்டு இருக்கின்ற, இனி நடைபெற உள்ள மின் திட்டங்களைப் பற்றி, நான் கூற விரும்புகிறேன்.

**நடப்பில் உள்ள அனல் மின் மற்றும் எரிவாயு திட்டங்கள்**

**வட சென்னை அனல் மின் திட்டம் (நிலை-1) 630 மெகாவாட்**

19. ஒவ்வொன்றும் 210 மெகாவாட் திறனுள்ள மூன்று பிரிவுகளும் நிலக்கரியை எரிபொருளாகக் கொண்டு தொடர்ந்து மின் உற்பத்தி செய்து வருகின்றன.

20. வடசென்னை, எண்ணூர் மற்றும் மேட்டூர் அனல் மின் நிலையங்களுக்கு நிலக்கரி கொண்டு வருவதற்காக துறைமுக கழகத்தால், புதியதொரு துறைமுகம் எண்ணூரில் கட்டப்பட்டு வருகின்றது. இத்துறை முகத்திலிருந்து, நிலக்கரியை கப்பலிலிருந்து இறக்கி தொடர் நகர்த்தி அமைப்பு வாயிலாக, வடசென்னை அனல் மின் நிலையத்திற்கு எடுத்து செல்லவும், மற்றும் எண்ணூர், மேட்டூர் அனல் மின் நிலையங்களுக்கு அனுப்புவதற்காகவும் வெளிப்புற கரி கையாளும் அமைப்புப் பணி தொடங்கப்பட்டு நடைபெற்று வருகின்றது. இப்பணி 2000-ஆம் வருடம் மார்ச் திங்களில் முடிவுற உள்ளது. வெளிப்புற நிலக்கரி கையாளும்

[2000 நவம்பர் 9

அமைப்பானது இரண்டு தொகுதிகளைக் கொண்டது. இரண்டு கப்பல் சுமை இறக்கிகள் மற்றும் ஒரு நகரும் கலம் ஆகிய சாதனங்களை உள்ளடக்கிய கப்பலிலிருந்து நிலக்கரியை இறக்குவதற்கான தொகுதி-I-க்கான ஒப்பந்தப்பணி சீக்கால் (SICAL) நிறுவனத்திற்கு கட்டுமானம், இயக்கம், உரிமை மாற்றம் (BOT) என்ற முறைப்படி 20 வருடங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்தப் பணிக்காக ஆண்டுதோறும் சுமார் ரூ.35 கோடி, ஒப்பந்தக்காரருக்கு கொடுக்க வேண்டியதிருக்கும். தொடர் நகர்த்திகளை உள்ளடக்கிய தொகுதி-II க்கான சாதனங்களை வழங்கி நிறுவுவதற்கான ஒப்பந்தப்பணி மெக்கான் (MECON) நிறுவனத்திற்கு சுமார் ரூபாய் 270 கோடி மதிப்பில் கொடுக்கப்பட்டுள்ளது.

### திருவாரூர் (கோவில்களப்பால்) எரிவாயு சுழலி மின்திட்டம் (107 மெகாவாட்)

21. திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி வட்டம், திருமக்கோட்டை கிராமத்தில், நாள் ஒன்றுக்கு 4.5 இலட்சம் கனமீட்டர், இயற்கை எரிவாயுவை பயன்படுத்தும் எரிவாயு சுழலி மின்திட்டம் முடியும் தருவாயில் உள்ளது. இத்திட்டத்தின் மதிப்பீட்டுத் தொகை ரூ.300 கோடி. இத்திட்டப்பணிகள் பாரத கனரக மின் நிறுவனத்திற்கு (BHEL) வழங்கப்பட்டுள்ளது. 80 சதவீத பணிகள் முடிக்கப்பட்டுவிட்டன. இத்திட்டம் 2000 ஆண்டு டிசம்பர் திங்களில் மின் உற்பத்தியை துவங்க உள்ளது.

### வழுதூர் (பெருங்குளம்) எரிவாயு சுழலி மின் திட்டம் (100 மெகாவாட்)

22. இராமநாதபுரம் மாவட்டம், வழுதூரில் வளந்தரவாய் கிராமத்தில், நாள் ஒன்றுக்கு 4.5 இலட்சம் கனமீட்டர் இயற்கை எரிவாயுவை உபயோகப்படுத்தும் எரிவாயு சுழலி மின்திட்டம் அமைப்பதற்கு தமிழ்நாடு அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. இத்திட்டத்தின் மதிப்பீட்டுத் தொகை ரூ.350 கோடி. இத்திட்டப்பணிகளை செயல்படுத்துவதற்கான ஆணை புதுடில்லி, பாரத கனரக மின்நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. அடிக்கல் நாட்டு விழா 28-8-2000 அன்று நடைபெற்றது. பாரத கனரக மின் நிறுவனம், திட்டத்திற்கான கட்டுமானப் பணிகளை துவங்கியுள்ளது. இந்த மின் நிலையம் 2002 ஆம் வருடம் மார்ச் திங்களில் மின் உற்பத்தியை துவங்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது.



2000 நவம்பர் 9]

### குத்தாலம் எரிவாயு சுழலி மின்திட்டம் (100 மெகாவாட்)

23. நாகப்பட்டினம் மாவட்டம், மயிலாடுதுறை வட்டம், மருதூர் கிராமத்தில் நாள் ஒன்றுக்கு 4.5 இலட்சம் கனமீட்டர் இயற்கை எரிவாயுவை உபயோகப்படுத்தும் மற்றொரு எரிவாயு சுழலி மின் திட்டம் அமைப்பதற்கு தமிழ்நாடு அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. இந்த திட்டத்திற்கான நிலம் கண்டறியப்பட்டு அது கையகப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தின் மதிப்பீட்டுத் தொகை ரூ.350 கோடி. இத்திட்டப்பணிகளுக்காக உலகளாவிய ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளன. இத்திட்டம் 2003 ஆம் வருடம் மார்ச் திங்களில் முடிக்கப்பட்டு இயக்கத்திற்கு வருமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

## புதிய அனல் மின் திட்டங்கள்

### புதிய எண்ணூர் மற்றும் தூத்துக்குடி அனல் மின் நிலையங்கள்

24. ஒவ்வொன்றும் 500 மெகாவாட் திறன் கொண்ட இரண்டு பிரிவுகள் உடைய 1000 மெகாவாட் புதிய எண்ணூர் அனல் மின் நிலையமும், 500 மெகாவாட் திறன் கொண்ட தூத்துக்குடி இணைப்பு அனல் மின் நிலையமும் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. புதிய எண்ணூர் அனல் மின் நிலையம் அமைக்க முதலில் தேர்வு செய்த இடத்திற்கு (குளம்-A) தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் ஆட்சேபம் தெரிவித்ததால் குளம்-A-க்கு வடக்குத் திசையிலுள்ள புதியதாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள குளம்-B பரிசீலனையில் உள்ளது. இடம் தேர்வு செய்த பிறகுதான், இத்திட்ட ஆலோசனை நிறுவனமான எல்&டி, சார்ஜெண்ட் & லெண்டி அவர்களால் வரைவு மற்றும் விரிவான திட்ட அறிக்கை தயாரிக்க இயலும். தூத்துக்குடி இணைப்பு அனல் மின் நிலையம் நிறுவ ஆலோசனை வழங்கும் என்.டி.பி.சி. (NTPC) நிறுவனத்திடமிருந்து விரிவான திட்ட அறிக்கை (Detailed Project Report) சில தினங்களில் பெறப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## நடப்பில் உள்ள புனல் மின் திட்டங்கள்

### பைகாரா இறுதிநிலை புனல் மின் திட்டம் (3X50 மெகாவாட்)

25. இத்திட்டம் நீலகிரி மாவட்டத்தில் உள்ள உதக மண்டலத்திலிருந்து 32 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. கிளன்மார்க்கன் முன்தேக்கம் மற்றும் மரவகண்டி அணை இடையே உள்ள நீர் மட்டத்தை (Head) உபயோகப்படுத்தி மின் உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இந்த

மின் நிலையம், தரைமட்டத்திலிருந்து, சுமார் 500 மீட்டர் கீழே அமைக்கப்பட்டுள்ளது. இந்த மின் திட்டம், உச்ச பளு நேரத்தில் ஏற்படும் மின்சுமையைப் பூர்த்தி செய்வதற்காக வகுக்கப்பட்ட திட்டமாகும். அடிப்படை வேலைகள் முடிவடைந்துள்ளன. கடைவாலில் உள்வரி கற்காரை அமைக்கும் பணி முடியும் தருவாயில் உள்ளது. நிலத்தடி மின் நிலையம், வடத்தண்டு மற்றும் நீர் அழுத்தத்தண்டு ஆகியவற்றில் கட்டுமான பணிகள் நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றன. பாரத கனரக மின் நிறுவனம் (BHEL) மின்னாக்கி மற்றும் சுழலியின் 95 சதவிகித பாகங்களை தயாரித்து அனுப்பி வைத்துள்ளது. டெல்க் (TELK) நிறுவனம் நான்கு மின்மாற்றிகளை தயாரித்து அனுப்பி வைத்துள்ளது. சாதகமற்ற பாறை அடுக்குகளின் வலுவற்ற தன்மை காரணமாக, வடஅச்சுத்தண்டு (Cable shaft), நீர் அழுத்தத்தண்டு (Pressure shaft) ஆகியவற்றின் வேலைகள் திட்டமிட்டபடி நடைபெற முடியவில்லை. மேற்சொன்ன காரணத்தாலும் மற்றும் 1998-ல் சுரங்கப்பணிகள் நடைபெற்ற போது பாறைகளில் சரிவு ஏற்பட்டதாலும் திட்டமிட்டபடி பணிகளை முடிக்க இயலவில்லை. மூன்று பிரிவுகளும் 2002-ஆம் வருடம் அக்டோபர் திங்களில் மின் உற்பத்தியை துவங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## சிறு மற்றும் மிகச்சிறு புனல் மின் திட்டங்கள்

26. கீழ்க்கண்ட சிறு மற்றும் மிகச்சிறு புனல் மின் திட்டப் பணிகள், ஒப்பந்த முறையில் நிர்மாணிக்கப்பட்டு திட்டப்பணிகள் நடைபெற்று வருகின்றன.

அ. ஆழியார் 2X1250 கிலோவாட்

ஆ. பெருஞ்சாணி 2X650 கிலோவாட்

திருமூர்த்தி சிறுபுனல் மின் திட்டம் (1.95 மெ.வா.) 20-3-2000 அன்றும், முக்குருத்தி சிறு புனல் மின் திட்டம் (0.70 மெ.வா.) 18-8-2000 அன்றும் இயக்கி வைக்கப்பட்டன.

## அமராவதி புனல் மின்திட்டம் (2X2 மெகாவாட்)

27. நீர்ப்பாசனத்திற்காக, அமராவதி நீர்த்தேக்கத்திலிருந்து திறந்து விடப்படும் நீரை உபயோகப்படுத்தி மின் உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. அணுகு சாலை வேலைகள் மற்றும் பென்ஸ்டாக் வேலைகள் நடைபெற்று வருகின்றன. இத்திட்டம் 2001 ஆம் வருடம் நவம்பர் திங்களில் இயக்கத்திற்கு வருமென்று எதிர்பார்க்கப்படுகிறது.



## திட்டமிடப்பட்டுள்ள புனல் மின்திட்டங்கள்

28. மேற்குறிப்பிட்டவை தவிர, ஒன்பதாவது திட்டக் காலத்தில் மொத்த நிறுவுத்திறன் 90 மெகாவாட் கொண்ட, பவானி கட்டளை தடுப்பு அணை-I, பவானி கட்டளை தடுப்பு அணை-II மற்றும் பவானி கட்டளை தடுப்பு அணை-III புனல் மின் திட்டங்கள் நிறுவிட வாரியம் திட்டமிட்டுள்ளது. மேலும், சோலையார் மின் நிலையம்-I இல் 35 மெ.வா. நிறுவுதிறன் கொண்ட கூடுதல் பிரிவு, இத்திட்ட காலத்தில் நிறுவிட திட்டமிடப்பட்டுள்ளது.

## காற்றிலிருந்து மின்சாரம் உற்பத்தி செய்தல்

29. தமிழ்நாட்டில் மின்சாரம் உற்பத்தி செய்வதற்கு காற்று ஆதாரம் பெருமளவு உள்ளது. மின்சக்தி உற்பத்தி செய்வதற்காக, கன்னியாகுமரி மாவட்டத்தில் ஆரல்வாய்மொழிக் கணவாய், திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் செங்கோட்டை கணவாய், திண்டுக்கல், கோயம்புத்தூர் மற்றும் ஈரோடு மாவட்டங்களில் பாலக்காட்டுக் கணவாய் ஆகிய இடங்களில் பெருமளவு காற்று ஆதாரம் உள்ளது. அவற்றில் சுமார் 2000 மெ.வா. மின்சாரம் உற்பத்தி செய்ய இயலுமென்று மதிப்பிடப்பட்டுள்ளது.

30. தமிழ்நாட்டில் காற்றாலை மின் உற்பத்தியில் தனியார் துறைகளின் பங்கு ஊக்குவிக்கப்பட்டுள்ளது. 30-9-2000 நிலவரப்படி, தனியார் காற்றாலைகளின் எண்ணிக்கை 2789 ஆகும். இதன் மொத்த நிறுவுத்திறன் 765.190 மெகாவாட் ஆகும். தமிழ்நாடு மின்சார வாரியத்தின் கட்டுப்பாட்டில் 19.355 மெகாவாட் நிறுவுத்திறன் கொண்ட காற்றாலைகள் இயங்கிவருகின்றன. தமிழ்நாடு மின்சார வாரியத்தில் இத்துறைக்கென ஆலோசனை மையம் ஒன்று உருவாக்கப்பட்டு தனியார் துறைகளுக்கு, காற்றாலை மின்சாரம் சம்பந்தமான எல்லா ஆலோசனைகளையும் வழங்கி வருகிறது. ஒவ்வொரு வருடமும் அதிக அளவில், காற்று மின் உற்பத்தி ஆலைகள் தனியார் துறைகளால் நிறுவப்பட்டு வருகின்றன.

31. தனியார் துறை தொழிற்சாலைகள் காற்றாலை மூலம் உற்பத்தி செய்யும் மின்சாரத்தை, தமிழ்நாடு மின்வாரிய கட்டமைப்பில் செலுத்தலாம். அவ்வாறு உற்பத்தி செய்யப்பட்ட மின்சாரத்தை தற்சமயம் யூனிட் ஒன்றுக்கு

ரூபாய் 2.70 வீதம் தமிழ்நாடு மின்வாரியத்திற்கு விற்கலாம். இந்தக் கட்டணத் தொகையை 1-12-2000 முதல் மறுபரிசீலனை செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும், தனியார் துறையினரின் விருப்பத்திற்கிணங்க, அவர்கள் காற்றாலைகள் மூலம் தயாரிக்கப்படும் மின்சாரத்தை, தமிழ்நாட்டில் உள்ள அவர்களது சொந்த மற்றும் துணை சார்ந்த தொழிற்சாலைகளுக்கு பயன்படுத்தும் மின்சக்திக்கு சரி செய்து கொள்ளவும், மீதமுள்ள மின்சாரத்தை தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு, மின் உற்பத்தி செய்யப்பட்ட காலத்தில் அமுலில் இருந்த கட்டண விகிதத்தில் விற்கவும் அனுமதிக்கப்படுகிறது. அவ்வாறு உபயோகப்படுத்தும் போது மின்சார உற்பத்தியில் 2 சதவீத மின்சாரத்தை, மின்வாரியம், மின் கட்டமைப்பின் செலுத்துகை கட்டணமாக கழித்துக் கொள்ளும். தங்கள் தேவைக்குப் போக எஞ்சியுள்ள உபரி மின்சாரத்தை ஒரு மாதத்திற்குப் பிறகு பயன்படுத்துவதற்கு, பேங்கிங் (Banking) முறை மூலம் ஒரு வருட காலத்திற்குள் சேமித்து வைத்து உபயோகிக்க அனுமதிக்கப்படுகிறது. இதற்கு மேலும் இரண்டு சதவீதம் சேமிப்பு கட்டணமாக வசூலிக்கப்படுகிறது.

## இணைமின் உற்பத்தி

32. தற்போதைய இணைமின் உற்பத்தியின் மொத்த நிறுவுத்திறன் 142.1 மெகாவாட்டாகும். 19.0 மெகாவாட் நிறுவுத்திறன் கொண்ட இணைமின் உற்பத்தித் திட்டம் ஒன்று இந்த ஆண்டு இறுதியில் திருவண்ணாமலையில் உள்ள அருணாசலம் சர்க்கரை ஆலையில், இயக்கி வைக்கப்படவுள்ளது. தமிழ்நாடு மின்சார வாரியம் மேலும் ஏழு சர்க்கரை ஆலைகளில் 162 மெகாவாட் திறன் கொண்ட இணைமின் உற்பத்தி திட்டங்களுக்கு ஏற்கெனவே ஒப்புதல் அளித்துள்ளது. இவை அடுத்த இரண்டு ஆண்டுகளில் இயக்கத்திற்கு வரும்.

33. இணைமின் திட்ட வளர்ச்சியில் தனியார் மற்றும் கூட்டுத்துறை நிறுவனங்கள் பங்கேற்பதை ஊக்குவிக்கும் நோக்கத்துடன் கரும்பு சக்கை மூலம் தயாரிக்கப்படும் இணை மின்சாரத்திற்கு 1-4-2000 முதல் யூனிட் ஒன்றுக்கு ரூபாய் 2.73 வீதம் கொள்முதல் விலை நிர்ணயிக்கப்பட்டு, இவ்விலை வருடத்திற்கு ஐந்து விழுக்காடு என்ற விகிதத்தில் ஒன்பது வருடங்களுக்கு (2010 ஆண்டு வரை) உயர்த்தப்படும் என வரையறுக்கப்பட்டுள்ளது. இவ்விலை உயர்மின் அழுத்தகட்டண விகிதத்தின் 90 விழுக்காடு அளவிற்கு மிகாமல் இருக்க வேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. உற்பத்தி செய்யப்பட்ட மின்சாரத்தினை



வெளியேற்றம் செய்ய தேவையான மின் கட்டமைப்பிற்கான செலவை தமிழ்நாடு மின்வாரியமே ஏற்றுக்கொள்ளும்.

## தன்பயன் மின்னாக்கி கொள்கை

34. தமிழக அரசு தன்பயன் மின்னாக்கி கொள்கையை அரசு ஆனை எண் 48 எரிசக்தி துறை நாள் 22.4.1998 அன்று வெளியிட்டது.

## தன்பயன் மின்னாக்கிகளை கீழ்க்காணும் எவரும் நிறுவலாம்

அ. மின் நுகர்வோர் தனியாக

ஆ. ஒன்றிற்கு மேற்பட்ட மின் நுகர்வோரின் கூட்டமைப்பாக

இ. மின் பயனீட்டாளர்,ஆனால் மின் நுகர்வோர் அல்லாதவர்

ஈ. மின்பயனீட்டாளர்களின் (மின் நுகர்வோர் அல்லாதவர்கள்) கூட்டமைப்பு

## உ. மின் நுகர்வோர் மற்றும் பயனீட்டாளர்களின் கூட்டமைப்பு

35. தன்பயன் மின்னாக்கி மூலம் உற்பத்தி செய்யப்படும் மின்சக்தியை உற்பத்தியாளர்களே பயன்படுத்தலாம். மின்னாக்கி நிறுவனத்தின் பிறிதொரு சகோதர நிறுவனம் பயன்படுத்தலாம். ஆனால் மூன்றாவது நபருக்கு விற்கப்பட அனுமதி இல்லை. 2001-ல் தமிழ்நாடு மின்சார வாரியம், மின் உற்பத்தியில் தன்னிறைவு பெற்று தேவைக்கு மேல் மின் உற்பத்தி செய்யுமென்று கணக்கிடப்பட்டிருப்பதால், புதிய தன்பயன் மின்னாக்கி நிறுவனங்களுடன் உபரி மின்சாரத்தை கொள்முதல் செய்வதற்கான நீண்டகால ஒப்பந்தங்கள் செய்ய வேண்டாம் என்று தமிழ்நாடு மின்சார வாரியம் முடிவு செய்துள்ளது.

36. 2 எம்.வி.ஏ. (M.V.A.) மற்றும் அதற்கு மேற்பட்ட நிறுவுத்திறன் கொண்ட தன்பயன் மின்னாக்கிகள், தமிழ்நாடு மின்கட்டமைப்புடன் இணைந்து செயல்பட மின்சார வாரியத்தின் பரிந்துரையின் அடிப்படையில் தமிழக அரசு ஒப்புதல் அளிக்கும். மின் கட்டமைப்பில் ஊட்டப்பட்ட மின் அளவை, மின் வாரியத்தின் மின் கட்டமைப்பின் மூலம் தமிழ்நாட்டின் பிற பகுதியில் அமைந்துள்ள அந்நிறுவனத்தின் மற்ற பிரிவிற்கோ அல்லது சகோதர நிறுவனத்திற்கோ எடுத்துச் செல்லலாம். மின் விசை ஊட்டப்படும் மின் அழுத்தம் எதுவாக இருப்பினும், மின்விசை எடுத்துச் செல்லப்படும் மின் பாதையின் நீளம் எவ்வளவு தூரம் இருப்பினும்,

எடுத்துச் செல்லப்படும் மின்விசையில் 15% மின் விசை செலுத்துகை கட்டணமாக வசூலிக்கப்படும்.

## பயோமாஸ் மின் உற்பத்தி திட்டங்கள்

37. தாவர மற்றும் விவசாயக் கழிவுகளைப் பயன்படுத்தி 12 மெகாவாட் திறன் கொண்ட மின் நிலையம் ஒன்று ஏற்கெனவே காஞ்சிபுரம் மாவட்டம் பழையசீவரம் கிராமத்தில் இயங்கி வருகிறது. மேலும் 1.0 மெகாவாட் திட்டம் ஈரோடு மாவட்டத்திலுள்ள வேலம்பாளையம் கிராமத்தில் அமைத்திட தமிழ்நாடு மின்வாரியம் ஒப்புதல் அளித்துள்ளது.

## நகராட்சி கழிவுகளிலிருந்து மின் உற்பத்தி செய்யும் திட்டம்

38. நகராட்சி குப்பைக் கழிவுகளை உபயோகப்படுத்தி 14.85 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யும் திட்டம் இ.டி.எல். (இந்தியா) பிரைவேட் லிமிடெட் என்ற நிறுவனத்தால் சென்னையில் உள்ள பெருங்குடி என்ற இடத்தில் நிறுவப்பட உள்ளது. இம்மாதிரியான திட்டங்கள் எதிர்காலத்தில் மற்ற நகராட்சிகளிலும் அமைய உள்ளன.

## சூரிய சக்தியிலிருந்து மின்சக்தி தயாரிக்கும் திட்டம்

39. தமிழ்நாட்டில் சூரிய வெப்பத்தை பயன்படுத்தி மின் உற்பத்தி செய்யப்படுகிறது. 165 கிலோவாட் திறன் கொண்ட நான்கு சூரிய மின்சக்தி உற்பத்தி திட்டங்கள் ஏற்கெனவே இயங்கி வருகின்றன. மாநிலத் துறையில் (தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம்) கயத்தாரில் 15 கிலோவாட் திறன் கொண்ட சூரிய மின் உற்பத்தி திட்டம் ஒன்றையும், தனியார் துறையில், கேத்தனூரில் என்.இ.பி.சி. நிறுவனத்தினால் 100 கிலோவாட் திறன் கொண்ட சூரிய சக்தி மின் திட்டமும், கோயம்புத்தூர் அருகில் உதயா செமி கண்டக்டர் நிறுவனத்தால், செங்கல்பாளையம், சித்தநாயக்கன் பாளையம் என்னும் இடங்களில் தலா 25 கிலோவாட் திறன் கொண்ட இரண்டு சூரிய சக்தி மின்திட்டங்களும் நிறுவப்பட்டுள்ளன.

40. சூரிய மின்சக்தி உற்பத்தியில் தனியார் நிறுவனங்கள் பங்கேற்பதை ஊக்குவிக்கும் பொருட்டு, தமிழ்நாடு மின்சார வாரியம் சூரிய வெப்ப மின்கலப் பெட்டிகளின் மூலமாக உற்பத்தி செய்யும் மின்சாரத்தை யூனிட் ஒன்றுக்கு ரூபாய் 2.25 என்ற விலையில் வாங்குகிறது. இந்த விலை 1-1-1996 முதல் 2000 வரை ஆண்டொன்றுக்கு ஐந்து சதவீதம் விலையேற்றம் செய்து கொடுக்கப்பட்டுள்ளது. இந்த விலை 1-1-2001 முதல் மறு பரிசிலனை செய்யப்பட உள்ளது.



## தமிழ்நாட்டில் மின் உற்பத்தியில் தனியார் துறையின் பங்கேற்பு

41. மின்துறையில், தனியார்களின் பங்கேற்பை அனுமதிக்கும் இந்திய அரசின் தாராளமயமாக்கப்பட்ட கொள்கைக்கு இணங்க, தமிழ்நாட்டில் மொத்தம் 2038 மெ.வா. நிறுவுத்திறன் கொண்ட கீழ்க்கண்ட ஆறு மின் திட்டங்களை கருத்தளவு ஒப்பந்த முறையில் தனியார் மின் திட்ட முனைவோர்களிடம் தமிழக அரசு ஒப்பந்தம் செய்துள்ளது.

இத்திட்டங்களுக்கு மைய அரசின் அதிகார மின்குழுமத்திடமிருந்து தொழில் நுட்பப் பொருளாதார அனுமதியும் பெறப்பட்டுள்ளது.

| வ. எண் | திட்டம் | நிறுவனம் | தற்போதைய நிலை |
|---|---|---|---|
| 1. | நெய்வேலி சீரோ யூனிட் 1X250 மெ.வா.(பழுப்பு நிலக்கரி) | எஸ்.டி-ஸி எம்.எஸ். எலக்ட்ரிக் கம்பெனி | 3-11-1999 அன்று நிதி இறுதியாக்கம் செய்யப்பட்டது. கட்டுமானப்பணிகள் நடைபெற்று வருகின்றன. 2002 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் மின்நிலையம் இயக்கம் செய்யப்படும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. |
| 2. | பிள்ளைப் பெருமாள் நல்லூர் மின் திட்டம் 330 மெ.வா. (எரிவாயு) | பிபி.என். பவர் ஜெனரேடிங் கம்பெனி (டைனா மெகாவஸ்தி கம்பெனி) | நிதி இறுதியாக்கம் 7-12-1998 அன்று செய்யப்பட்டது. கட்டுமான பணிகள் நடைபெற்று வருகின்றன. 2001 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் மின் உற்பத்தி செய்யப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. |

[2000 நவம்பர் 9

| வ. எண். | திட்டம் | நிறுவனம் | தற்போதைய நிலை |
|---|---|---|---|
| 3. | வடசென்னை அனல் மின் திட்டம் இரண்டாம் நிலை 1050 மெ.வா. (நிலக்கரி) | வீடியோகான் பவர் லிமிடெட் | மின்கொள்முதல் ஒப்பந்தம் 2-2-1998 அன்று கையெழுத்திடப்பட்டது. எரிபொருள் வழங்கல் ஒப்பந்தம் நிறுவனத்தால் கையெழுத்திடப்பட வேண்டும். நிதி இறுதியாக்கம் குறித்த நேரத்தில் நிறுவனம் செய்யவில்லை. வருமான அடமான ஒப்பந்தம் காலாவதி ஆகிவிட்டது. |
| 4. | சமயநல்லூர் டீசல் என்ஜின் மின் திட்டம் 106 மெ.வா. (குறைந்த கந்தக எரி எண்ணெய்) | பாலாஜி பவர் கார்ப்பரேஷன் (பி) லிமிடெட் | 25-4-2000 அன்று நிதி இறுதியாக்கம் செய்யப்பட்டது. கட்டுமான பணிகள் நடைபெற்று வருகின்றன. 2001 ஆம் ஆண்டு மே திங்களில் மின் உற்பத்தி செய்யப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. |
| 5. | சாமல்பட்டி டீசல் என்ஜின் மின் திட்டம் 106 மெ.வா (குறைந்த கந்தக எரி எண்ணெய்) | சாமல்பட்டி பவர் கம்பெனி | 24-12-1999 அன்று நிதி இறுதியாக்கம் செய்யப்பட்டது. கட்டுமான பணிகள் நடைபெற்று வருகின்றன. 2001 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்களில் மின் உற்பத்தி செய்யப்படுமென்று எதிர்பார்க்கப் படுகிறது. |
| 6. | பேசின்பாலம் டீசல் என்ஜின் மின் திட்டம் 196 மெ.வா. | ஜி.எம்.ஆர். வாசவி பவர் கார்ப்பரேசன் லிமிடெட் | ஏற்கெனவே இயக்கம் செய்யப்பட்டு விட்டது. |



2000 நவம்பர் 9]

42. கீழ்க்கண்ட மூன்று புனல் மின் தன்பயன் மின்னாக்கித் திட்டங்கள் தனியார் துறை மூலம் செயலாக்கப்பட்டு வருகின்றன.

| | | |
|---|---|---|
| அ. | பெரியார்-வைகை தடுப்பு அணை-1 புனல் மின் திட்டம் | 6.60 மெகாவாட் |
| ஆ. | பேச்சிபாறை அணை புனல் மின் திட்டம் | 1.30 மெகாவாட் |
| இ. | துக்ளப்பட்டி வடிகால் புனல் மின் திட்டம் | 0.35 மெகாவாட் |

## ஜெயங்கொண்டம் பழுப்பு நிலக்கரி மின்உற்பத்தித் திட்டம் (500 மெகாவாட்)

43. தமிழ்நாடு அரசு உத்திரவின்படி, ஜெயங்கொண்டத்தில் அமையவுள்ள நிலக்கரி சுரங்கத்துடன் கூடிய அனல் மின் திட்டத்திற்காக (முதலில் 500 மெ.வா. திறனுடனும், இறுதியில் 1500 மெ.வா. திறனாகவும்) திட்ட முனைவோர்களைத் தேர்வு செய்ய வேண்டி பன்னாட்டு ஒப்பந்த புள்ளி அடிப்படையில், ஒப்பந்தப் புள்ளிகள் தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்தால் வரவேற்கப்பட்டன. தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம், ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட் நிறுவனத்திற்கு 15-6-1998 அன்று அனுமதி கடிதம் வழங்கியுள்ளது. ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட் நிறுவனத்துடன் மின் கொள்முதல் ஒப்பந்த பேச்சு வார்த்தைக் குழு பேச்சுவார்த்தை நடத்தியுள்ளது. மின் கொள்முதல் ஒப்பந்தத்திற்கு வாரியம் ஒப்புதல் அளித்துள்ளது. மின் கொள்முதல் ஒப்பந்தம் 17-3-1999 அன்று சுருக்கொப்பமிடப்பட்டது. சுருக்கொப்பமிடப்பட்ட மின் கொள்முதல் ஒப்பந்தத்திற்கு தமிழ்நாடு அரசு 12-7-1999 அன்று ஒப்புதல் அளித்துள்ளது. மேலும் இந்நிறுவனத்துடன் பேச்சு வார்த்தை தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

## எண்ணூரில் அமையவிருக்கும் நீர்ம இயற்கை எரிவாயு இறக்குமதி நிலையம் மற்றும் மின்நிலையம்

44. தமிழ்நாடு அரசு உத்திரவின்படி எண்ணூரில் நீர்ம இயற்கை எரிவாயு (L.N.G) இறக்குமதி நிலையம் மற்றும் 1800 மெகாவாட் திறன் கொண்ட மின்நிலையம் ஆகியவற்றை நிறுவுவதற்காக பன்னாட்டு ஒப்பந்த புள்ளி அடிப்படையில் ஒப்பந்தப் புள்ளிகளைத் தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் கோரியது. நீர்ம இயற்கை எரிவாயு இறக்குமதி நிலையம்

மற்றும் 1885.645 மெகாவாட் திறனைக் கொண்ட மின் நிலையம் ஆகியவற்றின் திட்டமுனைவோர்களாக தஷிண் பாரத் எனர்ஜி கன்ஸோர்டியம் என்ற நிறுவனத்தினரை தமிழ்நாடு அரசு தேர்வு செய்தது. தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்தால் இந்நிறுவனத்திற்கு 28-12-1998 அன்று அனுமதிக் கடிதம் வழங்கப்பட்டது. இத்திட்டத்திலிருந்து கிடைக்கும் மின்சாரம் முழுவதையும் தமிழ்நாடு மின்சார வாரியம் பயன்படுத்த முடியாத காரணத்தால் இம்மின்சாரம் முழவதையும் பவர் டிரேடிங் கார்பரேசன் ஆப் இந்தியா லிமிடெட் என்ற நிறுவனத்திற்கு விற்பதற்கு மேற்படி கார்பரேசனை தஷிண் பாரத் எனர்ஜி கன்ஸோர்டியம் நிறுவனத்தினர் அணுகியுள்ளனர். இம் மின் நிலையத்திலிருந்து 750 மெகாவாட் மின்சாரத்தை தமிழ்நாடு மின்சார வாரியம் வாங்கிக் கொள்ளும் என்று தமிழ்நாடு மின்சார வாரியம்/தமிழ்நாடு அரசு மேற்படி கார்பரேசனுக்குத் தெரிவித்துள்ளது. தஷிண் பாரத் எனர்ஜி கன்ஸோர்டியம் நிறுவனத்தினர் இம்மின்திட்டத்தை விரைவில் கொண்டு வருவதற்கு இந்த கார்பரேசனுடன் தொடர்ந்து பேச்சு வார்த்தை நடத்தி வருகின்றனர்.

45. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் வருமான அடமான அளவினை 2000 மெகாவாட் என கிரிசில் நிறுவனம் (CRISIL) மதிப்பீடு செய்துள்ளது. இதன் அடிப்படையில் பத்தி 41-ல் குறிப்பிட்ட 6 திட்டங்கள் கருத்தளவு ஒப்பந்த முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டு செயலாக்கம் செய்யப்பட்டு வருகின்றன. இந்தத் திட்டங்கள் இயக்கத்திற்கு வந்தால் தமிழ்நாடு ஒரு மின் உபரிமாநிலமாக தொடர்ந்து திகழும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பல திட்டங்கள் வெவ்வேறு நிலையில் இருப்பதால், தேவைப்படும் போது எந்தத் திட்டத்தை வேண்டுமானாலும் இயக்கத்திற்கு கொண்டு வருவதற்கு முயற்சி எடுக்கப்படும்.

## மைய அரசு மின் உற்பத்தித் திட்டங்கள்

### தேசிய அனல் மின் கழகத்தின் செய்யூர் மிகுதிறன் அனல் மின் திட்டம் நிலை-1(1000 மெகாவாட்)

46. காஞ்சிபுரம் மாவட்டம், செய்யூர் தாலுக்காவில் முதற்கட்டமாக 1000 மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட அனல் மின் நிலையம், மைய அரசின் நிறுவனமான தேசிய அனல் மின் கழகத்தால் நிறுவப்படவுள்ளது. இத்திட்டத்திற்குத் தேவைப்படும் சுமார் 2888 ஏக்கர் நிலம் காஞ்சிபுரம் வருவாய்த் துறையினரால் தேர்வு செய்து நிலம் கையகப்படுத்தும் பணிகள் துவங்கியுள்ளன. மின் நிலையத்திற்கு நாளொன்றுக்குத் தேவைப்படும் சுமார் 2 மில்லியன் காலன் தண்ணீர், பாலாற்றுப் படுகையிலிருந்து வழங்க மாநில



அரசு ஒப்புதல் அளித்துள்ளது. 'மக்கள் கருத்தறியும் குழு' 14-7-1999 அன்று காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடத்திய தனது கூட்டத்தின் அடிப்படையில் இத்திட்ட அமுலாக்கத்திற்கு ஒருசில முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை அரசுக்கு பரிந்துரைத்துள்ளது. மாநில கடற்பகுதி மேலாண்மை குழுமம் இத்திட்டத்தை பரிந்துரை செய்துள்ளது. தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் இத்திட்டத்திற்கு 'ஆட்சேபமின்மை சான்றிதழ்' வழங்கியுள்ளது. மைய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வனப்பாதுகாப்பு அமைச்சகம் இத்திட்ட அமுலாக்கத்திற்கு இறுதி அனுமதி வழங்கிய பின்னர் இத்திட்டத்திற்கான பணிகள் தேசிய அனல் மின் கழகத்தால் துவக்கப்படவுள்ளன.

### கூடங்குளம் அணுமின் திட்டம் (2x1000 மெகாவாட்)

47. கூடங்குளத்தில் 2X1000 மெகாவாட் திறன் கொண்ட அணு மின் திட்டத்தை நிறுவுவதற்கான விரிவான திட்ட நகல் ஒன்றைத் தயாரிப்பதற்கான இரு தரப்பு ஒப்பந்தம் ஒன்றினை அணுமின் கழகம் ரஷ்யாவுடன் கையெழுத்திட்டுள்ளது. மின் நிலையம் மற்றும் குடியிருப்புக்கான நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது.

### இராமகுண்டம் மிகுதிறன் அனல் மின் திட்டம் - கூடுதல் பிரிவு

48. தேசிய அனல் மின் கழகம் 2001-2002 ஆம் வருடத்தில் 500 மெகாவாட் திறன் கொண்ட ஒரு கூடுதல் பிரிவு ஒன்றினை இயக்கி வைக்க முடிவு செய்துள்ளது. இதிலிருந்து, நமது மாநிலத்தின் பங்காக 118.2 மெகாவாட் கிடைக்கும்.

### கைகா அணுமின் திட்டம் (2 x 220 மெகாவாட்)

49. அணுமின் கழகமானது கர்நாடகா மாநிலத்திலுள்ள கைகா என்னுமிடத்தில் 2 x 220 மெகாவாட் திறன் கொண்ட அணுமின் நிலையம் ஒன்றினை நிறுவிக் கொண்டுள்ளது. அதன் முதல் பிரிவு 1999 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் இயக்கி வைக்கப்பட்டு நமது மாநிலத்தின் பங்காக 52 மெகாவாட் மின்சாரம் கிடைத்துக் கொண்டிருக்கிறது.

### டால்ச்சர் அனல் மின்திட்டம் இரண்டாம் நிலை

50. தேசிய அனல் மின் கழகமானது, 2000 மெகாவாட் திறன் கொண்ட இரண்டாவது நிலையம் ஒன்றினை டால்ச்சரில் நிறுவ முடிவு செய்துள்ளது. இந்த நிலையத்தினை 2003-2004 ஆம் வருடத்தில் இயக்கிட

[2000 நவம்பர் 9

திட்டமிட்டுள்ளது. தமிழ்நாட்டின் பங்காக 540 மெகாவாட் இந்த நிலையத்திலிருந்து கிடைக்கும். மின்கொள்முதல் ஒப்பந்தம், வருமான அடமான ஏற்பாடு மற்றும் மாநில அரசின் பொறுப்புறுதியுடன் கையெழுத்திடப்பட்டுள்ளது.

## நிலக்கரி ஒதுக்கீடு மற்றும் போக்குவரத்து செலவுகள்

51. தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு 2000-2001 ஆம் ஆண்டிற்கு சுமார் 15 மில்லியன் டன் நிலக்கரி, தூத்துக்குடி, மேட்டூர், எண்ணூர், வடசென்னை ஆகிய 4 அனல் மின் நிலையங்களை இயக்குவதற்கு தேவைப்படுகிறது. இதற்கு தேவையான நிலக்கரி, மேற்கு வங்காளம், பீகார் மற்றும் ஒரிசா மாநிலங்களிலுள்ள கிழக்கு நிலக்கரி சுரங்கம் (Eastern Coalfields Ltd.) பாரத கோகிங் கோல் சுரங்கம் (Bharat Coking Coal Ltd.) மற்றும் மகாநதி நிலக்கரி சுரங்கம் (Mahanadhi Coalfields Ltd.) ஆகியவற்றிலிருந்து பெறப்படுகிறது. 1999-2000 ஆண்டில் 11.53 மில்லியன் டன் நிலக்கரி, மேற்கண்ட சுரங்கங்களிலிருந்து பெறப்பட்டது.

52. நிலக்கரி சுரங்கங்களிலிருந்து பெறப்படும் நிலக்கரியின் தரம் குறைவாக உள்ளது. தூத்துக்குடி அனல் மின் நிலையத்தின் கொதிகலன்களுக்கு 14 முதல் 23 சதவீதம் வரையிலான சாம்பல் கொண்ட, கிலோவுக்கு 4940 முதல் 6200 வரையிலான கிலோ கலோரிகள் கொண்ட நிலக்கரி தேவை. மேட்டூர் அனல் மின் நிலையத்திற்கு, 29 முதல் 38 சதவீதம் வரையிலான சாம்பல் கொண்ட, கிலோவுக்கு 3985-4260 கிலோ கலோரிகள் உள்ளடக்கிய நிலக்கரியும், எண்ணூர் அனல் மின் நிலையத்திற்கு 30 முதல் 32 சதவீதம் வரை சாம்பல் கொண்ட, கிலோவுக்கு 4300-4800 கிலோ கலோரிகள் உள்ளடக்கிய நிலக்கரியும், வட சென்னை அனல் மின் நிலையத்திற்கு, 40 சதவீதம் சாம்பல் கொண்ட கிலோவுக்கு 3855 கிலோ கலோரிகள் கொண்ட நிலக்கரியும் தேவை. ஆனால் நமது மின் நிலையங்களுக்கு அனுப்பப்படுகின்ற நிலக்கரியின் வெப்ப அளவு, கிலோவுக்கு 3000 லிருந்து 4000 கிலோ கலோரிகளும் சாம்பல் அளவு 35லிருந்து 40 விழுக்காடு கொண்டதாகவும் உள்ளது. நிலக்கரியின் தரம் குறைவாக இருப்பதாலும், சாம்பல் அளவு கூடுதலாக இருப்பதாலும், மின் நிலையங்கள் அதிக மாசினை வெளிப்படுத்துகிறது. மேலும் மின்நிலைய இயந்திரங்கள், அதாவது கொதிகலன் குழாய்கள், கரி அரவை இயந்திரம், காற்றை வெளியேற்றும் விசிறி, புகை குழல் ஆகியவைகளின் தேய்மானம் அதிகமாக



2000 நவம்பர் 9]

இருப்பதன் காரணமாக மின் நிலைய இயந்திரங்களின் ஆயுட்காலமும் வெகுவாக குறைந்து விடுகிறது. மேலும் நிலையங்களின் துணை உபகரணங்களின் மின்சார உபயோகத்தின் அளவு அதிகமாகக் காணப்படுகிறது. மிக அதிக அளவு உள்ள சாம்பலை கையாளுவது ஒரு பெரிய பிரச்சினையாக உள்ளது. ஆகவே தரம் வாய்ந்த நிலக்கரியை, இந்திய நிலக்கரி நிறுவனத்திடமிருந்து (Coal India Ltd) பெறுவதற்கு ஏற்கெனவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும், நிலக்கரியின் தரத்தை உயர்த்துமாறு இந்திய நிலக்கரி நிறுவனம் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது.

53. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் அனல் மின் நிலையங்களுக்கு வேண்டிய நிலக்கரி, சுரங்கங்களிலிருந்து இரயில் மற்றும் கடல் வழியாக கொண்டு வரப்படுகிறது. தற்போது கட்டுமானத்தில் உள்ள இரண்டு படுகைகளைக் கொண்ட எண்ணூர் செயற்கை துறைமுகம் (ஒரு படுகை வடசென்னை அனல் மின் நிலையத்திற்கும் மற்றொன்று தனியார் மின் உற்பத்தி திட்டங்களுக்கும்) மார்ச் 2001-ல் உபயோகத்திற்கு தயார் நிலைக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. கப்பலிலிருந்து கரியை இறக்குவதற்கு கட்டுமானம், இயக்கம், உரிமை மாற்றம் (BOT) முறையில் வேலை ஒப்படைக்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன. 2001-ஆம் ஆண்டு ஜுன் திங்களில் இப்பணிகள் முடிவடைந்துவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பிற அனல் மின் நிலையங்களுக்கு நிலக்கரியை அனுப்புவதற்கு, வெளிப்புற கரி கையாளும் அமைப்பை நிறுவும் பணிகளும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. 2001-ஆம் ஆண்டு மார்ச் திங்களில் இப்பணியை முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது. நமது மின் நிலையங்களுக்கு தேவையான உள்நாட்டு நிலக்கரி தொலைதூரத்திலுள்ள சுரங்கங்களிலிருந்து கொண்டு வரவேண்டியுள்ளதால், போக்குவரத்து செலவு, நிலக்கரியின் அடிப்படை விலையை விட கூடுதலாக உள்ளது. 1999-2000 ஆண்டில் கொள்முதல் செய்யப்பட்ட நிலக்கரியின் விலை ரூ.977 கோடியாகும். ஆனால் இதற்காக வாரியத்தால் செலவிடப்பட்ட போக்குவரத்து மற்றும் கையாளும் செலவுத் தொகை ரூ.1327 கோடியாகும். நிலக்கரி போக்குவரத்தை சிறப்பாக செயல்படுத்தவும், கண்காணிக்கவும், பட்டியலிடவும், மென்பொருள் ஒன்று (Software) தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது.

## மின் தொடர் அமைப்பு

54. நாளுக்கு நாள் அதிகரித்து வரும் மின் தேவையை எதிர்கொள்ளவும், மின் பயனீட்டாளர்களின் குறைந்த மின் அழுத்த குறைபாடுகளை நீக்கி

[2000 நவம்பர் 9

அவர்களுக்கு சிறந்த சேவை புரியவும், தமிழ்நாடு மின்சார வாரியம் ஒவ்வொரு ஆண்டும் சுமார் 60 புதிய துணை மின் நிலையங்களை நிறுவி வருகிறது. குறைந்த மின் அழுத்தத்தை சீராக்கவும் மின்சாரத்தின் நிலைத்தன்மையை உயர்த்தவும் இந்த ஆண்டு சுமார் 210 கிலோ மீட்டர், 230 கிலோவோல்ட் கூடுதல் மின் தொடர்கள் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

55. மின் அழுத்த அளவை மேம்படுத்தி, தரமான மின்சாரம் வழங்குவதை உறுதிப்படுத்தும் நோக்கத்தை எய்தும் பொருட்டு, மின் வாரியம் 1999-2000 ஆண்டில், 60 புதிய துணை மின் நிலையங்களை நிறுவியும், 774 சுற்றமைப்பு கிலோ மீட்டர் தொலைவிற்கு மிக உயரழுத்த மின் கம்பி தொடர் அமைத்தும் உள்ளது. மேற்சொன்னவை தவிர, கூடுதல் மின் தேவைகளை நிறைவு செய்யும் பொருட்டு 86 துணை மின் நிலையங்களில் உள்ள, மின்மாற்றிகளின் திறன் 1366.75 எம்.வி.ஏ. (M.V.A) அளவிற்கு அதிகரிக்கப்பட்டுள்ளது.

56. இதுபோல், இந்த அரசு, 2000-2001-ல், ரூ.175 கோடி செலவில் 60 புதிய துணை மின் நிலையங்களையும், ரூ.195 கோடி செலவில் 750 சுற்றமைப்பு கிலோமீட்டர் மிக உயரழுத்த மின்கம்பி தொடர் இணைப்புகளையும், ரூ.20 கோடி செலவில் 900 எம்.வி.ஏ.ஆர். திறன் கொண்ட கபாசிட்டர்களையும் அமைக்க திட்டமிட்டுள்ளது.

**மின் பகிர்மானம்**

**புதிய மின் இணைப்புகள்**

57. 1999-2000 ஆண்டிற்கான பல்வேறு வகையான புதிய மின் இணைப்புகளின் இலக்கிட்டினை நிறைவு செய்து விட்டோம் என்பதை முதற்கண் மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கிறேன். 2000-2001 ஆண்டில் இதுவரை மின் இணைப்பு கொடுத்துள்ள விவரம் வருமாறு:

| | விவரம் | 30-9-2000 வரை எய்திய எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | விவசாய பம்புசெட் | 8,898 |
| 2. | குடிசைமின் இணைப்பு | 20,727 |
| 3. | தொழிற்சாலைகள் (உயர் அழுத்தம் மற்றும் தாழ்வழுத்தம்) | 6,276 |



2000 நவம்பர் 9]

**ஒரே நாளில் மின் இணைப்பு வழங்கும் திட்டம்**

58. தமிழ்நாடு மின்சார வாரியம் 'ஒருநாளில் மின் இணைப்பு' என்ற புதிய திட்டத்தை பயனீட்டாளர்கள் நலன் கருதி செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின்படி வீட்டு/வணிக மின் விண்ணப்பதாரருக்கு, மின்கம்பி தொடர் நீட்டிப்பு ஏதும் இல்லையெனில், மின் இணைப்பு ஒரு நாளில் கொடுக்கப்படும். கோவை மண்டலத்தில் இத்திட்டம் 1-4-2000 முதல் அமுலில் உள்ளது. மற்ற மண்டலங்களில் 1-7-2000 முதல் நிறைவேற்றப்பட்டு வருகிறது. ஒரு நாள் மின் இணைப்புத் திட்டம் மின் விண்ணப்பதாரர்களுக்கு அதிக திருப்தியை கொடுத்துள்ளது.

**விவசாய மின் இணைப்புகள்**

59. விவசாய மின் இணைப்பு வழங்குவதற்கு தனித்தனியாக முன்னுரிமை அனுமதிக்கப்படுகிறது. சாதாரண திட்ட முன்னுரிமை என்றும், சுயநிதித் திட்ட முன்னுரிமை என்றும் பிரிக்கப்படுகிறது. சுயநிதித் திட்டத்தின்கீழ் வரும் விண்ணப்பங்கள் கீழ்க்கண்டவாறு பிரிக்கப்படுகிறது.

**பிரிவு-I**

அ. ஒரு விவசாய மின் இணைப்புக்கு மதிப்பீட்டுத் தொகை ரூ.50,000-க்குள் இருந்தால் ஒரு இணைப்புக்கு விவசாயி ரூ.10,000 செலுத்துதல் வேண்டும்.

ஆ. ஒரு விவசாய மின் இணைப்புக்கு மதிப்பீட்டுத் தொகை ரூ.50,000-க்குள் இருந்து, விவசாயி தானே முன்வந்து ஒரு இணைப்புக்கு ரூ.25,000 மொத்தமாக கட்டினால் முன்னுரிமையில் இணைப்பு வழங்கப்படும்.

**பிரிவு-II**

ஒரு விவசாய மின் இணைப்புக்கு மதிப்பீட்டுத் தொகை ரூ.50,000-க்கு மேல் இருந்தால், அந்த விவசாயி தானே முன்வந்து முழுத் தொகையையும் செலுத்தினால், தனி முன்னுரிமையில் இணைப்பு வழங்கப்படும்.

**தொழிற்சாலைகளுக்கு மின் இணைப்பை துரிதப்படுத்த நடவடிக்கைகள்**

60. உயர் அழுத்த மற்றும் தாழ்வழுத்த தொழிற்சாலைகளுக்கான மின் இணைப்புகள் வழங்குவதில் ஏற்படும் காலதாமதத்தை தவிர்க்கும்

பொருட்டு, தமிழ்நாடு மின்சார வாரியம் விதிமுறைகளை எளிமைப்படுத்தி, ஒரு காலவரைக்குள் மின் இணைப்பு வழங்க ஆணை பிறப்பித்துள்ளது.

## உயர் அழுத்த மின் இணைப்பு

61. புதிய விதிமுறைகளின்படி 500 கேவிஏ. வரையிலான உயர்மின்னழுத்த தொழிற்சாலைகளுக்கான புதிய மின் இணைப்பிற்கோ அல்லது கூடுதல் மின்பளுவிற்கோ விண்ணப்பிப்பவருக்கு, அவர் கேட்கும் மின் பளுவை இணைக்க தற்பொழுதுள்ள உயர்சக்தி மின்மாற்றியின் கொள்ளளவு போதுமானதா என்பதை மட்டும் உறுதி செய்து, மின் இணைப்பு வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது. மேலும் இந்த விதிமுறையை விரைவாக செயல்படுத்த, தயார் நிலையில் உள்ளவர்களுக்கு முன்னுரிமை அளித்து இணைப்புக் கொடுக்க மண்டல தலைமைப் பொறியாளரிடமிருந்த அதிகாரம் அந்தந்த வட்ட மேற்பார்வை பொறியாளர்களுக்கே வழங்கப்பட்டுள்ளது.

## தாழ்வழுத்த தொழிற்சாலை மின் இணைப்பு

62. தமிழ்நாடு மின்சார வாரியம் ஒரு குறிப்பிட்ட காலவரைக்குள் தொழிற்சாலைகளுக்கு தாழ்வழுத்த மின் இணைப்புகளை வழங்க தீர்மானித்துள்ளது. இதன்படி 5 குதிரைத் திறனுக்கு குறைவாக தேவைப்படும் தொழிற்சாலைகளுக்கு எந்தவித மின் கம்பிதொடர் நீட்டிப்பும் தேவை இல்லாதிருந்தால் அனைத்து கட்டணமும் செலுத்திய உடனே மின் இணைப்பு வழங்கப்படும். மின் கம்பி தொடர் நீட்டிப்பு தேவையெனில், 15 நாட்களுக்குள் மின் இணைப்பு வழங்கப்படும்.

63. ஐந்து (5) குதிரைத் திறனுக்கு மேல், 150 குதிரைத் திறனுக்குள் உள்ள புதிய தொழிற்சாலைகளுக்கு, மின் கம்பி தொடர் நீட்டிப்பு தேவை இல்லையெனில் 15 நாட்களுக்குள்ளும், மின் கம்பி தொடர் நீட்டிப்பு தேவையெனில் 30 நாட்களுக்குள்ளும் மின் இணைப்பு வழங்கப்படும். புதியதாக மின் மாற்றி அமைப்பது, மின்கம்பி தொடர் நீட்டிப்பு பணி மற்றும் இதர பணிகள் தேவைப்படும் மற்ற எல்லா குறைவழுத்த தொழிற்சாலைகளுக்கும் பணம் பெறப்பட்ட 90 நாட்களுக்குள் மின் இணைப்பு வழங்கப்படும். ஏற்கெனவே உள்ள குறைந்த அழுத்த தொழிற்சாலைகளுக்கு கூடுதல் பளு விண்ணப்பங்களுக்கும் இது பொருந்தும்.

64. தாழ்வழுத்த தொழிற்சாலைகளுக்கு வரிசைக்கிரமமாக பதிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்களில் தயார் நிலையில் உள்ளவர்களுக்கு ஏற்படும் சிரமத்தை தவிர்ப்பதற்காக முன்னுரிமை அளித்து மின் இணைப்பு





வழங்கும் அதிகாரம் அந்தந்த வட்ட மேற்பார்வை பொறியாளர்களுக்கே தற்போது வழங்கப்பட்டுள்ளது.

## மின் பகிர்மான வலையில் முன்னேற்றம்

65. மின்தேக்கிகள் (Capacitors), ஒத்தி இயங்கு மின் கொண்மி, (Synchronous condensers), எதிர்வினைப்பு திறன் ஈடு செய்யும் சாதனம் (Static VAR compensator) ஆகிய வினைகலன் எதிர்வினைப்பு (Reactive Power) சாதனங்களை நிறுவுவதன் மூலம் மின் இழப்பு குறைந்து மின் அழுத்தம் அதிகமாகும். 31-3-2000 வரை 2675.5 எம்.வி.ஏ.ஆர். எதிர்வினைப்பு ஈடு செய்யும் சாதனங்கள் நிறுவப்பட்டுள்ளது.

66. தென்மண்டல மின்சார வாரியம் தனது ஆய்வின்படி 2000 ஆண்டு மார்ச் நிலவரப்படி 790 எம்.வி.ஏ.ஆர். கூடுதல் மின்தேக்கிகளை நிறுவ தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு பரிந்துரைத்துள்ளது. தமிழ்நாடு மின்சார வாரியம் மின்தேக்கிகளை வாங்குவதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டு, அதை ஏற்கெனவே நிறுவுவதற்காக முடிவு செய்யப்பட்ட துணை மின் நிலையங்களில் நிறுவிக் கொண்டிருக்கிறது.

67. மேலும் மின் அழுத்தத்தை மேம்படுத்த ரூ.175 கோடி செலவில் 60 துணை மின் நிலையங்களும், ரூ.195 கோடி செலவில் 750 கிலோ மீட்டர் மிக உயர் அழுத்த மின் கம்பித் தொடர்களும் இந்த வருடத்தில் நிறுவப்பட உள்ளது. ரூ.23 கோடி செலவில் 59 துணை மின் நிலையங்களின் மின் மாற்றியின் திறனை 460 எம்.வி.ஏ. அளவிற்கு அதிகரிக்க வாரியம் திட்டமிட்டுள்ளது.

68. இதைத்தவிர, சில புனல் மின் நிலையங்கள் மின் உற்பத்தி செய்யாத நேரங்களில் ஒத்தி இயங்கு மின் கொண்மிகளாக (Synchronous condensers) இயக்கப்படுகின்றன. காடம்பாறை, கீழ்மேட்டூர், ஆழியார் புனல் மின் நிலையங்கள் இவ்வாறு இயக்கப்பட்டு வருகின்றன.

## குறைந்த மின்னழுத்தப் பகுதிகள்-முன்னுரிமை தருவது.

69. தமிழ்நாடு மின்சார வாரியம் குறைந்த மின்னழுத்த பகுதிகளைக் கண்டறிந்து அதை நிவர்த்தி செய்யும் பொருட்டு மின் தொடர்களை மேம்படுத்துதல், அருகில் உள்ள துணை மின் நிலையங்களிலிருந்து இணைப்பு மின் தொடர்களை அமைத்தல், தனிப்பட்ட/நேரடி மின்தொடர்களை அமைத்தல் போன்ற மேம்பாட்டுப் பணிகளை மேற்கொண்டுள்ளது. கண்டறியப்பட்ட 125 தாழ்வு மின் அழுத்தப்

பகுதிகளில் 23 பகுதிகளில் மேம்பாட்டு பணிகள் முடிக்கப்பட்டு விட்டன. மீதமுள்ள பகுதிகளில் 2000 ஆண்டு டிசம்பர் திங்களுக்குள் மேம்பாட்டுப் பணிகள் முடிக்கப்படும். மேற்கண்ட முயற்சிகளால், மின் பயனீட்டாளர்களுக்கு மின்சாரம் திருப்திகரமான மின்னழுத்தத்தில் விநியோகம் செய்யப்படும்.

### நகரத்தில் மின் பகிர்மானம்

70. சென்னை நகரில், மின்னழுத்தத்தை சரிசெய்வதற்காக, இந்த வருடம் ரூ.78.60 கோடி செலவில் 10 துணை மின் நிலையங்கள் அமைக்கப்பட உள்ளன. மேலும் சுமார் 1510 மின்மாற்றிகள் ரூ.9.75 கோடி செலவிலும், 6310 மின் பகிர்மானப் பெட்டிகள் (Pillar boxes) ரூ.5.81 கோடி செலவிலும் இந்த ஆண்டில் நிறுவப்படவுள்ளன. துணைமின் நிலையங்கள், மின் மாற்றிகள் மற்றும் மின் பகிர்மான பெட்டிகள் ஆகியவற்றின் பராமரிப்பு வேலைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன. இந்த நடவடிக்கைகளினால் பொதுமக்களிடம் இருந்து வரும் புகார்கள் கணிசமாக குறைந்துள்ளன. இந்தியாவிலேயே சென்னையை மின் தரத்திலும், நிறைவிலும் சிறந்த நகரமாக ஆக்குவதற்கு நிரந்தர மேம்பாட்டுத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### தெரு விளக்கு இணைப்புகள் வழங்குதல்

71. 1999-2000-ஆம் ஆண்டில் தமிழ்நாடு மின்வாரியம் மிக அதிகபட்ச அளவாக 85,372 தெரு விளக்குகளுக்கு மின் இணைப்பு வழங்கியுள்ளது. 2000-2001ஆம் ஆண்டில் தமிழ்நாடு மின்வாரியம் 30-9-2000 வரை 20,674 தெரு விளக்குகளுக்கு மின் இணைப்பு வழங்கியுள்ளது.

### ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு அடிப்படை வசதிகள்

72. "ஒரு குடிசைக்கு ஒரு விளக்கு" என்ற திட்டத்தின் கீழ் 1999-2000 ஆம் ஆண்டில் 30,000 ஆதிதிராவிட குடிசைகளுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. 2000-2001-ஆம் ஆண்டில் 30-9-2000 வரை தமிழ்நாடு மின்சார வாரியம் 16,508 ஆதிதிராவிட குடிசைகளுக்கு மின் இணைப்பு வழங்கியுள்ளது. திருச்சி மாவட்டத்திலுள்ள பச்சைமலையில் 1999-2000 ஆண்டில் 2 மலைவாழ் குக்கிராமங்களுக்கு மின்சார வசதி செய்து தரப்பட்டுள்ளது. 2000-2001-ஆம் ஆண்டில் 30-9-2000 வரை 4 மலைவாழ் குக்கிராமங்களுக்கு மின்சார வசதி செய்யப்பட்டுள்ளது. மேலும் இம் மலையில் 3 குக்கிராமங்களுக்கு மின் வசதி செய்யும் பணி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.



### ஜீவன்தாரா கிணறுகளுக்கு மின் இணைப்பு

73. ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் ஊரக வளர்ச்சித் துறையினரால் தோண்டப்பட்ட/வெட்டப்பட்ட கிணறுகளுக்கு அரசு ஆணையின்படி தமிழ்நாடு மின்சார வாரியம் ஆதிதிராவிடர்/பழங்குடியினர் வகையில் 1249 மின் இணைப்புகளும், ஆதிதிராவிடர்/பழங்குடியினர் அல்லாத விவசாய கிணறு வகையில் 751 மின் இணைப்புகளும் ஒவ்வொரு ஆண்டும் வழங்கவேண்டும். அந்தக் குறியீடு, ஓராண்டுக்கு கொடுக்கப்படும் விவசாய மின் இணைப்புகளின் இலக்கீடான 40,000-த்துக்குள் அடங்கும். 1999-2000 ஆண்டில் ஆதிதிராவிடர்/பழங்குடியினர் வகையில் 1249 ஜீவன்தாரா கிணறுகளுக்கு மின் இணைப்புகளும், ஆதிதிராவிடர்/ பழங்குடியினர் அல்லாத வகையில் 751 ஜீவன்தாரா கிணறுகளுக்கு மின் இணைப்புகளும் வழங்கப்பட்டுள்ளது. 2000-2001 ஆம் ஆண்டில் (30-9-2000 வரை) ஆதிதிராவிடர்/பழங்குடியினர் வகையில் 532 ஜீவன்தாரா கிணறுகளுக்கும், ஆதிதிராவிடர்/ பழங்குடியினர் அல்லாத வகையில் 344 கிணறுகளுக்கும், மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

### மின் இழப்பு

74. தேசிய சராசரி மின் இழப்பு 21 விழுக்காடாகும். அரசும், தமிழக மின்சார வாரியமும் எடுத்த பல்வேறு நடவடிக்கைகளினால் இம்மாநிலத்தின் மின் இழப்பானது 1999-2000 ஆண்டில் 16.75 விழுக்காடாக குறைந்தது என்பதை அறிவதில் மாண்புமிகு உறுப்பினர்கள் மகிழ்ச்சி அடைவார்கள். வாரியம், மின் மாற்றிகளில் மொத்தம் 200 எம்.வி.ஏ.ஆர் திறன் கொண்ட குறைவழுத்த மின் தேக்கிகளை , இரண்டு மின் பகிர்மான வட்டங்களில் பொருத்த தீர்மானித்துள்ளது. இதன் செயல்திறன் மற்றும் மின்வாரிய நிதிநிலைமையைப் பொறுத்து பிற மின் பகிர்மான வட்டங்களிலும் இத்திட்டம் செயல்படுத்தப்படும். மின் இழப்பை கணிசமாகக் குறைக்கும் பொருட்டு 816 எம்.வி.ஏ.ஆர். திறன் கொண்ட மிக உயர்வழுத்த மின் தேக்கிகள் வாங்கப்பட்டு இவ்வாண்டு நிறுவப்பட்டு வருகிறது. இந்த நடவடிக்கைகளினால் மின் இழப்பு சுமார் ஒரு சதவீத அளவிற்கு குறையும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இதனால் மின்சார இழப்பை குறைப்பதற்கும், மின் அழுத்தம் உயர்வதற்கும் வாய்ப்புள்ளது. தமிழ்நாடு மின்சார வாரியம் தரமான மின் அளவிகளை (meters) தற்போது பயன்படுத்துவதால் மின் இழப்பு மேலும் குறைய வாய்ப்புள்ளது.

75. மேலும் இந்திய அரசு 1994-95-ஆம் ஆண்டில் குறைந்த அளவு மின் இழப்பில், மின் தொடர் மற்றும் மின் பகிர்மானம் சிறந்த முறையில்

செய்தமைக்காக தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு கேடயம் 11-10-2000 அன்று வழங்கியுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மின் தணிக்கை**

76. அரசு ஆணை நிலை எண் 72 நாள் 10-5-1996 மூலம் உயர் அழுத்த தொழிலகங்களுக்கு மின் சக்தியை தணிக்கை செய்வது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தை முதற்கட்டமாக, 2000 கே.வி.ஏ. மின் திறனுக்கு அதிகமாக உள்ள உயரழுத்த தொழிற்சாலைகளுக்கு மட்டும் அமுலாக்கியுள்ளது. தமிழ்நாடு மின்சார வாரியம், ஆணை எண் 42, நாள் 5-3-1997 வாயிலாக தொழிலகங்களில் மின் தணிக்கை செய்யும் திட்டத்தை அமுலாக்க ஆணை பிறப்பித்துள்ளது. அதன்படி தமிழ்நாடு மின்சார வாரியத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ள மின் தணிக்கை குழுவினரால் 186 உயர் மின் அழுத்த தொழிற்சாலைகளில் மின் தணிக்கை செய்யப்பட்டுள்ளது. மின் தணிக்கை ஆய்வு நடத்தி, மின்செலவை மிச்சப்படுத்துவதை தொழிற்சாலைகள் வரவேற்கின்றன.

77. கட்டாயமாக்கப்பட்டுள்ள மின்சக்தி தணிக்கை திட்டத்தின் இரண்டாம் கட்டமாக, மொத்தம் 411 உயர் அழுத்த நிறுவனங்களில், அதாவது 1000 கே.வி.ஏ-க்கு மேலும் 2000 கே.வி.ஏ. வரையிலும் உள்ள 368 உயர் அழுத்த தொழிற்சாலைகளிலும் 1000 கே.வி.ஏ.-க்கு மேற்பட்ட 43 உயர் அழுத்த வணிக நிறுவனங்களிலும், மின் உபயோக ஆய்வு நடத்துவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இது விரைவில் செயல்படுத்தப்பட்டு, மின்சாரத்தை மிச்சப்படுத்துவதில் நல்ல முன்னேற்றம் எதிர்பார்க்கப்படுகிறது.

**1999-2000 ஆண்டிற்கான திட்ட மதிப்பீடு**

78. 1999-2000 ஆண்டிற்கான ஒப்புதல் அளிக்கப்பட்ட நிதி ஒதுக்கீடு ரூ.1033.98 கோடியாகும். இது தவிர திட்டம் சாராத (Outside Plan) செலவுகளுக்காக ரூ.209.51 கோடியை மின் செலுத்துகை மற்றும் மின் பகிர்மான பணிகளுக்காக மத்திய அரசின் மின்சக்தி நிதிக் கழகத்திடமிருந்தும் (PFC), பம்புசெட்டுகளை மின் மயமாக்க ரூ.60 கோடியை ஊரக மின்மயமாக்குதல் கழகத்திடமிருந்து (REC) பெற திட்டமிடப்பட்டது. இதில் திட்ட ஒதுக்கீட்டிலிருந்து ரூ.1034.73 கோடியும், மின்சக்தி நிதிக்கழகத்திடமிருந்து (PFC) பெறப்பட்ட கடனில் ரூ.57.79 கோடியும், திட்டம் சாராத தொழில்களுக்காக ஊரக மின்மயமாக்குதல் கழகத்திடமிருந்து பெற்ற பணத்தில் ரூ.32.19 கோடியும் செலவிடப்பட்டுள்ளது. இதன்படி திட்டப் பணிகளுக்காகவும், திட்டத்தின்



கீழ் வராத பணிகளுக்காகவும் மின்சார வாரியம் ரூ.1356.77 கோடி செலவு செய்துள்ளது. இதில் கட்டுமானத்தின் போது மூலதனமாக்கப்பட்ட வட்டி ரூ.232.06 கோடி அடங்கும்.

**2000-2001 ஆம் ஆண்டுத் திட்ட மதிப்பீடு**

79. மின் உற்பத்திக்காக ரூ.365.72 கோடியும், மின்சாரம் செலுத்துகை மற்றும் பகிர்மானம் செய்தல் ஆகியவற்றுக்காக ரூ.529.06 கோடியும், ஊரக மின் மயமாக்கும் பணிகளுக்காக ரூ.111.55 கோடியும் நில அளவு ஆய்வுகள் போன்ற பணிகளுக்காக ரூ.27.87 கோடியும் ஆக மொத்தம் ரூ.1034.20 கோடி 2000-2001 ஆம் ஆண்டுக்கான திட்ட நிதியாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது தவிர திட்டம் சாராத செலவுக்காக ஊரக மின்மயமாக்குதல் கழகத்திடமிருந்து (REC) ரூ.30 கோடியும் மின் உற்பத்தி, மின் செலுத்துகை, மின் பகிர்மானம் ஆகியவற்றுக்காக மின்சக்தி நிதிக் கழகத்திடமிருந்து (PFC) ரூ.205.30 கோடியும் கடனாகப் பெற திட்டமிடப்பட்டுள்ளது. மேற்கூறிய அனைத்து பணிகளுக்காகவும் மின்சார வாரியம் 2000-2001ஆம் ஆண்டிற்காக ரூ.1459.93 கோடி திட்ட ஒதுக்கீடு செய்துள்ளது. இத்திட்ட ஒதுக்கீடு ரூ.190.43 கோடி கட்டுமானத்தின் போது மூலதனமாக்கப்பட்ட வட்டியையும் உள்ளடக்கியதாகும்.

**வருவாயும் வருவாய் இன செலவுகளும்**

80. 1998-99 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையின்படி வருவாய் செலவினம் ரூ.6423.81 கோடியாகும். வருவாய் இன வரவு ரூ.6758.75 கோடியாகும். இதில் இதர வரவுகளாக ரூ.94.36 கோடியும், மின்கட்டண சீரமைப்பு இழப்பீட்டுத் தொகையாக தமிழ்நாடு அரசு வழங்கிய ரூ.1076.22 கோடியும் அடங்கும். 1998-99-ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையின்படி, நிகர உபரி வருவாய் ரூ.334.94 கோடியாகும்.

81. 1999-2000 ஆண்டிற்கான நிதிநிலை வருவாய் மதிப்பீட்டின்படி, வருவாய் இன செலவினம் ரூ.8343.84 கோடியாகும். வருவாய் இன வரவு ரூ. 7713.63 கோடியாகும். இதில் இதர வருமானம் ரூ.80 கோடியும், மின் கட்டண சீரமைப்பு இழப்பீட்டுத் தொகையாக தமிழ்நாடு அரசு வழங்கிய ரூ.250 கோடியும் அடங்கும். 1999-2000 ஆண்டிற்கான வருவாய் இன பற்றாக்குறை ரூ.630.21 கோடியாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

82. மேற்கூறிய வருவாய் மதிப்பீட்டிற்கு மாறாக, 1999-2000 ஆண்டின் நிதிநிலை அறிக்கையின்படி (முதல் நிலை) வருவாய் இன செலவினம்

ரூ.7767.62 கோடியாகவும், வருவாய் இன வரவு ரூ.6575.48 கோடியாகவும் (இதில் இதர வருமானம் ரூ.119.25 கோடியும், மின் கட்டண சீரமைப்பு இழப்பீட்டுத் தொகையாக தமிழ்நாடு அரசு வழங்கிய ரூ.250.07 கோடியும் அடங்கும்) பற்றாக்குறை ரூ.1192.14 கோடியாகவும் இருந்தன.

83. 2000-2001 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை வருவாய் மதிப்பீட்டின்படி, வருவாய் இன செலவினம் ரூ.8696.58 கோடியாகவும், வருவாய் இன வரவு ரூ.7424.55 கோடியாகவும் (இதில் இதர வரவு ரூ.110 கோடியும், மின் கட்டண சீரமைப்பு இழப்பீட்டுத் தொகையாக தமிழ்நாடு அரசு வழங்கும் 250 கோடியும் அடங்கும்). பற்றாக்குறை ரூ.1272.03 கோடியாகவும் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

84. தமிழ்நாடு மின்சார வாரியம், விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்குவதாலும், வீட்டு மின்னிணைப்புகளுக்கு மின்சாரத்தை குறைந்த விலையில் விநியோகிப்பதாலும் மற்றும் வெகு தொலைவிலுள்ள சுரங்கங்களிலிருந்து நிலக்கரி கொண்டு வருவதற்கான செலவு, நிலக்கரி, எரிஎண்ணெய், வெகுவேக டீசல் ஆகியவற்றின் வருடாந்திர விலையேற்றம், இரயில்வே கட்டண உயர்வு, ஊழியர்களின் செலவு, நிர்வாக செலவு மற்றும் இதர பொருட்களுக்கு ஆகும் செலவு ஆகியவற்றால் கடுமையான நிதி நெருக்கடிக்கு ஆளாகியுள்ளது. மேலும் தனியார் துறையினரிடமிருந்து வாங்கப்படும் மின்சாரத்தின் செலவினங்களும் அதிகமாக உயர்ந்துள்ளது.

85. 7-1-2000 அன்று சீரமைக்கப்பட்ட மின் கட்டண உயர்வையும் கணக்கில் எடுத்த பின் 2000-2001-ஆம் ஆண்டிற்கு நிதி பற்றாக்குறை ரூ1195.62 கோடியாக இருக்குமென்று மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. (வருவாயில் பற்றாக்குறை ரூ.1272.03 கோடியும், முதலீட்டுச் செலவில் ரூ.76.41 கோடி உபரியும் ஆகும்.)

86. மின் உற்பத்தியின் இடு பொருட்களின் விலை உயர்வு, மின்சாரம் வாங்குவதில் விலை உயர்வு, ஆகியவை காரணமாக வருவாயில் பெரிய துண்டு விழுந்து இருக்கிறது.

**மின் கட்டண திருத்தம்**

87. 7-1-2000 நாளிட்ட அரசு ஆணை எண் 3, எரிசக்தி துறையின் ஆணையின்படி 7-1-2000 முதல் மின் கட்டணம் மாற்றி அமைக்கப்பட்டது. 1999-2000 ஆண்டில் மின் உற்பத்தியின் சராசரி விலை யூனிட்டுக்கு 255.22





காசுகளாக உள்ளது. இதே நேரத்தில் மின் விநியோகத்தின் சராசரி வரவு யூனிட் ஒன்றுக்கு 200.28 காசாக உள்ளது. இதனால் ஒரு யூனிட் விலைக்கு 54.94 பைசா பற்றாக்குறையாகும். இதன் விளைவாக பற்றாக்குறை ரூ.1672.04 கோடியாகிறது. கட்டண சீரமைப்பு இழப்பீட்டுத்தொகை ரூ.250.07 கோடி, மற்றும் இதர இன வருமானம் ரூ.119.25 கோடியையும் கணக்கில் கொண்டு வந்த பிறகு, 1999-2000 ஆண்டில் பிற வரவுகள் ரூ.110.58 கோடி கணக்கிடப்பட்டு, வருவாய் பற்றாக்குறை ரூ.1192.14 கோடியாக இருக்கும் என்று மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. மின்கட்டண திருத்தத்தின் மூலம் 2000-2001 முழு வருடத்திற்கு ரூ.481.89 கோடி வருமானம் எதிர்பார்க்கப்படுகிறது.

**தூய்மையான, ஒளிவு மறைவு அற்ற நிர்வாகத்திற்காக தமிழ்நாடு மின்சார வாரியம் அதன் செயல்களை கணினி மயமாக்குவதற்காக எடுத்த நடவடிக்கைகள்.**

88. தமிழ்நாடு மின்சார வாரியம் கணினி வலையின் மூலமாக (tneb.org) வாரியத்தின் முக்கிய குறிப்புகளை வெளியிட்டுள்ளது. கணினி வலையின் மூலமாக புதிய மின் இணைப்புகளுக்கான படிவங்கள், பெயர் மாற்றப் படிவங்கள், மின் கட்டண விகிதங்கள் மற்றும் முக்கிய குறிப்புகளை வெளியிட்டுள்ளது. தமிழக மக்கள் மேற்கண்ட படிவங்களை உபயோகப்படுத்திக் கொள்ளலாம். ஒப்பந்தப்புள்ளிகள் மக்கள் உரிமைப்பட்டயத்துடன் கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. இது மின் பயனீட்டாளர்களுக்கு பெரிய வரப்பிரசாதமாகும்.

89. தமிழ்நாடு மின்சார வாரியம், மின் பயனீட்டாளர்களின் குறைபாடுகளை இணையத்தின் மூலம் மேற்பார்வையிடும் திட்டம் ஒன்றைத் தொடங்கியுள்ளது. இதன் மூலம் மின் பயனீட்டாளர்கள் தங்கள் குறைகளை எந்த பகுதியில் இருந்தாலும் எந்த நேரத்திலும் நேரடியாக பதிவு செய்து குறைகளை குறைந்த நேரத்தில் நிவர்த்தி செய்து கொள்ளலாம்.

90. மின் பயனீட்டாளர்களுக்கு தரமான சேவை செய்யும் பொருட்டு, தமிழ்நாடு மின்சார வாரியம் கீழ்க்கண்ட திட்டங்களை கூடியவிரைவில் கணினி மயமாக்க உள்ளது.

அ. உயர் அழுத்த கணக்குப் பட்டியல் மேலாண்மைத் திட்டம்

ஆ. தாழ்வழுத்த கணக்குப்பட்டியல் மேலாண்மைத் திட்டம்

[2000 நவம்பர் 9

91. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மொத்த செயல்திறனை உயர்த்தவும், மின் பயனீட்டாளர்களுக்கு சிறந்த சேவை புரியவும் கீழ்க்காணும் மென்பொருள் திட்டங்களை மார்ச் திங்கள் 2001-க்குள் தொடங்கவுள்ளது.

அ. இணையத்தின் மூலம் பணியாளர் தகவல் மேலாண்மைத் திட்டம்.

ஆ. இணையத்தின் மூலம் நிலக்கரியின் இருப்பு மற்றும் கணக்குப்பட்டியலின் மேலாண்மைத்திட்டம்.

இ. இணையத்தின் மூலம் நிதி நிலை கணக்கு மேலாண்மைத்திட்டம்.

ஈ. இணையத்தின் மூலம் பொருள் பட்டியல் மேலாண்மைத்திட்டம்.

92. தமிழ்நாடு மின்சார வாரியம் மாநிலம் தழுவிய வலையை தலைமையகத்திலிருந்து மண்டலத்திற்கும், மண்டலங்களிலிருந்து மின்பகிர்மான வட்டங்களுக்கும் இணைத்து மேற்சொன்ன பணிகளை கணினி மயமாக்கி நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிறது.

## இருவழி தகவல் தொடர்பு சாதனம்

93. மின்தடை குறைகளைக் கேட்டு, அதனை பதிவு செய்து பின் அந்தந்த மின் தடை குறை கேட்கும் மையங்களுக்கும், அதை நிவர்த்தி செய்யும் பொருட்டு, இருவழி தகவல் தொடர்பு சாதனம் (Interactive Voice Response System) சென்னை பெருநகரில் அறிமுகப்படுத்தப்பட்டு, அது சிறப்பாக இயங்கி வருகிறது. தங்கள் புகார்கள் சரியான முறையில் பதிவு செய்யப்பட்டு, கணிப் பொறி மூலம் மேற்பார்வையிடப்படுகிறது என்கிற திருப்தி தற்போது மின் பயனீட்டாளர்களுக்கு கிடைத்துள்ளது.

## ஊதியக்கொடை

94. மின்சார வாரியம், ஊதிய ஒப்பந்தம் மற்றும் ஊதியக்கொடை சட்டத்தின்கீழ் வரும் ஊழியர்களுக்கு 8.33% ஊதியக்கொடை அறிவித்துள்ளது. மேலும், கருணைத் தொகையாக ஊதியத்தில் 11.67% 1998-99 ஆம் ஆண்டிற்கு வழங்கப்பட்டது. 1999-2000 ஆண்டிற்கும், அதே 8.33% ஊதியக் கொடை மற்றும் 11.67% கருணைத்தொகை ஆக மொத்தம் 20% அறிவிக்கப்பட்டு வழங்கப்பட்டது. மற்றவர்களுக்கு (அதாவது மொத்த ஊதியம் (Consolidated Remuneration) பெறும் ஊழியர்கள், மின்பகிர்மான வட்டங்கள் மற்றும் பிற இடங்களில் தொடர்ந்து பணியாற்றும் ஒப்பந்த



2000 நவம்பர் 9]

தொழிலாளர்கள், 1997-98 மற்றும் 1998-99 ஆம் ஆண்டுகளில் கருணைத்தொகை வழங்கப்பட்டிருந்தால், 1999-2000 ஆண்டில் தொடர்ந்து ஒப்பந்தப் பணியில் அமர்த்தப்பட்டிருந்து, 1998-99 ஆம் ஆண்டு கருணைத்தொகை வழங்கப்பட்டிருந்தால்) 1999-2000 ஆண்டிற்கு அவர்களுக்கு அதே அடிப்படையில் கருணைத்தொகை ரூ.400/- (ரூபாய் நானூறு மட்டும்) வழங்கப்படும்.

## ஊழியர்களுக்கு சிறப்பான பணிகளுக்கான பதக்கம் வழங்கும் திட்டம்

95. பொதுமக்கள், வாரியத்தில் வெவ்வேறு பணிகளில், வெவ்வேறு நிலைகளில் பணியாற்றுகின்ற அலுவலர்களும் ஊழியர்களும் நேர்மை, நாணயம் ஆகியவற்றில் உயர்ந்த தரத்தைத் தொடர்ந்து பராமரித்து, கடமையில் முழுமையான ஈடுபாட்டுடன் சிறப்பாக பணியாற்ற வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள். அதற்காக, பல துறைகளிலும் திறமையாளர்களை ஊக்குவிப்பதற்காக, வாரியத்தில் 'வாரியத் தலைவரின் பதக்கத்திட்டம்' மற்றும் 'வாரியத்தின் பதக்கத் திட்டம்' என இரு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு ஆண்டும், பதக்கம் பெறத் தகுதியானவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். 1997 ஆம் ஆண்டுக்கு சிறப்புமிக்க பணிக்காக, தலைவரின் மின்பதக்கம் பெற எட்டு பணியாளர்களும், தனிச்சிறப்புமிக்க பணிக்காக வாரியத்தின் பதக்கம் பெற நான்கு பணியாளர்களும் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். 1998 மற்றும் 1999 ஆம் ஆண்டுக்கான பதக்கம் பெற தகுதியான பணியாளர்களை தேர்வு செய்யும் பணி நடந்து வருகிறது.

96. இவைதவிர, வாரியத்தின் செயல்திறனை மேம்படுத்த வாரியம், பணியாளர்களிடமிருந்து ஆலோசனைகளை வரவேற்றுள்ளது. சிறந்த ஆலோசனையை ஊக்குவிக்கும் பொருட்டு, ஆலோசனை வழங்கும் மின் ஊழியருக்கு மின்வாரிய நினைவுப் பரிசு வழங்க உத்தேசித்துள்ளது. சமீபத்தில் திரு. ஆர். பாஸ்கரன், தலைமைப் பொறியாளர், வடசென்னை அனல் மின் நிலையம் (தற்பொழுது ஓய்வில்) அவர்கள், மேட்டூர் அணையிலிருந்து கோடைகாலத்தில் குறைந்த அளவு திறந்து விடப்படும் நீரை முறைப்படுத்தி (By Regulating) மேட்டூர் சுரங்கப்பாதை மின் நிலையம் மற்றும் தடுப்பு அணை மின் நிலையங்களில் உச்சத் தேவையை ஈடுகட்டும் பொருட்டு 20 மெகாவாட்டிலிருந்து 190-240 மெகாவாட் வரை கூடுதலாக உச்ச நேரத் தேவையின் போது மின் உற்பத்தி செய்ய ஆலோசனை வழங்கினார். அதற்காக அவருக்கு தமிழ்நாடு மின்சார வாரியம் நினைவுப் பரிசு அளித்து

கௌரவித்தது. பொதுப் பணித் துறை அதிகாரிகளின் ஒப்புதலோடு உச்ச நேர மின் உற்பத்தி இந்த காலக்கட்டங்களில் மேற்கொள்ளப்பட்டது.

**ஒப்பந்த தொழிலாளர்கள்:**

97. தமிழ்நாடு மின்சார வாரியத்தில் உள்ள நான்கு அனல் மின் நிலையங்களில் பணிபுரிந்த 7704 ஒப்பந்த தொழிலாளர்களையும், இரண்டு எரிவாயு சுழலி மின் நிலையங்களில் பணிபுரிந்த 151 ஒப்பந்தத் தொழிலாளர்களையும், களப்பணி உதவியாளர்களாக பணிநிரந்தரம் செய்வதற்கு வாரியத்தால் விதிக்கப்பட்ட நிபந்தனைகளைப் பூர்த்தி செய்ததின் பேரில், களப்பணி உதவியாளர்களாக 1-5-1999 முதல் பணி நிரந்தரம் செய்யப்பட்டுள்ளனர். நான்கு நீர் மின் உற்பத்தி நிலையங்களில் பணிபுரிகின்ற 849 ஒப்பந்தத் தொழிலாளர்களை களப்பணி உதவியாளர்களாக பணி நிரந்தரம் செய்யப்படுவதற்கான செயற்குறிப்பு ஆய்வில் உள்ளது.

**மாநில மின்சார கட்டுப்பாட்டு ஆணையம்:**

98. தமிழ்நாடு அ[illegible] மாநில மின்சார கட்டுப்பாட்டு ஆணையத்தை மின்சார சீர்திருத்த ச[illegible]த்தின்படி அமைத்துள்ளது. இரு உறுப்பினர்கள் பதவியேற்றுள்ளனர். தலைவர் இன்னும் பொறுப்பேற்கவில்லை.

99. தமிழ்நாடு மின்சார வாரியம், வாரியத்தை சீரமைப்பதற்கான தேவை பற்றி ஆய்வு செய்வதற்காக எர்னஸ்ட் & யங் (Ernst & Young) என்ற ஒரு ஆலோசனை நிறுவனத்தை அமர்த்தியுள்ளது. இந்நிறுவனம் தனது இடைக்கால அறிக்கையை சமர்ப்பித்து நான்கு தேர்ந்தெடுப்பு உரிமைகளை வலியுறுத்தியுள்ளது. தொழிற்சங்கங்களின் கருத்துக்களைப் பெற்றபின் வாரியம் 'அ1' (Option a1) என்ற உரிமையை தேர்வு செய்துள்ளது. இதன்படி மின் உற்பத்தி இலாபநோக்கு மையம், மின் தொடர் இலாப நோக்கு மையம் மற்றும் மின்பகிர்மான இலாபநோக்கு மையம் போன்ற தனித்தனி அமைப்புகள் தமிழக மின்வாரிய அமைப்பின் அங்கங்களாக, நம்பகத்தன்மை, உற்பத்திப் பெருக்கம், பயனீட்டாளர் திருப்தி ஆகியவற்றை நோக்கங்களாகக் கொண்டு அமைக்கப்பட அரசுக்கு பரிந்துரைத்துள்ளது. மின்வாரியத்தின் பரிந்துரை, தமிழக அரசின் பரிசீலனையில் உள்ளது.



100. மேற்சொன்னவைகளிலிருந்து, தமிழக அரசும் தமிழ்நாடு மின்சார வாரியமும், மின்தரத்தையும், மின் அளவையும் உயர்த்துவதற்காக பல நடவடிக்கைகளை, கடுமையான நிதி நெருக்கடியிலும், மேற்கொண்டுள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிந்து கொள்ளலாம். தமிழ்நாடு மின்சார வாரியம் மேற்கொண்டுள்ள திட்டங்களோடு தனியார் துறை மின் திட்டங்களும், தமிழ்நாட்டின் நிறுவுதிறனை தேவையான அளவு உயர்த்தும். மின்தொடர் மற்றும் மின்பகிர்மானத்தை மேம்படுத்த கணிசமான தொகையை ஒதுக்கீடு செய்து தனிக்கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. இது மின் தரத்தையும் மின் அளவையும் மேம்படுத்த வழிவகுக்கும். ஏற்கெனவே குறைவாகவே உள்ள மின் இழப்பை மேலும் குறைக்க பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேற்கண்ட நடவடிக்கைகளினால், தமிழ்நாடு மின்சார வாரியம், மின் உற்பத்தி, மின்தொடரமைப்பு மற்றும் மின் பகிர்மானத்தில் மாதிரி மின்சார வாரியமாகத் திகழும் என்று நம்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த முயற்சியில் எனக்கு முழு ஒத்துழைப்பு அளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

822456

அரசு மைய அச்சகம், சென்னை-600 079.

**Copies can be had from the**
**Assistant Director,**
**Government Publication Depot,**
**816, Anna Salai,**
**Chennai-600 002.**

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.